அருள் சுரக்கும் சக்தி ஆலயங்கள்

செந்தமிழ் வித்தகர், தெய்வத் தமிழ்மணி

புலவர் முத்துப்பிள்ளை

பைலட் பப்ளிகேஷன்ஸ்

32, ஐயப்ப செட்டித் தெரு, மண்ணடி,
சென்னை-600 001

முதல் பதிப்பு : மே, 1976.

தயாரிப்பு :
ரெ. சி. தெய்வசிகாமணி

விலை ரூ 5-00

சௌந்தரா பிரிண்டர்ஸ், சென்னை-600 005

33-1

உ

ஜெய துர்க்கா

ஜெய துர்க்கா பீடம்

(சாக்த தந்திர நெறிக் கழகம்)

ஸ்தாபகர் — சென்னை-1

ஸ்ரீ துர்க்கைச் சித்தர் — 28-5-'76

(சுக்ரவாரம்)

சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்
ந சேதேவம் தேவோ ந கலு குசல:ஸ்பந்திது-மபி|
அதஸ்-த்வா-மாராத்த்யாம் ஹரி-ஹர-விரிஞ்சாதிபி-ரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதமக்ருத-புண்ய: ப்ரபவதி||

எல்லா உலகங்களையும் ஈன்றெடுத்தவள் பராசக்தி. அந்த ஆதி சக்தியே உலகங்களின் முடிவுக்குப் பின்னும் முடியாமல் நிற்பவள். எல்லா யுகங்களிலும் அந்தந்த யுக நாயகியாக விளங்கி அந்த யுகத்தை நடத்திச் செல்கின்ருள். அவளே மூவரையும் படைத்து அவர்கள் வழி ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய அறங்களைப் புரிகின்ருள். எல்லாத் தத்துவங்களுக்கும் மேலான தத்துவம் சக்தி தத்துவமே!

சக்தி தத்துவத்தை சாக்தம் என்று சொல்லுகின்ருேம். ஆதி சங்கரர் ஷண் மதங்களை அதாவது—ஆறு மத நெறிகளை ஒழுங்குபடுத்தி உலகுக்கு அளித்தார். அந்த மதங்களுள் தலையாயதும், எல்லா மதத்தினராலும் ஏற்றுக் கொள்ளும் நெறிப்பட்டதாயும் விளங்குவது சாக்தமே. சாக்த தந்திரங்கள் அறுபத்தி நான்கு. இந்த அறுபத்தி நான்கு தந்திரங்களும் சாக்த நெறியின் சஞ்சீவி வழியாக உள்ளன. இந்த அறுபத்தி நான்கு தந்திரங்களையும் ஆதி பராசக்தி தான் படைத்துக் கொடுத்தாள். தந்திரங்கள்

என்ருல் சிவதந்திரம் ஒன்றைத்தான் குறிப்பதாக இருந்தது. ஆனல், சிவதந்திரத்துக்கு வேறுபட்டதாகவும், எல்லா வகையிலும் ஏற்றமுடையதாகவும், இந்தத் தந்திரங்கள் விளங்கும் வண்ணம் சாட்சாத் பராசக்தியாலேயே படைக்கப்பட்டது. இந்த தந்திர சாஸ்திரங்கள் உலகின் பல்வேறு தேவைகளையும் நிரப்பி விடுவனவாகவும், நிலையான நலன்களை நின்று காப்பனவாகவும், எல்லாக் கலை ஞானங்களுக்கும் மேம்பட்டனவாகவும், அணையாத அமர தீபமாகவும் விளங்குகின்றன.

மந்திர சாஸ்திரங்கள் தேவியின் வழிபாட்டு நெறிகளை வழிப்படுத்திக் கொடுத்ததால் பாரதமெங்கும் பல்வேறு அன்னை ஆலயங்கள் பல்கிப் படர்வதற்கு ஏதுவாக இருந்தன. இந்த மந்திர சாஸ்திரங்களின் மணத்தை உணர்ந்த பௌத்தரும், சைனுவில் இருந்து வந்து கற்றுச் சென்றனர். திபெத்தில் இருந்தும் வந்து பயின்று சென்றனர். ஜராதுஷ்டருடைய காலத்தில் சாக்த சாத்திர அறிவு மேலோங்கி இருந்தது. பௌத்த நெறியில் விளங்கும் தாரா போன்ற பெண் தெய்வங்களின் தோற்றத்திற்கும் மூல மந்திரங்களுக்கும் ஆதிமூலம் சாக்தமே......!

இத்தகு பெருமையுடன் விளங்கிய சாக்த நெறி இமயம் தொட்டு குமரிவரை கலப்பின்றித் தனித்து இயங்கியது. மற்ற நெறிகளுடன் கலக்க வேண்டிய காலத்திலும், மனக் கசப்பு ஏதுமில்லாமல் கலந்தது. இந்தத் தெளிவான உண்மையை ஒவ்வொரு கிராமங்களிலும் விளங்கும் கிராம தேவதையின் கோவில்கள் எடுத்துக் காட்டும். இந்தப் பேருண்மையை எடுத்துப் பேசுவதே இந்த நூல்.

'அருள் சுரக்கும் சக்தி ஆலயங்கள்' என்ற இந்த அருந் தமிழ் நூல் பராசக்தியின் பல்வேறு வடிவ பேதங்களைத் தெளிவாக எடுத்து இயம்புகிறது. உபாசகர்களால் மட்டுமே உணரப்பட்டு வந்த பீட தேவதைகள், சப்த மாத்ருகணங்கள், ஷோடச மாதாக்கள் போன்ற சக்திகளின் திரு உருவ

விளக்கங்களையும், திருவருள் நலன்களையும் தெளிவாக இந்த நூல் கூறுகிறது. இந்த நூலின் பெருஞ்சிறப்பு என்ன வென்றால், இதன் ஆசிரியர் தான் எடுத்துக் கொண்ட பணியில் ஊறி உழைத்து இருக்கிறார். அந்த உழைப்பின் உருவமாக விளங்குவது இந்த நூல். அன்னை ஆலயங்கள் என்ற இந்த நூல் காஞ்சி காமாட்சியின் பெருமையைப் பேசுவதில் துவங்கி ஒவ்வொரு கோவிலைப் பற்றியும் படிப் படியாகச் சொல்கின்றது. ஒரு கோவிலை எடுத்துக் கொண் டால் அந்தக் கோவிலின் சிறப்பு, அந்தக் கோவிலின் அமைப்பு, அந்த கோவிலுக்குரிய புராண வைப்பு, அந்தக் கோவிலைப் பாடிய பெரும் அடியார்கள், இன்னவைகளைப் பற்றியெல்லாம் தெளிவாகவும், அதே சமயத்தில் சுருக்க மாகவும் முத்துப்போல் பேசுகின்றது.

இதன் ஆசிரியர் இந்த ஒவ்வொரு அன்னைத் திருத் தலத்தின் அருமை பெருமைகளைத் தான் கண்டு உணர்ந் தது போலவே இந்த நூலைப் படிப்பவர்களும் கண்டு உணரும் வண்ணம் எழுதியுள்ளார்.

தமிழகத்து அன்னை அடியார்கள் அவ்வளவு பேராலும், எல்லாத் திருக்கோயில்களையும் தரிசித்து மகிழ்வது என்பது இயலாத காரியம். அந்தக் குறை இந்த நூல் இருக்குமிடத் தில் ஏற்பட ஏது இல்லை. நல்ல தமிழோட்டத்துடன் ஒவ் வொரு கோவிலுக்கும் பயணம் சென்று திரும்பி வந்து விட லாம். இந்தப் பணி சிறந்த பணி-தமிழ்ப்பணி-அருள் நெறிப்பணி-ஆக்கப்பணி.

இதன் ஆசிரியர் தன்னுடைய நல் முயற்சியால் இந்த நூலை சிறப்புற எழுதி முடித்துள்ளார். ஒரு நூலின் பெருமை அந்த நூலை எழுத எடுத்துக்கொண்ட உழைப்பைப் பொருத்ததல்ல. அந்த நூல் எவ்வளவு தூரம் பயன் தரு கிறது என்பதைப் பொறுத்து அதன் பெருமை பெருகு கிறது. இந்த நூல் ஒரு சிறந்த தெய்விக நலம் கூட்டும் நூல். இந்தப் பணி உண்மையான தெய்வப்பணி.

இந்த நூலைத் தேர்ந்து தெளிந்து அன்னை அடியார்களுக்குப் பதிப்பித்து வழங்கியது ஒப்பற்ற தெய்வப்பணி. அன்னை அடியார்களுக்கு இதுவரை கிடைக்காத ஒரு சிறந்த புதையல் இந்த நூல். இதைப் பதிப்பித்தவர்களுக்கும், இதன் ஆசிரியருக்கும் தமிழ் கூறும் நல்லுலகத்து அன்னை அடியார்கள் தங்கள் நிறை நன்றியைச் செலுத்துவார்கள்.

சிறந்த தெய்வத் தமிழ் நடையும், ஆழ்ந்த புலமையும், எழுதுவதில் கருத்துச் செறிவும், சொற்களில் நயமும், தெய்வ நலமும் கொண்ட இதன் ஆசிரியர் 'புலவர் முத்துப் பிள்ளை' அவர்களுக்கு ஜெயதுர்க்கா பீடம் 'தெய்வத் தமிழ் மணி' என்ற பட்டத்தை வழங்கிப் பாராட்டுகிறது.

தெய்வத் தமிழ் மணி கண்டு களித்து அருள் பெற்ற அன்னை திருக்கோவில்களை நீங்களும் படித்துக் காணுங்கள்.

''தெய்வத்தை நேசிப்பவர்களை நேசியுங்கள்
தெய்வம் உங்களை நேசிக்கும்.''

ஸ்ரீ துர்க்கைச் சித்தர்

பதிப்புரை

நாடெங்கிலும் 'அருள் சுரக்கும் சக்தி ஆலயங்கள்' நூற்றுக் கணக்கில் உள்ளன. அவற்றில் முக்கியமானவைகளை மட்டும் தேர்ந்தெடுத்து இந்நூலில் வெளியிட்டுள்ளோம். எல்லா ஆலயங்களையும் பற்றியும் விரிவாக எழுதி வெளியிடவேண்டுமென்பதுதான் எங்கள் அவா. கூடுமானவரை விலை குறைவாக இருக்கவேண்டும், பக்கங்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் போகாமல் இருத்தல் வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் சில ஆலயங்கள் பற்றி விரிவாக எழுதப்படவில்லை. இந்நூலில் சேர்க்கப் படாமல் விடுபட்டுள்ள ஆலயங்கள் பல இருக்கலாம். அவற்றைப்பற்றிய விவரங்களைத் தெரிந்த அன்பர்கள் எழுதியனுப்பினுல் இந்நூலின் இரண்டாம் பாகத்தில் அவற்றைச் சேர்த்துக் கொள்கிறோம்.


இந் நூலுக்குச் சிறப்பானதொரு முன்னுரை வழங்கிய, ஜெயதுர்க்கா பீடத்தின் தலைவரும், 'அருட் குரல்' மாத சஞ்சிகையின் ஆசிரியருமான துர்க்கை சித்தர் அவர்களுக்கு எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந் நூலுக்கு முன்னுரை வழங்கியதுடன் நில்லாமல் தமது பீடத்தின் சார்பாக இவ் அரிய நூலினை ஆக்கித் தந்த ஆசிரியர் அவர்களுக்குத் 'தெய்வத் தமிழ் மணி' என்னும் சீரியதோர் பட்டத்தையும் வழங்கிச் சிறப்புச் செய்துள்ளார்கள். இதற்காக துர்க்கை சித்தர் அவர்களுக்கு எங்கள் சார்பிலும், நூலாசிரியர் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ் அரிய நூலினை மிக விரைவில் எழுதித் தந்த ஆசிரியர் முத்துப்பிள்ளை அவர்களுக்கும், சிறப்புற அச்சிட்டுத் தந்த செளந்தரா பிரிண்டர்ஸாருக்கும் எங்கள் நன்றி உரியது.

சென்னை
28-5-'76

நெ. சி. தெய்வசிகாமணி

பொருளடக்கம்



No. 641 Sri Karumari Amman

J. B. KHANNA & Co.,
166/168, Devaraja Mudly Street,
MADRAS-3.

1. சக்தி மகத்துவம்

சக்தி என்பது ஒன்று இல்லையெனில் உலகமோ, உலகின் சுழற்சியோ, கோள்களோ, கோள்களின் இயக்கமோ, பொருள்களோ, பொருள்களின் அசைவோ, இயற்கையோ, இயற்கையின் வனப்போ, இயற்கையற்புத நிகழ்ச்சிகளோ எதுவுமே இல்லையாம். உலகங்கட்கும், உலகப் பொருள்கட்கும் மூலமாக உள்ளதும், உலகங்களாகவும், உலகப் பொருள்களாகவும் நின்று விளங்குவது சக்தியே.

சக்தியின் வடிவமே உலகம். சக்தியின் திருவிளையாடலைப் பஞ்ச பூதங்களிலும், அணு முதல் அண்டபகிரண்டம் வரை எங்கும் காணலாம். இவ்வுலகைப் போன்ற எண்ணிறந்த கிரகங்கள் ஒன்றை ஒன்று அதிவேகமாகச் சுற்றிக் கொண்டு ஓடுகின்றன. இவ்வாறு கிரகங்களைச் சுழல வைப்பதற்கு ஆகர்ஷண சக்தி என்று பெயர். இச் சக்தியின் வன்மையால் பந்துகள் போன்று அவையனைத்தும் ஆட்டப்படுகின்றன. ஆனால், அவை நிலை குலையாது சுழல்வதினின்று ஆட்டுவிக்கும் சக்தி அறிவு மயமானது என்பது விளங்கும்.

இந்த சக்தியின் திருவிளையாடல் நம் மனத்துக்கு எட்டாத வண்ணம் அகண்டாகாரத்தில் விரிந்தோடுகின்றது. பரந்த விண்ணகத்தினுள், நாம் வசிக்கும் இந்த மண்ணகமானது ஓர் அணுப்புள்ளி போன்றது. இதனுள் நடைபெறுகின்ற மாயா சக்தியின் திருவிளையாடல்கள்

மனிதனை மயங்கச் செய்கின்றன. மலைகள் ஆகாயத்தை அளாவிக் கொண்டு நிற்பதும், அவற்றினின்று அருவிகள் ஆர்ப்பரித்து விரைந்து வீழ்வதும், கருமேகம் மின்னி ஒளி வீசி இடிப்பதும், மழை தாரை தாரையாகப் பெய்வதும் சக்தியின் திருவிளையாடல்களாகத் திகழ்வதோடன்றி, அச் சக்தியின் வெளிப்பாடாகவும் விளங்குகின்றது.

உலகிடையே இத்தகைய பல அற்புதத் திருவிளையாடல்களைப் புரிந்தருள்கின்ற சக்தி, உலகிலுள்ள உயிர்ப் பொருள்களிடத்தும் திருவிளையாடல்கள் புரிந்து வெளிப் பட்டு விளங்குகின்றது. விலங்கு முதலிய உயிர்ப் பொருள் கள் தத்தம் இனம் சேர்ந்திருப்பதும், இனம் காப்பதும், இனம் பெருக்குவதும், பகையுடன் சண்டையிடுவதும், மனித உயிர்ப் பொருள்கள் இவ்வகைகளில் அதிக ஆற்ற லுடனும் அறிவுடனும் செயல்பட்டொழுகுவதும் சக்தியின் வாழ்க்கைத் தத்துவத் திருவிளையாடல்களாக விளங்கு கின்றன. ஒரே மின்சார சக்தி நானுவித வடிவுடைய நானுவித எந்திரங்களை நானுவித முறைகளில் இயக்கி வருவது போன்று, உயிர்ப் பொருள்கள் அனைத்தையும் ஒரே சக்தி— ஒரே பிராண சக்தி இயக்கி ஆட்டிவைக் கின்றது. எனவே, உலகிலும், உலகப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்து நின்று, அவற்றை இயக்குவதும், இயக்குவதன் வாயிலாக வெளிப்படுவதும் சக்தியே என்பது விளங்கும். எங்கும் சக்தி. எதிலும் சக்தி. சக்தி யின் வடிவமே உலகும் பொருள்களும்.

ஆதி சக்தி

முழு முதற் பரம்பொருளாகிய இறைவனுக்கு ஆதி தேவன் என்று பெயர். அனைத்துக்கும் முன்னிருப்பவன் ஆதி தேவன். அவனுக்கு ஆதியோ—தொடக்கமோ, அந்தமோ இல்லை. எனவே, அவன் அனாதியானவன். அந்த ஆதி தேவன் கடலில் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருக்கின்முன். ஆதிசேஷன் சக்தியின் சின்னம். அண்டங்களெல்லாம் ஒடுங்கி அழிவு நிலைக்கு வருவதைக்

கடல் உணர்த்துகின்றது. கடலில் எங்கும் அசைவற்ற ஒரே நீர் மயம். அது பிரளயத்தைக் குறிக்கின்றது. சேஷம் என்றால் எஞ்சியிருப்பது என்று பொருள். அண்டங்கள் அனைத்துக்கும் சேஷமாயிருப்பது ஆதி சேஷன்—ஆதி சக்தி. உலகெலாம் ஒழிந்து போன பிறகு எஞ்சியிருப்பது ஆதி சக்தி ஒன்றே. வளர்கின்ற செடி கொடிகள் முதிர்ந்து அழிந்து போன பிறகு எஞ்சியிருப்பது அவற்றின் வித்துக்கள். அவ் வித்துக்களினின்றே மீண்டும் செடி கொடிகள் தோன்றுகின்றன. அவ்வாறே அந்த ஆதி சக்தியினின்றே மீண்டும் அண்டங்கள் பிறக்கின்றன. இந்த ஆதி சக்தியே பராசக்தி. அனைத்துக்கும் ஆதியாக இருக்கின்ற காரணத்தினால் பராசக்திக்கு ஆதி சக்தி என்ற பெயர் அமைந்தது.

ஆதி சக்தியின் சின்னம் ஆதிசேஷன். பொதுவாக பாம்பு சக்தியின் சின்னமாகும். இவ்வாறு இருக்கின்ற ஆதி சக்தி, ஆதி தேவனுக்குப் புறம்பானதன்று என்பதை உணர்த்துவது ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருத்தல். பாலில் வெண்மை குடி கொண்டிருப்பது போன்றும், தீயில் வெம்மை குடி கொண்டிருப்பது போன்றும், ஆதி தேவனிடத்தில் ஆதி சக்தி குடி கொண்டிருக்கின்றது. அவற்றை வேறு பிரிக்க முடியாதவாறே, சக்தியையும் தேவனையும் வேறு பிரிக்க வியலாது. ஆதி சக்தியின் காரணமாகவே ஆதி தேவனாக இறைவன் விளங்குகின்றான்.

இறைவனும் சக்தியும் வேறு வேறு அன்று என்பதை உணர்த்தவே சிவபெருமான் பாம்பை மாலையாக அணிந்துள்ளார்; திருமால் பாம்பின் மீது பள்ளி கொண்டுள்ளார்; முருகனின் வாகனமாகிய மயிலின் காலடியில் பாம்பு படம் விரித்து ஆடுகின்றது.

தாய் வழிபாடு

சக்தி வழிபாடே தாய் வழிபாடு அல்லது அன்னை வழிபாடு அல்லது அம்பிகை வழிபாடு என்று கூறப்படும். சக்தி

யின் சின்னமாகிய நாகதேவதை வழிபாடும், நாகக் கன்னியர் வழிபாடும் இது பற்றியே எழுந்தவையாகும். அறுவகைச் சமயங்களுள் சாக்தமதம் என்பது சக்தியையே பரம்பொருளாகக் கொண்டு போற்றுவது.

சக்தி வழிபாடாகிய அம்பிகை வழிபாடு மிகவும் பழமையுடையது. மொகஞ்சதாரோ, அரப்பா என்னும் இடங்களில் நிகழ்த்தப் பெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த பொருள்களில், உலக அன்னையின் மண் சிலைகள் காணப்படுகின்றன. ஆய்வாளர்களின் கருத்துப்படி சிந்துவெளி நாகரிகக் காலம் ஏறத்தாழ கி.மு. 4000 ஆண்டுகட்கு முற்பட்டது. எனவே, சக்தி வழிபாடு அதற்கு முன்னரே இருந்து வந்துள்ளமை விளங்கும்.

தொல்பொருள் ஆய்வுத்துறைப் பேரறிஞராகிய சர் ஜான் மார்ஷல் என்பார், சிந்துவெளிப் பகுதியில் கிடைத்த அன்னையின் சிலைகளைப் போலவே பாரசீகம், ஏஜியன் எலம், மெசபடோமியா, துருக்கி, சிரியா, பாலஸ்தீனம், சைப்ரஸ், கிரீட் பால்கன், எகிப்து முதலிய பல்வேறு பகுதிகளில் கிடைத்த சிலைகளும் இருப்பதனால், அன்னை வழிபாடு மிகப் பழங்காலத்திலேயே பல நாடுகளிலும் பரவியிருத்தல் வேண்டும் என்று விளக்குகின்றார்.

இருக்கு வேதத்தில் அன்னை வழிபாடு பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. அதன் கண் உள்ள 'தேவி சூக்தம்' என்ற பகுதியில் உஷஸ், இராத்ரி, அதிதி, வாக், புரந்தி, திஷசு, ஈளா, வாருணி போன்ற பெண் தெய்வங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. எனவே, அன்னை வழிபாடு இருக்கு வேதத்திற்கும் மிகவும் முற்பட்டது என்பது விளங்கும்.

அன்னை வழிபாடு இந்திய நாட்டில் மட்டுமன்றி உலகில் பல பகுதிகளிலும் பரவி இருந்துள்ளமை புலனாகின்றது. அன்னையை நாம் 'பார்வதி' என்றும், 'மலைமகள்' என்றும் வழங்குவதற்கேற்ப, சுமேரிய மக்களும் தமது பெண் தெய்வத்தை மலை நிலப் பகுதிக்குரிய தெய்வமாகவே

கருதிப் போற்றியுள்ளனர். ‘உமா’ என்னும் தமிழ்ச் சொல்லே பாபிலோனில் ‘உம்மா’ என்றும், ஆர்க்கேடியாவில் ‘உம்மி’ என்றும், சிரியாவில் ‘உம்மோ’ என்றும் மருவி வழங்கி வருவதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

அன்னை வழிபாட்டை இந்துமதம் மட்டுமன்றி, கிறித்துவ மதமும் புத்தமதமும் போற்றுகின்றன. கிறித்துவ மதம் அன்னை மரியாள் வழிபாட்டின் மூலமும், புத்தமதம் சாராதேவியைப் போற்றுவதன் மூலமும் அன்னை வழிபாட்டைப் போற்றுகின்றன.

ஆதி முதல் அன்னை வழிபாட்டைப் போற்றி வரும் இந்து மதத்தின் பண்டைய பெயர் வைதிக மதம். அவ் வைதிக மதத்தில் சிறந்த ஒரு பகுதி, சாக்த மதம். சிவ பெருமானைப் போற்றும் சைவமும், விஷ்ணுவைப் போற்றும் வைணவமும், கணபதியை வணங்கும் காணுபத்தியமும், குமரனுகிய முருகனை வழிபடும் கௌமாரமும் போலச் சக்தியை— அன்னையைப் போற்றும் சாக்தம் என்னும் சமயமும் இந்தியப் பெரு நிலம் முழுதும் பரவியிருந்தது. சக்தம், இடையில் சில குறைபாடுகளை அடைந்ததாயினும், அஃது இந்து மதத்தின் ஆற்றல் மிக்க ஒரு கூறு என்பதில் ஐயமின்று. ஒன்றினென்று முரண்பட்டு நின்ற பிற கூறுகளின் வேற்றுமைகளைப் போக்கி, அவற்றைச் சாக்தம் ஒற்றுமைப் படுத்தி விளங்குகின்றது. சக்தியைச் சிவபெருமானுக்கு மனைவி, திருமாலுக்குத் தங்கை, கணபதிக்கும் முருகனுக்கும் தாய் என்பதனுல் மதங்களின் ஒற்றுமை அமைந்து விளங்குகின்றதன்றோ?

அன்னை வழிபாடாகிய சக்தி வழிபாடு மிகப் பழங்காலந் தொட்டு இந்தியப் பெரு நிலம் முழுதும் பரவி வளர்ந்துள்ள பாங்கினை, நகரங்களிலும், கிராமங்களிலுமுள்ள சக்தி கோயில்கள் தெளிவாக உணர்த்துகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும், நகரிலும் வெவ்வேறு பெயரில், வெவ்வேறு வடிவில் அன்னை வழிபாடு நிகழ்ந்து வரக் காண்கின்றோம்.

அன்னையும் கன்னியும்

குழந்தையை ஈன்ற பின்னர் அன்னையும் குழந்தையும் வேறு வேருகி விடுகின்றனர். ஆனல், அண்டங்களை ஈன்ற அன்னையாகிய சக்தி, என்றும் அவற்றினின்று நீங்கியவள் அல்லள். அவளே உலகமாக இருக்கின்ருள். உலகம் முழுதும் உத்தமியாகிய அவள் தோற்றமே. எனவே, இயற்கையை உள்ளவாறு உணர்வது இறைவியாகிய அன்னையை அறிவதாகும்.

அன்னை பராசக்தி, அணுமுதல் அண்டம்வரை உள்ள அனைத்திலும் நிறைந்திருக்கின்ருள். அவளது திருவிளையாடல்களில் பயன்படாத செயல் எதுவும் இன்று. அவள் யாண்டும் தோற்றுவித்தருளும் செயல்களில் மேலான நோக்கம் உள்ளதாம். அங்ஙனமாயின், போர் நிகழ்ச்சியிலும், பஞ்சத்திலும், பூகம்பத்திலும், சுடும் நோயிலும் அவள் கொண்டுள்ள நோக்கம் யாது என வினவக் கருதலாம். அழிவு இல்லாத ஆக்கம் என்பது இன்று. ஓர் அமைப்புடைய ஒன்றை, மற்ருேர் அமைப்புடையதாக மாற்றும் பொழுது, பழைய அமைப்புக்கு அழிவும் புதிய அமைப்புக்கு ஆக்கமுமாகும். இவ்வாறு புதுப்பிக்கும் தொழில் இடையருது நடைபெற்றுக் கொண்டுள்ளது. காலத்தின் அமைப்பாகிய பகலும், இரவும் மாறி மாறி வருவது போன்று, உயிர்களின் அமைப்பாகிய பிறப்பும் இறப்பும் மாறி மாறி வந்து கொண்டுள்ளன. இவ்வுலக வாழ்வில் இறப்பு இல்லாத பிறப்பு இன்று; துன்பம் கலவாத இன்பம் இன்று. பழையதை உட்கொண்டு புதியதைத் தோற்றுவிப்பது இறைவியாகிய இயற்கையின் இயல்பு. இறப்பு, பிறப்பின் மூலம் இன்ப நுகர்ச்சியையும் வீடு பேற்றையும் வழங்கி யருள்வதே அன்னையின் நோக்கம். புல், பூடு, பறவை, விலங்கு, மனிதர், தேவர் என்று விரும்பிய பிறவிகளை யெல்லாம் எடுத்து, வேண்டிய போகங்களை யெல்லாம் அனுபவித்து, முக்தி அடைதலே உயிர்களின் நோக்கம். அதற்குத் துணையாக நின்று அருளுபவள் அன்னை சக்தி. அன்னையே

போகத்தையும் முக்தியையும் அளிப்பவள். போகத்தை நுகர வேண்டும் என்ற அவா உள்ளவரையில் அதற்கேற்ற பிறவிகளை வழங்குகின்ருள். எண்ணிறந்த பிறவிகளை எடுத்து இளைத்த பின்பு முக்தி வேண்டுவோர்க்கு அவள் சிவகதிக்கு வழிகாட்டி யருள்கின்ருள். இவ்வாறு வேண்டு வார்க்கு வேண்டியதை வேண்டியாங்கு வகுத்தருளுகின்ற காரணத்தால் அவள் அகிலாண்டங்களுக்கும் அன்னையாக விளங்குகின்ருள்.

தமிழ்க் கன்னித் தெய்வம்

சக்தியாகிய அன்னை, 'உலகமாதா' என்னும் திருப் பெயரோடு உலகமாகவும், 'கடற்கன்னி', 'கங்கை யன்னை', 'காவிரித்தாய்', 'மலைமகள்', 'அக்கினிதேவி', 'வானமாதேவி' என்னும் திருப்பெயர்களோடு பஞ்ச பூதங்களாகவும், உயிர்ப் பொருள், உயிரில் பொருள் ஆகிய அனைத்திலும் நீக்கமற நிறைந்தும் விளங்குதல் போன்றே, மொழியாகிய தமிழிலும் 'தமிழ்த்தாய்', 'கன்னித் தமிழ்' என்னும் திருப் பெயர்களோடு நிறைந்து இலங்குகின்ருள். உலகும், உலகப் பொருள்களும் சக்தியின் வடிவங்களாக விளங்குதல் போன்றே தமிழும் அன்னை சக்தியின் வடிவ மாகத் திகழ்கின்றது. சக்தி ஏக காலத்தில் அன்னையாக வும் கன்னியாகவும் விளங்குதல் போன்றே தமிழும் ஏக காலத்தில் அன்னையாகவும் கன்னியாகவும் விளங்குகின் றது. இப் பெருநிலையே தமிழ், சக்தியின் வடிவம் என் பதனை இனிது உணர்த்தும்.

சக்தி மொழியாக, தெய்வத் தாய்மொழியாக உள்ள தமிழ் மொழி, சக்தியின் நிலையை-பரம் பொருளின் நிலையை-உலகுக்கு உணர்த்த வெளிப்பட்ட மொழியாகும். எனவேதான், இம்மொழியில் இயல், இசை, நாடகம் என்ற முத்திறக் கூறுகள் சக்தியால் அருளப் பெற்றுள்ளன. இம் முக்கூறுகளும் சக்தியின் நிலைகளாம்—பரம்பொருளின் பாங்குகளாம். சக்தியின் அருள் நிலை இயற்றமிழாக

இலங்க, சக்தியாகிய கலைவாணியின் திருக்கரத்து வீணை இசைத் தமிழாக விளங்க, காளியின் நடனம் நாடகத் தமிழாகப் பொலிவுறக் காண்கின்றோம்.

பரம்பொருளாகிய இறைவன் தமருகம் தாங்கியிருத்தலும், திருநடம் புரிதலும், திருப்பெருந்துறையில் ஞானோபதேசம் செய்தருளுதலும் முறையே இசைத் தமிழ், நாடகத் தமிழ், இயற்றமிழ் ஆகியவற்றை உணர்த்துவன. கண்ணன் குழல் ஊதுதலும், களிநடம் புரிதலும், மாயோன் சங்கு தாங்கியிருத்தலும் இவ்வகையில் திகழ்வனவே.

சக்தியாகிய அன்னையின் நிலைகளை உணர்த்த வெளிப்பட்ட மொழியாக, அன்னையின் இயற்கையான பல்வேறு வடிவங்களில் ஓர் இயற்கை மொழி வடிவாகத் தமிழ் திகழ்வதனாலேயே, சக்தியின் உருவாகத் தமிழ் உள்ளமையினாலேயே, காஞ்சியில் கன்னித் தமிழ்ப் புலவன் சொற்கேட்டுக் கரியமால் பின் தொடர்ந்தான். தமிழ் உருவாகிய சக்தியின் திருவிளையாடல்களாக, முதலை உண்ட பாலனை மீண்டும் வெளிப்படுத்தியதும், நெருப்பினில் நின்றதுவும், வைகையில் வென்றதுவும், எலும்பைப் பெண்ணுருவாக்கியதுவும், மறைக்காட்டுக் கதவம் திறக்கப் பெற்றதுவும் அடைக்கப் பெற்றதுவும், இன்னோரன்ன அருளற்புத நிகழ்ச்சிகளும் அமைந்தன. சக்தி வடிவாய தமிழைச் சிவனும், முருகனும், கணபதியும் விரும்பி மகிழ்வதில் வியப்பேதும் இல்லையன்றோ? சக்தி மொழியாக—சக்தி உருவாகத் தமிழ் ஆதி முதல் நின்று விளங்குவதால், அம்மொழியை அன்னையாகவும், கன்னியாகவும் கண்டுணர்ந்து போற்றி வழிபடுவாராயினர்.

சக்தி வெளிப்பாடு

எங்கும், எதிலும், என்ஞான்றும் நீக்கமற்ற நிறை பொருளாகத் திகழ்கின்ற ஆதி சக்தியாகிய பராசக்தி,

பல்வேறு தேவியம்சங்களைக் கொண்டருளித் திகழ்கின்றாள். எவர் எவர் எந்த எந்த வைபவத்தைச் சிறப்பாகப் பெற விரும்புகின்றனரோ, அதற்கேற்ற தேவியம்சத்தையும், திருப் பெயரையும் கொண்டு வெளிப்பட்டருள்கின்றாள். எங்கும் நிறை பொருளாகப் போற்றப்படுகின்ற அந்த ஆதி சக்தி, பராசக்தி என்றும், பூரணி என்றும், இராஜ ராஜேசுவரி என்றும், மூலப் பிரகிருதி என்றும் திருப் பெயர் கொண்டருள்கின்றாள்; முத்தொழிலைச் செய்யுமிடத்து பிரம்மாணி, வைணவி, உருத்ராணி என்ற திருப் பெயர் களைக் கொண்டு வெளிப்படுகின்றாள்; ஈசுவரனுக்கு ஒப்பாகும்போது துர்க்கையாகவும், காலத்தின் வடிவின ளாகும்போது காளியாகவும், வித்தையின் வடிவாகும் போது சரசுவதியாகவும், செல்வத்தின் உருவாகும்போது இலக்குமியாகவும், உலகைக் காக்கும்போது உலகநாயகி யாகவும் புவனேசுவரியாகவும் காட்சி தருகின்றாள்.

அன்னையாகிய சக்தியே மும்மூர்த்திகள் முதலிய தேவர்களிடத்தே தேவியர்களாகவும் அமைந்து விளங்கு கின்றாள்.

தேவர்	தேவியர்
பிரமன்	பிரம்மாணி (அபிராமி)
சிவன்	மகேசுவரி
குமரன்	கௌமாரி
விஷ்ணு	வைணவி
அரி	வராகி
நரசிம்மர்	நாரசிம்மி
இந்திரன்	இந்திராணி

இங்ஙனம் விளங்குகின்ற தேவியர்கள், தத்தமக்குரிய வாகனத்தில் வெளிப்பட்டருளுகின்றனர். பிரம்மாணி அன்னத்தை வாகனமாகக் கொண்டுக், மகேசுவரி இட பத்தை வாகனமாகக் கொண்டும், கௌமாரி மயில் ஆசனத்தைக் கொண்டும், வைணவி கருடனை வாகன

மாகக் கொண்டும், வராகி எருமையை வாகனமாகக் கொண்டும், நரசிம்மி சிம்ம வாகனத்தைக் கொண்டும், இந்திராணி யானையை வாகனமாகக் கொண்டும் எழுந்தருளுகின்றனர். சக்தி, இலக்குமியாக வெளிப்படும் போது தாமரை ஆசனத்தையும், சாமுண்டியாக எழுந்தருளும்போது பேயினோடும் தோன்றித் திகழ்கின்றாள்.

ஆதி சக்தியாகிய அன்னை இங்ஙனம் பல்வேறு பெயரில், பல்வேறு வடிவில், பல்வேறு வாகனங்களில் தேவியர்களாகத் திகழும்போது, திருக்கரங்களில் சங்கு, சக்கரம், கதாயுதம், சக்தி ஆயுதம், கலப்பை, குறுந்தடி, கேடயம், ஈட்டி, கோடரி, பாசம், குத்துக்கோல், மும்முனைச் சூலம், வில் என்ற பல்வேறு ஆயுதங்களையும் தாங்கித் திகழ்வள்.

சிவ சக்தி

தேவர்களிடத்தே உள்ள சக்தியே தேவியர்களாகத் திகழக் காண்கின்றோம். சிவம் வேறு சக்தி வேறு அன்று. சிவம் என்பது மெய்ப்பொருள். இது முக்காலத்திலும் அழியாத, மாறாத தன்மையுடையது. இதனிடத்தே நீங்காது நிலைத்துள்ள செல்வமே—விபூதியே சக்தி. ஒளியின் உதவி கொண்டு இரத்தினத்தை அறிகின்றோம். இரத்தினத்தினின்று எவ்வாறு ஒளியைப் பிரிக்க வியலாதோ, அவ்வாறே சிவத்தினின்று சக்தியையும் பிரிக்க வியலாது. எனவேதான், உமாமகேசுவரன் என்றும், இலக்குமி நாராயணன் என்றும் பரம்பொருளைப் போற்றுகின்றோம். உமை அல்லது இலக்குமி என்ற செல்வத்தையுடைய பரமன் என்பது இத் திருப்பெயர்களின் பொருள்.

அண்டங்கள் அனைத்தும் சிவசக்தி மயமாகக் திகழ்கின்றன. சிவம் என்பது அறிவுப் பொருள். சக்தி என்பது ஜடப் பொருள். இவை இரண்டும் இணைந்து நீக்கமின்றி உலகெங்கும் இயங்குகின்றன. இயற்கையில் எங்கு நோக்கினும் இவ்வுண்மை புலனாகும். தீ எரிதல், காற்று அடித்தல், மழை பெய்தல், நிலம் சுழலுதல், பருவம்

மாறுதல், அண்டங்கள் இயங்குதல் ஆகிய அனைத்தும் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றன. இவையனைத்திலும் சக்தியின் மூலம் சிவம் ஆனந்தத் தாண்டவம் புரிகின்றது.

பாரதமாதாவும் பராசக்தி பீடமும்

இயற்கை மொழியாகிய இன்பத் தமிழ், இறைவியாகிய சக்தியின் உருவாக அமைந்து விளங்குதல் போன்று, இந்தியப் பெருநிலமும் 'பாரதமாதா' என்னும் திருப்பெயருடைய சக்தியின் உருவாகத் திகழ்கின்றது. எனவேதான், இதனைப் புண்ணிய பூமி என்று கூறுவர். புண்ணிய தீர்த்தங்களும், ஆலயங்களும் இங்குப் பரவிப் பெருகியிருப்பதால் இதனைப் புண்ணிய நாடு என்று கூறுவர். ஆனால், இவற்றினும் மேலான முக்கிய காரணம் ஒன்று உண்டு. இந்தியா— பாரத நாடு முழுவதிலும் பராசக்தியின் பீடங்கள் அமைந்து விளங்குவதால், இந் நாடு அன்னையின் உருவாகவும், புண்ணியத் தன்மை வாய்ந்ததாகவும் அமைந்து விளங்குகின்றது. வேறு எந் நாட்டிற்கும் இல்லாது இந்நாட்டிற்கு மட்டுமே உரியதொரு பெருஞ் சிறப்பாகும் இது.

தேவி பராசக்தியின் உடற்பாகங்கள், இப் பாரத நாட்டின் பல்வேறு இடங்களில் விழுந்து சக்தி பீடங்களாகத் திகழ்கின்றன.

சக்தி பீடங்கள் 64 என்றும், 108 என்றும், 51 என்றும் கூறுவர். 'பீடநிர்மயா' என்ற நூல் சக்தி பீடங்கள் 51 என்றே கூறுகின்றது.

தாட்சாயணி, தன் தந்தையால் அவமதிக்கப்பட்டுத் தீயில் குளித்து மாண்டபோது, அவளது உடலைத் தனது தோளின் மேல் போட்டுக் கொண்டு பரமசிவன் கோர நர்த்தனம் ஆடியதாகவும், அதைத் தடுத்து நிறுத்த மகா விஷ்ணு தன் சக்கரத்தினால் தேவியின் உடலைச் சேதித்ததாகவும், அவ்வுடல் 51 பாகங்களாகப் பிரிந்து தேசத்தின்

பல்வேறு இடங்களில் விழுந்து சக்தி பீடங்களாயின என்பது புராண வரலாறு. இந்த சக்தி பீடங்கள் பாரத நாடு முழுவதிலும் பரவலாக அமைந்து விளங்குவ தோடன்றி, நாட்டையே அன்னையின் உருவாக — பாரத மாதாவாக — பராசக்தியின் வடிவாக அமைத்துக் காட்டு கின்றது. அச் சக்தி பீடங்கள் யாவை?

1. காஞ்சிபுரம்: இது ஸ்ரீசக்கரபீடம். தேவியின் எலும்பு கள் இங்கு விழுந்ததாகக் கூறப்படும். 2. மதுரை: இது மந்திரிணி பீடம். 3. திருவானைக்கா: இது வராகி பீடம். 4. திருக்குற்றலம்: இது பராசக்தி பீடம். 5. திருவாரூர்: இது கமலை பீடம். இதனைக் காமகலா பீடம் என்றும் கூறு வர். 6. கன்னியாகுமரி: இங்கு தேவியின் பிருஷ்ட பாகம் (பின்புறம்) இங்கு விழுந்ததாகக் கூறப்படுகின்றது. 7. அம்பத்தூர்: இது சென்னைக்கு அருகிலுள்ள வைணவி ஆலயம். இது சக்தி பீட வரிசையில் 51 ஆவது பீடமாக உள்ளதால் ஐம்பத்து ஓர் ஊர் என்ற பெயர் பெற்றது. இப் பெயரின் திரிபே அம்பத்தூர். 8. கோகர்ணம்: இது தேவி யின் வலது காது விழுந்த இடம். இதனைப் பரசுராம க்ஷேத்திரம் என்று கூறப்படும். இங்கு எழுந்தருளியுள்ள தேவியின் திருப்பெயர் பத்ரகர்ணிகை. 9. ஸ்ரீசைலம்: இங்கு தேவியின் இடது காது விழுந்தது என்று கூறப்படு கின்றது. இது சிறந்த சிவத்தலம். இங்கு எழுந்தருளி யுள்ள தேவியின் திருப்பெயர் பிரமராம்பாள். 10. பூரி: இது உத்கலம் எனப்படும் ஒரிசாவில் உள்ளது. இது தேவியின் நாபி விழுந்த இடம். இது பைரவீ பீடம். இங்கு எழுந்தருளியுள்ள தேவியின் திருப் பெயர் விமலை.

11. சிருங்கேரி: இது மைசூர் மாநிலத்தில் உள்ளது. இங்கு தேவி சாரதாவாகத் திகழ்கின்ருள். 12. கோலாப் பூர்: தேவியின் கண்கள் விழுந்த இடம். இதனைக் கரவீரத் தலம் என்று கூறப்படும். இங்கு தேவி மகா இலக்குமியாக விளங்குகின்ருள். 13. அரசூர்: இது ஆபூ மலைக்கு அருகில் உள்ள இடம். சிறப்பு மிக்க சக்தி பீடம். இங்கு யந்திர

வடிவில் தேவி அம்பிகா என்ற திருப் பெயரில் விளங்கு கின்ருள். இங்கு சிலா வடிவம் இல்லை. இது தேவியின் ஸ்தனங்களுள் ஒன்று விழுந்த இடம். 14. ஜலந்தரா: தேவி யின் மற்ருெரு ஸ்தனம் விழுந்த இடம் இது. இங்கு தேவி திரிபுரமாலினி என்ற திருப் பெயரில் எழுந்தருளியுள்ளாள். 15. குஜராத் மாநிலத்தில் உள்ள துவாரவாட் என்ற இடமும் சக்தி பீடமாக உள்ளது. 16. பிரபாசா: இதனை சோமநாதத் தலம் என்று கூறப்படும். தேவியின் திருவயிறு விழுந்த இடம் இது. 17 பராகத்: இங்குள்ள குன்றின் அமைப்பே காளிகா யந்திர உருவில் அமைந்து விளங்கு கின்றது 18. சிம்லா: இங்கு தேவி சியாமளா என்ற திருப் பெயரில் எழுந்தருளியுள்ளாள். தேவியின் திருப் பெயரின் திரிபே சிம்லா. 19. மானசரோவர்: இது ஒரு தடாகம். இமாலயத்தில் உள்ளது. தேவியின் தலை விழுந்த இடம் இது. இங்குள்ள அம்பிகை தாட்சாயணி. 20 காஷ்மீரம்: இது தேவியின் கழுத்து விழுந்த இடம். இங்கு அம்பிகை மகாமாயை என்ற திருப் பெயரில் வழிபடப் பெறுகின்ருள்.

21. நேபாளம்: இது தேவியின் முழங்கால் விழுந்த இடம். இங்குள்ள அட்டமாத்ருகைகளின் கோயில் மிகவும் புகழ் பெற்றது. 22. ஜுவாலாமுகி: இது தேவியின் நாக்கு விழுந்த இடம். 23. சுகந்தா: இஃது இமயமலைச் சாரலில் உள்ளது. இது தேவியின் மூக்கு விழுந்த இடம். 24. வாரணுசி (காசி): இது தேவியின் காதுக் குண்டலம் விழுந்த இடம். அதனுல், இங்குள்ள பீடம் மணிகர்ணிகை என்ற பெயர் பெற்றது. அம்பிகை விசாலாட்சி என்ற திருப் பெயருடன்.விளங்குகின்ருள். 25. நைமிசாரண்யம்: இங்கு அம்பிகை இலிங்கதாரிணியாக விளங்குகின்ருள். 26. குருக்ஷேத்திரம்: இது தேவியின் முழங்கை விழுந்த இடம். 27, பிரயாகை: இது தேவியின் கைவிரல்கள் விழுந்த இடம். 28. உஜ்ஜயினி: இங்கு அம்பிகை மங்கள சண்டி என்ற திருப் பெயரில் விளங்குகின்ருள். இந்த அம்பிகையை வழிபட்டுக் காளிதாசன் அருள் பெற்ருன்.

29. பிருந்தாவனம்: இது தேவியின் கூந்தல் விழுந்த இடம் 30 அத்திஞபுரம்: இங்கு அம்பிகை ஜெயந்தி என்ற திருப் பெயரில் விளங்குகின்ருள்.

31. கன்னியாகுப்ஜத்தில் கௌரி என்ற திருப்பெயரிலும், 32. புட்கரத்தில் புருஷூதை என்ற திருப்பெயரிலும் தேவி எழுந்தருளியுள்ளாள். 33. கேதாரம்: சன்மார்க்க தாயினி. 34. பத்ரை: பத்ரேசுவரி. 35. உருத்ரகோடி: உருத்ராணி. 36. சாளக்கிராமம்: மகாதேவி. 37. மலயாசலம்: கல்யாணி. 38. தேவிகாதடம்: நந்தினி. 39 சகஸ்ராரம்: உத்பலாட்சி. 40. வராகசைலம்: ஐயை என்ற திருப் பெயர்களில் தேவி வழிபடப் பெறுகின்ருள்.

41. இராண்யாட்சம்: மகோத்பலே. 42. திரிகூட பர்வதம்: உருத்ர சுந்தரி. 43. சஃய பர்வதம்: ஏகவீரை. 44. வைத்தியநாதம்: ஆரோக்யை. 45. மகாகாளம்: மகேசுவரி. 46. விந்தய பர்வதம்: நிதம்பை. 47. வேதமுகம்: காயத்ரீ. 48. ஹேமகூடம்: மன்மதை. 49. அமரகண்டம்: சண்டிகை. 50. கல்கத்தா: தேவியின் கால் விரல்கள் விழுந்த இடம். அம்பிகை காளிகா என்ற திருப் பெயரில் விளங்குகின்ருள். காளிகட்டம் என்ற பெயரும் இவ்விடத்திற்கு உண்டு. 51. காமரூபம்: இஃது அசாமில் உள்ளது. காமகிரி என்ற பெயரும் இதற்குண்டு. தேவியின் உபஸ்தம் விழுந்த இடம். காமாக்யா என்ற திருப் பெயரில் அம்பிகை இங்கு விளங்குகின்ருள்.

இந்த 51 சக்தி பீடங்களும் பரவலாக இந்தியப் பெரு நிலத்தில் அமைந்து விளங்குவதால், இந் நிலம் பராசக்தியாக—பாரதமாதாவாகத் திருக்காட்சி யளிக்கின்றது; பராசக்தியின் அங்கங்களால் பெருமையும், மிகு சக்தியும் பெற்றுத் திகழ்கின்றது. பாரத நாட்டினிடத்தே கொள்ளும் பற்று, பாரதமாதாவிடம் — பராசக்தியிடம் கொள்ளும் பற்று ஆகும்.

பராசக்தி வடிவ பேதங்கள்

அண்டங்களாகி, அவற்றிலுள்ள உயிர்க் குலங்கள் அனைத்துமாகி, உலக வாழ்வை நடத்தி வைக்கும் பராசக்தி, பலப்பல தெய்வத் திருவடிவங்களில் தோன்றி, பலப் பல திருவிளையாடல்களைப் புரிந்தருள்வதாகத் தெய்வீகப் பெரியவர்கள் கண்டு உணர்த்தியதோடு நில்லாது, அத் தெய்வத் திருவடிவங்களை வழிபடுவதற் குரிய விதி முறைகளையும் வகுத்துக் கொடுத்துள்ளனர். பராசக்தியின் பல்வேறு தெய்வ வடிவங்களில், சிறப்பு மிக்கனவாகிய சில வடிவங்களின் பெருமைகளைக் காணலாம்.

1. மகா இலக்குமி: பரம்பொருளின் பேரழகும் பேரானந்தமும் வெளிப்படுவதே மகா இலக்குமி வடிவம். இதனைக் கமலாத்மிகா என்றும் கூறுவர். இவள் அமுதத்துடன் பிறந்த அமுத மனத்தினள். இவளுக்கு இந்திரை என்ற திருப்பெயரும் உண்டு. சந்திரனின் சகோதரியாகிய இந்திரை இவள். வாழ்வுக் கடலில் தோன்றிய இன்பக் கமலமாகப் போற்றப்படுகின்றவள். கடலினிடையே கமலாசனத்தை—தாமரை ஆசனத்தைக்கொண்டு விளங்குகின்ருள். பொன்னிறப் பொன் மேனி கொண்ட பொலிவுடையள். மேன்மை, செழிப்பு, அழகு, தூய்மை, மங்கலம் அனைத்துக்கும் உருவான இரு கமலங்களைத் திருக்கரத்தில் தரித்து, மற்ற இரு திருக் கரங்களால் அபயவரதம் அருளும் வரதன் பத்தினியாகத் திகழ்கின்ருள். இவ்வுத்தமியை நான்கு யானைகள் எப்போதும் நீராட்டி, இவளது உள்ளத் தண்மையை வெளிப்படுத்துகின்றன. கமலச் செல்வியாகிய இவள், செல்வ வறுமை— பொருள் வறுமை மட்டுமன்றி, அறிவு வறுமையையும் நீக்குவதில் சரசுவதி அம்சமும் உடையவள். நீரிடைப் பொலிவுறும் இப் பொன் மேனியள், மீனமாக வந்த பரந்தாமனின் முதல் அவதாரத்திற்கு அருள் புரிந்தவள்.

2. திரிபுர சுந்தரி: திரிபுர சுந்தரி என்ருல் மூவுலகிலும் பேரழகி என்று பொருள். இலலிதை என்றும், இராஜராஜேசுவரி என்றும், காமாட்சி என்றும், காமகோடி என்றும் போற்றப் பெறுபவள் இவள். ஸ்தூலம், சூட்சுமம், காரணம் எனபவை முப்புரங்கள். இம் முப்புரங்களின் உள் அழகாகத் திகழ்பவள் திரிபுர சுந்தரி. இவளை உள்ளார்ந்த அழகுத் தத்துவமாகக் கருதி, வெளி அழகுக்கென்றே மகா இலக்குமியைத் தனிச் சக்தியாகக் கொண்டுள்ளனர். இவள் உள்ளிருந்து நம் ஆசைகளையும், வெறுப்புகளையும் களைந்து, நமது ஐம்புலன்களையும் மனத்தையும் தன் வயம் கொண்டால்தான், நாம் வெளி அழகுகளைத் தூய்மையாக அநுபவித்து நம்மை மேம்படுத்திக் கொள்ள வியலும். இதற்கு அடையாளமாகவே ஆசையை அடக்கப் பாசமும், வெறுப்பை அடக்க அங்குசமும், ஐம்புலன்களைக் கவர ஐந்து மலர்க் கணைகளும், மனத்தை ஈர்க்கக் கரும்பு வில்லும் இவள் தரித்து விளங்குகின்ருள். மாதுளை நிறத் திருமேனியளாகிய இவள் செவ்வாடையும், செவ்வாபரணமும் பூண்டு, இதயச்செம்மையின் உருவாகத் திகழ்கின்ருள்.

இத் திரிபுர சுந்தரியைப் பரப்பிரம்ம சக்தியாகக் கொள்கையில், ஸ்ரீசக்கரத்தின் நடுவே நின்று, அனைத்துச் சக்திகளும் பற்பல வெளிச் சுற்றுக்களில் தன்னைத் தரிசிக்கும்படியாக இவள் விளங்குகின்ருள். இந் நிலையில் மாதங்கியும், பகளாமுகியும் முறையே இவளுக்கு மந்திரிணியாகவும், சேன நாயகியாகவும் ஆகின்ருர்கள். இவளே ஐந்தொழில்களும் புரிந்தருளுபவள். எனவே, பிரமனும், விஷ்ணுவும், உருத்திரனும், மாயைக்குத் தலைவனுகிய மகேசுவரனும் இவளது மஞ்சத்தின் நான்கு கால்களாக, மாயை நீக்கும் சதாசிவனே இவள் அமரும் பீடமாகின்ருர்.

காமமாகிய மன்மதன் எரிந்தவுடன், காமத்தின் விளைவே குரோதம் என்பதை உணர்த்துவதற்காக அச் சாம்பலிலிருந்து பண்டாசுரன் தோன்றினுன். அவனை வதைத்

தவள் இத் திரிபுர சுந்தரி. கலியுக முடிவில் அவதரிக்கும் திருமாலின் கல்கி அவதாரம், இவளது அருள் வெளிப்பாடே.

3. மாதங்கி: காஞ்சியில் எழுந்தருளித் திகழ்கின்ற காமாட்சியாகிய திரிபுர சுந்தரி அரசி என்ருல், அவளது மந்திரிணியாகத் திகழ்பவள் மாதங்கி. மாதங்கியே மதுரையில் மீனுட்சியாக ஒளிருகின்ருள். பசுமை நிறத் திருமேனியளாகிய இவள், பூரண மகாசக்தியாகவும், அரசியாகவும், இசை முதலான கலைகட்கு அதிதேவதையாகவும் விளங்குகின்ருள். இவள் திருக் கரத்தில் உள்ள வீணையும், பச்சைக் கிளியும் இவளது உண்மை நிலையினை வெளிப்படுத்துவன. இவள் அரசியாகவும் திகழ்கின்ற காரணத்தினுல், இராஜ மாதங்கி என்றும், இராஜ சியாமளா என்றும் போற்றப்படுகின்ருள்.

சண்டாளரான மதங்கர் மாதவம் புரிந்து மதங்க முனிவரானுர். அவரது தவத்துக்கு அருள் கூர்ந்து அவளது மகளாகப் பிறந்தவளே மாதங்கி. மிகவும் அழகியான இவளுடன் நகுலம்–கீரிப்பிள்ளையும் காணப்படுகின்றது. இவளுடன் கீரிப்பிள்ளை இருத்தல் ஒரு தத்துவத்தை உணர்த்துகின்றது. நம்மிடத்தே உள்ள குண்டலினி சக்தியைக் 'குலம்' என்று கூறப்படும். உயிருக்கு ஆதாரமான இந்த சக்தி விழிப்புருமல் உறங்குவது போன்று இருத்தலால் நாம் ஆற்றல் குன்றியவர்களாக, அஞ்ஞானிகளாக இருக்கின்ருேம். இந்தச் சக்தியை யோக சக்தி சாதனத்தால் தட்டி எழுப்ப வேண்டும். குலம் என்பது பாம்பு. பாம்புக்குப் பகையானது நகுலம். கீரிப்பிள்ளையைக் கண்டால் பாம்பு பொங்கிக் கிளம்புவது இயல்பு. இந்த உண்மையை உணர்த்தவே இவள் அருகில் நகுலம் உள்ளது.

4. தாரா: பராசக்தியின் பல்வகைத் தெய்வ வடிவங்களில் தாராவும் ஒன்று. தாரா என்னும் சக்தி வடிவில் நீல

சரசுவதி, உக்ரதாரா, சுக்லதாரா, நீலதாரா, சித்ரதாரா என்ற ஐந்து வகை உண்டு. தாரா என்ருல் வாழ்க்கைக் கடலைக் கடத்துவிப்பவள் என்றும், வாழ்க்கைப் பயணத்தை நடத்திவைப்பவள் என்றும் பொருள்படும். தரைப்பயணம் கடற்பயணம் ஆகியவற்றை முடித்துவைக்கும் காவல் தெய்வம் தாரா. எனவேதான், நாற்சந்தி கூடுமிடத்திலும் கடற்கரையிலும் இவள் சிறப்பாக வழிபடப்படுகின்ருள். இராமபிரான், தாராவின் சக்தியால் தோன்றியவன். எனவேதான், அவன் வன யாத்திரை, கடல் யாத்திரையெல்லாம் சிறப்பாகச் செய்து சிறப்புற்ருன். இராமநாமம் தாரக மந்திரமாகக் கருதப்படும். இதன் காரணம், தாராவின் சக்தியால் அவன் தோன்றியதே. ஓங்காரப் பிரணவ மந்திரத்தைத் தாரக மந்திரம் என்று கூறப்படும். அந்த ஓங்காரமே தாராவின் மந்திரம்.

தாரக மந்திர நாயகியாகிய தாரா, உணர்வுகளை அழிக்கின்ற பேருணர்வு வடிவினள் என்பதை உணர்த்தும் வகையில், ஒரு காலால் சவத்தை மிதித்துக் கொண்டும், வாழ்க்கைப் பிணிப்பை வெட்டுவதற்காகக் கத்தரிக்கோலையும், அகங்கார நீக்கத்தை உணர்த்த மண்டை ஓட்டையும், ஞான வாளையும், ஆன்ம மலர்ச்சியை உணர்த்தும் குளிர் நீலத்தாமரையையும் திருக்கரங்களில் தரித்தும் திருக்காட்சியருளுகின்ருள். இவள், தன்னுடைய நாகங்கள் சூழ்ந்த திருமுடிச்சடை மீது சிவபெருமானையே தாங்கித் திகழ்கின்ருள். புத்தரைத் தாங்குவதாகவும், புத்த மதத்திலிருந்தே தாரா வழிபாடு இந்து மதத்துக்கு வந்தது என்றும் சிலர் கூறுவர்.

5. காளி: காலம் என்பதன் தெய்வ வடிவமே காளி. காலம் என்பதற்குக் கருமை நிறம் என்று பொருள். காளி கருமை நிறத் திருமேனியள். காலத்தில் ஒவ்வொன்றும் மாறிக்கொண்டே இருக்கின்றது. ஒவ்வொன்றும் அழிகின்றது. புதிய உருவம் உண்டாகின்றது. அழிவிற்கு வடிவாக உள்ளவள் காளி. இவள் அழித்தால்தான் புதிய உருவங்கள்

தோன்றும். இவள், உலகையே மகா மயானமாக்கி, மயான உருத்திரனுர் மீதே நின்று ஆடுகின்ருள். கோரமும் இறைவன் செயலே என்பது தெளிந்து, அழகைப் போலவே கோரத்தையும் ஏற்கும் பொருட்டுப் பயங் கரத்தை உருவகித்துக் காட்டுகின்ருள் காளிதேவி. கூரிய நகங்களும், கொடூர நகையும், தொங்கும் நாவும் படைத்த இவள், நிர்வாணமாகவும் இருப்பாள்; சவங்களைப் பின்னிய ஆடை, முண்டமாலை, கபாலத் தலையணி ஆகியவற்றை அணிந்தும் இருப்பாள்; திருக்கரத்தில் கத்தியும், கத்தி யால் வெட்டிய தலையையும் தாங்கியிருப்பாள்; மற்ற இரு திருக்கரங்களால் அபயமும் வரதமும் அருளித் திகழ்வாள்.

உலகில் நிகழும் போர், கிளர்ச்சி, இயற்கையில் தோன்றும் பூகம்பம், எரிமலை, வெள்ளம், சூருவளி, தொத்துநோய் முதலிய அனைத்தும் இக் காளிதேவியின் அருட்செயல்களே. கால தத்துவமாகிய இவளே, உடல் தோறும் பிராணசக்தியாக, குண்டலினியாக உறைகின் ருள். அழகும் அன்புமே வடிவான கண்ணன், இக்காளி யின் சக்தியைப் பெற்றவன். எனவேதான், விளையாட் டின் வாயிலாக நம்மைக் கவரும் அம் மாயாவி, காளியின் தொழிலாகிய அழித்தல் தொழிலைச் செய்தருளினுன். அவன், அரக்கர் பலரைக் கொன்றபின், கௌரவ பாண்ட வர்களும், பிறகு தனது யதுவம்சமும் அழியுமாறு செய் தான். காளிக்குக் கருப்பி என்று அமைவது போன்று கண்ணனுக்கும் கருப்பன் என்ற பெயரும் அமைந் துள்ளது.

6. பகளாமுகி: காளி தேவியோ அழித்தவண்ணம் இருக்கின்ருள். பகளாமுகியோ எச்செயலையும் தடைப் படுத்துகின்ருள்; பின்னர் விட்டுவிடுகின்ருள். இவள் இங் ஙனம் செய்தலின் நோக்கம், செயல் முன்னிலும் திறம்பட நடைபெற வேண்டும் என்பதே. மூச்சை இறுகப் பிடிப்பது தடைபோடத்தான். இவ்வாறு தடைபோட்டுப் பிறகு அதை விட்டால், அதுவே உயிர்வளர்க்கும் பிராணுயாமம்.

இவ்வாறு பிடித்துவைப்பதை தடுத்துவைப்பதை 'ஸ்தம்பனம்' என்பர். பகளாமுகி தேவியோ வாக்கு ஸ்தம்பனக் காரி. அஃதாவது, பேச்சைத் தடுத்து நிறுத்துபவள். அதன் மூலம் அவர்களைச் சிந்திக்கச் செய்பவள். இதற்கேற்பவே இவள், தனது இடக்கரத்தால் ஒருவனுடைய நாவைப் பிடித்து இழுத்தவண்ணமும், வலக்கரத்தில் கதாயுதம் தாங்கி அவனது சிந்தனையை அடித்து வீழ்த்தத் தயாராக உள்ள நிலையிலும் காட்சி தருகின்றாள். இவளது நிறம், ஆடை, அணி, ஆரம் அனைத்தும் மஞ்சள். பொன்னைப்போல் ஒளியை வெளிவிட்டு விளங்காமல், தன்னுள்ளே அமுக்கி வைத்துக் கொள்வது மஞ்சள் நிறம். இவளைப் பூசிப்பவனும் மஞ்சள் நிற ஆடை உடுத்தி, மஞ்சள் கிழங்குகளாலான சப மாலையை உருட்டி, இவளது மந்திரத்தை ஓதவேண்டும். அவனுக்கு வாக்குவாதத்தில் வெற்றி கிடைப்பது மட்டுமன்றி, புனல் ஸ்தம்பனம் அனல் ஸ்தம்பனம் ஆகியவை புரிந்து, நீருக்குள்ளும் நெருப்புக் குள்ளும் நீண்ட நேரம் நிலைகுலையாது வாழும் சித்தி கைகூடும். ஓரிடத்தில் உள்ள மேகத்தை அவ்விடத்திலேயே ஸ்தம்பனம் செய்து இறுகுவித்து மழை பெய்யுமாறு செய்யும் ஆற்றலும் உண்டாகும்.

இந்தப் பகளாமுகி தேவியே திருவானைக்காவில் அகிலாண்டேசுவரியாகத் திகழ்கின்றாள். திருமாலினுடைய கூர்மாவதாரத்தின் உட்சக்தியாக உள்ளவள் இவளே. காஞ்சி காமாட்சியாகிய இல்லிதை போர்புரியும்போது, அவளுக்குச் சேனை நாயகியாக நின்று எதிரி சேனையைச் செயலிழக்கச் செய்தவள் இவள்.

7. புவனேசுவரி: காலமாக விரிந்தவள் காளி. இடமாக விரிந்தவள் புவனேசுவரி. கால வெள்ளத்தில் புவனங்களை மலரச் செய்தவள் இவள். புவனங்களில் தோன்றி நிரம்பிய அனைத்துயிர்கட்கும் வடிவங்களும் பெயர்களும் அருளியவள் இவள். புவனங்களையும், புவனத்து உயிர்களையும் ஆளுபவள் புவனேசுவரி. இவளையே பிரகிருதி அல்லது இயற்கை

என்று கூறுவர். இயற்கை என்று பலவாக விரிந்திருப்பதைப் பார்ப்பதன் வாயிலாக, அதன் மூலமான பிரம்மம் மறைவுபட்டிருப்பதை உணர்கின்றோம். எனவே, இவள் மாயை. எனினும், இவளைப் போற்றி வணங்கினால், இவளே மாயையை நீக்கி மெய்ஞ்ஞானத்தை நல்குவாள்.

காளி மூலாதாரக் குண்டலினி. புவனேசுவரி இதயாகாசத்தில் திகழும் ஞானவெளி. அன்பர்கட்கென்று சிவந்த மேனியளாக வந்த அன்னை இவள். திருமாலின், புவனம் முழுவதையும் நாசிமுனையில் தூக்கி நிலைநிறுத்திய வராக அவதாரம் புவனேசுவரியின் வெளிப்பாடேயாகும்.

8. சின்னமஸ்தா: காளி தேவியின் கோரமான தோற்றத்தையும்விட மிகக் கோரமான தெய்வத் திருவுருவம் சின்னமஸ்தா. காளி கால உருவில் ஒரு நியதிக்கு அடங்கியே வெளி உருவை அழிக்கும் சக்தி ஆவள். இவள் எதற்கும் அடங்காமல் வெளி உருவை அழிப்பவள். சின்னமஸ்தா என்பது துண்டித்த தலையினள் என்று பொருள்படும். இதற்கேற்ப இவள், தன்னுடைய வெட்டப்பட்ட தலையையே கரத்தில் கொண்டுள்ளாள். ஐம்புலன்கள் மட்டுமன்றி, அகங்கார மனமும் தொலைய வேண்டும் என்பதை உணர்த்த, தன் தலையையே கொய்து கொண்டிருக்கும் தியாகத் தெய்வ உருவம் சின்னமஸ்தா. இவள், இரதி மன்மதனை மிதித்துக் கொண்டும் இருக்கின்றாள். இவளது வெட்டிய கழுத்தினின்று வெளிப்படுகின்ற குருதியை வாருணி, இடாகினி என்ற இவளது தோழியர் இருவர் பருகுகின்றனர். வாழ்க்கை முடிச்சை வெட்டுவதற்காக இவளது திருக்கரத்தில் கத்திரிக்கோலும் உள்ளது. கோரமான வடிவினளேயாயினும், இவள் செயல் மிகவும் மதுரமானதுபற்றி, மற்ற இரு திருக்கரங்களும் அபய வரதம் அருள்கின்றன.

சின்னமஸ்தாவின் வெட்டப்பட்ட தலையே இரேணுகை. தலையை வெட்டிக் கொண்ட இவளே, திருமாலின் பரசுராம

அவதாரத்தின் மூலசக்தி. பரசுராமர் ஆறுவது அவதாரம். இவளும் ஆறுவது மகாசக்தி. இவள், ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்கியருளுபவள்.

9. தூமாவதி: சின்னமஸ்தாவிடம் எத்துணை வேகம் உள்ளதோ, அத்துணைக்குச் சோம்பிக்கிடப்பவள் தூமாவதி. தூமாவதி என்பது புகைசக்தி என்று பொருள்படும். தூமம் என்பது புகையைக் குறிக்கும். ஒன்று அழிவதற்கும் மற்றொன்று தோன்றுவதற்கும் இடையில் செயலற்றதாயுள்ள இடைவெளியே இவள். புகை இருள் போன்றுதான் உள்ளது. ஆனால், ஒளி மயமான அக்கினி இன்றேல் புகை இல்லையல்லவா? இவளே, திருமாலின் யோக நித்திரையாவள்.

இவள் வெண்மை நிறத்தினளாக, தளர்ந்த மேனியளாக, அங்கங்கள் தொங்கித் தளர்ந்து பல்லிழந்தவளாக, சீவாத முடியினளாக, அழுக்கு உடையினளாக, காக்கைக் கொடி யுடையவளாக, முறம் ஏந்திய கரத்தினளாக, அன்புடன் வரம் நல்கும் கரத்தினளாகக் காட்சி தருகின்றாள்.

முறம் என்பது தவிட்டைப் புடைத்து அரிசியை மட்டும் தேக்கி வைக்கும் உத்தம கருவி. இக் கருவியைப் பிடித்துள்ள இவள், நம் சிந்தனையாகிய தவிட்டைப் புடைத்து, உண்மை நாம் ஆன ஆத்ம அரிசி மட்டும் நிற்கின்ற உறக்க நிலையை நமக்கு அன்றாடம் அளித்துக் காக்கும் கருணைத் தாய் ஆவள். ஆனால், இந்நிலையில் நாம் ஆத்மனை உணராமல் பாழிடம்போல் கிடக்கின்றோம். அதனால், இவளும் பாழ் நெற்றியினளாக இருக்கின்றாள்.

10. திரிபுர பைரவி: பைரவம் என்றால் அச்சமூட்டுதல் என்று பொருள். திரிபுரசுந்தரி அன்பின் வடிவமாயுள்ளவள். திரிபுர பைரவி அச்சமூட்டுபவளாக உள்ளவள். இவள் கோரச்செயல் புரிந்து அச்சமூட்டவில்லை; தன்னுடைய தவவலிமையினால் பைரவியாக-அச்சமூட்டுபவளாக விளங்குகின்றாள். தவம் என்பது எரிப்பது என்று பொருள்

படும். மனம் ஒருமுகப்படுவதன் தீவிர நிலையே தவம். தவத்தில் ஒன்றைக் கருதி மனம் ஒருமுகப்படுவதால், அம் மனம் ஏனையவற்றை விட்டு நீங்குதல் வேண்டும். உலகைத் துறப்பதற்கு எல்லோரும் தவம் புரிவது இயல்பு. இவளோ உலகைப் படைப்பதற்குத் தவம் புரிகின்றுள். இவள் ஒரு ஞானத்தாய். இதனை உணர்த்தவே இவள் சபமாலையும் ஞான முத்திரையும் தாங்கியிருக்கின்றுள்; நெற்றியில் ஞானக்கண்ணும், இதழ்களில் புன்னகையும் பூண்டு விளங்குகின்றுள். திருக்கரங்களால் அபயம் தந்து, வர முத்திரையும் காட்டி, ஞானமுதம் வழங்குவேன் என்பதை உணர்த்தும் வகையில் அமுத மதியை முடியில் சூடித் திகழ் கின்றுள்.

11. துர்க்கை: பைரவி அச்சமூட்டுபவள். துர்க்கை அச்சம் போக்குபவள். ஆபத்துக் காலத்தில் தன்னிடத்தில் அடைக்கலம் புகுந்தவர்க்கு அச்சம் போக்கியருள்பவள் துர்க்கை. துர்க்கம் என்பது அகழி. அது, மதிலைப் பகைவர் அணுக முடியாமல் செய்வதுபோன்று, தன்னை வழிபடும் அன்பர்களைத் துன்பங்கள் அணுகாவண்ணம் காப்பவள் துர்க்கை. மன்னர்க்கும் வீரர்க்கும் வழிபடு தெய்வமாக உள்ளவள் இவள். நவராத்திரி விழாவில் கௌரி, இலக் குமி, சரசுவதி ஆகிய மூவரும் சேர்ந்த ஓர் உருவமாகத் திகழ்பவள் இவள். அக்கினிகலை, சூரியகலை, சோமகலை என்ற முக் கூறுகளும் தன்னிடத்தே கொண்டவள் இவள்.

இவள் விஷ்ணுவின் சகோதரி. எனவே, விஷ்ணுவிற் குரிய சங்கு, சக்கரம், வில், அம்பு ஆகிய ஆயுதங்களைத் திருக்கரங்களில் தரித்து, பசுமை நிறத் திருமேனியளாக சிங்கவாகனத்தின் மீது காட்சி தருகின்றுள். இவள் தலையில் முடியும் பிறையும் சூடித் திகழ்பவள். இவளுக்கு மானும் வாகனமாக இருத்தல் உண்டு. ஆபத்துக் காலத்தில் தேனில் தோய்த்த வெட்சிப்பூவைத் தூவி, துர்க்கா சூக்தம்

என்ற மந்திரம் ஓதிப் பூசித்து வழிபட்டால் எல்லா இன்னல்களும், பிணிகளும் விலகி இன்பம் மலரும்.

துர்க்கையைப் பற்றி ஆகமங்கள் கூறுங்கால், நீலகண்டி, க்ஷேமங்கரி, அரசித்தி, உருத்திரகூச துர்க்கை, வன துர்க்கை, அக்கினி துர்க்கை, சயதுர்க்கை, விந்திய வாசதுர்க்கை, இரிபுமாரி துர்க்கை என்று ஒன்பது வகை துர்க்கைகளைப்பற்றிக் கூறுகின்றன. இவ்வொன்பது வகை துர்க்கைகளன்றி, நவ துர்க்கைகள் என்ற ஒரு தனிக் கூட்டமும் உண்டு என்று கூறுவர்.

12. மகிடாசுர மர்த்தினி: பழந்தமிழ் நூல்களாகிய சங்க நூல்களும், சிலப்பதிகாரக் காவியமும் சக்தி வழிபாட்டைக் குறித்தும், சக்தியின்பல்வேறு தெய்வ வடிவங்களைக் குறித்தும், சுருக்கியும் விரித்தும் பேசுகின்றன. அவ்வகையில் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளார் மகிடாசுர மர்த்தினியின் திருவுருவத்தைச் சிறந்ததொரு சொல்லோவியமாக வரைந்து விரிவாகக் காட்டியுள்ளார்.

மகிடாசுரமர்த்தினியைக் கொற்றவை என்றும் கூறுவர். எருமைத் தலையை உடையவனாகிய மகிடன் என்னும் கொடிய அசுரனைக் கொன்று வென்றதால் இவள் இப்பெயர் பெற்றாள். இவள் யானைத்தோல் போர்த்து, புலியின் உரியை உடுத்தி, கானத்து எருமைக் கருந்தலை மேல் நின்று காட்சிதருகின்றாள்; வானோர் வணங்க, மறைமேல் மறையாகி, ஞானக்கொழுந்தாகத் திகழ்கின்றாள்; வளையணிந்த கரத்தில் வாள் ஏந்தியுள்ளாள். மான் ஊர்தியில் ஏறி மகிடனை அழித்த இவள், அரி அரன் அயன் ஆகிய மூவரின் இதய மலர்களில் சோதி விளக்காகச் சுடர்வீசித் திகழ்கின்றாள். இவளது தாமரை போன்ற கரங்களில் சங்கும் சக்கரமும் தவழ்கின்றன. சிவந்த கண்களையுடைய சிங்கத்தின்மீது அமர்ந்து விளங்குகின்றாள். சிவபெருமான் திருமேனியின் ஒரு பகுதியில் உறைகின்றாள். இவளை வேதங்களெல்லாம் தொழுது ஏத்திப் பணிகின்றன.

13. அன்னபூரணி: திரிபுரசுந்தரியாகிய இலலிதா தேவியின் உபாங்கமாகத் திகழ்பவள் அன்னபூரணி. இவள் பொன்னிறத் திருமேனியளாகவும், பொற்கலனும் பூமாலைகளும் அணிந்தவளாகவும் திகழ்கின்ருள். இவளது வலக்கரத்தில் பொன் அகப்பையும், இடக்கரத்தில் மணிகள் பதித்த பொற்கலசத்தில் பாற்சோறும் உள்ளன. உயிர்கட்கெல்லாம் உணவு வழங்கும் அன்னையாக விளங்குகின்ற இவள், காசியைத் தனக்கே உரிய சிறப்புத் தலமாகக் கொண்டு விளங்குகின்ருள்.

14. அசுவாருடாம்பாள்: இலலிதாதேவியின் பிரத்தியங்கமாகத் திகழ்பவள் அசுவாருடாம்பாள். இவள் சிவந்த திருமேனியுடன், செந்நிற ஆடைகளும் செந்நிற அணிகளும் தரித்து, செந்நிறக் குதிரை மீது விளங்குபவள். ஒளி வீசும் முகத்தில் மூன்று கண்களும், திருக்கரங்கள் நான்கிலும் முறையே பல்லம் (சவுக்கு), சர்ப்பாத முத்திரை, பாசம், பொற்பிரம்பு ஆகியவற்றையும் கொண்டு விளங்குகின்ருள் இவள். பாசம் பகைவரைப் பிணிக்கவும், பொற்பிரம்பு தீயவரை அச்சுறுத்தவும் தரித்துள்ளாள்.

15. சரசுவதி: வித்தைக்கு—கல்விக்கு உரிய ஆதி தேவதையாகத் திகழ்பவள் சரசுவதி. இவள் பிரம்மனுடன் சம்மதப்பட்டவள். இவள் வெள்ளை நிறத்திருமேனி கொண்டவள். வெள்ளைத் துகிலுடுத்தி வெண்டாமரைமேல் வீற்றிருக்கின்ருள். இவள் திருக்கரங்களில் அக்கமாலை, புத்தகம், வீணை ஆகியவற்றைத் தரித்து விளங்குகின்ருள்.

இவளது அம்சமாக (கூருக) வாக்வாதினி என்ற தெய்வ வடிவமும் உண்டு. இவளும் வெண்ணிறமேனியொடு, எழுதுகோலும் புத்தகமும் ஏந்தி, தலையில் பிறைசூடி, வெண்டாமரையில் வீற்றிருக்கின்ருள். இவளை மாதங்கியின் உபாங்க தேவதை என்றும் கூறுவர்.

16. சண்டி: சண்டன் என்னும் அசுரனைக் கொன்றவள் சண்டி. இவள் மின்னல் ஒளியுடையவள்; கோரமான

தோற்றமுடையவள்; ஒன்பது மாதர்களால் சூழப்பட்டவள் இவள். முக்கண்களும் பிறையும்கொண்டு, எட்டுத் திருக்கரங்களில் சக்கரம், கதை, வேல், கேடயம், அம்பு, வில், பாசம், கண்டனம் ஆகியவற்றைத் தரித்து, சிங்கத்தின் மீது காட்சிதருகின்ருள்.

நவசக்திகள்

"பொருள் ஒன்றே உள்ளது; அதனை அறிஞர்கள் பல வாகக் கூறுவர்" என்பது வேதமொழி. அம்முறையில் சக்தி என்பது ஒன்றேயாயினும், அதன் தொழிற்பாட்டால் பலவகையாக, பலவகைப் பெயருடைய வடிவங்களாகப் பெரியவர்கள் கண்டு வகுத்துள்ளனர். 'சத்திதான் பலவோ என்னில், தான் ஒன்றே; அநேகமாக வைத்திடும் காரியத்தால்' என்ருர் சிவஞான சித்தியாரும்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தில் விளங்கும் திருவெம்பாவை என்னும் பாடற்பகுதிக்குச் 'சக்தியை வியந்தது' என்று நுண்பொருள் தலைப்புக் கொடுக்கப்பெற்றுள்ளது. திருவெம்பாவை என்பது மனேன்மணி, சர்வபூத தமனி, பலப்பிரதமனி, கலவிகரணி, பலவிகரணி, காளி, இரவுத்திரி, சேட்டை, வாமை என்னும் நவசக்திகளின் செயலைக் குறிக்கின்றது என்று கூறுவர் பெரியர். இதனுல் அந் நுண்பொருள் தலைப்பு ஏற்புடைத்தாய் விளங்குகின்றது.

மனேன்மனி என்பது, பக்குவம் எய்திய உயிர்களை மலத்தினின்று நீக்கிச் சிவத்துடன் சேர்க்கும் தொழில் திறமுடையது. சர்வ பூத தமனி என்பது, உயிர்களிலெல்லாம் ஒன்றி உடன் கலந்து நின்று அவற்றின் புண்ணிய பாவங்களை அகற்றுவிக்கும் தன்மையது. பலப்பிரதமனி என்பது, கதிரவனிடத்தில் பதிந்து நின்று தீய கிருமிகளை அழித்து, நல்ல பொருள்கள் பெருகி வளர ஆக்கம் அளிப்பது. பலவிகரணி என்பது, சந்திரனிடத்தில் உள்ள அமுதத் துளிகளைச்

சொரிவித்துப் பயிர்பச்சைகளும் உயிர்த் தொகுதிகளும் தழைத்தோங்க துணை செய்வது. கலவிகரணி என்பது, வானத்தில் இருந்து, எல்லாப் பொருள்களையும் ஏற்றுநின்று, அவை தன்னிடத்தே கலந்து இணைய இடமளித்து நிற்பது. காளி என்பது, காற்றில் கலந்து பிராணமயமாய் விளங்கி, உயிர்கட்கு நலம் விளைவிக்கும் தன்மையது. இரவுத்திரி என்பது, தீயின்கண் தங்கி, அதற்கு வெம்மை வழங்கி நிற்பது. சேட்டை என்பது, நீரில் நிலைபெற்று, அதனிடத்தே தண்மையையும் சுவையையும் உண்டாக்குவது. வாமை என்பது, மண்ணில் விளங்கும் ஐம்பூதங்களின் இயல்புகளும் செயல்களும் நிகழுமாறு செய்வது. இவை, ஒன்றேயான சக்தியின் வகையாகிய நவ சக்திகளின் செயல் முறைகளாகும்.

சப்த மாதர்கள்

சக்தி ஒன்றே பல்வகைப் பெயர்களோடு பல்வகை வடிவங்களாக வெளிப்பட்டுத் திகழ்கின்றது என்பதையும், பிரமன், விஷ்ணு, சிவன், குமரன், அரி, நரசிம்மர், இந்திரன் என்ற தேவர்கள் எழுவரிடத்தே உள்ள சக்திகளே அபிராமி, வைஷ்ணவி, மகேசுவரி, கௌமாரி, வராகி, நரசிம்மி, இந்திராணி என்ற தேவமகளிர்களாகத் திகழ்கின்றனர் என்பதையும் முன்னர் சக்தி வெளிப்பாட்டில் கூறப்பட்டுள்ளன. இத் தெய்வ மகளிர் எழுவரையே 'சப்தமாதர்கள்' என்று கூறுவர். சக்தி ஒன்றே எழுவகைச் சக்தி வடிவங்கொண்டு திகழ்கின்றது.

இந்தச் சப்த மாதர்களின் இயல்புகளையும் செயல்களையும் இலக்கியங்கள் ஆங்காங்கே சிறப்பித்துக் கூறுகின்றன. வேதங்களால் மிகவும் புகழ்ந்து போற்றப்பெறுகின்றவள் அபிராமி. யானைத்தோலைப் போர்த்தியவள் மகேசுவரி. கடலின் வயிறு கிழியுமாறு வேற்படையைச் செலுத்தியவள் கௌமாரி. வானரங்கள் குவித்த மலைகளால் கடலை அடைத்தவள் வைஷ்ணவி. பிரளயத்தினின்று உலகை மீட்டருளிய

வள் வராகி. கற்பக மலரைக் கூந்தலில் அழகுறச் சூடியவள் இந்திராணி. சிங்கத்தை ஊர்தியாகக் கொண்டவள் நரசிம்மி என்று சாத்திரங்கள் புகழ்ந்து கூறுகின்றன.

சக்தி ஆலயங்கள்

சக்தி ஒன்றே பலவாறு வடிவபேதங்கள் கொண்டு, வெவ்வேறு தொழில்களைப் புரிந்து உயிர்கட்கு நலம் புரிந்து வருகின்றது என்ற உண்மை, மேற்கூறியவற்றினின்று இனிது விளங்கலாகும். உலகை இயக்கி ஐந்தொழில்களைப் புரிந்துவரும் அருளாற்றலாகிய அந்த சக்தி, தனக்கென்று ஒரு பெயரும் வடிவமும் இல்லாததாயினும், அன்பர்களின் பொருட்டே அப் பல்வகைப் பெயர்களையும், பல்வகை வடிவங்களையும் கொண்டு விளங்குகின்றது.

சக்தியின் இந்த உண்மை நிலையினை உணர்ந்த பண்டைய பெரியோர்கள், அச் சக்தியின் பல்வேறு வடிவங் களையும் ஆங்காங்கு நிறுவி, அன்புமிகக்கொண்டு போற்றி வணங்கி வழிபடலாயினர். அந்த வழிபாடே சக்தி வழி பாடாகவும், அம்பிகை வழிபாடாகவும், தாய் வழிபாடாக வும் பண்டுதொட்டு விளங்கிவருகின்றது. அங்ஙனம் சக்தி வடிவம் நிறுவப்பட்ட இடங்கள், சக்தியின் அருள் மணக் கும் தலங்களாகத் திகழ்கின்றன. அருள் மணக்கும் அத் தலங்களைச் சக்திபீடங்கள் என்றும் கூறிப்போற்றினர். அத் தலங்களில் திகழும் சக்தி ஆலயங்கள், அன்னை சக்தியின் அருளாலயங்களாக விளங்குகின்றன.

சக்தியின் அருள் மணக்கும் ஆலயம் இல்லாத ஊர் இல்லை என்று கூறலாம். ஒவ்வொரு நகரிலும், கிராமத்தி லும் வெவ்வேறு பெயரும் வடிவும் உடைய சக்தி விளங்கும் ஆலயம் இருக்கக் காணலாம். இந் நாட்டில் உள்ள ஊர் தோறும் விளங்கும் சக்தி ஆலயங்களை இருவகைப்படுத்திக் கூறலாம். அவையாவன: தனித்த சக்தி ஆலயம், இறைவ னோடு இணைந்த சக்தி ஆலயம் என்பவையாகும். தனித்த சக்தி ஆலயங்கள் பலவும், இறைவன் ஆலயத்தோடு

இணைந்த சக்திஆலயங்கள் பலவும் புகழ்பெற்ற சக்தி தலங்களாகத் திகழ்கின்றன. தஞ்சாவூர் மாரியம்மன், திருவொற்றியூர் வட்டப்பாறை யம்மன், சமயபுரம் மகமாயி, தில்லை மாகாளி, கோவை கோனியம்மன், சேலம் பெரிய மாரி, கன்னியாகுமரி போன்ற சக்தி ஆலயங்கள், புகழ் மிக்க தனித்த சக்தி ஆலயங்களாகும். காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, தில்லை சிவகாமி, காசி விசாலாட்சி, திருவானைக்கா அகிலாண்டேசுவரி, நெல்லை காந்திமதி, பாபநாசம் உலகநாயகி போன்ற பல சக்தி ஆலயங்கள், இறைவன் ஆலயங்களோடு இணைந்து விளங்கும் பெருமை மிக்க சக்தி ஆலயங்களாகும்.

தமிழகத்தில் மட்டுமன்றி வங்காளத்தில் காளியும், கேரளத்தில் பகவதியும், மைசூரில் சாமுண்டியும், மகாராட்டிரத்தில் துளஜாபவானியும், காஷ்மீரத்தில் க்ஷீரபவானியும், உத்தரப்பிரதேசத்தில் விந்தியாவாசினியும் தனித்த ஆலயங்களில் எழுந்தருளித் திருவருள் புரிந்து காத்து வருகின்றனர்.

பராசக்தியின் உருவாகத் திகழும் புண்ணிய பாரத பூமியில், அன்னையின் அருளாலயங்கள், பரந்து நிறைந்து விளங்கும் சக்தியைப்போல் பரவி விளங்கி, அன்பர்களின் துயர் களைந்து, இன்னருள் நலம் புரிந்து இனிது காத்து வருகின்றன.

....

2. காஞ்சி காமாட்சி

தலச் சிறப்பு

நகரங்களுள் தலை சிறந்தது காஞ்சிமாநகரம். இப் பெரு நகரைக் கோயில்மாநகரம் என்றும் கூறலாம். இதற்கேற்ப இந்நகரில் 181 பெரிய திருக்கோயில்களும், கணக்கிலடங் காப் பல சிறிய திருக்கோயில்களும் அமைந்து விளங்குகின் றன. எனவேதான், 'கோயில் மலிந்த காஞ்சி' என்று பெரியோர் போற்றினர்.

புண்ணிய தலங்கள் என்றும், முத்திதரும் தலங்கள் என்றும் போற்றப்படுகின்ற அயோத்தி, மதுரா, மாயா (பூரி), காசி, காஞ்சி, அவந்திகா, துவாரகை என்ற தலங் கள் ஏழனுள் ஒன்றாக இருத்தலோடன்றி, முக்கிய தலமாக வும் காஞ்சித்தலம் விளங்குகின்றது. ''முத்திதரும் நகரே ழுள் முக்கியமாம் காஞ்சி'' எனப் போற்றினர் பெரியோர். இத் திருத்தலம் காசியைவிடவும் மேன்மை பொருந்தியது. எனவேதான், இத் தலத்தைத் தட்சிணகாசி என்று சான் றோர்கள் குறித்துள்ளனர்.

இக் காஞ்சித்தலம் பல்லாண்டு காலமாகப் பாவலரும், காவலரும் போற்றிப் புகழும் பெருமையுடையதாக விளங்கி வருகின்றது. ''மாமதிற் கச்சி'' என்பது தேவாரம். இத் தலத்துப் பெருங்கோயில்களில் உள்ள ஒவ்வொரு கற்றூ ணும் கதை சொல்லும்; இசை எழுப்பும்; கவிபாடும் என்று கூறுவர்.

இப் புனிதத் திருத்தலம் எல்லாச் சமயங்களின் உறை விடமாக விளங்கிவந்துள்ளது. இதனை இங்குள்ள சைவ, வைணவத் திருக்கோயில்களும், சமண பௌத்தக் கோயில் களும் உணர்த்துகின்றன. இத் தலத்தில் பிறப்பதும் இறப்

பதும் புண்ணியம் என்று கூறுவர். இத் தலத்தின் அருகில் வேகவதி என்ற புண்ணிய நதியும், இரண்டு மைல்கள் தொலைவில் பாலாறும் ஓடிப் பெருமை சேர்க்கின்றன.

கலைக் கோயில்கள் நிறைந்த காஞ்சிமாநகரம் சென்னைக்குத் தென்மேற்கே 45 மைல்கள் தொலைவில் உள்ளது. புகைவண்டி வசதியும், பேருந்து வசதியும் நிரம்ப உண்டு.

அன்னை காமாட்சி

அகிலாண்டகோடியெல்லாம் ஈன்ற அன்னையாய், மீண்டும் கன்னி என மறைகள் போற்ற விளங்கும் அம்பிகைக்கு எத்துணையோ பல திருப் பெயர்கள் இருப்பினும், அவற்றுள் பெரிதும் போற்றி வழங்கப்பெறும் சிறப்புடைத் திருப்பெயர்கள் சில. அச் சிலவற்றுள் குறிப்பிடத்தக்க முக்கியம் வாய்ந்தவை காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி என்ற மூன்றுமாகும். எனவேதான், 'காஞ்சி காமாட்சி மதுரைமீனாட்சி காசி விசாலாட்சி' எனக் கூறிப் போற்றினர். இம் மூன்று திருப்பெயர்களுள் முதன்மைச் சிறப்பைப் பெற்று விளங்குவது காமாட்சி என்னும் திருப் பெயரேயாகும்.

தமிழ் நாட்டில் உள்ள சிறந்த நகரங்கள் பலவற்றுள் பழமையும் பெருமையும் மிக்க வரலாற்றுச் சிறப்புடைய நகரங்கள் சிலவே. அவற்றுள்ளும் மிக்க சிறப்புடையனவாகத் திகழ்பவை மதுரை, காஞ்சிபுரம் என்ற இரண்டேயாகும். காஞ்சிபுரம் பல்லவ மன்னர்களின் தலைநகரம். மதுரை பாண்டிய மன்னர்களின் கோநகரம். சோழர் தலைநகரங்களாகிய உறையூர், புகார், சேரர்தலை நகரங்களாகிய வஞ்சி, கருவூர் ஆகியவையெல்லாம் அம் மன்னர்கள் காலத்திற்குப் பின்னர் பொலிவிழந்து எளிய நிலை எய்தின. ஆனால், காஞ்சியும் மதுரையும் 2000 ஆண்டுகட்கு முன்பிருந்தே, இன்றளவும் பெரிதும் சிறப்புற்று விளங்கிவருகின்றன. இதற்குக் காரணம், காஞ்சியில்

காமாட்சியும், மதுரையில் மீனாட்சியும் எழுந்தருளியிருந்து காத்துவருதலேயாகும். இவ்வுண்மை பற்றியே இவ்விரு பெருநகரங்கட்கும் 'கன்னிகாப்பு' என்ற ஒரு பெயரும் வழங்கி வருகின்றது.

காஞ்சிமாநகரத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளித் திருக்காட்சியருளிக் காத்தருளும் அன்னையவள் காமாட்சி. காமாட்சி என்னும் இத் திருப்பெயர் மிகவும் பொருட்செறிவுடையது. காமாட்சி என்பது, கா+மா+அட்சி எனப் பிரிந்து, கா—சரசுவதி, மா—இலக்குமி, அட்சி—கண்ணாக உடையவள் என்று பொருள்படும். கலைமகளையும் திருமகளையும் தனக்குக் கண்களாக உடையவள் காமாட்சி. இக் கண்களின் கடைப்பார்வையால் அடியார்கட்குக் கல்வி நலனையும் செல்வ நலனையும் ஒருசேர வழங்குபவள் காமாட்சி.

காமாட்சி என்னும் திருப்பெயர் காம+ஆட்சி எனப் பிரிந்து, (காமம்—விருப்பம்) அடியார்கள் விரும்பியவற்றையெல்லாம் வழங்கும் அருள்நோக்கம் உடையவள் என்றும் பொருள்படும். மற்றும், இத் திருப்பெயர் க+அ+ம+ஆட்சி எனப் பிரிந்து, க—பிரமனையும், அ—திருமாலையும், ம—உருத்திரனையும், ஆட்சி—கண்ணாற் படைப்பவள் என்ற உண்மைப் பொருளையும், தத்துவத்தையும் உணர்த்துவதாகும்.

காஞ்சிப் பெருந்தலத்தில் அன்னை காமாட்சி அவதரிப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் பந்தகாசுரன், பண்டாசுரன் என்பவர்களே. அவ்வசுரர்கள் செய்த துன்பங்களைத் தாங்க வியலாது தேவர்கள் தேவியிடம் சென்று முறையிட்டார்கள். தேவி, காஞ்சியில் கிளிவடிவுடன் செண்பக மரத்தில் வாசம் செய்ய வந்தாள். அவ்வாறு வந்தவளே அங்குள்ள ஒரு பிலத்தில் (வளை—புற்று) தோன்றி, துன்பமற்ற இன்ப ஆட்சியைச் செய்கின்றாள். அன்னை காமாட்சி பிலத்திலிருந்து சுயம்புவாகவே தோன்றியவள் என்று தலவரலாறு கூறுகின்றது.

ஒரு பெண்ணின் நல்லாள் குடும்ப வாழ்க்கைக்கேற்ற குணங்கள் (மனைத்தக்க மாண்புகள்) உடையவளாகவும், தன் கணவனின் வருவாய்க்கு ஏற்றவாறு அளவறிந்து குடும்பம் நடத்தும் இயல்பு (மனைமாட்சி) வாய்ந்தவளாகவும் இருத்தல்வேண்டும் என்ற குடும்பப் பெண்ணின் பண்புநலனுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவள் அன்னை காமாட்சி. தன் கணவனாகிய சிவபெருமான் அளித்த இரண்டு நாழியளவு நெல்லைக்கொண்டே, காமாட்சியம்மை இவ்வுலகில் 32 அறங்களையும் குறைவறச் செய்து முடித்தாள். எனவே தான், சேக்கிழார் சுவாமிகள் ''பெண்ணின் நல்லவள் ஆயின பெருந்தவக் கொழுந்து'' என்று அன்னையைப் போற்றினார். அன்னை காமாட்சி அறம் வளர்க்க வந்தவள். 32 அறங்களையும் முறையே செய்து முடித்த காரணத்தால் அறம் வளர்த்த நாயகி என்னும் திருப்பெயரையும் பூண்டு விளங்குகின்றாள்.

அறம்புரிதலும், கணவனை வழிபடுதலும் குடும்பம் பேணும் குலமகளிர்க்கு உரிய அழகு. அன்னை காமாட்சியம்மை அறம் வளர்த்தும், திருவேகம்பநாதரை என்றும் முடிவிலாப்பூசை இயற்றியும் பெண்ணின் நல்லாளாக, பண்பின் திருவினளாகத் திகழ்கின்றாள். பராசக்தியின் வடிவமாகிய பொன்மைநிற அன்னை காமாட்சி, அருளியல்பின் உருவினளாகவும், பண்புநலப் பெரியோளாகவும் திகழ்ந்து அடியார்கட்குத் திருவருள் புரிகின்றாள்.

காமகோட்டம்

காமகோட்டம் என்றால் அடியார்கள் விரும்பியவற்றை வழங்கும் கோயில் என்று பொருள். இக் காமகோட்டமே அருளின் உருவான அன்னை காமாட்சியம்மையின் திருக்கோயில். இத் திருக்கோயில், காஞ்சி பேருந்து நிலையத்திலிருந்து வடமேற்குத் திசையில் சுமார் மூன்று பர்லாங்கு தூரத்தில், ஐந்து நிலைகளைக்கொண்ட அழகிய இராஜ கோபுரத்துடன் விளங்குகின்றது. அன்னை காமாட்சியின்

கோயில் தனித்து விளங்குவதால், தனித்த சக்தி ஆலயம் என்றும் கூறுவர். ஆனால், இத் தலத்திலுள்ள சிவாலயங் கட்கெல்லாம் இக்கோயிலே அம்பாள் கோயிலாக விளங்கு வதால், இறைவனோடு இணைந்தமைந்த சக்தி கோயில் எனக் கொள்வதே பொருத்தமும் சிறப்பும் உடைய தாகும்.

காமகோட்டத்தில் அன்னை ஆதிபராசக்தியே காமாட்சி யாக எழுந்தருளித் திகழ்கின்றாள். ஆதி பராசக்தி பிலாகா சத்திலிருந்து வெளியே தோன்றி, காயத்ரி மண்டபத்தில் தன்னந்தனியாக இருந்து வலக்கண்ணிலிருந்து பிரமாவை யும், இடக்கண்ணிலிருந்து விஷ்ணுவையும், நெற்றிக் கண்ணிலிருந்து சிவனையும் குழந்தைகளாகத் தோற்று வித்து, முறையே தனது படைத்தல், காத்தல், அழித்த லாகிய பாலை ஊட்டி, முக்கடவுளர்களையும் முத்தொழி லுக்கு அனுமதித்து, உலக வளர்ச்சிக்குக் காரணமான காமத்தால் அவ்வாறு படைத்ததால் பராசக்திக்குக் காமாட்சி என்னும் திருப்பெயர் அமைந்தது.

காயத்ரி மண்டபம் என்பது இக்கோயிலின் முதல் பிராகாரத்தின் நடுவே, 24 தூண்களுடன் அமைந்துள்ளது. அன்னை காமாட்சி இத் திருக்கோயிலில் ஸ்தூலம், சூட்சுமம், காரணம் என்ற மூவகை வடிவிலும அமைந்து விளங்குகின் றாள். அம் மூவகை வடிவங்களாவன: காமகோடி காமாட்சி, அஞ்சன காமாட்சி (அரூபலட்சுமி), காமகோடி பீடம் எனப்படுகின்ற ஸ்ரீ சக்கரம் என்பவையாகும்.

காயத்ரி மண்டபத்தின் நடுவில் காமகோடி காமாட்சி யம்மை தென் கிழக்காக நான்கு திருக்கரங்களுடன் பத்மா சனத்தில் எழுந்தருளித் திருக்காட்சியருள்கின்றாள். இந்த அன்னைக்கு மகாதேவி, திரிபுர சுந்தரி, இராசராசேசுவரி, காமேசுவரி, இலலிதை, ஸ்ரீ சக்கர நாயகி என்ற திருப் பெயர்களும் உண்டு. இக் காமட்சியம்மை, தன்னுடைய கடைக்கண் நோக்கால் அருள் புரிபவளாகையால், அபய வரத கரங்களின்றி, நான்கு திருக்கரங்களிலும் பாசம்,

அங்குசம், மலர்க்கணை, கரும்பு வில் ஆகியவை விளங்குகின்றன. இந்த அன்னை, பந்தகாசுரன் பண்டாசுரன் முதலிய அசுரர்களை அழித்துத் தேவர்களின் அச்சத்தைப் போக்க எழுந்தருளியவளாகையால் இக் கருவிகளைத் தரித்துக் காட்சியருள்கின்றாள். இக் காமாட்சியம்மையே இத் தலத்திலுள்ள எல்லா சிவாலயங்கட்கும் மூல மூர்த்தி. மூலவர் அம்மை. உற்சவர்கள் மட்டுமே எல்லா சிவாலயங்களிலும் உள்ளனர்.

இந்த மூலவராகிய காமகோடி காமாட்சியின் இடது பக்கத்தில் வடக்கு நோக்கியவாறு அரூப லட்சுமியாகிய அஞ்சன காமாட்சி திகழ்கின்றாள். இஃது அன்னையின் சூட்சும வடிவாகும். இந்த அஞ்சன காமாட்சி தவம்புரியும் நிலையில் உள்ளாள்.

மகா இலக்குமிக்குத் தான் மிகவும் அழகுடையவள் என்ற கர்வத்தால், முன்பு ஒருநாள் தன் நாயகனாகிய மகா விஷ்ணுவின் அழகையே பரிகசித்தாள். அதனால் கோபமுற்ற விஷ்ணு, உன்னுடைய அழகு அரூபமாகப் போக வேண்டியது என்று சாபமிட்டார். அப்போது மகா இலக்குமி அவரிடம் இச்சாபப் பரிகாரம் என்னவென்று கேட்க, அவர், மண்ணுலகு சென்று காமகோட்டமடைந்து தவம் புரியுமாறு கூறியருளினார். அவ்வாறே அவள் இக் காம கோட்டத்தையடைந்து தேவியை நோக்கித் தவம் புரிந்தாள். அப்போது தேவி காமாட்சி, அவளை வாழ்த்தி, அவளுக்கு அஞ்சன காமாட்சி எனத் திருநாமமிட்டு, 'நீ என்னுடைய இடப்புறத்தில் தவம் செய்து கொண்டும், என்னைத் தரிசிக்க வரும் அன்பர்கள் என்னுடைய குங்குமப் பிரசாதத்தை உன் மீது போட்டு, உன் உச்சி முதல் கால் வரை தொட்டு வணங்கி உன் பிரசாதத்தை அடைவார்களாக. என்னுடைய குங்குமப் பிரசாத விசேடத்தால் உனக்கு உண்மை வடிவம் உண்டாகும். அப்போது என்னை தரிசித்துவரும் அன்பர்கட்கு அனைத்து நலன்களையும், எல்லா செல்வங்களையும் அளிப்பதோடன்றி, என்னுடைய

தரிசனப் பலனையும் அளித்துக் கொண்டும் இருப்பாயாக' என்று திருவருள் புரிந்தருளினுள். அது முதல் அஞ்சன காமாட்சி தவம் புரிந்து வருகின்ருள் என்பது வரலாறு.

அன்னையின் மூன்ருவது வடிவமாகிய காமகோடி பீடம் எனப்படுகின்ற ஸ்ரீ சக்கரம், காமகோடி காமாட்சியாகிய மூலவரின் எதிரில் உள்ளது. பொதுவாக சக்கரஸ்தாபனம் செய்து அதன் மீதே மூர்த்தியைப் பிரதிட்டை செய்வது வழக்கம். இங்கு மூலவரின் எதிரில் சக்கர பீடம் உள்ளது. அன்னை காமாட்சி சக்கரமாகவும் விளங்குகின்ருள். வட்ட வடிவமாகத் தொட்டிபோன்று இருக்கும் இடமே அச் சக்கர பீடம். அந்தப் பீடத்தில் அட்ட இலக்குமியையும் உரு வாக்கியிருக்கின்ருர்கள். இந்தப் பீடத்தைப் பூசித்து ஆதி சங்கரர் பேறுகள் பெற்ருர் என்றும், ஆசாரிய சுவாமிகள் காமகோடி பீடாதிபதி என்று அழைக்கப்படுகின்றனர் என்றும் கூறுகின்றனர்.

அன்னை காமாட்சி மூவகை வடிவங்களில் திருக்காட்சி யருள்கின்ற இத் திருக்கோயிலில் கருவறை முன் மண்டபத் தென்புறத்தில் வராகியும் எழுந்தருளித் திகழ்கின்ருள். வராகியின் எதிரில் சந்தான ஸ்தம்பம் உள்ளது. இதனை வலம் வழிபடும் அன்பர்கட்கு வம்ச விருத்தியாகிய மக்கட் செல்வம் உண்டாகும் என்பது காமாட்சியம்மையின் அருள் வாக்கு.

காயத்ரி மண்டபத்தில் தேவிக்கு வலப்பக்கத்தில் தெற்கு நோக்கிய வண்ணம் அர்த்தநாரீசுவரர் திருச்சந் நிதி உள்ளது. கோயிலின் மூன்ருவது கிழக்குப் பிராகாரத் தில் கிழக்கு நோக்கியவாறு காசி விசுவநாதர் திருச்சந்நிதி யும் அமைந்துள்ளது.

இத் திருக்கோயிலின் முதல் பிராகாரத்தில், காயத்ரி மண்டபத்திற்குச் செல்லும் வழியில், தென்கிழக்கை நோக் கியவண்ணம் அன்னபூரணி காட்சி தருகின்ருள். மூன்ருவது பிராகாரத்தில் கீழ்க் கோபுரத்தின் உட்புறத்தில் தேவியை

நோக்கிய வண்ணம் மகிடாசுரமர்த்தனி நின்ற திருக் கோலத்தில் விளங்குகின்ருள்.

இக் காமகோட்டத்தில் சாஸ்தா சந்நிதியும், அட்டபுய சரசுவதி சந்நிதியும், துர்வாசர் சந்நிதியும், ஆதிசங்கரர் சந்நிதியும், கள்வர் பெருமான் சந்நிதியும், உற்சவ காமாட்சி சந்நிதியும், கால பைரவர் சந்நிதியும், துர்க்கை சந்நிதியும், பூதநிக்ரக பெருமாள் சந்நிதியும், ஆக பல திருச் சந்நிதிகள் அமைந்து விளங்குகின்றன.

இக் கோட்டத்தில் உள்ள உற்சவ காமாட்சிஅண்மைக் காலத்தில் உருவானவள். புராதன உற்சவ காமாட்சி தனித் தங்கத்தால் ஆனவள். எனவே, அந்த அன்னையை நான்காவது காமாட்சியாக 'பங்காரு காமாட்சி' எனத் திருப் பெயர் பெற்று விளங்கியுள்ளாள். அந்தப் பங்காரு காமாட்சியை, மைசூரிலிருந்து ஆண்ட ஹைதர்அலி கைப் பற்றிச் செல்ல முயன்றபோது, தஞ்சை நாயக்க மன்னர் கள் கொண்டு சென்று பத்திரமாக வைத்திருந்தனர். அவ் வாறு வைத்திருந்த அம் மன்னர்கள் திருப்பிக் கொடுக்க மறுத்ததால், தங்கக் காமாட்சி தஞ்சையிலேயே இருந்து வருகின்ருள்.

இக் காமகோட்டத்தைச் சுற்றிச் சண்பக மரங்கள் நிறைந்திருந்ததால், இத் தலத்திற்குச் சண்பகாரண்யம் என்ற திருப்பெயரும் உண்டு. கோட்டத்தின் வெளி வாயி லுக்கு எதிரில் ஞானக் கூபம் என்ற கிணறு சிறப்பு மிக்கதாக உள்ளது. பஞ்ச மூர்த்திகளால் ஏற்படுத்தப்பட்ட பஞ்ச தீர்த்தப் புட்கரணியும் உள்ளது. இதனை உலகாணித் தீர்த்தம் என்று கூறப்படுகின்றது.

திருவிழா விசேடம்

இக் காமகோட்டத்தில் அன்னை காமாட்சிக்கு மாசி மாதத்தில் நடைபெறும் பிரமோத்சவம் மிகவும் விசேட மானது. இப் பெரிய திருவிழாவின் கடைசி நாள் உதயம்

விசுவரூப சேவை மிகவும் முக்கியத்துவமும் விசேடமும் உடையது. பிரதி பௌர்ணமியில் நடைபெறும் நவாவரண பூசை சிறப்புடையது. நவராத்திரி உற்சவமும், சித்திரை மாதத்து வசந்த நவராத்திரி உற்சவமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

இக் காமகோட்டம், உள்ளே சென்றால் திசைகளை அறிய முடியாத வகையில் அமைந்துள்ளது. திசை மயக்கம் உள்ள கோயில் இது. எனவேதான், சேக்கிழார் ''திசை மயக்கம் ஒன்று என்றும் உளது; அஃது இன்றும் அங்குள தால்'' என்று கூறுகின்றார். ஆனால், காசி விசுவநாதர் திருச்சந்நிதி நேர் கிழக்கில் அமைந்துள்ளதால் மற்ற திசைகளை அறியலாகும். திசை மயக்கம் கொண்ட இக் கோட்டத்துள் சென்று, அன்னை காமாட்சியைக் கண்டு வணங்கி வழிபட்டால் எவ்வித மயக்கமும் இன்றி இன்புற்று வாழலாம்.

3. மதுரை மீனுட்சி

தலச் சிறப்பு

திருவாலவாய் என்னும் மதுரைக்கு இணையான ஒரு தலமும், ஆலவாயில் உள்ள பொற்ருமரைக் குளம் போன்ற ஒரு தீர்த்தமும், அத் தீர்த்தத்தின் அருகே ஞானவடிவாக விளங்கி, தன்னை வழிபடும் அடியார்கட்கு இகமும் பரமும் வீடும் வழங்குபவராகிய சோமசுந்தரப் பெருமான் போன்ற ஒரு மூர்த்தியும், மூன்று உலகங்களிலும் இல்லை என்பது உண்மை.

"திருவால வாய்க்கிணையாம் ஒருதலமும்
தெய்வமணம் செய்யப் பூத்த
மருவார்பொற் கமலநிகர் தீர்த்தமும்அத்
தீர்த்தத்தின் மருங்கே ஞான
உருவாகி யுறைசோம சுந்தரன்போல்
இகபரந்தந் துலவா வீடு
தருவானும், முப்புவனத் தினும் இல்லை!
உண்மைஇது சாற்றின் மன்னே!"

சிவதலங்கள் பலவற்றுள் 16 தலங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. அவற்றுள் சிதம்பரம், காசி, திருக்காளத்தி, திருவாலவாய் என்னும் நான்கு தலங்களும் மேலும் சிறப்பு மிக்கவை. அந் நான்கு தலங்களுள் திருவாலவாய் தலை சிறந்தது. எவ்வாறெனில், சிதம்பரம் கண்டு தரிசித்தாலும், காசி சென்று வாழ்ந்து இறந்தாலும், திருக்காளத்தி பக்தியொடு வழிபட்டாலும் இவ்வுலக போகமும் வீட்டுலக இன்பமும் தரும் இயல்புடையன. திருவாலவாயோ, தன் பெயர் கேட்ட அளவிலேயே போகம் அளிக்கும்; மீண்டும் பிறந்து இறவாப் பேரின்பக் கதியளிக்கும் இயல்புடையது.

கங்கையாற்றின் கரையிலுள்ள காசி முதலிய தலங்கள் மறுமையிலேயே வீடுபேறு அளிக்கும். ஆனல், வைகை யாற்றின் கரையிலுள்ள மதுரையோ இவ்வுலகில் வாழும் போதே வீடுபேறு (சீவன் முத்தி) அளிக்கும். ஆகையால் மதுரைக்குச் சீவன் முத்தி புரம் என்ற பெயரும் உண்டு. இதற்குக் காரணம், பளிங்கு மலையுடன் மரகதம் சேர்ந்தாற் போல் மீனட்சியம்மையாருடன் சுந்தரேசுவரர் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி விளங்குவதுதான்.

சக்திக்கு முக்கியத்துவமுடைய தலங்களுள் மதுரை குறிப்பிடத்தக்க பெருமையுடையது. காஞ்சி, மதுரை, காசி, நெல்லை முதலிய பல தலங்களில் சக்திக்கு—அம்பி கைக்குச் சிறப்பும் முக்கியத்துவமும் விளங்கக் காண்கின் ருேம். இதனை உணர்த்துவதே ''காஞ்சி காமாட்சி, மதுரை மீனுட்சி, காசி விசாலாட்சி'' என்னும் முதுமொழி. மதுரையே மீனுட்சி, மீனுட்சியே மதுரை என்று கூறும் அளவிற்கு இத் தலத்தில் சக்தி முக்கியத்துவமும் சிறப்பும் கொண்டு விளங்குகின்ருள். மீனுட்சியம்மையின் நிழலி லேயே சுந்தரேசுவரர் இங்கு வாழ்கின்ருர். எனவேதான், திருக்கோயிலுக்கு 'மீனுட்சி சுந்தரேசுவரர் கோயில்' என்ற பெயர் வழக்கு அமைந்தது.

கருணையே வடிவாகிய பார்வதி தேவியார் மதுரைப் பாண்டிய மன்னனுக்கு மகளாக மீனுட்சி என்ற திருப் பெய ருடன் அவதரித்து, சோமசுந்தரர் பெருமானை நாயகனுகப் பெற்று, முருகப் பெருமானே உக்கிர பாண்டியனுகத் தோன்றிய பெருமை வாய்ந்ததும், இறைவன் அற்புதமான 64 திருவிளையாடல்களைச் செய்தருளிய பதியும், இராஜ சேகர பாண்டியன் வேண்டுதலுக்கிணங்கி, கால்மாறி ஆடிய ஐந்து நடன சபைகளுள் நடுநாயகமாக வெள்ளி யம்பலம் விளங்கும் பதியும், பதஞ்சலிக்காகத் தில்லை நட னக் காட்சியைக் கூத்தப் பெருமான் காட்டியருளிய பதி யாகவும் விளங்குவது இம் மதுரையம்பதியாகும்.

திருஞான சம்பந்தப் பெருமான் சமணரை வாதில் வென்று விளங்கியதும், பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும், அவரது அமைச்சர் சைவம் காத்த குலச்சிறையாரும், மூர்த்தி நாயனுர் முதலிய பெரியோர்களும் வதிந்து விளங்கியதும் இம் மதுரையம்பதியே.

இம் மதுரைப் பதிக்கு ஆலவாய், கடம்ப வனம், கூடல், நான்மாடக்கூடல், கன்னிபுரீசம், சிவராஜதானி, சிவ, நகரம், சமஷ்டி விச்சாபுரம், சீவன் முத்திபுரம், சிவலோகம், துவாத சாந்தபுரம் என்ற வேறு பல திருப் பெயர்களும் உண்டு.

இத் தலம்பற்றி எழுந்த புராணங்களும், பிரபந்தங்களும் பலவாகும். அப்பர், சம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்களும், சொக்கலிங்கப் பெருமான் அருளிய திருமுகப் பாசுரமும், நக்கீரர், பரணர், சேக்கிழார் பாடிய பாடல்களும், குமரகுருபரர் அருளிய மீனுட்சியம்மைப் பிள்ளைத் தமிழ், மீனுட்சியம்மை இரட்டைமணிமாலை, மீனுட்சியம்மைக் குறம் ஆகிய நூல்களும் சிறப்புமிக்கவையாகும்.

மீனுட்சியம்மை

அன்னை மீனுட்சி ஓர் அற்புதப் பெண்ணரசி. பெண்களுக்கெல்லாம் அரசியாகச் சிறந்து விளங்கும் அவள், பெண்ணுக இருந்தும் திறம்பட அரசாட்சி செலுத்துபவளாவள். அன்னையின் 'மீனுட்சி' என்னும் திருப்பெயர், மீன் போன்ற கண்களையுடையவள் என்ற பொருளைக் குறிப்பது. மீனம்—மீன், அட்சம்—கண். அட்சி—கண்ணையுடையவள். மீன + அட்சி—மீனுட்சி.

மீன், தன் முட்டைகளைக் கண்ணுற் பார்த்து நின்று, அக் கண் பார்வைத் திறனுல் அம் முட்டைகளினின்று குஞ்சுகளைத் தோன்றச் செய்து காப்பாற்றும் இயல்புடையது. அவ்வாறே அன்னை மீனுட்சியும் உலகத்துயிர்களை யெல்லாம், தன் அருள் கனிந்த கடைக்கண் பார்வைத் திறத்

தால் பாதுகாத்தருளுகின்ருள். கடைக்கண் பார்வைத் திறத்தால் உயிர்களைக் காத்தருளுகின்ற காரணத்தால், அன்னை மீனுட்சியும் காமாட்சியைப் போலவே அபய வரத கரங்களின்றிக் காட்சி யருளுகின்ருள்.

அன்னை காமாட்சி, கணவனை வழிபடும் பெண்ணின் நல்லாளாகத் திகழ்கின்ருள். அன்னை மினுட்சியோ, கணவனை உயர்த்தும் குணவதியாக விளங்குகின்ருள்.

பெண்ணுகப் பிறந்தவள், தன்னை மணந்து கொண்ட கணவனுக்குப் பல்வகை மாட்சிகளும் உண்டாகுமாறு ஒழுகுதல் வேண்டும். செல்வம் மிக்கக் கணவனை அடைந்து அச் செல்வத்தால் சிறப்புற்று வாழ்வதை விட, வறிய கணவனேயாயினும் தன்னுல் அவன் சிறப்புற்று வாழுமாறு செய்பவளே சிறப்புடையள் கணவனுல்தான் சிறப்புறும் மனைவியை விட, தன்னுல் கணவனுக்குச் சிறப்புண்டாக்கும் மனைவியே சிறந்த குணவதி என மதிக்கப் பெறுவாள்.

மீனுட்சியம்மையாகிய தடாதகைப் பிராட்டியை மணந்து கொண்டதால், சுந்தரபாண்டியனுகிய சிவபெருமான் பல்வகைச் சிறப்புக்களைப் பெற்ருன். சடைமுடி கொண்டிருந்த அவன், மணிமுடி தரித்தான். கொன்றை மலர்மாலை அணிந்திருந்த அவன், பாண்டியர்க்குரிய வேப்பம்பூ மாலையைச் சூடினுன். பாம்பு அணிகலன்களைக் கொண்டிருந்த அவன், மாணிக்கச்சுடர் அணியைப் பூண்டான். விடைக் கொடியை நீக்கிக் கயற்கொடி பிடித்தான். ஆண்டியாக—பிட்சாடனனுக இருந்த அவன், பாண்டியனின் மருகனுகி பார் முழுதும் ஆட்சிபுரிந்தான். இவையனைத்தும் அன்னை மீனுட்சியால் அவனுக்கு உண்டானவையாகும்.

> "சடைமறைத்துக் கதிர்மகுடம் தரித்து,நறும்
> கொன்றையந்தார் தணந்து, வேப்பம்
> தொடைமுடித்து, விடநாகக் கலன்அகற்றி
> மாணிக்கச் சுடர்பூண் ஏந்தி,

விடைநிறுத்திக் கயல்எடுத்து, வழுதிமரு
மகன்ஆகி, மீன நோக்கின்
மடவரலை மணந்துலகம் முழுதாண்ட
சுந்தரனை வணக்கம் செய்வாம்'' —பரஞ்சோதி.

இங்ஙனம் சொக்கநாதராகிய சிவபெருமான் பெற்ற சிறப்புக்களெல்லாம், சொக்கநாயகியாகிய மீனாட்சியம்மையை அவர் மணந்துகொண்டதால் வந்த பயன்களே யாகும். ஏனென்றால், அம்மையை மணப்பதற்கு முன்னர் சொக்கநாதர், ஆனையை உரித்து அதன் தோலைத்தான் போர்த்திக்கொண்டிருந்தார்; அருச்சுனனால் வில்லடியும், கண்ணப்பரால் செருப்படியும், அரிமர்த்தன பாண்டியனால் பிரம்படியும் பட்டார்;மானம் அழிந்து இரந்து பிச்சை எடுத்துத் திரிந்தார். சொக்கநாயகியாகிய அம்மையை மணந்து கொண்ட பின்னர், அவையனைத்தும் அறவே நீங்கி, பல்வகை மாட்சிகளையும் பெற்று உலகங்களையெல்லாம் ஆளத் தொடங்கினார். மாண்புமிக்க இப் பெருவாழ்வு அவருக்கு மீனாட்சியம்மையால் வருவதாயிற்று.

''ஆனை யுரித்தே அதன்தனைப்
போர்த்திட்டு, அடியும்பட்டு
மானம் அழிந்தங்கு இரந்தே
திரிந்த மதுரைச்சொக்கர்,
ஞானம் மிகப்பெற்று வாழ்வதெல்லாம்
சொக்க நாயகியாள்
பானை பிடித்த முகூர்த்தத்தினால்
வந்த பாக்கியமே.''

—பல பட்டடைச் சொக்கநாதப் புலவர்.

அன்னை மீனாட்சியம்மை பானை பிடித்த மணவினையால் மதுரைச் சொக்கநாதப் பெருமான் சுந்தரபாண்டியன் என்னும் பெயரில் பாண்டிய நாட்டை ஆண்டு, அரச வாழ்வில் மகிழ்ந்தார்.

அன்னை மீனாட்சி, தன் கணவனை செல்வம், அரசு முதலிய வாழ்வில் உயர்த்தும் மனைவியாக, குணவதியாக விளங்குவதோடன்றி, தன் குழந்தைகளாகிய உலகத் துயிர்கட்கெல்லாம் ஆக்கத்தை—செல்வச் செழிப்பை அருளுபவளாகவும் திகழ்கின்றாள். எனவேதான், அன்னை மீனாட்சி பசுமை நிறத் (செல்வச் செழிப்பு) திருமேனியளாக, பசுங்கிளி தரித்த கரத்தினளாகக் காட்சியருளுகின்றாள்.

அம்மையின் ஆலயம்

அன்னை மீனாட்சியம்மையின் திருக்கோயில், மதுரை இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே அரைமைல் தொலைவில் வானுற ஓங்கி விளங்கும் வண்ணக் கோபுரங்கள் நான்குடன் திகழ்கின்றது. அன்னையின் இத் திருக்கோயில் மிகவும் பெரியது. கோயிலில் விளங்கும் கலையழகும் சிலையழகும் சிற்பத் திறனழகும் சித்திரப் பேரழகும் பெருமை குவிக்கின்றன. நாத அமைப்பையும் கொண்டுள்ளது, இந் நான்மாடக் கூடற் கோயில்.

திருக்கோயிலுள்ளே திகழும் பல மண்டபங்களும், விமானங்களும், பொற்றாமரைக் குளமும் சிற்பத் திறனில் சிறந்து விளங்குகின்றன. சிற்பக்கலை உருவாகத் திகழும் மூர்த்திகளின் சிலைகளும், வேறு பல திரு உருவங்களும் பேசாத பேச்சில் பேசிய வண்ணம் உள்ளன. சில தூண்களும் சிலைகளும் இசை பாடுகின்றன. இலக்கியப் பாடல்களும், கதைச் சித்திரங்களும் ஆங்காங்கு தீட்டப் பெற்றுள்ளன. இறைவனது திருவிளையாடல்களை நடித்துக் காட்டும் நாடகச் சிற்பங்களும், நடனச் சிலைகளும் நலம் மிக உள்ளன. எனவே, இத் திருக்கோயில் முத்தமிழ்க் கோயிலாகவும், அங்கையற்கண்ணியம்மையின் அருள் சுரக்கும் ஆலயமாகவும் திகழக் காண்கின்றோம்.

இந்திரன், தனக்கு நேர்ந்த கொலைப் பாவத்தைப் போக்கிக்கொள்ளப் பல தலங்கட்கும் சென்று வரும்போது,

கடம்ப மரங்கள் செறிந்து விளங்கியதால் கடம்பவனம் எனப் பெற்ற இத் தலத்தில் ஓர் அழகிய இலிங்கத்தைக் கண்டு பூசித்து வழிபடவே, பாவம் நீங்கியதால், அவன் இந்திர விமானத்துடன் கூடிய இப் பெருந் திருக்கோயிலைக் கட்டுவித்தான் என்று கூறுவர்.

மதுரை மாநகரின் நடுநாயகமாக அமைந்து விளங்கும் இக் கோயிலினுள்ளே எட்டுக் கோபுரங்களும், இரண்டு விமானங்களும், எழிலுற்று விளங்க, வலப்புறம் அம்மை கோயிலும் இடப்புறம் சுவாமி கோயிலும் சக்தியும் சிவமுமாக, அடைந்து விளங்குகின்றன.

அங்கயற்கண்ணி கோயிலுக்கு முன்னே அட்டசக்தி மண்டபமும், சுவாமி கோயிலுக்கு முன்னே பெரிய கோபுரமும் பொலிவுறுகின்றன. இத் தலம், சக்திக்குப் பிரதான தலமாதலின் அங்கயற்கண்ணியை முதலில் தரிசித்து, பின்னர் சுவாமி கோயிலுக்குப் போவதே வழிபாட்டு முறை.

திருக்கோயிலினுள் ஆடி வீதியும், வெளியில் சித்திரை வீதி, ஆவணி மூல வீதி, மாசி வீதி, வெளி வீதி ஆகிய வீதிகளும் அமைந்துள்ளன. இவ் வீதிகளில் விழாக் காலங்களில் சுவாமி புறப்பாடு நிகழும்.

அன்னை மீனாட்சி கோயிலின் முன்னே அட்டசத்தி மண்டபத்தில் கௌமாரி, இரௌத்திரி, வைணவி, மகாலக்குமி, எக்ஞருபணி, சாமளை, மகேசுவரி, மனோன்மணி என்ற எட்டு சக்திகளின் திருவுருவச் சிலைகள் தூண்களில் திகழ்கின்றன. இம மண்டபத்தில் மீனாட்சி அவதரித்தது முதல் சுந்தரேசுவரரை மணம் புரிவதுவரையுள்ள வாலாற்றினை ஓவியங்கள் உணர்த்துகின்றன. இம் மண்டபத்தை யடுத்த வாயிலின் வலப்புறம் வல்லப கணபதியும், இடப்புறம் சண்முகரும் காட்சி தருகின்றனர். வாயிலையடுத்து உள்ளே சென்றால் வடக்கில் வேடுவர், வேடுவச்சி சிலைகள் உள்ளன. இச் சிலைகள் இரண்டும் ஓர் அந்தணனுக்கு மாபாதகந் தீர்த்தருளிய அடையாளத் திருவுருவங்களாகும்.

கோயிலினுள்ளே அடுத்து விளங்குவது மீனுட்சி நாயக்கன் மண்டபம். இது, திருமலை நாயக்கரின் அமைச்சருள் ஒருவஞன மீனுட்சி நாயக்கனுல் கட்டப்பட்டது. இம் மண்டபத்தின் மேல் விட்டத்தில் 12 இராசிகளும் சதுர வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தை அடுத்து உள்ள மண்டபம், முதலி மண்டபம். இம் மண்டபம் கடந்தை முதலியாரால் கட்டப்பட்டது இம் மண்டபத்தில் பிட்சாடனர், இரிஷி பத்தினி, தாருக முனிகளின் சிலைகளும், மோகினி, கடந்தை முதலியார் சிலைகளும் மிகவும் அழகுடையனவாக அமைந்து விளங்குகின்றன.

இம் மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்ருல் பொற்ருமரைக் குளம் உள்ளது. இத் தலத்துக்குரிய தீர்த்தங்களில் இது முதன்மையானது. இக் குளத்திற்கு மேற்கில், அன்னை மீனுட்சி சந்நிதிக்கு எதிரில் கிளிக்கட்டு மண்டபம் உள்ளது. அன்னையின் திருக்கரத்தில் கிளி இருப்பதாலும், இம் மண்டபத்தில் கிளிக் கூண்டுகள் இருப்பதாலும் இப் பெயர் அமைந்தது. இம் மண்டபத் தூண்களில் யாளிகளின் சிற்பங்கள் இருப்பதால், யாளி மண்டபம் என்ற பெயரும் இதற்கு உண்டு. இம் மண்டபத்தில் பஞ்ச பாண்டவர் சிலைகளும், திரௌபதியின் சிலையும் அற்புதமாக அமைந்துள்ளன. இம் மண்டபத்தில்தான் அன்னை மீனுட்சி சந்நிதியின் பிரதான வாயில் உள்ளது.

அன்னை கோயிலுள் இரண்டாம் பிராகாரத்தின் கிழக்குப் பகுதியில் திருமலை நாயக்கர் மண்டபமும், மேற்குப் பகுதியில் கொலுமண்டமும் உள்ளன; கூடல் குமரர் திருச் சந்நிதியும் உள்ளது. இப் பிராகாரத்தை யடுத்து அறுகாற் பீட வாயில் உள்ளது. இவ்விடத்தில்தான் 'மீனுட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்' நூல் அரங்கேற்றப்பட்டது. இவ்வாயிலின் இருபுறமும் 'காலத்தொடு கற்பனை கடந்த', 'தொடுக்கும் கடவுள்' எனத் தொடங்கும் பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் இரண்டும் வெண் சலவைக் கற்களில் பொறிக்கப்பட்டுள்

ளன. இவ் வாயிலின் வலப்புறம் திருமலை விநாயகர் சந்நிதியும், இடப்புறம் திருமலைக் குமரர் சந்நிதியும் உள்ளன. இதனை அடுத்து உள்ளது உட்பிராகாரம்—முதற் பிராகாரம். இப்பிராகாரத்தில் ஐராவத விநாயகர், வல்லபை கணபதி, நிருத்த கணபதி, முத்துக் குமாரசுவாமி, சண்டிகேசுவரி ஆகியோரைக் கண்டு வழிபடலாம்.

கருவறையில் நடுநாயகமாக அன்னை மீனாட்சியம்மையார், கருணை நோக்குடனும், இரண்டு திருக்கரங்களுடனும் திருக்காட்சி யருளுகின்றாள். அங்கயற்கண்ணி மங்கை அடிக் கமலங்கள் போற்றி வணங்கி வழிபடுதல் நம் கடமையாம்.

தீர்த்தச் சிறப்பு

இத் தலத்துக் கோயிலுக்குரிய தீர்த்தங்களுள் முதன்மையானதாகத் திகழ்கின்ற பொற்றாமரைக் குளம், ஒப்பற்ற பெருமையும் சிறப்பும் உடையது. இதனைப் பொற்றாமரைத் தீர்த்தம் என்று சொல்லுவர். இதற்குச் சிவகங்கை என்ற வேறு பெயரும் உண்டு. இந்திரன், தான் பூசிப்பதற்காகப் பொன்தாமரை மலரைப் பெற்ற இடம் இது. எனவே, இதற்கு இப் பெயர் அமைந்தது.

இப் பொற்றாமரைத் தீர்த்தம், கங்கை காவிரி முதலிய நதிகளும், கடல்களும் மேகங்களும் படைக்கப்படுவதற்கு முன்னர், சிவபெருமான் தன்னை வழிபடுவோர் திருவபிடேகம் செய்தற் பொருட்டு முதன் முதலிற் படைத்ததாகவும் கூறப்படும். இதனால், இதற்கு ஆதி தீர்த்தம் என்ற பெயரும் உண்டு. பிற தீர்த்தங்கள் எல்லாவற்றையும் விட இத் தீர்த்தம் மிக மேலானது பற்றி, இதற்குப் பரம தீர்த்தம் என்ற பெயரும் உண்டு.

இப் பொற்றாமரைத் தீர்த்தம், தன்பால் மூழ்கி வழிபடுவார்க்கு அருளையும் மங்கலத்தையும் விளைவித்தலால் அருட்சிவ தீர்த்தம் என்ற பெயரையும், அன்பர்களின் அஞ்

ஞானத்தை அகற்றி ஞானத்தை அளித்தலால் ஞான தீர்த்தம் என்ற பெயரையும், முக்தியின்பம் பெறுமாறு செய்வித்தலால் முக்தி தீர்த்தம் என்ற பெயரையும், பிற தீர்த்தங்கள் அனைத்தையும் விட உத்தமமானது பற்றி உத்தம தீர்த்தம் என்ற பெயரையும், பல இதழ்களை விரித்துச் செந்தாமரை மலர் பூத்துப் பொலிவுற்று விளங்குவதால் தாமரைத் தீர்த்தம் என்ற பெயரையும், தன்பால் நீராடி வழிபடுவார்க்குத் தருமம், அருத்தம், காமம், மோட்சம் என்ற உறுதிப் பொருள் நான்கினையும் தருதலால் தருமதீர்த்தம், அருத்த தீர்த்தம், காம தீர்த்தம், மோட்ச தீர்த்தம் என்ற பெயர்களையும் பெற்று விளங்குகின்றது.

''அலகிலாத் தீர்த்தம் தம்முள்
அதிகஉத் தமமாய்த் தோன்றி
இலகலால் இதனைத் தீர்த்த
உத்தமம் என்பர் ஆய்ந்தோர்!
பலஇதழ் விரித்துச் செம்பொற்
பங்கயம் மலர்ந்த நீரால்
உலகவர் யாரும் பொற்று
மரைஎன உரைப்பர் அன்றே''

—பரஞ்சோதி முனிவர்.

இப் பொற்றாமரைத் தீர்த்தம், திருக்குறளின் பெருமையை நிலை நாட்டிய சங்கப் பலகை தோன்றிய தடம். தருமபுரம் ஆதீனம் ஆதிகுரு மூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ குரு ஞானசம்பந்தருக்கு அரன் திருவருளால் சொக்கலிங்கம் கிடைக்கப் பெற்ற இடம். இத் தீர்த்தத்தில் நீர்வாழ் உயிர்களுள் எதுவுமே இல்லாதிருப்பது ஓர் அதிசயம். ஒரு நாரைக்கு இறைவன் அருளிய வரத்தின்படி இக் குளத்தில் மீன்களும் பிற உயிர்களும் இல்லாதொழிந்தன என்பது வரலாறு. இக் குளத்தின் நடுவில் தற்போது ஒரு பொன் தாமரை மலர் மிதக்கவிடப்பட்டுள்ளது.

இக் குளத்தைச் சுற்றிலுமுள்ள சுவர்களில் திருவிளை யாடற் புராணக் கதைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. தெற் குச் சுவரில் திருக்குறளின் 1330 பாடல்களும் வெண் சலவைக் கற்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

பிற தலங்கட்குச் சென்று தங்கியிருந்து செய்கின்ற விரதம், பூசை, தானம், தருமம், ஓமம், தவம், செபம், தியானம் முதலியவற்ருல் பெறும் பயனை விட, இப் பொற் ருமரைத் தீர்த்தத்தை அடைந்து நீராடி, இதன் கரையில் இருந்து அவற்றைச் செய்தால் கோடி மடங்கு மிகுதியான பயனைப் பெறலாம் என்று பரஞ்சோதி முனிவர் கூறு கின்ருர்.

''ஏனைமா தலங்கள் தம்மில்
இருந்துசெய் விரதம் பூசை
தானமா தருமம் ஓமம்
தவம்செபம் தியானம் தம்மால்
ஆனமா பயனிற் கோடி
அதிகமாம்; அடைந்து மூழ்கி
ஞானமா தீர்த்த ஞாங்கர்
இருந்தவை நயந்து செய்யின்''

திருவிழாச் சிறப்பு

அன்னை மீனுட்சியம்மை அருளாட்சி புரிந்தருளும், மதுரையம் பெருந்தலம், ஒரு திருவிழாத் தலமாகும். மாதந்தோறும் பெரிய திருவிழா என்று சொல்லும் அளவிற் குப் பல விழாக்கள் நடைபெறுகின்றன. சித்திரை மாதம் சித்திரைப் பெரு விழா 12 நாட்கள் வரையிலும், வைகாசி யில் கால வசந்த விழா 10 நாட்கள் வரையிலும், ஆனியில் ஊஞ்சல் விழா 10நாட்கள் வரையிலும், ஆடியில் ஆடி முளை கொட்டு விழா 10 நாட்கள் வரையிலும், ஆவணியில் ஆவணி மூலப் பெரு விழா 18 நாட்கள் வரையிலும், புரட் டாசியில் நவராத்திரி விழா 10 நாட்கள் வரையிலும், ஐப்

பசியில் கோலாட்டா விழா 6 நாட்கள் வரையிலும், கார்த்திகையில் தீப விழா 10 நாட்கள் வரையிலும், மார்கழியில் எண்ணெய்க் காப்பு விழா 9 நாட்கள் வரையிலும், தை மாதத்தில் தெப்ப விழா 12 நாட்கள் வரையிலும், மாசியில் மாசி விழா ஒரு மண்டலமும், பங்குனியில் கோடை வசந்த விழா 9 நாட்கள் வரையிலும் நடைபெறுகின்றன.

இவ் விழாக்களுள் சித்திரை மாதத்தில் நிகழும் சித்திரைத் திருவிழாவும், தை மாதத்தில் நிகழும் தெப்பத் திருவிழாவும், ஆவணி மாதத்தில் ஆவணி மூல விழாவும் மிகவும் முக்கியத்துவமும், சிறப்பும் உடைய விழாக்களாகும்.

4. காசி விசாலாட்சி

'கங்கைக்கு நிகரான நதியும் இல்லை; காசிக்கு நிகரான பதியும் இல்லை' என்பது இந்துக்கள் கொள்கை. தொன்றுதொட்டுப் பாரத நாட்டு மன்னரும், மக்களும், அறிஞரும் கங்கையாற்றையும், காசிமாநகரையும் வணங்கிப் போற்றி வாசி பெற்றுள்ளனர்.

அன்னை விசாலாட்சி உவந்து உறையும் காசி என்னும் கவினுர் பெரும்பதி, அலகாபாத்திலிருந்து 78 மைல்கள் தொலைவில் உள்ளது. கங்கைக் கரையில் அமைந்து கவின் பெற்று விளங்கும் இத்தலத்திற்கு, பம்பாய் வழியாகவும், கல்கத்தா வழியாகவும், நாகப்பூர் வழியாகவும் செல்லலாம்.

தலச் சிறப்பு

காசி, பொதுவாக சிவதலங்கட்கெல்லாம் சிகரம் போன்று விளங்குவது. இத் தலம் மிகவும் சிறப்புடையதாக இருக்கும் காரணத்தினலேயே, தென்னுட்டிலிருந்து இங்கு வந்து இறைவனை வழிபட்டோர், இத் தலத்தின் நினைவாகத் தென்னுட்டிலும் சிவதலம் இருத்தல் வேண்டும் என விரும்பி, 'தென்காசி', 'சிவகாசி' என்ற செழும்பதிகளை அமைத்துப் போற்றினர்.

கங்கையாற்றின் கரையில் உள்ள இந்தக் காசியம் பதியை, பூலோகக் கயிலாயம் என்று கூறுவர். இத் தலம், முத்திதரும் தலங்கள் ஏழனுள் ஒன்று. காசியில் இறந்தால் முக்தி. இத் தலத்திற்குப் பெருஞ் சிறப்பையும் பேரழகையும் ஊட்டுவது கங்கைத் திரு நதியே.

புகழ் பெற்ற கங்கை நதி, கருணையின் வடிவாகிய அன்னை சக்தியின் வெளிப்பாடேயாகும். பாரத நாடு

செய்த பெருந்தவத்தின் பயனுக, இமய மலேயில் பிறந்து விண்ணுக்கு அடங்காமல், இமய வெற்புக்கு அடங்காமல் அன்னே சக்தியின் கருணே வடிவாய்ப் பெருக்கெடுக்க, அதனேப் பேணி அணேத்துத் தன் வேணியில் அமைத்தான் ஈசன். புனிதர் போற்றும் பெரு நதியாகிய இத் திருநதியின் புண்ணியத் துறையில் அமர்ந்து, அருந்தவம் முயன்று இன்பப் பேறு பெற்றவர் எண்ணிறந்தோர். இப் புண்ணிய நதிக்கரையில் அமைந்து விளங்கும் காசியம்பதியின் பேரழகைக் காணவேண்டுமெனில், கங்கை நதிக் கரையிலிருந்தே காணவேண்டும். அப்பொழுதுதான் அதன் முழு அழகையும் கண்டு மகிழ முடியும்.

தெய்வத் திருநதியின் கரையில் அமைந்த காசியம்பதி, சுமார் ஐந்து மைல்கள் நீளம் கொண்ட, தெய்வ நலம் சான்ற பெரியதொரு பட்டணமாகத் திகழ்கின்றது.

கங்கையாற்றில் வந்து சேரும் வாரணே என்ற ஆற்றுக்கும், அசி என்ற ஆற்றுக்கும் இடையில் முன்னுளில் அமைந்த காசி, வாரணுசி என்னும் பெயரைப் பெற்றது. வாரணுசி என்னும் இப் பெயரே பனுரஸ் என்று வழங்கி வருகின்றது. வடநாட்டார் நாவில் வகர எழுத்துத் திட்ட வட்டமாக வழங்கப்படுவதில்லே போலும்! வசவன் என்பதைப் பசவன் என்றும், வங்காளம் என்பதைப் பெங்கால் என்றும், வாரணுசி என்பது பாரணுசி என மருவி, பனுரஸ் என்று வழங்கி வருகின்றது.

தென்னுட்டில் அன்னே காமாட்சியும், அம்மை மீனுட்சியும் விளங்குவது போன்று. வடநாட்டுக் காசியம்பதியில் அன்னே விசாலாட்சி திருக்கோயில் கொண்டு எழுந்தருளித் திகழ்கின்ருள். அன்னே விசாலாட்சியின் அருள் திறத்தால், மக்கள் மன மாசகற்றும் மாநகராகவும், பிறவிப் பிணி தீர்க்கும் பெரும்பதியாகவும் காசியம்பதி திகழ்கின்றது.

இக் காசித் தலத்துக் கங்கைக் கரையோரத்தில் அசி காட் முதல் வருணேகாட் வரையில் நீராடுவதற்கென்று 64 படித் துறைகள் அமைந்துள்ளன. கங்கையில் நீராடல்

புனிதமானது. பாவங்களையெல்லாம் போக்கியருளும் புண்ணியத்தன்மை வாய்ந்த அன்னையின் வடிவமே கங்கை.

தென்னாட்டிலிருந்து காசிக்குச் சென்ற முனிவராகிய குமரகுருபரர், இத்தலத்தில் விசுவநாதர் திருக்கோயிலுக்கு அருகில் குமாரசுவாமி மடம் என்ற பெயரில் ஒரு திரு மடம் அமைத்து, அம் மடத்தில் சில காலம் தங்கி இருந்துள்ளார். அவர் அம் மடத்தில் தங்கியிருந்த காலத்தில், தமிழகப் பண்பாட்டையும், பக்திப் பாடல்களின் சுவையையும், கம்பராமாயணச் சிறப்பையும் விரித்துரைக்க, சிறந்த இராம பக்தராகிய துளசிதாசர் போன்ற பெரியோர் பலர் கேட்டு வியந்து மகிழ்ந்துள்ளனர். குமாரசுவாமி மடம் தமிழ் மணமும் தெய்வ நலமும் திகழும் இடமாக விளங்கியது—விளங்குகின்றது. அம் முனிவர் அம் மடத்தில் இருந்த போது, காசியம்பதியைப் போற்றிப் பாமாலை தொடுத்து, 'காசிக் கலம்பகம்' என்னும் நூலை யாத்தருளினார். அந் நூலில்,

“பாவலரும் நாவலரும் பண்மலரக் கண்மலரும்
காவலரும் ஏடவிழ்க்கும் காசியே”

என்று அம்முனிவர் போற்றுகின்றார்.

விசுவநாதர் பூசை

பாவங்களைப் போக்கிப் புனிதமாக்குவதில் காசிக்கு நிகரான தலம் மூவுலகங்களிலும் இல்லை என்று கூறுவர். இக் காசித் தலத்தைப்போல், தென்னாட்டில் 'காசியில் வீசங் கூட'—காசியைவிட வீசம் பாகம் அதிகமுள்ள—காசியை விட அதிகச் சிறப்புள்ள-காசியை விட அதிகப் பலனுள்ள தலங்களாகத் திருவாஞ்சியம், குத்தாலம் முதலிய சில தலங்கள் கூறப்படும். காசியை உயர்வாகவும், குத்தாலத்தைத் தாழ்வாகவும் கருதிய ஓர் அந்தணர்க்கு உமை மணாளர் காட்சியளித்து, 'காசி உயர்வு குத்தாலம் தாழ்வு என்றெல்லாம் எண்ணாதே. நீ விரும்பிய காசியை

இக்குத்தாலத்திலேயே பெறுவாய். இத் தடாகத்தில் மூழ்கு' என்று கூற, அந்த அந்தணரும் அந் நிலையில் காவிரித் துறையில் மூழ்கி எழ, எதிரில் காசி விசுவநாதரும், விசாலாட்சியும் காட்சியளித்தருளினர் என்று ஒரு வரலாறு உண்டு.

அன்பர்களின் பாவங்களை எல்லாம் தான் ஏற்றுக் கொண்டு, அவர்களைப் புனிதமாக்குகின்ற கங்கை, தன்னிடத்துள்ள பாவங்களைக் காவிரியில் கரைப்பதற்காகத் துலா மாதத்தில் வருவதாக ஐதிகம். எனவேதான், 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று காவிரித்தாயைப் போற்றினர்.

மக்களின் கருமந் தொலைக்கும் காசித்தலத்தில், கேதாரீசுவரர், விசுவநாதர், விசாலாட்சி, டுண்டி கணபதி, அன்னபூரணி, பைரவர், தண்டபாணி, துர்க்கை, கெளடி பாய் முதலியோர் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் உள்ளன. இக் கோயில்களுள் முக்கியத்துவம் வாய்ந்தவை விசுவநாதர் திருக்கோயிலும், விசாலாட்சி திருக்கோயிலுமாகும்.

விசுவநாதரின் கருவறைக் கோயில் முழுவதும் பளிங்குக் கற்களால் பாவப்பட்டிருப்பதால், கண்ணிற்கும் கருத்திற்கும் இன்ப மூட்டுவதோடன்றிப் பெருக்குவதாயும் உள்ளது. சுவரில் சுற்றிலும் பல பளிங்குச் சிலைகள் பொலிவுற்று விளங்குகின்றன. விசுவநாதருக்கு நிகழும் பூசைகளுள் சப்தரிஷி பூசை முக்கியம் வாய்ந்தது. இப் பூசையில் அர்ச்சகர் பலர் மந்திரம் சொல்லி அபிடேகம் செய்து, நாகாபரணம் வெள்ளிக்குடை சாத்தி, தீபாராதனை நடைபெறுகின்றது. இது முடிந்தவுடன் தமருகம் போன்ற ஒரு வாத்தியம் முழங்க பைரவருக்குப் பூசை நடைபெறுகின்றது. பைரவர் பூசை முடிந்தவுடன், எல்லோரும் உள்ளே சென்று சுவாமியைத் தொட்டுத் தரிசிக்கலாம். இது நிகழ்ந்த பின்னர், தென்னிந்திய முறையில் அர்த்தசாம பூசை நிகழ்ந்து, விபூதிப் பிரசாதம் வழங்கப்பட்டுக் கதவம் திருக்காப்பு இடப்படுகின்றது.

விசுவநாதர் கோயிலின் பின்புறத்தில் ஆதி விசுவ நாதர் சந்நிதி இருந்துள்ளது. அது தற்பொழுது பள்ளி வாசலாகவும் ஒரு பெரிய நந்தியையும், கிணற்றையும் உடையதாகவும் உள்ளது. சுமார் 300 ஆண்டுகட்கு முன் முகம்மதியர் படையெழுச்சியின்போது ஆதிவிசுவநாதரை அதனுள் பதுக்கி வைத்திருந்ததாகவும், பின்னர் பக்தர் களின் கனவில் இறைவன் தோன்றி, இப்போதுள்ள சுவாமி யைப் பிரதிட்டை செய்யுமாறு கூறியருளியதாகவும் கூறப் படுகின்றது.

விசாலாட்சி கோயில்

அன்னை விசாலாட்சியின் திருக்கோயில், விசுவநாதர் கோயிலிலிருந்து சுமார் இரண்டு பர்லாங்குகள் தூரத்தில் அமைந்து விளங்குகின்றது. அன்னையின் கோயில் எவ்வித ஆடம்பரமுமின்றித் தென்னிந்திய கோயில் அமைப்பு முறைப்படி அமைந்து விளங்குகின்றது. தன்னை அன்புடன் வணங்கி வழிபட வருவோரின் விசனங்களையெல்லாம் போக்கி, வேண்டுவனவற்றை யருளும் விசாலாட்சி, கரு வறை நடுவகத்தில் திருவருள் சுரக்கும் திருநோக்குடன் திருக்காட்சி யருளுகின்ருள்.

அன்னபூரணி

உலக உயிர்கள் அனைத்தும் முதற்கண் தேடுவது உணவு. அகில உலகத்தையும், உலகத்துயிர்களையும் படைத்தவளாகிய அன்னை சக்தி, அவ்வுயிர்கட்கெல்லாம் உணவளித்துக் காக்கும் கடமையினளாகத் திகழ்கின்ருள். அவளே அன்னபூரணி என்ற திருப்பெயரினளாக இத் தலத்தில் கோயில்கொண்டு விளங்குகின்ருள்.

கல்லினுள் தேரைக்கும் கருப்பையுள் உயிருக்கும் அன்னம் இடுபவள் அன்னபூரணி!

உலகுக்கெல்லாம் உணவூட்டுபவன் உமாபதி. 'அத்தி முதல் எறும்பீருய் சித்தம் மகிழ்ந்தளிக்கும் தேசிகா'

என்ருர் பட்டினத்தடிகள். அந்தத் தேசிகனுக்கும் கபாலத்தில் பிச்சையளிப்பவள் அன்னபூரணி.

அனைத்துயிர்களின் களைப்பையும் நீக்கி, இறுதியிலும் உறுதுணையாக இருந்து, வினைப் பிணிப்புக்களாகிய முடிச்சுகளை அவிழ்த்து, நம் தீவினைகளைத் திருவருட் பார்வையால் போக்கி, என்றும் மீளாத இன்பத் திருவடியை அளிக்கின்ருள் அன்னபூரணி.

ஞானம், வைராக்கியம் என்ற மோட்ச சாதனங்கள் இரண்டையும் நமக்குப் பிச்சையிடுகின்ருள் அன்னபூரணி.

இந்த அன்னபூரணி, ஒரு திருக்கரத்தில் கரண்டியையும், ஒரு திருக்கரத்தில் அன்ன பாத்திரத்தையும் தாங்கியவளாகத் திருக்கோயில் கொண்டு விளங்குகின்ருள். இக்கோயிலில், அன்னபூரணியைச் சூழ்ந்தவர்களாக காளி, இராஜேசுவரி, கங்கா தேவியின் வருகை, பகீரதன் தவம், இலக்குமி நாராயணர், கோபால கிருஷ்ணர், பார்வதி பரமேசுவரர், ஆஞ்சநேயர், விக்கினேசுவரர் ஆகியோர் பளிங்குப் படிவங்களாக, திருச்சந்நிதிகள் கொண்டு திகழ்கின்றனர்.

கௌடிபாய் அம்மை

துர்க்கா குண்டு என்ற குளத்தை அடுத்து ஒரு பர்லாங்கு தூரத்தில் கௌடிபாய் அம்மையார் கோயில் உள்ளது. இந்த அம்மையார், விசுவநாதரின் சகோதரி என்று கூறப்படுகின்றது.

விசுவநாதர் எல்லோராலும் தொடப்படுவது தனக்குப் பிடிக்கவில்லை என்று கௌடிபாய் கூற, விசுவநாதர் தனக்குப் பக்தியே முக்கியம் என்றும், நீ பக்தர்களை அவமதித்தாய் என்றும் கூறி, அவமதித்ததன் காரணமாகத் தன்னை நீங்கிச் சேரியில் வாசம் செய்யக் கடவை என்று சபித்ததாகவும், அதற்கு அம்மை விமோசனம் கேட்க, 'என் தரி

சனத்துக்காக வரும் பக்தர்கள், யாத்திரை நிறைவுறுதற் பொருட்டு உன்னையும் தரிசிக்க வேண்டும். அப்போது அவர்கள் அடைந்த புண்ணியத்தின் பெரும் பகுதியில் ஒரு சோழி அளவை உனக்குக் கொடுப்பார்கள். அந்தப் புண்ணியத்தின் பலனாக நீ செய்த குற்றம் நீங்கும்' என்று சாப நிவர்த்தி அளித்ததாகவும் கூறப்படுகின்றது.

இதன்படியே கௌடிபாய் அம்மை கோயில், சேரியின் நடுவில் அமைந்துள்ளது. பக்தர்களும் சோழியுடன் சென்று சோழியைப்போட்டு வழிபட்டு வருகின்றனர்.

இத் தலத்தில் மற்றும் துர்க்கைக் கோயில், பாரதமாதா கோயில் ஆகியவையும் அமைந்து விளங்குகின்றன.

தீர்த்தக் கட்டம்

இத் தலத்தில் கங்கைக்கரை யோரத்தில் நீராடுவதற் கென்று 64 படித் துறைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று முன்னர் கூறப்பட்டது. அப் படித்துறைகளை 'ஸ்நான கட்டங்கள்' என்றும், 'தீர்த்த கட்டங்கள்' என்றும் கூறுவர். அவற்றுள் அசிகாட், அரிச்சந்திர காட், கேதார் காட், பஞ்ச கங்கா காட், அசுவமேத காட், மணிகர்ணிகை காட், வாரணை காட் ஆகிய கட்டங்கள் முக்கியமானவையாகும்.

அசிகாட், அரிச்சந்திர காட் என்ற தீர்த்த கட்டங்களில் அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசன், விசுவாமித்திரர் முதலியோர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. கேதார் காட் அருகில் கேதாரீசுவரர் கோயில் பெரியதாக அமைந்துள்ளது. இக் கட்டத்தில் நீராடி இக் கோயிலுக்குச் சென்று வழிபடுவர். அசுவமேத காட் என்ற கட்டத்தில் பத்து அசுவமேத யாகங்களைச் செய்ததாகக் கூறப்படுகின்றது. மணிகர்ணிகைகாட் என்ற இடத்தில் எப்போதும் பிணங்கள் வெந்துகொண்டே இருக்கின்றன. நமது உடல்கள் பஞ்சபூதங்களில் கலப்பதாகக் கருதுகின்றனர். இக்

கட்டம் கங்கை நீரால் ஒரு குளம்போல் அமைக்கப்பட்டுள்ளது. வார்ணை காட் என்ற கட்டம் கடைசி கட்டமாகும். இக் கட்டம் ஒன்றில் நீராடினுல், 64கட்டங்களிலும் நீராடிய பலன் உண்டு. எனவே, இக் கட்டத்தில் பக்தர்கள் கூட்டம் அதிகம். கங்கையிலுள்ள இக் கட்டங்களில் நீராடிக் கர்ம வினைகளை ஒழித்து, கருணைக் கடலாகிய விசுவநாதரையும், கருணை வடிவாகிய விசாலாட்சியையும் கண்டு வணங்கி வழிபட்டுய்ய வேண்டியது மனிதப் பிறவி யெடுத்தோர் கடமையாகும்.

5. தில்லை சிவகாமி

தலச் சிறப்பு

சோழ நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற சிவதலங்கள் 190. அத் தலங்களுள் முதன்மை பெற்று விளங்குவது தில்லை என்னும் பெருந்தலம். தில்லை என்னும் மரங்கள் முன்னுளில் அடர்ந்த காடாக இருந்ததால் தலத்திற்குத் தில்லை என்னும் பெயர் அமைந்தது. பெரும் பற்றிஞல் புலிப்பாதர் (வியாக்கிரபாதர்) பூசித்த இடமாதலால், பெரும் பற்றப் புலியூர் என்ற பெயரும் இத் தலத்திற்கு உண்டு. மற்றும் பூலோகக் கயிலாயம், புண்டரீகபுரம் என்றும் இத் தலத்தைப் போற்றுவர்.

சித்+அம்பரம்—சிதம்பரம். சித்—அறிவு, அம்பரம்—வெட்டவெளி. எனவே, இத் தலம் ஞானகாசம் என்னும் பெயர் உடையதாயிற்று. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்ருலும் மிக மேன்மையாகப் போற்றப்படுவது சிதம்பரம்.

இத் தலத்தில் எழுந்தருளித் திருக் காட்சியருளுகின்ற மூர்த்தி, ஓம் என்னும் பிரணவத்தின் வடிவாக நின்று நாதாந்தக் கூத்தாடும் நடராசப் பெருமான். ஐந்தெழுத்துச் சொரூபியாகத் திகழும் நடராசப் பெருமான், திருக்கூத்தின் வாயிலாகப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் புரிந்தருள்கின்ருர்.

கருணைக் கடலான நடராசப் பெருமான், இன்ப அனுபவமான அழகிய வடிவத்தில் அனைத்துலகமும் தோன்றி மறைதற்குக் காரணமான ஞானகாயமான திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளும் திருக்கோயிலையுடைய சிறப்புப் பெற்றது சிதம்பரத் தலம்.

உலகம் விராட் புருடன் வடிவம்; திருவாரூர் அதன் மூலாதாரம்; திருவானைக்கா கொப்பூழ்; திருவண்ணாமலை மணிபூரகம்; திருக்காளத்தி கண்டம்; காசி புருவ மத்தியம்; சிதம்பரம் இருதயம் என்று கூறுவர் பெரியோர்கள். உலகம் தோன்றிய காலம் முதற்கொண்டே நடைபெறும் ஆனந்தத் தாண்டவத்தை நடராசப் பெருமான், அடியார் பொருட்டு இருதய ஸ்தானமான சிதம்பரத்தில் ஆடிக் காட்டியருள்கின்றார்.

தரிசிக்க முக்தியளிக்கும் தலம் சிதம்பரம். பஞ்சபூத தலங்களில் ஆகாயத்தலமாக விளங்குவது சிதம்பரம். இச் சிதம்பரப் பெருந்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் வகையில் மிகவும் சிறப்புடையது என்பதைப் பின்வரும் அடிகள் உணர்த்தும்:

''மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே''
''ஏத்த ருந்தலம் எழிற்புளி யூரே''
''தீர்த்தம் என்பது சிவகங்கையே''—குமரகுருபரர்.

மற்ற தலங்களில் உள்ள சிவ கலைகள் அனைத்தும் அர்த்த சாமத்தில் தன்னிடத்தில் வந்து ஒடுங்கும் ஒப்புயர் வற்ற சிவதலம் சிதம்பரம்.

மாணிக்கவாசக சுவாமிகள் 'திருச்சிற்றம்பலக் கோவையார்' பாடியருளியதும், சேரமான் பெருமான் நாயனார் 'பொன் வண்ணத் தந்தாதி' பாடியருளியதும் இத் தலத்திலேயே. நடராசப் பெருமான் திருவடிகளே நமக்குத் துணை என்று நம்பி பூசித்து வந்த அச் சேரமான் பெருமான் நாயனாருக்கு, அவர் பூசை முடிவில், எம்பெருமான் தம் திருச் சிலம்பொலி கேட்கும்படிச் செய்து வந்த பெருந்தலம்.

மாணிக்கவாசக சுவாமிகள், திருநீலகண்ட நாயனார், திருநாளைப் போவார் நாயனார், கூற்றுவ நாயனார், கோச் செங்கட் சோழ நாயனார், கணம்புல்ல நாயனார், மறைஞான சம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார்

முதலிய பல பெரியவர்கள் முக்தி பெற்ற தெய்வீகத் திருத் தலம்.

திருக்கோவலூரில் இருந்த மெய்ப்பொருள் நாயனர், தாம் உயிர் விடுங் காலத்தில் நடராசப் பெருமானைத் தியானம் பண்ண, எம்பெருமான் அவருக்குத் தோன்றி முக்தியருளிய மேன்மைத் தலம்.

திருநீலகண்ட நாயனர் தம் மனைவியாருடன் சிவகங்கை என்னும் திருக்குளத்தில் மூழ்கி இளமைப் பருவம் பெற்று, எம்பெருமான் திருக்காட்சியைக் கண்ட தெய்வீகப் பெருந் தலம்.

அபயகுல சேகர சோழ மன்னரின் காலத்தில், நம்பி யாண்டார் நம்பியால் தேவாரப் பதிகங்கள் கண்டெடுக்கப் பட்ட தலம். அநபாய சோழ மன்னரின் காலத்தில், சேக்கிழார் நாயனர் பெரிய புராணம் பாடி அரங்கேற்றம் செய்த அருந்தலம்.

அன்னை சிவகாமி ஆலயம்

தில்லையம் பெருந்தலத்தில் திருத்தாண்டவம் புரிந் தருளும் கூத்தப்பிரான் திருக்கோயிலுள் தனிப் பெருங் கோயில் கொண்டு, அன்னை சிவகாம சுந்தரி எழுந்தருளித் திருக்காட்சி யருளுகின்ருள்.

சிவகாமசுந்தரி என்னும் திருப் பெயரே அன்னையின் எழிற்பாங்கை உணர்த்துவதாயுள்ளது. உலகங்களையும் உயிர்களையும் ஈன்ற அன்னையாகியும் இளமை எழில் நலம் குன்ருதவளாகத் திகழ்கின்ருள் என்பதை 'சுந்தரி' என்னும் திருப்பெயர் உணர்த்துகின்றது. சுந்தரம்—அழகு. சுந்தரி—அழகை உடையவள். இந்தப் பேரழகியின் பெருஞ் சிறப்பைக் கல்வெட்டுப் பாடல்கள்,

"எவ்வுலகும் எவ்வுயிரும் ஈன்று
எழில் அழியாச் செவ்வியாள்"

என்றும்,

''நடங்கவின்கொள் அம்பலத்து
நாயகச் செந்தேனின்
இடங்கவின்கொள் பச்சை
இளந்தேன்''

என்றும் கூறுகின்றன. 'எழில் அழியாச் செவ்வியாள்' என்பதும், 'பச்சை இளந்தேன்' என்பதும் அன்னையின் சுந்தரப் பாங்கினை அழகுறத் தெளிவுபடுத்துகின்றன.

அகில உலக அன்னையாகிய சுந்தரி, எஞ்ஞான்றும் சிறிதும் நீக்கமின்றிச் சிவத்தை விரும்பித் திகழ்கின்றாள். சிவம்+காமம்+சுந்தரி—சிவகாமசுந்தரி. காமம் என்பது விருப்பம் என்று பொருள் படும். சிவம் என்பது சிவத்தை—சிவ பரம்பொருளைக் குறிக்கும். சிவத்தை விரும்பும் சுந்தரியாகத் திகழ்பவள் அன்னை சிவகாமசுந்தரி.

உலகும், உலகப் பொருள்களும் இறைவன் வடிவங்கள். சிவ பரம்பொருள் பஞ்ச பூதங்களாக, உயிருடைப் பொருள் உயிரில் பொருள்களாகப் பரந்து நிறைந்து விளங்குவது. அன்னை சிவகாமி, தன்னிடத்தினின்று தோன்றிய உலகங்களை உயிர்களை விரும்பிக் காத்தருளித் திகழ்கின்றாள் என்னும் உண்மையைச் சிவகாம சுந்தரி என்னும் திருப் பெயர் உணர்த்துகின்றது.

இயக்கமே சக்தி. அமைதியே சிவம். ஆனால், இத் தலத்தில் இயக்கமே சிவம். அமைதியே சக்தி. இத் தலத்தின் அற்புதங்களுள் இதுவும் ஒன்று. சிவனை ஆடவைத்து, அன்னவனின் ஆடலுக்குக் கரம் கொடுத்த நாயகியாகவும், அன்னவனின் ஆடலைக்கண்டு மகிழும் தாயாகவும் அன்னை சிவகாமி பொலிவுற்றுத் திகழ்கின்றாள். ''வாயாரவே புகழும் வண்ணச் சிவகாமித் தாயார்'' என்று அன்னை சிவகாமியை அன்புற்றுப் போற்றுகின்றார் குரு நமசிவாயர்.

சிதம்பரம் இரயில் நிலையத்திலிருந்து சுமார் அரை மைல் தூரம் மேற்கு நோக்கி வந்தால், எழில் அழியா அன்னை சிவகாமியின் ஆலயத்தைக் கொண்டு விளங்கும் கூத்தப் பெருமான் திருக்கோயிலை அடையலாம்.

தில்லைக்கோயில் என்றால், அஃது ஆனந்தத் தாண்டவப் பெருமானின் திருக் கோயிலையே குறிக்கும். இத் திருக் கோயில், திசைக்கொன்றாக நான்கு பெரிய வாயில்களை யுடையதாகவும், அவ்வாயில்களின் மீது வானளாவி விளங் கும் நான்கு இராஜ கோபுரங்களையுடையதாகவும் அமைந்த மிகப் பெரிய கோயிலாகும். நடராஜப் பெருமான் தெற்கு முகமாகத் திருநடனம் புரிந்தருள்வதால், தெற்குக் கோபு ரத்தின் மேல் எம்பெருமான் திருக் கொடி கட்டப்பட்டுள் ளது. நான்கு பெரிய வாயில்கள் இருப்பினும், கிழக்குப் பக்கமுள்ள வாயிலே பிரதான வாயிலாக விளங்குகின்றது. இவ் வாயிலிலேயே சுவாமி புறப்பாடு நிகழும்.

இப் பிரதான வாயிலைக் கடந்து உள்ளே சென்றால், வெளிப்பிராகாரம் எனப்படுகின்ற மூன்றாவது பிராகாரத்தை அடையலாம். இப் பிராகாரத்தின் வடமேற்கு மூலையில் அன்னை சிவகாம சுந்தரியின் தனிப்பெருங் கோயில் அமைந்து விளங்குகின்றது. இத் திருக்கோயிலில் அன்னை ஞானசக்தியாக, அன்பின் பெருக்கோடு அழகின்உருவாக, அருள் நோக்கும் புன்னகையும் பொலிவுறும் வடிவாக சிவ காம சுந்தரியார் திருக் காட்சி யருள்கின்றாள்.

இந்த அன்னையின் ஆலயம், வண்ணக் கோபுரம், விமானம், பிராகாரம், கொடி மர மண்டபம் முதலியவற் றோடு அமைந்த ஒரு தனிப்பெருங் கோயிலாகத் திகழ் கின்றது.

இக் கோயிற் பிராகாரத்தைக் கட்டுவித்தவன், மணவிற் கோட்டத்து மணவில் என்ற ஊரின் தலைவனாகிய கூத்தன் என்பவனாவன். இவனே பிராகாரத்துத் திரு மாளிகையை யும் அமைத்துள்ளான். இப் பிராகாரத்தின் வடமேற்குத் தூண் ஒன்றில் இவனது திருவுருவம் செதுக்கப்பட்டுள்ளது.

இக் கோயிற் கொடி மரம் விளங்கும் மண்டபம் மிகவும் விசாலமானது. இடைத் தாங்கல் ஏதும் இன்றி இத்துணை அகலமுள்ள கருங்கல் மண்டபம் வேறு எங்கும் இன்று

என்றும் கூறலாம். இம் மண்டபத்துக் கருங்கல் தூண்கள் மரத் தூண்களைப் போன்று வேலைப்பாடு மிக்கனவாயும், சிற்ப வேலைப்பாடுகள் கொண்டனவாயும், கருங்கல் சங்கிலிகள் தொங்குவனவாகவும் விளங்குகின்றன. இக் கோயிலின் இரண்டாவது பிராகாரத்தில் நாட்டியக் கலையின் அபிநயச் சிற்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

'தந்தைக்குத் தலைப் பிள்ளை', 'தாய்க்குக் கடைப் பிள்ளை' என்று ஒரு முதுமொழி உண்டு. அஃதாவது, தந்தைக்கு முதற்பிள்ளை செல்லப் பிள்ளையாகவும், தாய்க்குக் கடைசி பிள்ளை செல்லப் பிள்ளையாகவும் விளங்குவர் என்பது இம் முதுமொழியின் பொருள். இதற்கேற்பத் தெற்கு முகமாகத் திருத் தாண்டவம் புரிந்தருளும் நடராசப் பெருமான், மூத்த பிள்ளையாகிய முக்குறுணி விநாயகரைத் தமது வலது பாகத்தில் கிழக்கு முகமாக இருத்துக்கொண்டு விளங்குகின்றார். அன்னை சிவகாம சுந்தரியோ, தமது செல்லப் பிள்ளையும் இளைய பிள்ளையுமாகிய பாண்டிய நாயகர் என்கின்ற சுப்பிரமணியரைத் தம் இடது புறத்தில் எழுந்தருளச் செய்து மகிழ்கின்றாள்.

தில்லை மாகாளி

இத் தலத்தின் பழைய பெயர் தில்லை. தில்லைத் திருக்கோயிலின் வடக்குக் கோபுரத்திலிருந்து இரண்டு பர்லாங்கு தூரத்தில், தில்லை மாகாளி திருக்கோயில் கொண்டு விளங்குகின்றாள். இம் மாகாளி, தில்லை நகரின் புறத்தே எல்லை தெய்வமாக எழுந்தருளியுள்ளாள். இவள் இங்ஙனம் எல்லை தெய்வமாக எழுந்தருளிய வரலாறு சுவையானதும், இத் தலத்து வரலாறுமாகும்.

வியாக்கிரபாதர் (புலிக்கால் உடைய முனிவர்) காசியில் வாழ்ந்தவர். இவர், தம் தந்தையின் வாயிலாகத் தில்லையின் பெருமையை அறிந்து, காசியை விட்டுத் தில்லைக்கு வந்தார். தில்லைக் காட்டின் நடுவே ஓர் ஆலமரத்தின் அடியில் தோன்றி எழுந்த இலிங்க உருவைக் கண்டு,

அதனை வழிபட்டு வந்தார். (அந்த இலிங்க உருவே திருக் கோயிலில் உள்ள திருமூலட்டானேசுவரர். அந்த இலிங்க உருவைச் சூழ்ந்தே திருக் கோயில் அமைந்துள்ளது.) வியாக்கிரபாதர் அந்த இலிங்கத்தை வழிபடுவதற்குரிய மலர்களை, வண்டு சுவைக்கு முன்பே எடுத்து பூசிக்க விரும்பி, அதற்காகப் பொழுது புலருமுன் மரங்களில் வழுக் காமல் ஏறப் புலிக் கால்களையும், இருளில் நன்ருகக் கண் தெரிவதற்காகப் புலிக் கண்களையும் இறைவனை வேண்டிப் பெற்ருர்.

அவர் இவ்வாறு பூசித்து வந்தபோது, பதஞ்சலி முனி வரும் அங்கு வந்து சேர்ந்தார். வியாக்கிரபாதர், பதஞ்சலி யிடம் வான அரங்கில் நடராசர் ஆடிய ஆட்டத்தைப் பற்றிக் கூறவே, பதஞ்சலி அந்த ஆட்டத்தைக் காண விழைந்தார். பின்னர் அவர்கள் இருவருமே இறைவனது நடனத்தைக் காண விரும்பித் தவங்கிடந்தார்கள். அப் போது அவர்கட்கு நடராசப் பெருமான் அந்த அற்புத நட னத்தைக் காட்ட, அத் தருணத்தில் தில்லைவனத்தின் அதி தேவதையான மாகாளி, நடனத்தில் தன்னை ஒப்பாரும் மிக்காரும் எவரும் இலர் எனத் தருக்கித் திரிந்தாள். அத் தில்லைக் காளியின் செருக்கை அடக்கவும், முனிவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவும் திருவுள்ளம் கொண்ட இறைவன், பூவுலகுக்கு இறங்கி வந்து, தில்லைக் காளியுடன் போட்டியிட்டு நடனம் ஆடினுர். காளியும் சளைக்காது ஆடினுள். இறுதியில் காளி ஆட முடியாத ஊர்த்துவத் தாண்டவத்தை இறைவன் ஆடவே, காளி அத் தாண்டவத்தை ஆட முடியாமல் தோல்வியை ஒப்புக் கொண்டு, செருக்கடங்கி, ஊருக்கு வடபுறத்தே ஒதுங்கி எல்லைக் காளியாக எழுந்தருளினுள். நிருத்தசபை நடராசப் பெருமானின் முழு ஆளுகைக்குள் அடங்கியது.

தில்லைக்கு வடபுறத்தே ஒதுங்கிய காளிதேவி, எல்லைத் தெய்வமாக இலங்கி இன்னலகற்றி, இன்னருள் புரிந்து காக்கும் தேவதையாகக் காட்சி தருகின்ருள்.

தீர்த்தம் சிவ கங்கை

அன்னை சிவகாம சுந்தரியின் ஆலயத்துக்கு முன் அகன்ற பெரிய திருக்குளம் உள்ளது. இத்துணைப் பெரிய திருக்குளம் வேறு எத்தலத்திலும் திருக்கோயிலுள் அமைய வில்லை. இத் திருக்குளம் அழகிய படிக்கட்டுகளுடனும், மண்டபங்களுடனும் அமைந்து விளங்குகின்றது. படித்துறையில் திருநீலகண்ட நாயனுரையும, அவர் மனைவியாரையும் கற்சிலையாகச் செதுக்கியிருக்கக் காணலாம். இத் திருக்குளமே சிவகங்கைத் தீர்த்தம்.

இத் தீர்த்தம் சிவ வடிவம் உடையது. வருடப்பிறப்பு, மார்கழித் திருவாதிரை, மாசி மகம், சிவராத்திரி இவைகளில் நீராடுவது பெரும் புண்ணியமாகும். இதில் நீராடிச் செல்வோர் எண்ணிய காரியம் எளிதில் கைகூடப் பெறுவர். பேய், பூதம் முதலியவற்ருல் உண்டாகும் துன்பம் அடையார். இத் தீர்த்தத்தைப் போற்றிப் பாடிய குரு நமசிவாயர், ‘‘கண்டமட்டில் கண்டவினை காதம்போம், கையிலள்ளிக் கொண்ட மட்டில் கொண்ட வினை கொள்ளைபோம்’’ என்று இத் தீர்த்தத்தால் உண்டாகும் பயனைக் கூறுகின்ருர்.

இத் தில்லைத் தலத்தில் இத் தீர்த்த மட்டுமன்றி, பரமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், பிரம தீர்த்தம், அனந்த தீர்த்தம், திருப்பாற்கடல், குய்ய தீர்த்தம், நாகச்சேரி, சிவப்பிரியை, புலிமேடு என்னும் தீர்த்தங்களும் உள்ளன.

அருள் சுரக்கும் அன்னை விழா

அன்னை சிவகாம சுந்தரியின் திருவாலயத்தில், ஆடி மாதம் பூர நட்சத்திரத்தன்று நிகழும் பல்லக்கு வீதி விழா மிகவும் சிறப்புடையது. பல்லக்கில் விழாக் கொள்ளும் அன்னையின் எழிற் கோலம் அதி அற்புதம்!

புரட்டாசி மாதம் நவராத்திரி விழா மிகவும் விசேட மானது. பூச நட்சத்திரத்திற்குப் பத்து நாட்கள் முன்ன தாகக் கொடியேறி, ஒன்பதாம் நாள் திருத்தேரும், பத்தாம் நாள் திருக் கல்யாணத்துக்கான சில சடங்குகள் நடை பெற்று, சிவகங்கையில் தீர்த்தம் கொடுத்து, கொடி இறங்கி, சிவகாமி தபசு செய்து, பின்னர் இறைவனுக்கும் அன்னைக்கும் திருக்கல்யாணப் பெருவிழா நிகழ்ந்தேறும்.

தை மாதம் இரண்டாம் நாள், அன்னை சிவகாமிக்குக் காலையில் கனு விழாவும், இரவில் சுவாமிக்கு விழாவும் சிறப் பாக நடைபெறுகின்றன.

இவ் விழாக்களிலெல்லாம் அன்னை சிவகாம சுந்தரி யைத் தரிசித்து, திருவருள் பெற்று இன்பமுறுவோர் எண்ணிலடங்கார்.

6. நெல்லை காந்திமதி

திக்கெல்லாம் புகழும் பெருஞ் சிறப்புடையது 'நெல்லை' என்று வழங்கப்படுகின்ற திருநெல்வேலி. வைகையாற்றின் கரையில் விளங்கும் மதுரைமாநகர் போன்று, பொருநை நதிக்கரையில் அமைந்து விளங்குகின்றது நெல்லைமாநகர். மதுரைக்குப் பெருமையும் சிறப்பும் அளிக்கும் மீனாட்சி யம்மை கோயிலைப் போன்று, நெல்லைக்குப் பெருமை சேர்த்துச் சிறப்புற்று விளங்குவது அன்னை காந்திமதியம்மை ஆலயம். மதுரை மீனாட்சிக்கு அடுத்ததாக நம் நெஞ்சகத்தில் தோன்றுவது நெல்லை காந்திமதியம்மை.

மதுரைக்கும் நெல்லைக்கும் திருக்கோயில் அமைப்பில் நிரம்ப ஒற்றுமையுண்டு. இரு நகரங்களுமே அம்மை அப்பனைச் சுற்றித் திருவீதிகளாகச் சதுர அமைப்பில் அமைந்து விளங்குகின்றன. மதுரையில் அன்னை மீனாட்சிக்கு எத்துணை முதன்மையும் முக்கியத்துவமும் உண்டோ, அத்துணை முதன்மையும் முக்கியத்துவமும் நெல்லையம்பதியில் காந்திமதி யம்மைக்கும் உண்டு. அன்னை காந்திமதி யம்மையை முதலில் வழிபட்டே, பின்னர் சுவாமி நெல்லையப்பரைக் கண்டு வழிபடுவது முறையாக இருந்து வருகின்றது.

சக்திக்கு முதன்மையளித்துப் போற்றிவரும் சிவதலமாகிய திருநெல்வேலி, ஒரு பெரிய இரயில் சந்திப்பு நிலையம். இரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் தொலைவில், அன்னை காந்திமதி யம்மையின் ஆலயம் அமைந்து விளங்குகின்றது.

தலச் சிறப்பு

திருநெல்வேலி, தென்பாண்டி நாட்டின் தென்பகுதியில் உள்ள ஒரு பழமையான பதி. பொன் திணிந்த புனல்

பெருகும் பொருநை நதிக் கரையில் உள்ள பெரியதொரு நகரம். நகரின் நடுநாயகமாக அமைந்து விளங்குவது அன்னை காந்திமதி கோயில்.

இத் திருத்தலத்தில் அன்னையின் கோயிலும், சுவாமியின் கோயிலும் தனித் தனிப் பெருந் திருக்கோயில்களாகத் திகழ்ந்துள்ளன. பின்னர்தான், ஒரு மண்டபத்தால் இரு கோயில்களையும் இணைத்துள்ளனர்.

சுவாமி திருக்கோயிலில் இரண்டு திருச்சந்நிதிகள் அமைந்துள்ளன. அவை: நெல்லையப்பர் சந்நிதி, வேணுவன நாதர் சந்நிதி. சுவாமி மூங்கில் புற்றினின்று தோன்றியதால் 'வேய்முத்த நாதர்' என்ற திருப்பெயராலும் போற்றப்படுகின்றார்.

பஞ்ச சபைகளில் தாமிர சபை உடைய தலம் நெல்லை. பொருநை எனப்படுகின்ற தாமிரபரணியாற்றின் நடுவில் குறுக்குத்துறை சுப்பிரமணியர் திருக்கோயில் அழகுற அமைந்து விளங்குகின்றது. இத் திருக்கோயில் மிகவும் புகழ் பெற்றது.

இத் தலத்துக் கோயிலிலுள்ள நடராசப் பெருமான் திருவுருவம், கண்டு வழிபடுவோரைப் பேருவகையில் ஆழ்த்த வல்லது. இக் கோயிலில் கருவறைக்கெதிரில் உள்ள நாற்கால் மண்டபத் தூண்கள் இசைத் தூண்களாக விளங்குகின்றன. இத் தூண்களைத் தட்டினால் சப்த சுவரங்கள் தொனிக்கின்றன.

அன்னையின் கோயிலில் உள்ள ஊஞ்சல் மண்டபத்தில் உள்ள 96 தூண்களும், 96 தத்துவங்களை உணர்த்தும் தத்துவத் தூண்களாக அமைந்துள்ளன.

இத் தலத்தில் சிவபெருமான் நைவேத்தியத்திற்காக வேதசருமா என்னும் அந்தணர், யாசித்துக்கொண்டு வந்து உலர்த்தி வைத்திருந்த நெல்லை, வெள்ளம் அடித்துப் போகாவண்ணம் இறைவன் வேலி கட்டிக் காத்தருளியதால், இத் தலத்திற்கு 'நெல்வேலி' என்னும் பெயர்

அமைந்து, தலச் சிறப்புக் காரணமாக 'திரு' என்ற அடை மொழியுடன் திருநெல்வேலி என்று வழங்கி வருகின்றது.

திருஞானசம்பந்த சுவாமிகள் இத் தலத்திற்கு எழுந் தருளித் திருநெல்வேலிப் பதிகம் பாடியுள்ளார். அவர், ''தென்றல் வந்துலவிய திருநெல்வேலி'' என்றும், ''செறி பொழில் தழுவிய திருநெல்வேலி'' என்றும், ''தேனில் வண்டமர் பொழில் திருநெல்வேலி'' என்றும் இத் தலத்தை இயற்கை வனப்போடு இணைத்துப் போற்றுகின்றார்.

இத் தலத்தைப் போற்றும் முறையில் திருநெல்வேலி தல புராணம், வேணு வன புராணம், காந்திமதி யம்மைப் பிள்ளைத் தமிழ், காந்திமதியம்மைக் கலித்துறை அந்தாதி, திருநெல்லை மும்மணிக் கோவை, நெல்லையந்தாதி முதலிய பல நூல்கள் தோன்றியுள்ளன.

அன்னை காந்திமதியம்மைக்கு முக்கியத்துவமும் முதன் மையும் அளித்துப் போற்றும் தலமாதலால், நெல்லை முழு தும் வீட்டுக்கொரு காந்திமதியோ அல்லது காந்திமதி நாதனோ இருக்கக் காணலாம்.

அன்னை காந்திமதி

அன்னை காந்திமதியம்மை, இந் நெல்லையம்பதியின் பெருமைக்குக் காரணமாக விளங்குவதோடன்றி, அன்னை யாக நின்று காத்தருள்வதோடன்றி, இயற்கை வனப்பே உருவெடுத்துக் காட்சி யளிப்பது போன்று கல்யாணக் கோலப் புது மணப் பெண்ணாகப் பொலிவுறுகின்றாள்.

திருக்கயிலையில் இமவான் மகளான உமையை இறை வன் திருமணம் செய்து கொள்ளத் துணிந்தார். அத் திரு மணக்கோலம் காண மக்கள், தேவர், நரகர் எல்லோரும் கயிலை சென்றடைந்தனர். அதனால், பாரம் தாங்க வொட்டாது தென்கோடு உயர்ந்து வடகோடு தாழ்ந்தது. அது கண்ட இறைவன், சமன் செய்யக் கருதி அகத்திய

ரைத் தென்திசை செல்லுமாறு பணிக்க, அக் கல்யாணக் கோலத்தைக் காண விரும்புவதாக அகத்தியர் கூற, தாமே தென்திசை வந்து மணக்கோலத்தில் காட்சியளிப்பதாக இறைவன் வாக்களிக்க, அகத்தியர் தென்திசை சென்று பொதிகையில் தங்கினுர். தென்திசையும் தாழ்ந்து சமனிலையுண்டாயிற்று.

மணம் முடித்துக்கொண்ட அப் புதிய தம்பதிகளிடம் ஒரு காதல் விளையாட்டு நிகழ்ந்தது. அன்னை, இறைவனின் கண்களைப் பொத்தி, 'யார் பொத்தியது?' என்று வினவினுள். அண்ணலின் கண்கள் பொத்தப்பெற்ற காரணத்தால் உலகமெல்லாம் இருளில் ஆழ்ந்தது. கண்களைப் பொத்திய அந்தப் பழி அகல அன்னை கம்பை நதிக்கரையில் வந்து தவம் புரிந்தாள். அவள் தவத்துக்கு இரங்கி இறைவன், அங்கு எழுந்தருளிக் காட்சி தந்தார். மணம் புரிந்து கொண்ட அத் திருமணக் கோலத்திலேயே அகத்தியர் முன் வந்து இறைவன் திருக்காட்சி நல்கினுர்.

அன்னையாகிய உமை, இறைவனை மணம் புரிந்து கொண்ட விழாவினை நெல்லையில் சிறப்பாக நடத்தி வருகின்றனர். அத் திருமண விழா நிகழும் முறையைப் புலவர் ஒருவர்,

"வேணு வனத்து இறைவர் புது
 மணம் விரும்பி, விளையாட்டாய்
காணும்உமைப் பெயர் பொருந்தும்
 காந்திமதிதனைக் கடிந்து காட்டுக் கோட்டி
தானும்அவள் பின்சென்று நயம்படித்து
 பலர்சிரிக்க நலிவே உற்ருல்
வாள்நுதலும் அவர்பின்னே வருவதுவும்
 வியப்பாமோ ? வசையொன்றுஇன்றி!"

என்று போற்றிப் பாடுகின்ருர்.

காந்திமதியம்மைப் பிள்ளைத்தமிழ் பாடிய அழகிய சொக்கநாத பிள்ளை,

''தாரார் இமவான் தடமார்பில்
தவழுங் குழந்தாய்! வருகவே!
சாலிப் பதிவாழ் காந்திமதித்
தாயே! வருக வருகவே!''

என்று அன்னையைப் போற்றுகின்றார்.

சாலிப்பதியாகிய நெல்லையில் செண்டு ஏந்திய வண்ணம், அன்னை காந்திமதி புதுமணப் பெண்ணாகத் திருக்காட்சியருளுகின்றாள். கருவறையில் செண்டு ஏந்தி விளங்கும் அன்னை, உற்சவமூர்த்தமாகிய செப்புச்சிலை வடிவில் ஞானமுத்திரையோடு திகழ்கின்றாள். உயிர்கட்கெல்லாம் அருள்புரியும் அன்னை அல்லவா அவள்!

அன்னையின் ஆலயம்

அழகிய இராஜ கோபுரத்துடன் அமைந்து விளங்கும் அன்னை காந்திமதியாகிய இறைவியின் திருக்கோயில் முகப்பில், அம்மன் அம்பலம் ஒன்றுள்ளது. கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் காணப்படுவது ஊஞ்சல் மண்டபம். இம் மண்டபம் 96 தத்துவத் தூண்களைக் கொண்டது. இம் மண்டபத்தில் அன்னையின் ஊஞ்சல் விழா நடைபெறும். இம் மண்டபத்தை அடுத்துள்ளது திருக்கல்யாண மண்டபம். இம் மண்டபத்தை ஆயிரக்கால் மண்டபம் என்றும் சிறப்பித்துக் கூறுவர். அன்னையின் திருமண விழா இம் மண்டபத்தில் நிகழ்வுறும்.

மற்றும் இக் கோயிலில் உள்ள மணிமண்டபம், நடு மண்டபம் ஆகியவற்றைக் கடந்து சென்றால், கருவறையில் கருணைத் தாயாகிய காந்திமதியம்மையின் திருமேனியைக் கண்டு வழிபடலாம். அன்னையின் திருக்காட்சிப் பொலிவு, புது மணப் பெண்ணின் பொங்கிவரும் எழிற்பொலிவு! தலையில் வயிர மணிமுடி இராக்குடி, திருமுகத்தில் பொட்டு மூக்குத்தி புல்லாக்கு, மார்பில் நவமணி வடம், திருவடியில் மணிச்சிலம்பு, உயர்த்திய வலக்கரத்தில் செண்டு அல்லது

பசுங்கிளி, இடக்கரம் தாழ்த்தி, அழகொளியோடு அருட் பார்வை யொளியும் சிறந்து விளங்க அன்னை திருக்காட்சி யருள்கின்ருள்.

அன்னையின் ஆலயமும், அண்ணல் நெல்லையப்பர் ஆலயமும் கி. பி. 7ஆம் நூற்ருண்டில் மதுரையைத் தலைநக ராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னன் நின்றசீர் நெடு மாறன் கட்டினுன் என்று வரலாறு கூறுகின்றது. அவனுக் குப் பின் ஆண்ட பாண்டிய மன்னர்களும், நாயக்க மன் னர்களும் கோயில்களை விரிவாக்கியுள்ளனர். இரண்டு திருக்கோயில்களும் தனித்தனியே விளங்கின.

சிறப்புமிகு தீர்த்தம்

மதுரை மீனுட்சி கோயிலுக்கும் நெல்லை காந்திமதி கோயிலுக்கும் நிரம்ப ஒற்றுமை உண்டு என்று முன்னரே கூறப்பட்டது. மீனுட்சி ஆலயத்துள் பொற்ருமரைத் தீர்த் தம் விளங்குவதைப் போன்றே, அன்னை காந்திமதி ஆலயத் துள்ளும் பொற்ருமரைத் தீர்த்தம் பெருமை மிகப் பொலி வுற்று விளங்குகின்றது.

அன்னை கோயிலுள் ஊஞ்சல் மண்டபத்தின் வடபுறத் தில் பொற்ருமரைத் தீர்த்தம் என்னும் புண்ணிய தீர்த்தம் அமைந்துள்ளது. பிரமா, விஷ்ணு, அகத்தியர் பூசித்த தலம் நெல்லை. பிரமன் பொன் மலரோடு இத் தீர்த்தத் தில் வந்து தோன்றியதால், இதற்குப் பொற்ருமரைத் தீர்த்தம் என்ற அழகிய பெயர் அமைந்தது.

இப் பொற்ருமரைக் குளத்தின் நான்கு பக்கங்களும் கற் படித் துறைகளும், சுற்றுக் கால் மண்டபங்களும் அழகு மிக அமைந்துள்ளன. இப் பொற்ருமரையில் தை மாதம் காந்தி மதிக்குத் தெப்ப விழாவும், மாசி மாதம் மகநாளில் அப்பருக்குத் தெப்பத் திருவிழாவும் நடைபெறுகின்றன.

காந்திமதியம்மை கோயிலின் மேலப் பிராகாரத்தில் கருமாறித் தீர்த்தமும், வெளி வடக்குப் பிராகாரத்தில் ஆறு

காலத் தீர்த்தக் குண்டமும் உள்ளன. துருவாசமுனி சாபத்தால் யானையான இந்திரத்துய்மன் என்ற மன்னன், மூழ்கித் தன் பழைய தேவ வடிவை அடைந்ததால் கருமாறித் தீர்த்தம் என்ற பெயர் அமைந்தது என்று புராண வரலாறு கூறும்.

நெல்லையில் அன்னை விழா

நெல்லையம்பதியில் அல்லல் தவிர்க்கும் அன்னை காந்திமதிக்கும், அண்ணல் நெல்லையப்பர்க்கும் ஆனி மாதம் பிரமோத்சவம் எனப்படுகின்ற பெரிய திருவிழா பத்து நாட்கள் சிறப்பாக நடைபெறுகின்றது.

ஐப்பசி மாதம் அன்னை காந்திமதி திருமணம் நிறைவேறியதும், மூன்று நாட்கள் ஊஞ்சல் மண்டபத்தில் நிகழும் ஊஞ்சல் விழா மிகவும் விசேடமானது.

மற்ற சக்தி தலங்களில் நிகழ்வது போன்றே இத் தலத்திலும் நவராத்திரி விழா பத்து நாட்கள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

வேய்முத்த நாதர் மிக விரும்பிக் கரம் பிடிக்கும் தாய்த் திரு காந்திமதி அம்மையின் அருட்பார்வைக்கு இலக்காகி, அன்னையின் கவின்மலர்த் தாள் பணிந்து உய்வோமாக!

''ஏர்கொண்ட நெல்லைநகர் இடம்கொண்டு
வலங்கொண்டு அங்கு இறைஞ்சுவோர்கள்
சீர்கொண்ட தன்உருவும் பரன்உருவும்
அருள்செய்து நாளும்
வேர்கொண்டு வளர்ந்தோங்கும் வேய்ஈன்ற
முத்தைமிக விரும்பிப்பூணும்
வார்கொண்ட களபமுலை வடிவுடைய
நாயகிதாள் வணங்கிவாழ்வாம்''

—வேணுவன புராணம்.

7. ஆனைக்கா அகிலாண்டேசுவரி

பூலோக வைகுந்தம் என்று போற்றப்படுகின்ற திருவரங்கத்துக்கு அருகில், காவிரிக் கரை ஓரத்தில் திருவானைக்கா என்ற சிவ தலம் உள்ளது. கா என்பது சோலை என்று பொருள்படும். காவிரியாற்றினிடையே யானை உலாவும் நெடுஞ்சோலை ஒன்று இருந்துள்ளது. அதனால், அதனை ஆனைக்கா என்ற பெயரால் வழங்கியுள்ளனர்.

பழங்காலத்தில் வளமார்ந்த பயன் மரச் சோலைகள் இறைவன் உறையும் கோயில்கள் ஆயின. சோழநாட்டில் உள்ள நெல்லி மரச் சோலை திரு நெல்லிக்கா என்றும், குரங்காடும் பழஞ்சோலை குரக் குக்கா என்றும், (குரக்கினம் குதிகொள்ளும் குரக்குக்கா — தேவாரம்) ஆனை உலவிய சோலையை ஆனைக்கா என்றும் வழங்கினர். ஆனைக்கா என்னும் பெயரையொட்டியே வடமொழியில் இத் தலத்தைக் கஜாரண்ய க்ஷேத்திரம் என்று கூறினர்.

இத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னையின் திருப்பெயர் அகிலாண்டேசுவரி; இவறவனின் திருப்பெயர் ஜம்புகேசுவரர். இருவர் கோயில்களும் தனித் தனியேஅமைந்து இணைந்த ஒரு பெருங் கோயிலாகத் திகழ்கின்றன.

தலச் சிறப்பு

ஆனைக்கா என்னும் அரும்பதி, பஞ்சபூத தலங்களில் ஒன்றாகும். இத் தலத்து இலிங்கத்தை 'அப்பு லிங்கம்' என்பர். அப்பு என்றால் தண்ணீர். மக்களுக்கு அமுதம் போன்ற தண்ணீரைத் திரட்டி, உமாதேவியார் இங்கு இலிங்கத்தைப் பிரதிட்டை செய்து வழிபட்டார் என்று புராண வரலாறு கூறுகின்றது. தண்ணீரினால் திரட்டி அமைக்கப்

பட்டதால்—அமுதம் போன்ற தண்ணீரால் அமைக்கப் பட்டதால்— இந்த இலிங்கத்தை அமுதலிங்கம் என்றும், தலத்தை அமுதீசுவரம் என்றும் வழங்கினர். இலிங்கம் உள்ள இடத்தில் இன்றும் நீர் இருக்கக் காணலாம்.

இங்கு இறைவனை உமாதேவியார் பூசித்த ஐதிகத்தைக் காட்ட, உச்சிக் காலத்தில் அகிலாண்டேசுவரி கோயிற் குருக்கள் அம்மனைப் போல் வேடம் தரித்துக்கொண்டு சுவாமி கோயிலுக்கு வந்து அர்ச்சனை செய்துவிட்டுப் போகின்றார்.

முன்னொரு காலத்தில் சோழ மன்னன் ஒருவன் காவிரி யாற்று உறையூர்த் துறையில் இறங்கி நீராடினான். தண்ணீரில் மூழ்கி எழுந்தான். அவன் கழுத்தில் இருந்த முத்தாரத்தைக் காணவில்லை. அப்போது அவன், 'ஆற்றில் விழுந்த ஆரத்தை நீரே ஏற்றருளும்' என்று இறைவனை வேண்டினான்.

ஆனைக்காவில் உறையும் ஈசனை அன்று காவிரி நீரால் முழுக்காட்டிய பொழுது, அந்த முத்துமாலை அவர் திரு மேனியில் விழுந்தது. மன்னன் 'சிவார்ப்பணம்' செய்த முத்தாரம் திருமஞ்சனக் குடத்தில் புகுந்து, ஆனைக்கா அண்ணல் திருமேனியைச் சேர்ந்தது. இதனை அறிந்த எல்லோரும் இன்பக் கடலில் மூழ்கினர். இதனை ஞானசம் பந்தர் தேவாரம், ''ஆர நீரோ டேந்தினானைக் காவு சேர் மினே'' என்று கூறுகின்றது.

அகிலம் எல்லாம் ஈன்ற அன்னையாகிய உமாதேவி இங்கு இறைவனைப் பூசித்ததால், முதன்மைச் சிறப்பு அகிலாண்டேசுவரிக்கும், இரண்டாவது சிறப்பு சுவாமிக்கும் அமைந்துள்ளன. சுவாமியை விட அன்னை அகிலாண்டேசு வரிக்கே இத் தலத்தில் சிறப்பு மிகுதி.

கோயில் எழுந்த வரலாறு

ஆனை உலாவிய சோலையில் ஒரு நாவல் மரத்தின் அடியில் தோன்றிய இலிங்கத்தை, யானை ஒன்று துதிக்கையால்

நீர் கொணர்ந்து திருமஞ்சனமாட்டி, மலர்க் கொய்து அன்ருடம் பூசித்து வந்தது.

அதே இலிங்கத்திற்குச் சிலந்தி ஒன்று, தன் வாய் நீரினுல் மேற்கட்டி அமைத்து, அதன் மீது சருகுகள் விழாமல் காத்து வந்தது. அன்ருடம் பூசித்து வந்த யானையோ சிலந்தி வலையைச் சிதைத்துச் சுத்தம் செய்து வந்தது. சிலந்தி மீண்டும் வலை கட்டிக் காத்தது. யானை மீண்டும் அதனைச் சிதைத்துப் பூசித்து வந்தது. இவ்வாறு அன்ருடம் நிகழவே, சிலந்தி சினம்கொண்டு யானையின் துதிக்கையில் புகுந்து, அதைக் கடிக்கவே, யானை வீழ்ந்து இறந்தது. சிவபெருமானைப் பூசித்து வந்த அந்த யானை கயிலை சென்றது. ஆனுல், சிலந்தியோ கோச்செங்கட்சோழன் என்ற அரசனுகப் பிறந்து, சிவபக்தி முதிர்ந்து, திருவானைக்கா திருக்கோயிலை அமைத்ததாகக் கூறுவர்.

சிலந்தி, சோழ மன்னனுகப் பிறந்ததை நக்கீர தேவ நாயனுர்,

''சீர்மலிந்த சிலந்திக் கின்னரசளித்து'' என்று கூறுகின்ருர். கோச்செங்கட் சோழன், தான் முன்னம் திருவருள் பெற்ற திருவானைக்காவில் திருக்கோயில் எடுத்ததை, சேக்கிழார்,

''ஆனைக் காவில் தாம் முன்னம்
அருள்பெற் றதனை அறிந்தாங்கு
மானைத் தரித்த திருக் கரத்தார்
மகிழும் கோயில் செய்கின்ருர்''

எனப் பாடுகின்ருர்.

கோச்செங்கட்சோழன் திருவானைக்கா திருக்கோயிலை மட்டும் எடுக்கவில்லை. தனக்குத் தீங்கிழைத்த யானையால் ஏற முடியாத வகையில் எழுபது மாடக்கோயில்களை சிவனுக்கு எடுத்தான். இதனைத் திருமங்கை மன்னர்,

''இருக்கிலங்கு திருமொழிவா யெண்தோளீசற்கு
எழில் மாடம் எழுபது செய்துலக மாண்ட
திருக் குலத்து வளச்சோழன்''

என்று பாடுகின்றார்.

இலிங்கம், நாவல் மரத்தடியில் தோன்றியதால், ஜம்பு லிங்கம் என்ற பெயரையும் பெற்றது. நாவல் மரத்தை வட மொழியில் ஜம்பு விருட்சம் என்று கூறுவர். எனவே, கோச் செங்கண்ணன் கட்டிய கோயிலையும் நாவற் கோயில் என் றும் வழங்கினர். இத் தலத்திற்கும் ஜம்புகேசுரம் என்ற வடமொழிப் பெயரும் உண்டு.

இந் நாவற் கோயிலிலேயே ஈசன் ஜம்புகேசுவரரும், அகிலாண்ட நாயகியாகிய அகிலாண்டேசுவரியும் தனித் தனித் திருக்கோயில் கொண்டு திருக்காட்சியருளுகின்ற னர். அண்டங்கள் அனைத்தையும் ஈன்ற அன்னையாகிய அகிலாண்டேசுவரியோடு ஈசனையும் கண் குளிரக் கண்டு வழிபட்ட திருத் தொண்டர்கள் பூமாலையும் பாமாலையும் சாத்திப் போற்றினர். அழகிய அந்தப் பாமாலைகளுள் ஒன்று அகிலாண்ட நாயகி மாலை.

அகிலாண்ட நாயகி ஆலயம்

பிராகாரங்களுடனும், கோபுரங்களுடனும் கிழக்கு நோக்கி அமைந்து விளங்கும் அன்னை அகிலாண்டேசுவரி யின் திருக் கோயில், ஈசன் கோயிலினும் அருள்பாலிக்கும் பெருமையுடையதாகும். இதற்குக் காரணம், ஈசனையே அகிலாண்டேசுவரிதானே பிரதிட்டை செய்தாள். பார்வதி தேவியே அகிலாண்டேசுவரி என்ற திருப்பெயரில் இங்கு சில காலம் தங்கியிருந்து அமுதலிங்கத்தைப் பிரதிட்டை செய்தாள். எனவே, அன்னை அகிலாண்டேசு வரியின் திருவருட்சத்தி முதன்மையும் பெருமையும் உடையதாயுள்ளது.

அன்னை அகிலாண்டேசுவரி, அகிலாண்டகோடி ஈன்ற அன்னையே என்றாலும், பின்னரும் கன்னி என மறைபேசும் ஆனந்த வடிவ மயிலாக விளங்குகின்றாள். கருணை நோக்குடன் கருவறையில் காட்சியளிக்கும் அன்னையின் எதிரில், சங்கராச்சாரிய சுவாமிகள் தாபித்த விநாயகர் விளங்குகின்றார். அன்னையின் திருவுருவம் நல்ல கம்பீரமான திருத்தோற்றம். கருணை பொழிகின்ற இத் திருமுகநாயகி, வழிபடும் அன்பருக்கெல்லாம் அட்டமாசித்திகளை அருளித் திகழ்கின்றாள். அன்னை அகிலாண்ட நாயகியை வணங்கி வழிபட்ட தாயுமானவர்,

"அட்டசித்தி நல்அன்பருக்கு அருள
விருது கட்டிய பொன் அன்னமே!
அண்ட கோடி புகழ்காவை வாழும்
அகிலாண்ட நாயகிஎன் அம்மையே"

என்று அன்னையின் அருள் நிலையைப் போற்றுகின்றார். அன்னை அகிலாண்ட நாயகியைக் கண்ணாரக் கண்டு வழிபட்ட மற்றொரு கவிஞன்,

"அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை
அணிஉருப் பாதியில் வைத்தான்
தளர்பிழை மூன்றே பொறுப்பவள் தன்னைச்
சடைமுடி வைத்தனன், அதனால்
பிளவியல் மதியம் சூடிய பெருமான்
பித்தன்என் றொருபெயர் பெற்றான்
களமர்மொய் கழனி சூழ்திரு ஆனைக்
காஅகி லாண்டநா யகியே"

என்று பாடிப் போற்றுகின்றான். அகிலம் ஈன்ற அன்னையாகிய அகிலாண்ட நாயகியை (உமையை) ஒரு பாகத்தில் வைத்து, கங்கையாகிய மங்கையைச் சடைமுடியில் வைத்துக் காட்சி தருபவன் இறைவன். அன்னையைக் கண்டு வழிபட்ட அக் கவிஞன், 'அம்மையே! அகிலாண்ட நாயகியே! என்போன்ற அடியார்கள் புரியும் எண்ணிறந்த

பிழைகளைப் பொருத்தருள் புரியும் அன்னையாகிய உன்னை ஒரு பாகத்தில் வைத்த பரமன், மூன்று பிழைகட்கு மேல் பொறுக்காத ஒரு மங்கையைத் தன் சடைமுடியின் மேல் ஏற்றிவைத்தானே! இதனால் அன்றோ பித்தன் என்ற ஒரு பெயரையும் பெற்றான்' என்று பாடுவதன் வாயிலாக, அகிலாண்ட நாயகியின் அருட்சிறப்பினைப் போற்று கின்றான்.

இங்ஙனம் அருள் பாலிக்கும் வகையில் சிறந்து விளங்கு கின்ற அன்னை அகிலாண்டேசுவரி, மிகப்பெரிய தனித் திருக்கோயிலில், அடர்ந்த தென்னந் தோப்பினுள் திருச் சந்நிதிகொண்டு தனிப் பொலிவுடன் திகழ்கின்றாள். அன்னை சந்நிதிக்குச் செல்லும் வழியில் பெரிய தூண் ஒன் றில் ஏகபாத மூர்த்தி காணப்படுகின்றது. மும்மூர்த்திகளை யும் தமது திருமேனியில் படைத்து, பிறகு அவர்களைத் தமது திருமேனியிலே ஒடுக்கி விடுகின்றார் சிவபெருமான் என்பதை ஏகபாத மூர்த்தி சிற்பம் உணர்த்துகின்றது.

அன்னை சந்நிதியின் தென்மேற்கு மூலையில் பஞ்சமுக விநாயகர் விளங்குகின்றார். அவருக்குத் தலைமேல் ஒரு முக மும், இரு காது புறமும் இரு முகங்களும், பின்புறமாக ஒரு முகமும் சேர்ந்து ஐந்து முகங்களுடன் காட்சி தருகின்றார்.

பஞ்சப் பிராகார விழா

பிற சக்தி ஆலயங்களில் நிகழும் விழாக்கள் அனைத்தும் அகிலாண்டநாயகி ஆலயத்திலும் நடைபெறுகின்றன. ஆனால், பிற சிவதலங்களில் சக்திக்கும் சிவத்திற்கும் நிக ழாத ஒரு பெரிய விழா இத் தலத்தில் அகிலாண்ட நாயகிக் கும் ஜம்புகேசுவரருக்கும் நடைபெறுகின்றது. அந்த விழாவே பஞ்சப் பிராகார விழா.

இந்த விழாவில் சிவம் பெண் வேடத்திலும், சக்தி ஆண் வேடத்திலும் எழுந்தருளி விழாக் கொள்கின்றனர். இஃது ஒரு விந்தையான, வேடிக்கையான விழா வன்றோ?

பிரமன், தான் படைத்த பெண் ஒருத்தியின் அழகில் மயங்கி, நிறை அழிந்து, படைத்தல் தொழிலைச் செய்ய வியலாதவனுகி, தன் தவறை உணர்ந்து, இறைவனிடம் மன்னிப்புப் பெறத் தவம் புரிந்தான். அவன் தவத்துக்கு இரங்கிய இறைவன் இறைவியோடு, பிரமன் முன் எழுந்தருளியபோது, இவ் வேடங்களில் எழுந்தருளினர். சக்தியின் அழகைக் கண்டு பிரமன் மோகித்தல் நிகழ்ந்தாலும் நிகழும் என்ற ஐயத்தால் மாறுபட்ட வேடம் புணரலாயினர். மாறுபட்ட வேடங்களில் வந்த சிவத்தையும் சக்தியையும் கண்ட பிரமன் வெட்கித் தலை குனிந்தான். பின்னர், அவன் விரும்பிய வண்ணம் அருள் பெற்றுத் தொழில் புரிந்தான்.

இந்த அற்புத விழா, இத் தலத்தில் தனி விசேடம் பெற்றுத் திகழ்கின்றது!

8. அருணாசலத்து அபீத குசாம்பிகை

முன்னொரு காலத்தில் யார் பெரியவன்? யார் சிறியவன்? என்ற ஒரு பலத்த போட்டி. பிரமாவுக்கும் மகாவிஷ்ணுவுக்குந்தான் அந்தப் போட்டி. இருவரும் தம்முள் எவர் பெரியவர் என்று வாதமிட்டுக் கொண்டிருந்தனர். இவர்களுடைய வாதத்தைத் தீர்த்துவைக்க சிவபெருமான் வந்தார். சிவபெருமான் எவ்வளவோ கூறியும் அவர்கள் கேளாததால், சக்தியைக் கொண்டே அவர்கட்கு விளங்க வைத்தல் வேண்டும் எனத் துணிந்து, அவர்களிடையே ஒரு போட்டியை வைத்து, அந்தப் போட்டியில் யார் வெற்றி பெறுகிறாரோ அவரே பெரியவர் எனத் தீர்மானிக்கலாம் என்று கூறினார். அந்தப் போட்டிக்கு அவர்கள் இருவரும் இசைந்தனர்.

சிவபெருமான், தமது அடியையோ, முடியையோ எவர் முதலில் கண்டு வருகிறாரோ, அவரே பெரியவர் என்று போட்டி வைத்து, வானுற ஓங்கி வளரும் ஓர் அழல் பிழம்பாக மாறிநின்றருளினார். மகாவிஷ்ணு வராக உருவில் அடியைத் தேடிப் புறப்பட்டார். அதல பாதாளங்களையெல்லாம் ஊடுருவிச் சென்றார். பிரமன் அன்ன உருவில் முடியைக் காண வானுலகில் பறந்து சென்றான். இருவரும் எவ்வளவோ முயன்றும் அடியையோ, முடியையோ காண முடியவில்லை. விஷ்ணு தமது தோல்வியை ஒப்புக்கொண்டு பூவுலகிற்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

பிரமன், அவ்வாறு தோல்வியை ஒப்புக் கொள்ளக் கருதாது, எவ்வாறேனும் முடியைக் கண்டுவிட்டதாகச் சொல்ல வேண்டும் என்று கருதியபோது, ஒரு தாழம்பு தலை கீழாக வந்தது. அதனைக் கண்ட பிரமன், எங்கிருந்து வருகிறாய் என்று கேட்க, அந்தப் பூ, இறைவன் முடியிலிருந்து வருகிறேன், முடியிலிருந்து நழுவி கற்பகோடி காலங்கள் ஆகி

விட்டன என்று கூறியது. அந்தப் பூவைக் கொண்டு தன் எண்ணத்தை முடித்துக்கொள்ளக் கருதி, பிரமன் தன்னை இறைவன் முடியிலிருந்து பிரமா எடுத்து வந்ததாகப் பூவைப் பொய் சொல்லச் செய்கின்றான். பூவின் பொய்யுரையை இறைவன் அறியாரோ? பொய் சொன்ன குற்றத்திற்காகத் தாழம்பூவைத் தமது பூசைக்குரியதல்ல என்று இறைவன் விலக்கியதோடன்றி, பிரமனையும் பூவுலகில் மனிதனாகப் பிறக்குமாறு சபித்தருளினார்.

தமது தோல்வியை ஒப்புக்கொண்ட மகாவிஷ்ணுவிற்கு இறைவன் தமது அடியையும் முடியையும் காட்டியருளத் திருவுள்ளம்கொண்டு, அதன் பொருட்டு அழல் உருவிலேயே மலைபோல் குறுகி நின்றார். அவ்வாறு பொங்கழல் உருவினராக நின்ற இறைவனே அண்ணாமலையான். அண்ணாமலை என்றும் அருணாசலம் என்றும் போற்றப்படுகின்ற மலை, அழல் உருவில் குறுகி நின்ற இறைவனின் வடிவம் என்பர் பெரியோர். இந்த வரலாற்றினைத் தேவாரப் பாடல்களும்,

''செந்தளிர் மாமலரோனும்
திருமாலும் ஏனமோடன்னமாகி
அந்தமடி காணாதே அவரேத்த
வெளிப்பட்டோன்''

''விளவார்கனி படநூறிய
கடல் வண்ணனும் வேதக்
கிளர் தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய
அண்ணாமலை அண்ணல்''

என்று கூறுகின்றன.

செல்வச் செருக்கால் திருமாலும், கல்விக் கர்வத்தால் பிரமனும் தருக்கி வாதிட்டனர்; போட்டியில் இறங்கினர்.

செல்வத்தாலும் கர்வத்தாலும் இறைவனைக் காணமுடியாது. செருக்கொழிந்து அன்புற்ற நிலையிலேயே இறைவனைக் காணமுடியும் என்ற தத்துவம் இந்த வரலாற்றில் மறைந்துள்ளது. திருமால் செருக்கொழிந்து அன்புற்று நின்றே இறைவனைக் கண்டார். இறைவன் அழல் உருவாகி, திருமாலோ பிரமனோ பெரியரல்லர்; தாமே பெரியர் என்ற உண்மையை அவர்களுக்கு உணர்த்தியருளினர். சக்தியினடியாக நிகழ்ந்த இந்தப் போட்டி நிகழ்ந்த இடம் அண்ணாமலை என்னும் சிவப்பெருந்தலமாகும். விழுப்புரம்–காட்பாடி புகைவண்டிப் பாதையில் திருவண்ணாமலை என்னும் இரயில் நிலையம் உள்ளது. இரயில் நிலையத்திலிருந்து மேற்கே ஒரு மைல் தொலைவில் அண்ணாமலையார் திருக்கோயில் அமைந்து விளங்குகின்றது.

தலச் சிறப்பு

சிறப்பு மிக்க சக்தி பீடங்களுள் இத் தலமும் ஒன்று பஞ்ச பூதத் தலங்களுள்ளும் இத் தலம் ஒன்று. இத் தலம், நெருப்புத்தலம்.

இத் தலத்துத் திருக்கோயில் மலையின் அடிவாரத்தில் அமைந்த மிகப் பெரிய கோயில். நான்கு பெரிய திருக்கோபுரங்களோடும், ஐந்து பிராகாரங்களோடும், ஆயிரக்கால் மண்டபத்தோடும், சிவகங்கை தீர்த்தத்தோடும் அமைந்து விளங்கும் அழகிய கோயில்.

இத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் அருணாசலேசுவரர்; அம்பிகை அபீத குசாம்பிகை. சுவாமிக்கு அண்ணாமலையார் என்ற திருப்பெயரும், அன்னைக்கு உண்ணாமுலையம்மை என்ற திருப்பெயரும் உண்டு.

நினைக்க முக்தி அளிக்கும் நிர்மலப் பதி இத் தலம்.

இத் தலத்து மலைப் பிராகாரம் 8 மைல்கள் சுற்றளவு உடையது. இம் மலை மீது திருக்கார்த்திகை விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. மலை உச்சியில் 'பேரொளி,

விளக்கு ஏற்றப்படும். இதற்கு அண்ணுமலை தீபம் என்று பெயர்.

அருட்கவி அருணகிரிநாதர் வாழ்ந்ததும், கம்பத்திளைய ஞர் என்ற முருகப்பெருமானது அருளைப் பெற்றதும் இத் தலத்திலேயே. அருணகிரிநாதருக்குத் திருச் சந்நிதியும், விழாவும் இங்கு உண்டு.

நடு நாட்டுத் தலங்களுள் பெருஞ் சிறப்புற்று விளங்கும் இத் தலம், தேவாரப் பதிகங்கள் மட்டுமன்றி, திருவாசகப் பாடல்களையும் பெற்று விளங்குகின்றது.

> ''கண்ஆர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
> அண்ணு மலையானைப் பாடுதும்காண்
> அம்மானுய்''—திருவாசகம்

குரு நமசிவாயர் என்னும் பெரியவர், இத் தலத்துக்கு 'அண்ணுமலை வெண்பா' என்னும் அரிய நூல் இயற்றியுள் ளார்.

> ''கண்டம் கரியமலை; கண் மூன்று உடையமலை;
> அண்டரெலாம் போற்றுதற்கு அரியமலை;
> —தொண்டருக்குத்
> தோற்றுமலை; நாளும் தொழுவோர் எழுபிறப்பை
> மாற்றுமலை அண்ணு மலை''—அண்ணுமலை வெண்பா,

குரு நமசிவாயர், குகை நமசிவாயர், ஈசான ஞான தேசிகர், குன்றக்குடி மடாலய தெய்வசிகாமணி தேசிகர், இரமண மாமுனிவர் முதலிய ஞானச் செல்வர்கள் இப் பதியில் வாழ்ந்துள்ளனர்.

குசாம்பிகை கோயில்

இத் தலத்துத் திருக்கோயிலில் அருணுசலேசுவரப்பெருமான், அன்னை அபீத குசாம்பிகையைத் தமது இடப்பாகத்தில் கொண்டு அர்த்தநாரீசுவரராகத் திகழ்கின்ருர். மூல

வர் சிவலிங்கத் திருமேனியராகக் காட்சியருளினும், செப்புத் திருமேனியில் அர்த்தநாரீசுவரராகவே திகழ்கின்றார். இத்தகைய அர்த்தநாரீசுவரரை இத்தலத்தில் மட்டுமன்றி வேறு எத்தலத்திலும் காணவியலாது.

ஈசனின் இடப்பாகத்தில் பொலிவுறுகின்ற அன்னை அபீத குசாம்பிகை, திருக்கோயிலிலும் அண்ணாமலையார்க்கு இடப்பாகத்திலேயே திருக்கோயில் கொண்டு திருக்காட்சியருள்கின்றாள்.

அன்னையின் ஆலயம் மகா மண்டபம், நவசக்தி மண்டபம் முதலிய மண்டபங்களோடு அமைந்த பெரிய கோயிலாகத் திகழ்கின்றது. நவசக்தி மண்டபத்தில் சக்திகள், காலசங்காரர், வீணாதரர் ஆகியோரின் திருவுருவச் சிற்பங்கள் அழகுற அமைந்து விளங்குகின்றன.

நவசக்தி மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால், கருவறையில் அழகே திரு உருவாக நின்று விளங்கும் அன்னை அபீத குசாம்பிகையைக் கண்டு வழிபடலாம்.

அன்னையின் அருட் சிறப்பு

ஞானத் தபோதனரை வாவென்று அழைக்கும் மலை அண்ணாமலை. வழிபடும் அன்பர்களின் எண்ணங்களை நிறைவு செய்பவள் குசாம்பிகை.

அன்னை அபீத குசாம்பிகை, அண்ணாமலையார்க்கே அர்த்தநாரீசுவரர் என்ற திருப்பெயரை அளித்தாள் எனில், அவளது அருட் சிறப்பை வியந்து போற்றாமல் இருக்க வியலுமோ?

கயிலையில் விளையாட்டாக இறைவனது கண்களை உமை மூட, சூரிய சந்திரர்களையே கண்களாகக் கொண்ட இறைவனின் அருளொளியின்றி உலகம் யாவும் இருண்டது. அதனால் உலகிற்கு விளைந்த துன்பம் நீங்க, அன்னையைக் காஞ்சியில் வந்து மணலால் இலிங்கத் திருவுருவமைத்து

வழிபட்டு, அண்ணுமலைக்கு வந்து இடப்பாகத்தைப் பெறுக என்று இறைவன் கூறிய வண்ணம், அன்னை அண்ணுமலைக்கு வந்து ஞானச்சுடராகிய இறைவனின் திருமேனியில் இடப்பாகத்தைப் பெற்று, 'அர்த்தநாரீசுவரர்' என்ற திருப்பெயரை அண்ணலுக்கு அளித்தாள். அந்த அன்னையை வழிபடுவார் வினையெல்லாம் விலகப் பெறுவர். எண்ணமெல்லாம் ஈடேறப் பெறுவர்.

அபீத குசாம்பிகை அன்னையை வணங்கி வழிபட்ட குரு நமசிவாயர், அன்னையின் திருக்கரங்களால் அமுதளிக்கப் பெற்றவர். இச் சக்தி பீட நாயகியின் திருவருளால் அக் குரு நமசிவாய முனிவர், சென்ற இடமெல்லாம் அன்னையை நினைந்து போற்றிப் பாடி அமுது பெற்று மகிழ்ந்துள்ளார்.

''மின்னும்படி வந்த மேககளத்து ஈசருடன்
மன்னும் திருமுகத்து வாளியே—பொன்னின்
மலையாளே! தாயே! வன்மனத்தே நின்ற
மலையாளே! சோறுகொண்டு வா''

—குரு நமசிவாயர்.

''உண்ணுமலை உமையாளொடும்
உடனுகிய ஒருவன்,
பெண்ணுகிய பெருமான்மலை
திருமாமணி திகழ,
மண்ஆர்ந்தன அருவித்திரள்
மழலை முழவு அதிரும்
அண்ணுமலை தொழுவார்வினை
வழுவாவணம் அறுமே''

—ஞானசம்பந்தர்.

9. திருக்கடவூர் அபிராமி

என்றும் பதினுறு வயது பெற்ற மார்க்கண்டனை எல்லோரும் காணவில்லையாயினும், அவன் கதையை அறிவர். புத்திரப் பேறு இல்லையே என்று கவன்ற மிருகண்டு முனிவன் தவம் புரிய, அவன் தவத்திற்கு இரங்கிய இறைவன், 'நீண்ட ஆயுள் குறைந்த அறிவுடைய புதல்வன் வேண்டுமா? குறைந்த ஆயுள் நிறைந்த அறிவுடைய புதல்வன் வேண்டுமா?' என்று வினவ, முனிவன் குறைந்த ஆயுள் நிறைந்த அறிவுடைய புதல்வனையே விரும்ப, மிருகண்டுவின் புத்திரனுக மார்க்கண்டன் பிறந்தான். பதினுறு வயது வரையிலேயே இவன் இவ்வுலகில் வாழ்வான் என்று இறைவன் திட்டமாக உரைத்தருளினுர்.

பதினுறு வயது நிறைவெய்தும் தருணத்தில் மார்க்கண்டன், பெற்ருேர் அனுமதியொடு கடவூருக்கு வந்து, இங்குக் கோயில் கொண்டுள்ள அமிர்த கடேசுவரரைப் பூசை செய்து வந்தான். அவ்வாறு அவன் பூசை செய்து வருங்காலத்தில், பதினுறு வயது நிறைவெய்தும் நாளில் காலன் வந்து, அவன் மீது பாசக்கயிற்றை வீசினுன். மார்க்கண்டனுே, தான் பூசை செய்து கொண்டிருந்த இலிங்கத் திருவுருவையே கட்டிப் பிடித்துக்கொண்டான். அப்போதும் காலன் அவனை விடுபவனுக இல்லை. இறைவனுக்கோ காலன் மீது கடுங்கோபம். என்னையே தழுவித் தஞ்சம் புகுந்த நேரத்திலுமா இவன் தன் கடமை தவருது உயிரைக் கவர வருதல் வேண்டும் என்று கருதிய இறைவன், இலிங்கத்தினின்று வெளிப்பட்டுக் காலால் காலனை உதைத்து, சூலாயுதத்தைப் பாய்ச்சினுர். மார்க்கண்டன், என்றும் பதினுறு வயது பெற்றுச் சிரஞ்சீவியாக வாழ்ந்தான். காலனைக் காய்ந்த அமிர்தகடேசுவரர், கால சங்காரர் என்ற திருப் பெயரையும் பூண்டு விளங்கினுர்.

''கொன்றாய் காலனை, உயிர்கொடுத்தாய்
மறையோனுக்கு, மான்
கன்றாருங் காவாக் கடவூர்
திருவீரட்டத்துள்'' —சுந்தரர் தேவாரம்

இவ்வாறு மார்க்கண்டனுக்கு அருள் புரிந்த அமிர்த கடேசுவரர் கோயில் கொண்டு விளங்கும் பதியே, திருக்கடவூர் என்னும் பெருமை மிகு பதி. மாயூரம்—தரங்கம்பாடிப் புகை வண்டிப் பாதையில் திருக்கடையூர் என்ற இரயில் நிலையம் உள்ளது. திருக்கடவூர் என்னும் பெயரே திருக்கடையூர் என்று வழங்கி வருகின்றது. இரயில் நிலையத்திலிருந்து இரண்டு பர்லாங்குகள் தூரத்தில் திருக்கோயில் அமைந்து விளங்குகின்றது.

கடவூர் வரலாறு

முன்னொரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தனர். அந்த அமுதத்தை அசுரர்கட்குக் கொடுக்காமல் தாமே உண்டு அமரத்துவம் பெற விரும்பித் தேவர்கள், அசுரர் அறியா வண்ணம் அதனை ஒரு குடத்திலே நிரப்பி எடுத்துக் கொண்டு வந்தனர். அவ்வாறு வரும்போது ஓர் இடத்தில் அமுதக் குடத்தை இறக்கி வைத்துவிட்டு நீராடச் சென்றனர். நீராடி வந்து குடத்தை எடுக்க முயன்றால், அது வேர் ஊன்றி நின்று எடுக்க வியலாத இலிங்கத் திருவுருவாக இருந்தது. அந்த அமுத லிங்கமே அமிர்தகடேசுவரர். அமுதக் கடம் இலிங்க உருவாக எழுந்தருளியதால் கடவூர் என்ற பெயர். பாற்கடலைக் கடைந்து எடுத்த அமுதக் கடமானதால் கடையூர் என்ற பெயர்.

தலச் சிறப்பு

இறைவனின் எட்டு வீரட்டங்களுள் திருக்கடவூர் என்னும் இத் திருத்தலமும் ஒன்று. மார்க்கண்டனுக்காகக்

காலனைக் காலால் இறைவன் உதைத்தது, இத் தலத்தில் நிகழ்ந்த வீரச் செயல். கால சங்கார மூர்த்தி இத் தலத்தில் பெரிய வடிவில் கம்பீரமாகக் காட்சி தருகின்றது. இந்தக் கால சங்காரர், இத் தலத்துத் திருக்கோயில் மகா மண்டபத்துள் அழகிய சபை ஒன்றில் எழுந்தருளித் திருக்காட்சியருள்கின்றார்.

மூலவர் அமுதகடேசுவரராகிய மகாலிங்கத்தின் மீது காலன் வீசிய பாசத் தழும்பு காணப்படுகின்றது.

கால சங்காரரையும், அமுதகடேசுவரரையும் விட பெருமையும் புகழும் கொண்டு விளங்குகின்றாள் அன்னை அபிராமி. அபிராமிபட்டர் என்பவர் இனிமையான நூறு பாடல்கள்கொண்ட அந்தாதி நூல் பாடியது இந்த அன்னைக்குத்தான். அந்த அபிராமி அந்தாதிப் பாடல்கள் அனைத்தும் அன்னையின் கோயிலில் சலவைக் கல்லில் பொறிக்கப் பெற்றுள்ளன.

தேவாரம் அருளிய மூவரும் இத் தலத்திற்குப் பதிகங்கள் பாடியுள்ளனர். பரஞ்சோதி முனிவரும் இத் தலத்தைத் தமது திருவிளையாடல் புராணத்தில் குறித்துப் போற்றுகின்றார். குங்கிலியக்கலய நாயனார், காரிநாயனார், தேவநாயனார் ஆகியோர் வாழ்ந்து வீடுபேறு அடைந்த தலம்.

ஆண்டு தோறும் கார்த்திகை சோம வாரத்தில் எம்பெருமானுக்கு நிகழும் 1008 சங்கபிடேகம் மிகவும் விசேடமானது.

அன்னை அபிராமி திருக்காட்சி

இத் தலத்துத் திருக்கோயில், கம்பீரமாக உயர்ந்து விளங்கும் இராஜ கோபுரத்துடன் அமைந்த பெரியகோயில். கோயிலின் மூன்று பிராகாரங்களையும் கடந்து சென்றால் மகாமண்டபம். இம் மண்டபத்தில் கால சங்காரர் செப்புத் திருமேனியைக் கண்டு வழிபடலாம். காலனைக் கடிந்த

அவசரத்தில் எம்பெருமான், திருக்கரங்களில் சூலம், மழு, பாசம், தர்சனி தரித்தவராய்த் தெற்கு முகம் நோக்கி எழுந்தருளி நிற்க, உதைபட்ட காலன் திருவடிக் கீழ் உருண்டு கிடக்க, வரம் பெற்ற மார்க்கண்டன் கைகூப்பி வணங்கி நிற்க, அன்னை சாட்சியாகக் கருணைக் கண் கொண்டு அருகில் நிற்கக் கண்டு வழிபடலாம். கால சங்காரப் பெருமானைக் கண்டு வழிபடுவோர் நமனுக்கு அஞ்சாது நெடுங்காலம் வாழலாம்.

இம் மகாமண்டபத்தை அடுத்து உள்ளது சங்கு மண்டபம். இம் மண்டபத்திலேயே 1008 வலம்புரிச் சங்குகளில் நீர் நிறைத்து அமுதகடேசுவரருக்கு அபிடேகப் பூசை நடைபெறுகின்றது. இதனை மார்க்கண்டன் செய்ததாக ஐதிகம். இம் மண்டபத்தை யடுத்த கருவறையுள் மேற்கு நோக்கி அமுதகடேசுவரர் மகாலிங்கத் திருமேனியராகக் காட்சி தருகின்றார். நீண்ட ஆயுளைப் பெற்று வாழ விரும்புவோர் இப் பெருமானை வழிபடுகின்றனர்.

மேற்கு நோக்கிய இத் திருச்சந்நிதிக்கு எதிரில் வெளிப் பிராகாரத்தில் அன்னை அபிராமி கிழக்கு நோக்கித் திருக் கோயில் கொண்டு திகழ்கின்றாள். அன்னையின் திருவுருவம் மிகவும் அழகு வாய்ந்தது. மூன்றடி உயர பீடத்தில் நான்கு திருக் கரங்களோடு நின்று திருக்காட்சி யருளுகின்றாள். இரண்டு திருக்கரங்கள் அபய வரத முத்திரைகள் தாங்க, இரண்டு திருக்கரங்கள் மலரும் மாலையும் தாங்கித் திகழ்கின்றன. அன்னையின் திரு நயனங்களோ அருளை வாரிப் பொழிகின்றன.

நீண்ட ஆயுளைப் பெற்றுவிட்டால் போதுமா? இன்னலற்ற இன்ப வாழ்வினைப் பெற வேண்டாமா? வாழும் நாள் சிறிதேயாயினும், அதில் இன்னலற்று வாழத்தானே எல்லோரும் விரும்புகின்றனர். அந்த இன்னலற்ற—நோய் நொடியற்ற இன்ப வாழ்வினை வழங்கியருள்பவளே அன்னை அபிராமி. நீண்ட ஆயுளையும் நோயற்ற வாழ்வினையும் எய்த வேண்டும் என்பதனை உணர்த்தும் பொருட்டே

அன்னையும் அண்ணலும் எதிர்எதிரே எழுந்தருளியுள்ளனர். அண்ணலை வழிபட்டுத் திரும்பும் அந்நிலையிலேயே அன்னையையும் வழிபட வேண்டும் என்பதன் பொருட்டே நம் அன்னையும் அப்பனும் எதிர் எதிரே நின்று திருக் காட்சியருள்கின்றனர்.

நமபய மொழிந்து நீண்ட ஆயுளைப் பெற விரும்பிக் கால சங்காரரை வழிபடுவோர், இன்னலற்று வாழ விரும்பி அன்னை அபிராமியை வணங்கி வழிபடுகின்றனர்.

அன்னையின் அருள் நோக்கு

அன்னை அபிராமி கண்கண்ட தெய்வம்; அழகுக்கொருவரும் ஒவ்வாத செல்வி; சின்னஞ்சிறு பெண்ணுருவில் திகழும் உத்தமி; எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் ஈன்றருளும் வள்ளல் நாயகி; அபிராமிபட்டர் என்ற அன்பருக்கு அமாவாசையிலும் சந்திரோதயம் காட்டி, அபிராமி அந்தாதி என்னும் பாமாலை சூட்டிக்கொண்ட செல்வி.

அன்னை அபிராமியினிடத்தில் அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார் பட்டர் ஒருவர். பக்தி முற்ற முற்ற அவர் உன்மத்தராகவே ஆகிவிட்டார். அதைக் கண்ட அர்ச்சகர்கள், அவரை வெறுத்தது மட்டுமன்றி அவர்மீது பொருமையும் கொண்டனர். ஒரு நாள், தஞ்சை மன்னன் வந்தபோது, பட்டர் அமாவாசையைப் பௌர்ணமி என்று கூறினர். அதைக் கொண்டே அர்ச்சகர்கள் அவரைப் பற்றிப் பலவாருகப் பேசினர். பட்டர், தமது தவறையுணர்ந்து, ''உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம்'' என்று பாடத் தொடங்கி, எழுபத்தெட்டுப் பாடல்களைப் பாடி முடித்து, எழுபத்தொன்பதாவது பாடலை,

''விழிக்கே அருளுண்டு அபிராம
    வல்லிக்கு, வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு
    எமக்கு, அவ்வழி கிடக்க

பழிக்கே சுழன்று வெம்
பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்
தம்மொடு என்னகூட்டு இனியே''

என்று பாடினர். 'கயவர் தம்மொடு என்னகூட்டு இனியே' என்று அவர் பாடி முடித்த வேளையில், அன்னை அபிராமி தன் திருச்செவியில் இருந்த தோடு ஒன்றைக் கழற்றி வானத்தில் விசி எறிந்தாள். அந்தத் தோடே வானவெளியில் முழுமதியாகக் காட்சியளித்தது. அமாவாசையன்றே பௌர்ணமி நிலவு உதிப்பதைக் கண்டு மன்னர், அர்ச்சகர்கள் எல்லோரும் வியந்து நின்றனர். பட்டரின் திருவடியில் விழுந்து வணங்கி மன்னிப்பு வேண்டினர்.

பட்டர் இவ்வாறு பாடிய அந்தாதிப் பாடல்களைக் கொண்டதே அபிராமி அந்தாதி. அபிராமியின் அருள் பெற்ற அந்தப் பட்டர், அபிராமி பட்டர் என்ற பெயரால் அது முதல் அழைக்கப் பெற்ருர். அந்த அந்நாதிப் பாடல்கள் அன்னையை வழிபடுவதற்கேற்ற அற்புதப் பாடல்களாகும். இன்னலுற்று இடர்ப்படுவோர் அப்பாடல்களை ஓதி அன்னையை வழிபட்டால் எல்லா நலன்களையும் பெற்று இன்புற்று வாழ்வர். அன்னையின் கடைக்கண் நோக்கினுல் அன்பர்கள் பெறும் பேறுகள் பலவாகும்.

''தனந்தரும், கல்விதரும்,
ஒருநாளும் தளர்வறியா
இனந்தரும், தெய்வ வடிவுந்தரும்,
நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும், நல்லன எல்லாந்தரும்,
அன்பர் என்பவர்க்கே,
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே''

—அபிராமி அந்தாதி.

அமிர்த தீர்த்தம்

இத் தலத்துத் திருக்கோயிலின் கீழைக் கோபுரத்தின் உட்புறத்தில் அமிர்த புட்கரணி என்ற அழகிய திருக்குளம் உள்ளது. இஃது இத் தலத்தின் சிறப்பு மிக்க தீர்த்தம். இதில் சித்திரா பௌர்ணமியிலும், வெள்ளிக் கிழமையிலும் நீராடினுல் எல்லாச் சித்திகளையும் எய்தலாம். இத் தீர்த்தத்தில் நீராடி இன்ப வாழ்வளிக்கும் வள்ளல்நாயகி அபிராமியைக் கண்டு வழிபடுதல் முறையாகும்.

10. திருவாரூர் கமலாம்பிகை

சோழவள நாட்டில் பாடல் பெற்ற சிவ திருத்தலங்கள் 191. அவற்றுள் மிகப் பழமைவாய்ந்த தலங்கள் இரண்டு. அவை: திருவாரூர், சிதம்பரம். இவ்விரண்டுள் பழமைப் பெருமை உடைய தலம் திருவாரூர். திருவாரூர் எத்துணைக் காலத்துக்கு முந்தியது என்று வரையறுத்துக் கூறுதல் இய லாது. இதனை ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த அப்பர் அடிகளாரே,

''மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுதற்கு முன்னோ பின்னோ
அணி ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே''

எனக் கூறுகின்றார்.

காலத்தை அறியவியலாத பழமை வாய்ந்த ஆரூர்ப் பதி, மாயவரம்-காரைக்குடி புகைவண்டிப் பாதையில் உள்ள ஒரு சந்திப்பு இரயில் நிலையம். இரயில் நிலையத்தி லிருந்து ஒரு மைல் தூரத்தில் இத் தலத்துத் திருக்கோயில் அமைந்துள்ளது.

திருவாரூர் தனிப்பெருமை

உலகிலேயே பெரிய தேர் திருவாரூர் தேர்தான். எனவேதான், 'திருவாரூர் தேர் அழகு' என்ற பழமொழி பிறந்தது. திருக்கோயில், திருக்குளம், செங்கழு நீரோடை இவை ஒவ்வொன்று ஐயைந்து வேலி நிலப்பரப்புடை யவை. பழமையில் முதன்மைபெற்று விளங்குவது போன்றே, கோயிலும் குளமும் பரப்பளவிலும் பிற தலங்களை விட பெரியனவாக அமைந்து விளங்குகின்றன.

பஞ்சபூதத் தலங்களுள் இத் தலம் பிருதுவித்தலம். சப்தவிடங்கத் தலங்களுள் இத் தலம் ஒன்று. முக்தி தரும் தலங்கள் மூன்று: காண முத்தி தருவது சிதம்பரம், இறக்க முத்தி தருவது காசி, பிறக்க முத்தி தருவது திருவாரூர். 'பிறக்க வீடளிக்கும் தலம்' என்று இத் தலத்தைப் புராணங்கள்போற்றும். 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' எனக் கூறுகின்ருர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

இத் தலத்துத் திருக் கோயிலுக்குத் திருமூலட்டானம் என்றும், பூங்கோயில் என்றும் பெயர். திருக்குளத்திற்குக் கமலாலயம் என்று பெயர். திருக் குளத்தின் நடுவில் ஒரு தீவும், அதில் ஓர் அழகான கோயிலும் அமைந்துள்ளன. அக் கோயிலே நடுவ நாயனூர் கோயில் என்பர். அக் கோயிலுள் நாகநாதரும், யோகாம்பிகையும் எழுந்தருளியுள்ளனர். இக் கோயிலுக்குச் செல்ல ஓடங்கள் உண்டு. இந்த அழகிய குளத்திணக் கொண்டே தலத்துப் பெருங் கோயிலேப் பூங்கோயில் என்ற பெயரால் வழங்கி யிருத்தல் வேண்டும்.

திரு மூலட்டானத்தில் வன்மீகநாதர் புற்றினிடமாக எழுந்தருளியுள்ளார். இவரைப் புற்றிடங்கொண்டார் என்றும் கூறுவர்.

சோமாஸ்கந்த உருவில் உள்ள தியாகராசப் பெருமான் இங்கு உற்சவ மூர்த்தி. முசுகுந்த சக்கரவர்த்தி தெய்வ லோகத்திலிருந்த மூர்த்தியைக் கொண்டுவந்து பிரதிட்டை செய்து விழா நடத்தியதாகப் புராண வரலாறு. முசுகுந்தன் கொண்டு வந்த இலிங்கப் பெருமான் தங்கப் பெட்டியில் வைக்கப்பட்டுப் பூசை முதலியன பெறுகின்ருர். இவரைத்தான் விடங்கர் என்பர்.

இத் திருக்கோயிலில் நீலோத்பலம்பாள், கமலாம்பிகை என்று இரு தேவியர் தனித்தனித் திருக்கோயில் கொண்டு விளங்குகின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதுகுன்றத்தில் இறைவனைப் பாடிப்பெற்ற பொன்னே, அங்குள்ள மணி

முக்தா நதியில் இட்டு, இங்கு வந்து கமலாலயக் குளத்தில் எடுத்தார். அந்தப் பொன்னை உரைத்து மாற்று அறிந்த விநாயகர், மாற்றுரைத்த விநாயகர் என்ற பெயரில் எழுந் தருளியுள்ளார்.

இத் தலத்தில் நவக்கிரகங்கள் வக்கரிக்காமல் ஒரே வரிசையில் இருத்தல் ஒரு தனிச் சிறப்பை வழங்கு கின்றது.

விறல் மீண்ட நாயனர், நமிநந்தியடிகள், செருத்துணை நாயனர், தண்டியடிகள், கழற்சிங்க நாயனர் முதலிய பெரியவர்கள் இங்கு வீடு பேறு எய்தியுள்ளனர். இவை போன்று இத் தலத்திற்கு மேலும் சில தனிச் சிறப்புக்கள் உண்டு.

பராசக்தி பீடம்

பெருமை மிக்க ஆரூர்ப்பதி, பராசக்தி பீடங்களில் ஒன் ருக அமைந்து விளங்குகின்றது. அன்னை சக்தியானவள் இத் தலத்தில் இருவகைப் பேருருவில் எழுந்தருளி, இரு வகை வாழ்வினர்க்கும் திருவருள் புரிந்து வருகின்ருள்.

இத் தலத்துத் திருக் கோயிலின் இரண்டாம் பிராகாரத் தில் அன்னை நீலோத்பலாம்பிகை தனிக்கோயில் கொண்டு, திருக்கரத்தில் கருங்குவளை மலர் ஒன்றை ஏந்திய வண்ணம் நின்ற திருக்கோலத்தில் அருட்காட்சி யருளுகின்ருள். இவள் அருகில் தோழி ஒருத்தி தோள்மீது முருகனைச் சுமந்து நிற்க, அன்னையின் இடது திருக்கரம் முருகனது சுட்டுவிரலைப் பற்றிய வண்ணம் காணப்படுகின்றது. இது, பிற தலங்களில் இல்லாமல் இத் தலத்தில் மட்டுமே காணப் படுகின்ற ஒரு தனிச் சிறப்பு.

இந்த அன்னை நீலோத்பலாம்பிகை, தன் இளைய பிள்ளையோடு எழுந்தருளித் திகழ்தல், இல்லற வாழ்வின் மாண்பினை உணர்த்துவதாகும். இந்த அன்னை, இல்லற வாழ்வினர்க்கு இன்னருள் சுரப்பவளாகத் திகழ்கின்ருள்.

இல்லற வாழ்வினர்க்காக எழுந்தருளித் திகழும் இந்த அன்னையைப் போன்றே, துறவற வாழ்வினர்க்காக அன்னை கமலாம்பிகையும் ஒரு தனித் திருக்கோயிலில் எழுந்தருளித் திருக்காட்சி யருளுகின்றாள்.

அன்னை கமலாம்பிகை தனிக் கோயிலில் தவக் கோலத்தில், கால் மேலிட்டு யோகாசனமாக வீற்றிருந்து பாசம், உருத்திராக்கம், தாமரை, அபயம் தாங்கிய திருக்கரங்களுடன் திருக்காட்சி யருளுகின்றாள். இந்த அம்பிகை அழகே உருவானவர். இந்த அன்னை துறவற வாழ்வினர்க்குத் திருவருள் புரிந்து விளங்குகின்றாள்.

யோக நிலையில் பிறப்பதே சுத்த சித்தி நிலை. இந் நிலையை அடைய இந்த அன்னையைத் தியானம் புரிதல் வேண்டும். இதனை உணர்த்தவே அன்னை கமலாம்பிகை தவக்கோலத்து யோக நிலையில் எழுந்தருளி விளங்குகின்றாள்.

கமலாம்பிகையின் கருணை நலம்

சக்தி ஒன்றே. ஆனால், இத் தலத்தில் சக்தியின் வடிவம் இரண்டு. இரண்டின் விளைவும் ஒன்றே. பிறப்பு உற்ற எவ்வுயிரும் இறப்பை அடையும். ஆனால், இறப்பை அடைந்த உயிர் பிறவாமையை அடைய உரிமையும், உயரிய வழியும் உலகில் உண்டு. அந்தப் பிறவாமையையே– பிறவா நிலையினையே வீடுபேறு என்றும், முக்தி என்றும் மொழியப்பெறும். இதனை அடைவதன் பொருட்டே அன்பர்கள் இருவகை வடிவில் இலங்கும் அன்னையை அன்புடன் வழிபட்டு அருள் பெறுகின்றனர்.

அந்த உயரிய நிலையை அடைவதற்கு அறம் புரிதல் வேண்டும்; அறம்புரியப் பொருள் பெறுதல் வேண்டும்; பெற்ற பொருளை உள்ளக் கசிவால் மன்னுயிர்க்கு உதவுதல் வேண்டும்; அவ்வாறு அறம் புரிவதால் இன்பம் பிறத்தல் வேண்டும்; இத்தகைய வாழ்வினோடு மனத்தை இளக்க வேண்டும். கல்லான மனம் இளக அன்னையை தியானித்தல் வேண்டும். அன்னையைத் தியானித்தால், மலங்களினின்றும்

பிற மாசுகளினின்றும் மனம் விடுபட்டுத் தூய்மையுற்று இளகும்நிலையினை அன்னை வழங்கியருளுவாள். அங்ஙனம் அன்னையைத் தியானிக்கும் நிலையே யோகநிலை. யோக நிலை நின்று, புறத்தே ஓடும் மனத்தை அடக்கி, உண் முகமாக்கி, உயரிய அன்னை கமலாம்பிகையின் திருப் பெயரைத் தியானித்தால், அன்னை பக்குவ நிலை கண்டு பிறவா நிலையினை வழங்கியருளுவாள். அன்னையை ஓயாது தியானித்தால் புறத்தே ஓடும் மனம் உண்முக மாகும்; அம் மனத்தில் ஓர் உணர்வு பிறக்கும் அந்த உணர்விலே ஒரு தெளிவு காட்சி தரும். அந்தத் தெளிவுக் காட்சியே முக்தியைக் கொணரும். இத் தத்துவத்தை வழிபடும் அன்பர்கட்கு உணர்த்தவே, அன்னை சக்தியானவள் இரு வேறு உருவில் இத் தலத்தில் இலங்குகின்ருள்.

அறம், பொருள், இன்ப வாழ்க்கை இல்லற வாழ்வினர்க் குரியது. இதனை அருளுபவள் அன்னை நீலோத்பலாம்பிகை. அந்த இல்லற வாழ்வினர் துறவினை—தவ நிலையினை மேற்கொண்டு வீடு எய்துதல் வேண்டும். இதனை அருளுபவள் அன்னை கமலாம்பிகை. இத்தகைய சக்தி ஆலயம் வேறு எத்தலத்திலும் இல்லை. ஆரூர்ப் பெருந்தலம் தனிச் சிறப்புற்று விளங்குவதற்கு அன்னையின் திருவருளே காரணம் எனலாம்.

அன்னை கமலாம்பிகையின் அருளினுலேயே ஆரூரன் ஆலயமும் பெருமைமிக்கு விளங்குகின்றது இங்கும் ஈசனை விட அன்னையே மேன்மைமிக்கவளாகத் திகழ்கின்ருள். எவ்வாறெனில், தம்பிரான் தோழராகிய சுந்தரர் பொருட்டு இரவில் பரவையாரிடம் ஆரூர்ப் பெருமான் தூது சென்று வந்தார் அல்லவா? அதில் பெண்மைதானே மேலோங்கிக் காணப்படுகின்றது. எனவே, பெண்மை நலம்சான்ற அன்னையே மேலானவளாகத் திகழ்கின்ருள் என்பது உண்மை.

கருணையின் வடிவான அன்னை கமலாம்பிகையை அன்புடன் வழிபட்டு நிற்போர், அவள் அருள்பட்டு உய்வது திண்ணம்.

11. திரிகூட மலை பராசக்தி

திரிகூட மலை என்றால் சிலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், குற்றால மலை என்றால் தெரியாதவர் எவரும் இரார். திருக்குற்றால மலைக்கே திரிகூட மலை என்ற பெயரும் உண்டு. குற்றால மலை மூன்று சிகரங்களை உடைய காரணத்தால் திரிகூட மலை என்ற பெயர் அமைந்தது.

இத் திரிகூட மலை ஓர் அற்புதத் தத்துவ மலை. சிகரங்கள், மலை, அருவி என்ற மூன்றன் சிறப்பு இங்குண்டு. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றன் சிறப்பும் இங்குண்டு. சிகரங்கள் மூன்றும் மும்மூர்த்திகள். மலையே தலம். அருவியே தீர்த்தம். சிகரங்கள் உணர்த்துகின்ற மும்மூர்த்திகளும் அன்னை பராசக்தியின் குழந்தைகள். குழந்தைகள் மூன்றும் அன்னையால் வளர்க்கப்படுகின்றன. மலையே அன்னை பராசக்தி. மலையினிடத்துள்ள மூன்று சிகரங்கள் மும்மூர்த்திகளாகிய குழந்தைகள். மலையினின்று பெருக்கெடுத்து வழிந்து வருகின்ற அருவி, அன்னை பராசக்தியின் கருணை வெள்ளம். மலை—அன்னை, சிகரங்கள்—பிள்ளைகள், அருவி-கருணை. அன்னை பராசக்தியானவள் கருணையால் மூன்று பிள்ளைகளை மட்டும் பேணி வளர்க்காமல், அகில உலக உயிர்கள் அனைத்தையும் பேணி வளர்க்கின்றாள். எனவேதான், அன்னையின் கருணை அருவியாக வருகின்றது.

திரிகூட மலை அருவியில் திளைத்தல் ஒரு தனி இன்பம் என்று திளைத்தோர் கூறி மகிழக் காண்கின்றோம். உண்மைதான்! நாம் காண்டல், கேட்டல், சுவைத்தல் முதலிய பல வகைகளில் இன்பத்தைத் துய்க்கின்றோம். அப் பல வகையில் துய்க்கின்ற இன்பத்தினும் மேலானதாக, தனித் தன்மை வாய்ந்ததாக இந்த அருவி இன்பம் உள்ளது. இந்த அருவியில் நீராடுங்கால் உள்ளம் குளிர்கின்றது,

உயிர் தளிர்க்கின்றது, உடல் சிலிர்க்கின்றது. உள்ளத்துக்கும் உயிருக்கும் உடலுக்கும் தனி இன்பமும் வலிமையும் ஊட்டும் தன்மையதாகிய இந்த அருவி, அன்னைப் பராசக்தியின் கருணைப் பெருக்கன்றோ? அன்னையின் கருணையில் இத்தகைய இன்பமும் வலிமையும் பிறத்தல் இயல்பே. மலையருவியில் திளைத்தல், அன்னையின் கருணை யருவியில் திளைத்தலாம்.

அன்னை பராசக்தியின் எழிற்கோலந்தான் என்னே! திரிகூட மலையின் பசுமைத் தோற்றம் அன்னையின் திருமேனித் திருத்தோற்றமாக விளங்குகின்றது. பசுமைப் பண்பு காக்குந் தன்மையது. பச்சை மாமலை போல் மேனியனுகிய பத்மநாபன் காக்குந் தொழிலையுடையவன். அப் பச்சை மாமலையாக உள்ளது திரிகூட மலை. இம் மலையில் விளங்கும் கனிகளும், மூலிகைகளும் அளவிடற்கரியன. அவை அன்னையின் பச்சை வண்ணத் திருமேனி வளம். அம் மூலிகைகள் உடலோம்பி உயிர் வளர்க்கும் மருந்துகள். அக் கனிகள் உடலோம்பும் உணவுகள். மூலிகைகளும் கனிகளும் அருவியால் அடித்துவரப்படுகின்றன. அதனுல், அருவி உடற்பிணியையும் நீக்கி நலமுறச் செய்கின்றது. அன்னையின் கருணை மருந்துமாகும், உணவுமாகும். அன்னை பராசக்தி, தன் கருணையாகிய அருவியால் அன்பர்கட்கு நோயற்ற வாழ்வையும், நீண்ட ஆயுளையும் நல்கியருளும் நிலையினை உணர்த்துவனவே பசுமை நிற மலைத் தோற்றமும், அம் மலையினின்று இழிதரும் அருவியும் ஆகும்.

அன்னையின் பசுமை நிறத் திருவுருவாகிய மலையின் உச்சியில் வண்ணக் கருமேகம் வட்டமிடுகின்றது; அம் மலையினின்று மெல்லிய பூங்காற்றுப் புறப்பட்டு வருகின்றது. வட்டமிடும் வண்ணக் கருமேகம், அன்னை பராசக்தியின் கடைக்கண் அருள் நோக்கு. மெல்லிய பூங்காற்று அன்னையின் நாசியினின்று வெளிப்படும் சுவாசம்.

திரிகூடமலை என்னும் திருக்குற்றால மலை, இயற்கையின் உருவாயிலங்கும் அன்னை சக்தியின் அழகு வடிவம், அருள்

வடிவம் என்பது இனிது விளங்கலாகும். திரிகூட மலை உணர்த்தும் தத்துவம் இதுவே. இத் தத்துவத்தை உணர்ந்தோ உணராமலோ குற்றால மலையை நோக்கி ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் அன்பர்களின் கூட்டம் சென்றவண்ணம் உள்ளது.

அன்னையின் திருவுருவாய்த் திகழும் இத் திருத்தலம், நெல்லை மாவட்டத்தில், தென்காசி இரயில் நிலையத்தி லிருந்து மேற்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது.

தலச் சிறப்பு

திரிகூட மலை எனப்படுகின்ற குற்றாலப் பதி ஓர் ஒப்பற்ற இன்ப வாழ்விடம்—சுக வாசஸ்தலம். அன்னையே மலை யுருவாய் நின்று உலக உயிர்களை அன்புற்று வளர்த்துக் காக்கும் இடமாகையால், இன்ப வாழ்விடமாக விளங்கு வதில் வியப்பில்லை. உலகில் பல நீர்வீழ்ச்சிகள் உள்ளன. ஆனால், இத் தலத்து அருவிபோல் யாண்டுமில்லை. அருவி யிலேயே நின்று குளிக்கும் வசதி, பிற நீர்வீழ்ச்சிகளில் அவ்வளவாக இருப்பதில்லை. இங்கு அந்த வசதி அழகாக அமைந்துள்ளது.

இத் தலத்தில் ஈசன் குறும் பலா மரத்தடியில் எழுந் தருளியதால், இத் தலத்திற்குக் குற்றாலம் என்ற பெயர் அமைந்தது என்பர். இத் தலத்திற்கு எழுந்தருளிய திருஞானசம்பந்த சுவாமிகள், இத் தலத்திற்கு ஓர் அழகிய பதிகம் பாடியதோடு நில்லாது, ஈசன் வெளிப்பட்ட குறும் பலா மரத்திற்கும் ஒரு பதிகம்—குறும்பலாப் பதிகம் அருளி யுள்ளார்.

''அரவின் அணையானும் நான்முகனும்
காண்பரிய அண்ணல் சென்னி
விரவிமதி அணிந்த விகிர்தருக்கு
இடம்போலும் விரிபூஞ் சாரல்

மரவம் இருக்கையும் மல்லிகையும்
சண்பகமும் மலர்ந்து மாந்தக்
குரவமுறுவல் செய்யும் குன்றிடம்
சூழ்தண் சாரல் குறும்பலாவே''

என்பது அக் குறும்பலாப் பதிகத்தில் உள்ள ஒரு பாடல். இக் குறும்பலா மரத்தின் கீழ் ஈசன் வெளிப்பட்டது மட்டுமன்றி, குறும்பலா மரமே ஈசன் வடிவம். மரம், மரத்தின் பழம், பழத்தின் சுளை, சுளையுள் கொட்டை ஆகிய அனைத்தும் ஈசன் வடிவம்—சிவலிங்கத் திருவுருவம் என்பதை,

''கிளைகளாய்க் கிளைத்த பலகொம்பு எலாம்
சதுர்வேதம், கிளைகள் ஈன்ற
களைஎலாம் சிவலிங்கம், கனிஎலாம்
சிவலிங்கம், கனிகள் ஈன்ற
சுளைஎலாம் சிவலிங்கம், வித்துஎலாம்
சிவலிங்க சொரூப மாக
விளையும்ஒரு குறும்பலாவின் முளைத்துஎழுந்த
சிவக்கொழுந்தை வேண்டு வோமே''

என்ற பாடல் உணர்த்துகின்றது. இந்தக் குறும்பலா இருக்கும் இடமே குற்ருலம்.

குற்ருலம் என்னும் கவின்தலம், பிறவிப் பிணியறுக்கும் பெருந்தலம். அன்னையின் திருவருள் மேலோங்கித் திகழும் தலமாதலால், பிறவியறுக்கும் பெருந்தலமாக விளங்கு கின்றது. குற்ருலம் என்பது கு்+தாலம்—குத்தாலம்—குற்ருலம் எனத் திரிந்து வழங்குவதாகும். கு-என்பது பிறவிப் பிணியையும், தாலம் என்பது தீர்ப்பதையும் குறிக்கும்.

அன்னையாகிய ஆதிசக்தி, மும்மூர்த்திகளையும் பயந்த தலமாதலால், இத் தலத்திற்குத் திரிகூடம் என்ற பெயரும் அமைந்தது. இதற்கேற்ப இத் தலத்தில் அன்னை சக்தி மும்மூர்த்திகளாகிய குழந்தைகளைத் தொட்டிலிட்டுத் தாலாட்டி வளர்க்கின்ருள்.

இத் தலத்துத் திருக்கோயில், மலையடிவாரத்தில் சங்கு வடிவில் அமைந்த அழகிய பெரிய கோயில். கோயிலுள் அழகாக அருவி நீர் வருகின்றது. கோயில் கொண்டு எழுந்தருளித் திகழும் ஈசன், குறும்பலாநாதர். இவருக்குக் குற்றால நாதர் என்ற திருப்பெயரும் உண்டு. இத் திருக்கோயிலின் வடபுறத்தில் புகழ்பெற்ற சித்திர சபை உள்ளது.

அம்பலக்கூத்தன் ஐந்து திருச்சபைகளில் தனது திருக்கூத்தை ஆடியருளுகின்றான். திருவாலங்காட்டில் இரத்தின சபையிலும், தில்லையில் பொன்னம்பலத்திலும், மதுரையில் வெள்ளியம்பலத்திலும், நெல்லையில் தாமிர சபையிலும் ஆடிய பெருமான், இத் தலத்தில் சித்திர சபையில் நின்று ஆடியருளுகின்றான்.

இத் தலத்தின் பெருமை கூற, திரிகூட ராசப்பக் கவிராயர் என்பவர், திருக்குற்றாலப் புராணம், குற்றாலக் குறவஞ்சி என்ற இரு நூல்களை யாத்துள்ளார். மூவர் தேவாரமும், மணிவாசகர் பாடலும், கபிலர் கவிதையும், பட்டினத்தார் பாடலும் இத் தலத்தின் சிறப்பை விரித்துப் பேசுகின்றன.

யோகபீட நாயகி

திருக் குற்றாலநாதரின் திருக்கோயிலுள் வடபக்கத்தில் ஒரு தனித் திருக்கோயிலில் அன்னை பராசக்தி யோகத்தில் வீற்றிருக்கின்றாள். அதனால், இதனை யோக பீடம் என்று போற்றுவர். அன்னை பராசக்தி இங்கு யோகபீட நாயகியாகத் திகழ்கின்றாள். இந்த யோகபீட நாயகியே—ஆதி பராசக்தியே—உலகம் எல்லாம் தோன்றுதற்கு மூலமாக இருத்தலால், இங்குள்ள பீடத்தைத் தரணி பீடம் என்றும் வழங்குகின்றனர்.

அன்னை ஆதிபராசக்தியே அரி, அயன், அரன் ஆகிய மூவரையும் ஒவ்வொரு கர்ப்பத்தில் பயந்தாள் என்பதைக் குறிக்க, இங்குள்ள திருச்சந்நிதியில் தாணுமாலயன் பூந்தொட்டில் ஆடிக் கொண்டிருக்கின்றது.

குழல்வாய் மொழியம்மை

மலையுருவாய் மிளிர்கின்ற அன்னை பராசக்தி, கோயிலுள் சிலை வடிவாகவும் திகழும் சிறப்புடையது திரிகூடமலைத் தலம். இம் மலைத்தலக் கோயிலில் நான்கு வேதங்களே நான்கு வாயில்களாக அமைந்து விளங்குகின்றன. கோயிலுள் வேதநாயகனாக விளங்கும் குற்றாலநாதர் நடுவே கோயில் கொண்டு விளங்க, அவருக்கு வலப்புறத்தில் குழல்வாய் மொழிம்மையும், இடப்புறத்தில் பராசக்தியும் கோயில் கொண்டு விளங்குகின்றனர். இம் மூவர் திருச்சந்நிதிகட்கும் பொதுவாகச் சங்க வீதி அமைந்து விளங்குகின்றது.

குறும்பலா ஈசனின் திருச்சந்நிதிக்கு வலப்புறத்தே தனிக் கோயில் கொண்டு விளங்கும் அன்னை குழல்வாய் மொழியம்மை, அன்புப் பெருக்கெடுக்க, அழகே உருவாக, அருள் சுரக்கும் கடைக்கண் நோக்கோடு, நின்ற திருக் கோலத்தில் காட்சியருளுகின்றாள்.

அகத்தியர் அற்புதம்

குற்றால நாதர் கோயில் ஆதியில் திருமால் கோயிலாக இருந்து வந்தது. அகத்தியர், சிவபெருமானின் திருமணக் கோலத்தைக் காண விரும்ப, சிவபெருமான் குற்றாலத்தில் திருமால் மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் தம்மைச் சிவலிங்கமாக்கி ஆகமப்படிப் பூசை செய்தால் அந்த மணக் கோலத்தைக் காணலாம் என்று பணிக்க, ஈசன் வாக்கைச் சிரமேற் கொண்ட அந்த அகத்தியர், வைணவக் கோலம் பூண்டு கோயிலுள் சென்று அர்ச்சகரை வெளியேற்றி, 'குறுகு குறுகு' என்று கூறித் திருமால் மூர்த்தியைச் சிவலிங்கமாக்கியதாகத் தல புராண வரலாறு கூறுகின்றது.

அகத்தியர் கரம் சிவலிங்கத்தின் தலைமீது பட்டு, ஐந்து விரல்களும் அப்படியே பதிந்துவிட்டன. அந்த அடையாளம் இன்றும் காணப்படுகின்றது. அதனால், ஈசனுக்குத் தலைவலி ஏற்பட்டது. அதனைப் போக்க

சிவலிங்கத்துக்குத் தைல முழுக்கு உண்டு. திருமாலைச் சிவலிங்கமாக்கிய செயலைப் பரஞ்சோதி முனிவர்,

"துளபக் குன்றைக் கொன்றை முடிக்
குன்றமாக்கும் தொன்னகரம்"

எனக் குறித்துப் போற்றுகின்றார்.

அன்னையின் விழாச் சிறப்பு

அன்னை குழல்வாய் மொழியம்மையின் திருச்சந்நிதி, ஆடி மாதத்தில் பெரிய கோலாகலமாக இருக்கும். மா விளக்குப்போடும் பக்தர்கள் வைகறையிலேயே கூடிவிடுவார்கள். இலட்ச தீப விழா மிகவும் விசேடமாக இருக்கும். இத் தீப விழாவில் அன்னை குழல்வாய் மொழியாளின் அலங்காரம், அன்பர்களின் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழும்.

அன்னை யோகபீட நாயகியின் திருச்சந்நிதியிலும் பல விழாக்கள் நடைபெறுகின்றன. அவ் விழாக்களுள் நவராத்திரி விழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. விழாக்கள் அனைத்திலும் அன்னையின் அருள் பெருகி இன்பம் கொழிக்கக் காணலாம்.

12. பாபநாசம் உலகம்மை

திரிகூட மலைத்தலத்தில் அன்னை பராசக்தியின் கருணைப் பெருக்கு அருவியாக வழிந்து வந்து அன்பர்கட்குப் பல்வகை நலன்களையும் வழங்குவது போன்று, பாப நாசத் தலத்தில் அன்னை உலகம்மையின் கருணை அருவியாகிப் பெருக்கெடுத்து வந்து, அன்பர்களின் பாவங்களை யெல்லாம் நாசம் செய்து நலம் விளைக்கின்றது. குற்றுலத்தில் பராசக்தி உயிர்களைப் புரக்கும் அன்னையாக விளங்குதல் போன்றே, பாபநாசத்தில் உலகம்மையும் உயிர்களைப் பாவங்களினின்றும் தீமைகளினின்றும் விலக்குவதோடன்றி, இன்னருள் புரிந்து நல்லின்ப வாழ்வளிக்கும் வரப்பிரசாதியாக விளங்குகின்ருள்.

அன்னை உலகம்மையானவள், தாமிரபரணி நதி தீரத்தின் அணைப்பிலும், அருவியின் ஓங்கார ஒலியிலும் உலகை ஆள்பவளாகத் திகழ்கின்ருள். பொங்கு நுரையுடன் வெளேல் என்று ஓடும் நதியின் ஓட்டத்தின் அழகும், இயற்கையின் அரவணைப்பும் அன்னை உலகம்மையின் தத்துவ நிலையினை உணர்த்துவனவா யுள்ளன.

திருநெல்வேலி—தென்காசி புகைவண்டிப் பாதையில் உள்ள அம்பாசமுத்திரம் என்னும் இரயில் நிலையத்தில் இறங்கி, மேற்கு நோக்கி ஐந்து மைல்கள் தூரம் சென்ருல், தாமிரபரணி நதிக்கரையை அடையலாம். அவ்விடத்திலேயே அன்னை உலகம்மை, பாபவிநாசேசுவரருடன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளித் திகழ்கின்ருள்.

பாபநாசப் பதிச் சிறப்பு

பாபநாசப் பெரும்பதி, பொதியமலையின் அடிவாரத்தில் அமைந்து விளங்கும் இயற்கை வனப்புடையது.

தண்ணூர் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டில், தமிழ் முனிவன் வாழும் பொதிய மலையடியில் பால்வெண்ணருவி யாய் வீழ்ந்து பரந்து பாயும் பொருனையாற்றின் கரையில் அமைந்து விளங்கும் சிவதலம் பாபநாசம்.

திருவாரூர்த் தேரழகும், திருவிடைமருதூர்த் தெரு அழகும், பாபநாசப் படி அழகும் கண்டு களித்தற்குரியன. பழமரச் சோலையின் நிழலில் அமைந்த இத் தலத்துப்படித் துறைப் பாங்கை,

''பொதும்பர் நிழல் குளிர் தூங்கப்
பொலிந்த படித்துறை''

எனப் போற்றுகின்றார் ஒரு கவிஞர்.

இத் தலத்துத் திருக்கோயில், அழகிய பெரிய திருக் கோபுரத்துடன் விளங்கும் பெரிய கோயில். தமிழ் முனிவ ராகிய அகத்தியர்க்கு இறைவன் இங்கு தமது திருமணக் காட்சியினை அளித்தருளினார்.

பாபநாசத் திருக்கோயில்

இத் தலத்துத் திருக்கோயிலின் கோபுர வாயிலைக் கடந்து சென்றால் பிராகாரம். அந்தப் பிராகாரத்தின் மேற் குப் பகுதியில் ஒரு களாமரம் உள்ளது. அந்தக் களா மரத் தில் மூன்று கவடுகளும், மரத்தடியில் இறைவனின் சிவ லிங்கத் திருவுருவும் உள்ளன. இந்த இலிங்கத்திற்கு முக்களாலிங்கர் என்று திருப்பெயர்.

நந்தி மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றையெல் லாம் கடந்து உள்ளே சென்றால், கருவறையின் நடுநாயக மாகத் திகழும் சிவலிங்கத் திருவுருவைக் கண்டு வழிபட லாம். பிராகாரத்தின் கன்னி மூலையில் உற்சவர் சோமாஸ் கந்த வடிவில் காட்சி தருகின்றார். இதனை யடுத்த ஒரு சிறு மண்டபத்தில் உயர்ந்த பீடத்தின் மேல் இறைவன் இட பாருடராகத் திருமணக் கோலத்தில் இறைவியோடு அகத்தியர்க்குக் காட்சியருளும் திருவுருவினைக் காணலாம்.

இத் திருவுருவின் கீழே தரையில் அகத்தியரும் அவர் மனைவியார் உலோபாமுத்திரையும் கூப்பிய கைகளுடன் சிலை வடிவில் நிற்கின்றனர். இவர்கட்கு இங்கு செப்புத் திருமேனிகளும் உண்டு.

இக் கோயிலில் திருமால், திருமகள் பூதேவி ஆகியோருடன் எழுந்தருளித் திருக்காட்சியருள்கின்ருர்.

இக் கோயிற் பிராகாரத்தில், இறைவனுக்கு இடப் பக்கத்தில் அன்னை உலகம்மை திருக்கோயில் உள்ளது. இந்த அன்னை மிகவும் வரப்பிரசித்தியாகத் திகழ்கின்ருள்.

அன்னையின் அருளற்புதம்

பாபநாசத்து உலகம்மையின் திருவருளால் அன்பர்கள் பல்வகை நலமும் பெற்று இன்பம் துய்த்துள்ளனர். பாபநாசத்தைச் சேர்ந்த விக்கிரமசிங்கபுர வாசியான நமசிவாயர் என்ற பக்தர், அன்னையை அன்ருடம் கவிபாடிப் போற்றி வணங்கும் பண்பினர். அன்னை உலகம்மையும் அவர் போற்றிப் பாடும் பாடலைக் கேட்டு மகிழ்வதில் ஒரு தனி பித்தும் உடையவளாக விளங்கியுள்ளாள்.

பக்தியின் ஆழத்தால் நமசிவாயர் பணிவின் சிகரமாக நின்று அன்ருடம் கன்னித் தமிழ்க் கவி பாடி அன்னையை வழிபட்டு வந்தார்.

''பேயே எனக்குழறும் பேதாய்! உனக்குமொரு
வாயோ? என்றென்னை யிகழ்வாயோ? மகிழ்வாயோ
தூயோர் தொழும் உலகே! சொல்வதெலாம் சொல்வேன்
காயோ பழமோ நீ கட்டளை செய் காரியமே''

இவ்வாறு பணிவுடன் பாடிப் பரவிக் கோயிலினின்று வெளியே வரும் நமசிவாயர், கோபுர வாயிலில் நின்று வெற்றிலையைச் சுவைத்தபடியே நடப்பார். அவரது மனமோ அன்னையின் அருளைச் சுவைத்த வண்ணம் இருக்-

கும். ஒருநாள், அன்னையைக் கண்டு வழிபடச் சென்ற அவர்,

''பொன்னை நொந்து கொண்டா
லப்பொன் வருமோ
முன்னை வினை தன்னை நொந்து கொண்டால்
அத்தன்மை நன்மை ஆயிடுமோ?
என்னை நொந்து கொள்கிலனல்
இன்பமின்றி துன்பம் வரின்
உன்னை நொந்து கொள்வேன்
உலகுடைய மாதாவே''

எனப் பாடிக் கொண்டே, வெற்றிலை எச்சிலைத் துப்பிய வண்ணம் நடந்தார். பின்புறம் ஆளரவம் கேட்கவே, யார் என்று திரும்பிப் பார்த்தார். எவருமில்லை. அந்த எண்ணம் மனத்தின் அசைவே எனக் கருதி, மன அமைதி கொண்டு வீடு சென்றடைந்தார்.

மறு நாள் காலை. வழக்கம் போல் அர்ச்சகர் கோயிலுக்கு வந்தார். அன்னையின் சந்நிதியைத் திறந்ததும், அன்னையின் ஆடை முழுதும் வெற்றிலை எச்சில் இருக்கக் கண்டு அதிர்ச்சியடைந்து, அன்னையைத் தரிசிக்க வந்திருந்த மதுரை சிற்றரசனிடம் முறையிட்டார்.

அதனை அறிந்த மன்னன் திகைப்புற்று, நம் ஆட்சியில் இவ்வாறு நடக்கலாமோ என வருந்தும் உணர்வால் உறங்காது கிடந்து, கடைசி யாமத்தில் தன்னையும் அறியாது கண் அயர்ந்தான்.

கண் அயர்ந்த அக் காவலன் கனவில் அன்னை உலகம்மை காட்சியளித்தாள்! 'மன்னவனே! என்னை வழிபடும் அன்பர்களில் நமசிவாயம் சிறந்தவன். அவன் பாடல்களில் ஆர்வம் கொண்டு, அவன் அறியாவண்ணம் அவனைப் பின் தொடர்ந்து சென்றேன். அவன் எச்சிலைத் துப்பிய வண்ணம் சென்றான். நீயும் அவன் பாடல்களைப் போற்றுக' என்று அன்னை கனவில் அறிவுறுத்தி மறைந்

தாள். விழித்தெழுந்த மன்னவன் அன்னையைப் போற்றினான். தன் ஏவலரைக்கொண்டு நமசிவாயத்தை அழைத்து வந்து, 'அன்னை உலகம்மை மீது எச்சிலைத் துப்பியவர் நீர் தான் என்று தெரிகின்றது. என்ன கூறுகிறீர்?' என்று வினவினான்; வெகுண்டவன் போல் நடித்தான்.

நமசிவாயமோ 'தேவி! இதுவும் உன் திருவிளையாடல் தானா? உனக்கு நானா இதைச் செய்தேன்?' என வருந்தினார்.

மன்னவன், ஏவலரைக் கொண்டு அன்னையின் கரத்தில் பூச்செண்டு ஒன்று வைத்துத் தங்க நூலால் கட்டுவித்தான். 'நீர் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லை என்பதை மெய்ப்பிக்க, அன்னை மீது பாடல் பாடுக. நீர் பாடப் பாட ஒவ்வொரு நூலாக அறுபட்டு, உமது கரத்தில் பூச்செண்டு வந்து விழவேண்டும். பாடுக!' என்றான் மன்னவன். மன்னவனின் ஆணையை மறுக்க முடியாத நமசிவாயம்,

"என்றைக்கும் நீ துணை அம்மா! என் ஆவி இறந்திடும்
அன்றைக்கும் ஓடிவந்து அஞ்சலென்பாய்"

என்று அன்னையை வணங்கிப் பாடத் தொடங்கி,

"பொழுது கழிந்தது வீணே; எனக்கென்ன
புத்தி; உன்னை
தொழுது பணிந்து துதித்திலனே
இதைச் சொல்லிச் சொல்லி
அழுது புலம்பில் விடுமோயமன்?
இனியா யினும்என்
பழுது களைந்து புரப்பாய்
உலகம் படைப்பவளே!

என்று பாடல்களைத் தொடர்ந்து அன்னை மேல் பாடியவண்ணம் இருந்தார். அவர் பாடிய ஒவ்வொரு பாடலும் முடிவுறும் போது, பூச்செண்டை வைத்துக் கட்டப்பட்டிருந்த தங்க இழை ஒவ்வொன்றாக அறுபட்டு, இறுதியில் பூச்செண்டும் அவர் கரத்தில் வந்து விழுந்தது.

அதனைக் கண்டு வியந்த மன்னவனும், அர்ச்சகரும், மற்றவரும் நமசிவாயர் திருவடியில் விழுந்து வணங்கிப் போற்றி மகிழ்ந்தனர்.

அன்னை உலகம்மையின் அருட்பித்துக் கொண்ட நமசிவாயர், பின்னர் ஒரு சமயம் வயிற்றுவலியால் மிக வருந்தி, உயிர் விடத் துணிந்து அருவியில் இறங்கினார். அப்போது, அவரை அன்னை தடுத்து நிறுத்தி, அமுது அளித்து மறைந்தாள். அமுதுண்ட அவர் வயிற்றுநோய் நீங்கி நலமுற்றார்.

இவ்வாறு அன்றுடம் அருளற்புதங்களைப் புரிந்தருளும் அன்னை உலகம்மையை வழிபடுவோர் புண்ணியராவர்.

13. வேதாரண்ய சுந்தரி

தலச் சிறப்பு

வேதாரண்யப் பெரும்பதி, திருத்துறைப்பூண்டியிலிருந்து 22 மைல்கள் தொலைவில் உள்ள கடற்கரைத் தலம். மாயூரம்—காரைக்குடி புகைவண்டிப் பாதையில், திருத்துறைப்பூண்டி — கோடியக்கரை கிளைப்பாதையில் உள்ளது. வேதாரண்யம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே அரை மைல் தொலைவில் தலத்துப் பெருங்கோயில் உள்ளது.

இத் திருத்தலம் மிகவும் பழமை வாய்ந்தது. இத் தலத்திற்கு ஆதியில் 'ஆதி சேது', 'சத்தியகிரி' என்னும் திருப்பெயர்கள் இருந்துள்ளன. பின்னர், இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என்னும் நான்கு வேத புருஷர்களும் பன்னெடுங்காலம் பூசித்து வழிபாடுசெய்த காரணத்தால் வேதாரண்யம், வேதவனம், திருமறைக்காடு என்று பல திருப்பெயர்களால் வழங்கப்பட்டு வருகின்றது.

இத் தலத்திற்கு எழுந்தருளிய அப்பரும், சம்பந்தரும் தமது அற்புதப் பாடல்களால் மறைகள் பூட்டி வைத்த கதவம் திறக்கவும், அடைக்கவும் பாடும் பெருமை கொண்டது. மறைகள் பூசித்துத் திருக்காப்பு செய்த கதவை அப்பரடிகளார்,

"பண்ணின் நேர்மொழியாள் உமைபங்கரோ!
மண்ணினார் வலஞ்செய் மறைக்காடரோ!
கண்ணினால் உமைக்காண கதவினை
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே!"

என்று பாடித் திறக்கச் செய்தார். அவ்வாறு திறந்த கதவை அவ்வாறே திறந்து நின்று விடாமல், சம்பந்தர்,

''சதுரம் மறைதான்
துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழிலால்
மறைக்காட்டு உறைமைந்தா
இதுநன்கு இறைவைத்து
அருள்செய்க எனக்கு உள்
கதவம் திருக்காப்புக்
கொள்ளும் கருத்தாலே''

என்று பாடிப் பின்னர் கதவை அடைக்கச் செய்த பெருமை கொண்டு விளங்குகின்றது. தட்சிண கயிலாயம் என்ற திருப்பெயரும் இத் தலத்துக்கு உண்டு.

இங்கு திருக்கோயில் கொண்டு விளங்கும் இறைவன் திருப்பெயர் வேதாரண்யேசுவரர். இவருக்கு மறைக்காடர் என்ற திருப்பெயரும் உண்டு. ''வேதங்கள் போற்றி மலரால் வழிபாடு செய் மாமறைக் காடர்'' எனப் போற்று கின்றார் ஞானசம்பந்தர். மூலவர் வேதவனேசர். அகத்தி யர்க்கு ஈசன் அம்மையப்பராக மணவாளக் கோலத்துடன் இங்குக் காட்சியளித்ததாக வரலாறு. ''மலையார் தம் மகளோடும் மாதேவன் சேரும் மறைக்காடு'' எனப் போற்றுகின்றார் அப்பர். இங்கு திருவருள்பாலிக்கும் அன்னை யின் திருப்பெயர் யாழைப் பழித்த மொழியாள். ''யாழைப் பழித்தன்ன மொழி மங்கையொடு பங்கன்'' எனப் போற்று கின்றார் சுந்தரர்.

சப்தவிடங்கத் தலங்களுள் இத் தலமும் ஒன்று. தியாக ராசர் இங்கு செய்யும் நடனம், அம்ச நடனம். அன்னம் போல் மெதுவாக அடி எடுத்து வைத்து அசைந்தாடும் நடனம் அம்ச நடனம். இத் தலத்துச் சிறந்த மூர்த்தி களுள் இவரும் ஒருவர். இவர் திருச்சந்நிதியில் புவனிவிடங் கர் மரகத சிவலிங்கத் திருமேனியராகப் பெட்டகத்துள் எழுந்தருளியுள்ளார்.

''வேதாரண்யம் விளக்கழகு'' என்பது பழமொழி. விளக்கைத் தூண்டிய எலியை வேந்தனுக்கியதும், இராமருடைய வீரகத்தியை நீக்கியதும் இத் தலம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றன் சிறப்பினையுமுடைய இத் தலத்தில் பல தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் மணிகர்ணிகை, விசுவாமித்திர தீர்த்தம், வேதாமிர்த தீர்த்தம், வேதநதி, கோடி தீர்த்தம் ஆகியவை மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும்.

சுந்தரபீட நாயகி

வேதாரண்யத் திருத்தலம் சப்தவிடங்கத் தலங்களுள ஒன்றுகையால், திருக்கோயில் திருவாரூர்ப் பூங்கோயிலைப் போலவே அமைந்துள்ளது. இரண்டு பிராகாரங்களுடனும், இராஜகோபுரத்துடனும் அமைந்து விளங்குகின்ற இக் கோயிலில், இறைவன் கோயிலுக்கு வட பக்கத்தில் அன்னை யாழைப்பழித்த மொழியுமையாளின் திருக்கோயில் அமைந்து விளங்குகின்றது. இது சக்தி பீடங்களுள் ஒன்று. இந்தச் சக்தி பீடத்தின் பெயர் சுந்தர பீடம். பெயருக்கேற்ப இங்கு அன்னை சக்தியும் அழகின் திருவுருவாகத் திகழ்கின்ருள். அன்னை மொழியுமையாள், சுந்தரபீடத்துச் சுந்தரியாக, சுந்தரபீடத்து நாயகியாக நின்று, தன்னை வழிபடும் அன்பர்கட்குத் திருவருள் புரிகின்ருள்.

அன்னை துர்க்கை

இத் தலத்தில் அன்னை துர்க்கைத் தேவி மிகவும் புகழ்பெற்றவளாகவும், சிறந்த வரப்பிரசித்தியாகவும் திகழ்கின்ருள். இங்கு அன்னை, சிறந்த வழிபாட்டுத் தெய்வமாகவும், பலரும் விரும்பிக் கொண்டாடும் தெய்வமாகவும், முதற் பிராகாரத்து வட பக்கத்தில் நின்று விளங்குகின்ருள்.

இந்த அன்னையை வழிபட்டுப் பல துன்பங்களையும் அன்பர்கள் போக்கிக் கொள்கின்றனர். பில்லி, சூனியம் முதலிய தெய்வக் கோளாறுகள், கிரகக் கோளாறுகள்

உள்ளவர்கள் இந்த அன்னைக்குச் சிறந்த அபிடேக ஆராதனைகளைச் செய்து குறைகளைப் போக்கிக் கொள்கின்றனர்.

இந்த அன்னையிடம் சிறப்பாக மஞ்சள், குங்குமம், நூல் கயிறு ஆகியவற்றை வைத்து மந்திரித்துப் பயன்படுத்தினால் எல்லா நன்மைகளும் உண்டாகி வருகின்றன.

இத் தலம் துர்க்கைக்குச் சிறந்த தலம். யாழைப் பழித்த மொழியுமையாள், துர்க்கை எழுந்தருளித் திருக்காட்சி யளிப்பதோடன்றி, இத் தலத்தில் திருமகள், சரசுவதி, அன்னபூரணி ஆகிய அன்னையர்களும் எழுந்தருளித் தனித் தனித் திருச் சந்நிதி கொண்டு விளங்குகின்றனர்.

14. நாகை நீலாயதாட்சி

தமிழ் நாட்டில் உள்ள சிவ தலங்களில் காரோணத் தலங்கள் மூன்று. அவை: கச்சிக் காரோணம், குடந்தைக் காரோணம், நாகைக் காரோணம் என்பவையாகும். இம் மூன்று தலங்களிலும் புண்டரீக முனிவர் என்பவர் இறைவனைப் பிரதிட்டை செய்து வழிபட்டார். சிவபெருமான், அம் முனிவரைத் தமது திருமேனியில் ஏற்று அருள் செய்தார். காயத்தில் ஆரோகணம் செய்து கொண்டதால் காயாரோகணம் என்று இம் மூன்று தலங்களும் பெயர் பெற்றன. நாகையில் சிவபெருமான் புண்டரீக முனிவரைத் தமது ஆகத்தில் (உடம்பில்) ஏற்று முக்தியளித்தார். இதனை,

''என்று நைந்துருகிக் கண்ணீர்
இழிதர எதிர்நின் றுனை
நன்றுளக் கருணை பொங்க
நாமிரு கரத்தால் வணங்கி
ஒன்றுதல் அமையக் காயத்தொடும்
ஆரோகணம் செய்தோ மோர்
கன்றுத லின்றி ஒன்றுய்க்
கலந்தின்பம் துளைக்கா னன்றே''

என்ற பாடல் உணர்த்துகின்றது.

இந் நாகைக் காரோணத் தலத்தைச் சைவர்கள் சிவராஜதானி என்று கூறுவர். சிவராஜதானியாகவும், காரோணத் தலமாகவும் விளங்குகின்ற நாகப்பட்டினம் ஒரு துறைமுகப்பட்டினம். தஞ்சையிலிருந்து கிழக்கே 55 மைல்கள் தொலைவில் உள்ளது. தஞ்சை திருவாரூர் வழியாகவோ மாயூரம் திருவாரூர் வழியாகவோ இரயில், கார் மூலம் செல்லலாம்.

தலச் சிறப்பு

காரோணத் தலங்களுள் இத் தலம் ஒரு தனிச் சிறப்புடையது. கச்சியில் உள்ள காரோணர் அவ்வளவாகப் புகழ் மிக்கவராகக் காட்சி தரவில்லை. குடந்தைக் காரோணரே காசி விசுவநாதர் என்ற திருப்பெயரில் விளங்குகின்ருர். இந் நாகையம்பதியில் எழுந்தருளிய காரோணர் மட்டுமே, காயாரோகணர் என்ற திருப்பெயரில் நின்று விளங்குகின்ருர்.

இங்ஙனம் தனிப் பெருமை கொண்டு விளங்கும் காயாரோகணர், இத் தலத்தில் அன்னை நீலாயதாட்சியின் நிழலில் ஒதுங்கியே உறைகின்ருர். அன்னை நீலாயதாட்சியே இத் தலத்தில் ஆட்சி புரிகின்ருள். எனவேதான், இத் தலத்துக் கோயிலுக்கு, 'நீலாயதாட்சி சமேத காயாரோகண நாதர் கோயில்' என்ற பெயர் வழங்கி வந்துள்ளது. இத் தலத்தில் சிவனை விட சக்தியே சிறப்புற்று விளங்குகின்ருள்; முதன்மையும் முக்கியத்துவமும் கொண்டு காட்சியருள்கின்ருள். இது பற்றியே "காஞ்சி காமாட்சி, மதுரை மீனுட்சி, காசி விசாலாட்சி, நாகை நீலாயதாட்சி" என்ற பழமொழியும் பிறந்தது.

நாகையம்பதிக்குச் சென்று, அங்குள்ள வண்டிக்காரர்களிடம் 'காரோணர் கோயில் எங்கே உள்ளது?' என்று கேட்டால், புரியாமல் தெரியாமல் நிற்பர். ஆனுல், 'நீலாயதாட்சி கோயில் எங்கே உள்ளது?' என்று கேட்டால், உடனே கோயிலைக் காட்டிவிடுவர். அந்த அளவிற்கு அன்னை நீலாயதாட்சி பிரபலமானவளாக, பெருஞ் சிறப்புற்றவளாகத் திகழ்கின்ருள். அன்னை பராசக்தியின் பீடங்களுள் நாகை நீலாயதாட்சியின் ஆலயமும் ஒன்று.

இத் தலத்தில் மூல லிங்கத்திலிருந்து சோமாஸ்கந்தர் வடிவில் இறைவன் தோன்றி முனிவர்கட்குக் காட்சி கொடுத்த பழமையுடையது பற்றி, இத் தலத்துப் பெருமானுக்கு ஆதி புராணர் என்ற திருப்பெயரும் உண்டு.

திருக்கோயிலில் மூல லிங்கத்துக்குப் பின்னே சோமாஸ்கந்த வடிவம் உள்ளது.

சப்தவிடங்கத் தலங்களுள் இத் தலமும் ஒன்று. இங்கு தியாகராசர் சுந்தரவிடங்கர். இவர் நடனம் தரங்க நடனம். இவர் நடனத்தைச் சூக்கும பஞ்சாக்கர நடனம் என்றும் சொல்லப்படும். திருவாதிரையில் வலக்கால் தரிசனமும், திருவிழாவில் ஒரு நாளில் இடக்கால் தரிசனமும் அளித்தருள்வார். விடங்கலிங்கம் கோமேதக வடிவம், தேன் நிறம். இறைவன் தேனாய் இன்னமுதாய்த் தித்திப்பவன் என்பதை இது உணர்த்தும்.

இத் திருத்தலத்தில் புண்டரீக தீர்த்தம், தேவ தீர்த்தம், தேவநதி, கடல் முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன.

தேவாரம் அருளிய மூவரும் இத் தலத்திற்கு எழுந்தருளித் திருப்பதிகங்கள் பாடி எம்பெருமானைப் போற்றியுள்ளனர். அப்பர் அடிகளார், ''கந்தமரி பொழில்சூழ் கடல் நாகைக் காரோணமென்று சிந்தை செய்வாரைப் பிரியாதிருக்கும் திருமங்கையே'' எனப் போற்றுகின்றார்.

அன்னையின் ஆலயம்

நாகை நகரின் நடுநாயகமாக அன்னை நீலாயதாட்சி சமேத காயாரோகணநாதர் திருக்கோயில் அமைந்து விளங்குகின்றது. கிழக்கு நோக்கி அமைந்த இத் திருக்கோயிலில் அன்னையின் ஆலயம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது.

இரண்டு பிராகாரங்களுடன் விளங்குகின்ற இக் கோயிலில் முக்தி மண்டபம் உள்ளது ஒரு சிறப்பு. முக்தி மண்டபம் கயிலையிலும், காசியிலும், நாகையிலும் மட்டுமே உள்ளதாக நூல்கள் கூறும். இந்த முக்தி மண்டபத்தை அடுத்தே தேவ தீர்த்தம் உள்ளது.

இலிங்கத்துக்குத்தான் நாகாபரணம் விளங்குவதை எங்கும் காணலாம். ஆனால், இக் கோயிலில் தல விநாயக

ராகிய நாகாபரணப் பிள்ளையார், தமக்கும் நாகாபரணம் உரியது என்பதை உணர்த்துகின்றார். ஐந்து தலைப் பாம்பு ஒன்று அழகாகக் குடைபிடிக்கும் பாவனையில் விநாயகருக்குப் பின்னே விளங்குகின்றது.

மகாநந்தியை அடுத்து ஐந்து நிலைகளைக் கொண்ட கோபுரம் ஒன்று 'சோழன் கோபுரம்' என்று வழங்கப்படுகின்றது. இதனையடுத்த இரண்டாவது பிராகாரத்தின் நடுவில் இராஜதானி மண்டபம் உள்ளது. விழாக் காலங்களில் இம் மண்டபத்தில் எல்லா மூர்த்திகளும் எழுந்தருள்வர். இதனாலேயே இத் தலத்தை சிவராஜதானி என்று கூறுவர்.

இம் மண்டபத்தின் வட பக்கத்தில் அன்னை நீலாயதாட்சியின் திருக்கோயில் அமைந்துள்ளது. அன்னையின் கோயில் முன் மண்டபத்தில் பல அற்புதச் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. மூலத்தானத்தில் அன்னை நீலாயதாட்சி அருள்பொழியும் திருநயனத்துடன், அழகே உருவாகி அன்பர்கட்குத் திருக்காட்சி யருள்கின்றாள். திருவாரூரில் நீலோத்பலாம்பிகை என்னும் அல்லியங்கோதை அருள்பாலிக்க, நாகையம்பதியில் நீலாயதாட்சி என்னும் கருந்தடங்கண்ணி கருணை புரிந்து விளங்குகின்றாள்.

நீலாயதாட்சி என்னும் திருப்பெயர், நீலோற்பல மலர் போன்ற குளிர்ந்த கண்களை உடையவள் என்ற பொருளை உணர்த்தும். அன்னையின் திருநயனங்களில் சுரக்கும் திருவருட்டன்மையை உணர்த்துவதே இத் திருப்பெயர். இந்த அன்னை மிகவும் வரசித்தி உடையவள்.

இசையுலக மேதைகளாகிய தியாகராசர், முத்துசாமி தீட்சதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவரும், அன்னை நீலாயதாட்சியின் அருட்சிறப்பை அழகிய கீர்த்தனைகளாகப் பாடிப் போற்றியுள்ளனர். நீலாம்புரி ராகத்தில் அமைந்த 'அம்ப நீலாயதாட்சி' என்ற முத்துசாமி தீட்சதரின் கீர்த்தனை மிகவும் புகழ் பெற்றது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் யாத்தருளிய

நாகைக் காரோணப் புராணம், இத் தலத்துப் பெருமையை விளக்குவதோடு நில்லாது, அன்னை நீலாயதாட்சியின் திருவருள் மாண்பினை மிகவும் போற்றுவதாயுள்ளது. அன்னையை வழிபடச் செல்லும் அன்பர்கள்,

''இம்மைப் பயன் முழுமீயும்
கருந்தடங்கண் அம்மைதானே
அம்மைப் பயனும் ஒருங்களிக்குங்
காரோணத் தம்மைதானே
செம்மைப்பயன் முக்தி நல்குந்
திருநாகை அம்மைதானே
மும்மைப் பொருளுணர்ச்சி மூன்றின்புநல்கு
நடலை யம்மைதானே''

''சுரும்புமுரல் கருங்குழலுஞ் செவ்வாயும்
வெண்ணகையும் தொடிப்பொற்றேளும்
விரும்புபர ஞானநிறை கொங்கையுஞ் செங்
கையுங்கதிர்த்து மிளிர்செம்பட்டும்
பெரும்புவன முழுதமைசிற்றுதரமும் மங்கலநாணும்
பிணைகண் ணேட்டம்
அரும்பு கருந்தடங்கண்ணி சேவடியுந் துதித்து
மனத்தமைத்து வாழ்வாம்''

என்ற, மகாவித்துவானின் பாடல்களைப் பாடிப் பரவினுல், அன்னையின் அருள் பெற்று மகிழலாம்.

அன்னையின் ஆடி விழா

பிற சிவ தலங்களில் நிகழ்வது போன்றே வைகாசி மாதத்தில் பெரிய திருவிழாவாகிய பிரமோற்சவம் முதலிய விழாக்கள் இறைவனுக்கும் இறைவிக்கும் சேர்ந்தே இத் தலத்திலும் நடைபெறுகின்றன. அன்னைக்கு மட்டுமே சிறப்பாக நடைபெறுகின்ற நவராத்திரி விழா போன்ற

விழாக்களும் நடைபெறுகின்றன. அவற்றுள் ஆடிப்பூர விழா இத் தலத்தில் மிகவும் விசேடமானது.

ஆடி மாதம் இரேவதி நாளில் தொடங்கிப் பத்து நாட்கள் அன்னை நிலாயதாட்சிக்கு ஆடிப் பூர விழா நடைபெறுகின்றது. இவ் விழா அன்னை ஆலயத்தின் பெருவிழாவாகும். பத்தாம்நாள் பூர நட்சத்திரத்தில் அன்னை புண்டரீக தீர்த்தத்தில் தீர்த்தவாரியருளித் திருவருள் புரிவாள்.

15. ஆமாத்தூர் வட்டப்பாறையம்மன்

அன்னை பராசக்தியானவள் அற்புதமாகத் திருவிளையாடல் புரிந்து கொண்டிருக்கும் சிவதலங்களுள் திருவாமாத்தூர் என்று வழங்கப்படுகின்ற, ஆமாத்தூர் என்னும் திருத்தலமும் ஒன்றாகும். இத் திருத்தலம், விழுப்புரத்துக்கு மேற்கே நான்கு மைல்கள் தொலைவில் உள்ளது. விழுப்புரம்—செஞ்சி பேருந்துப் பாதையில், விழுப்புரம் நகர எல்லையைக் கடந்ததும் மேற்கு நோக்கி ஒரு பாதை செல்லும். அந்தப் பாதையில் சென்றால் அன்னை சக்தியின் ஆலயம் விளங்கும் ஆமாத்தூர்ப் பதியை அடையலாம்.

தலச் சிறப்பு

சத்தியத்தை நிலைநாட்டும் சிறப்பு மிக்க சக்தி தலம் இத் தலம். சத்தியம் என்பது சக்தியின் தத்துவம் என்று பொருள்படும். சத்தியம் உள்ளவனிடத்தில் சக்தி இருத்தலைக் காண்கின்றோம். சத்தியத்தில் தவறாதவன் எதற்கும் சிறிதும் அஞ்சுவதில்லை. சத்தியம் உள்ளவனால் எவ்வளவு பெரிய காரியத்தையும் சாதிக்க முடிகின்றது. இதற்குக் காரணம் அவனிடத்தில் உள்ள சக்திதான். எனவே, சக்தி உள்ளவன் சத்தியத்தில் வழுவாதவனாகவும், சத்தியம் உள்ளவன் சக்தி மிக்கவனாகவும் இருக்கக் காண்கின்றோம். எனவே, சக்தியே—சக்தியின் தத்துவமே—சத்தியமாக விளங்கி வருகின்றது. இத் தலத்தில் எழுந்தருளித் திகழ்கின்ற அன்னை சக்தி, சத்தியத்தை நிலை நாட்டித் திகழ்வதில் வியப்பில்லையன்றோ?

காமதேனு, நந்தி, பசுக்களெல்லாம் மற்ற விலங்குகளின் தாக்குதலை எதிர்க்க வேண்டி, இத் தலத்தில் பல

ஆண்டுகள் இறைவனை நோக்கித் தவங்கிடந்து கொம்பு களைப் பெற்றன என்று தல புராணம் கூறுகின்றது. அதனாலேயே இத் தலத்திற்குத் தாயூர் என்றும் ஆமாத் தூர் என்றும் பெயர் வழங்கி வருகின்றது. தல புராணம் இத் தலத்திற்குக் கோமாதுருபுரம் என்ற பெயரையும் கூறு கின்றது.

இத் தலத்துத் திருக்கோயில், பெண்ணையிலிருந்து பிரியும் பம்பை நதியின் கரையில் அமைந்து விளங்கு கின்றது.

இத் தலத்தில் அன்னை சக்தியானவள், புலவர் இரட் டையர் வாயிலாக ஒரு திருவிளையாடல் புரிந்துள்ளாள். புலவர் இரட்டையர் இத் தலத்திற்குக் கலம்பகம் பாடினர். அப்பொழுது அன்னையின் ஆலயம் பம்பையாற்றின் கீழ்க் கரையில் இருந்தது. அதனைச் சரிவரக் கவனியாத இரட் டையர், தமது கலம்பகத்தில்,

''ஆற்குழையோ, அரவோ,
ஆயர்பாடி அருமணியோ,
பாற்கடலோ, திங்களோ,
தங்கும்ஆகம் பலபலவாம்
மாற்கமும் ஆகிநின்றார்
மாதைநாதர் வலங்கொள்பம்பை
மேற்கரையில் கோயில்
கொண்டார் புரம் சீறிய வெங்கணைக்கே.''

என்று, கோயில் மேற்கரையில் இருந்ததாகப் பாடியிருந்த னர். கலம்பக நூல் அரங்கேறும்போது இப் பிழையைப் பிறர் சுட்டிக் காட்டினர். அதற்கு இரட்டையர் மனம் வருந்தி, ''யானும் அறியேன்; அவளும் பொய் சொல் லாள்'' என்று பழியைக் கலைமகள் மீது சுமத்தித் தமது அறியா நிலையை உணர்த்தினர். அரங்கேற்றம் நிகழ்ந்த அன்று இரவு பலத்த மழை பெய்தது. பம்பையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தது. மறுநாள் காலையில் பார்த்த

பொழுது, கோயிலுக்கு இடப்பக்கத்தில் ஓடிய பம்பை நதி, தன்னுடைய வழியை மாற்றிக்கொண்டு கோயிலுக்கு வலப் புறமாக ஓடியது. ஆற்றின் கீழ்க் கரையில் இருந்த கோயில் மேற்கரையில் நின்று விளங்கியது. ''வளங்கொள் பம்பை யின் மேற்கரையில் கோயில் கொண்டார்'' என்ற இரட் டையர் பாடல் புகழ் பெற்று விளங்கியது. எல்லாம் தமிழ்க் கன்னித் தெய்வம் செய்த அற்புதம்!

இத் தலத்துத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறை வனின் திருப் பெயர் அபிராமேசுவரர். இவருக்கு அழகிய நாதர் என்ற திருப் பெயரும் உண்டு. இவரையே திருஞான சம்பந்தர் 'ஆமாத்தூர் அம்மான்' எனக் குறிப்பிடுகின்றார். இத் தலத்து அன்னையின் திருப்பெயர் முத்தை வென்ற முறுவலாள். இவளுக்கு அழகிய நாயகி என்ற திருப் பெய ரும் உண்டு. இத் தலத்து எம்பெருமானை, இலங்கையி லிருந்து திரும்பி வந்த இராமன் வழிபட்டுள்ளான். தேவாரம் அருளிய மூவரும் இத் தலத்தைப் போற்றிப் பாடியுள்ளனர்.

அன்னையின் ஆலயம்

பொதுவாகச் சிவ தலங்களில் இறைவன் கோயிலுக்கு வலப்பக்கத்திலோ அல்லது இடப்பக்கத்திலோ அன்னை யின் ஆலயம் இருப்பது வழக்கம். பெரும்பாலும் இடப் பக் கத்திலேயே இருக்கும். இத் தலத்தில் இறைவன் கோயி லும் இறைவியின் கோயிலும் எதிர் எதிராக அமைந்துள் ளன. இஃது இத் தலத்தில் ஒரு புதுமை.

இரண்டு பிராகாரங்களுடன் அமைந்து விளங்குகின்ற இத் திருக்கோயிலுள், அன்னை முத்தை வென்ற முறுவ லாள் திருக்கோயில் அழகிய உயரமான திருக்கோபுரத் துடன் விளங்குகின்றது. இந்த அன்னையை முத்தாம்பிகை என்று வழங்குவர். அருட்கவி அருணகிரிநாதர் ''முத்தார் நகை அழகுடையாள்'' எனப் போற்றுகின்றார். அன்னை முத்தாம்பிகை அற்புத அழகோடும், வரப்பிரசித்தி உடையவளுமாக விளங்குகின்றாள்.

இக்கோயிற் பிராகாரத்தில், அன்னை முத்தாம்பிகை ஆலயத்திற்குத் தென்பக்கம் வட்டப்பாறை அமைந்துள்ளது. இந்த வட்டப்பாறையம்மனாக—வட்டப்பாறைத் தெய்வமாக முத்தாம்பிகை திகழ்கின்றாள். ஒரு பாம்பின் தலை வட்டப்பாறையில் இருக்க, அதன்வால் முத்தாம்பிகை திருவடியின்கீழ் நீட்டிக்கொண்டுள்ளது. இப் பாம்பு கல் வடிவில் அமைந்துள்ளது. வட்டப்பாறை என்பது சிவலிங்கத்துக்கென்று அமைந்த ஒரு சந்நிதியே அது. அந்த வட்டப்பாறை லிங்கத்தையும் வழிபடுதல் முறை. அந்த வட்டப் பாறையால்—வட்டப்பாறை யம்மனால் புகழ் பெற்று விளங்குவது ஆமாத்தூர்ப் பதி.

சத்தியால் வென்ற சத்தியம்

ஆமாத்தூர் மக்கள் சிக்கலான வழக்குகளை வட்டப் பாறை யம்மன் சந்நிதிக்கு வந்து, சத்தியம் செய்யச் சொல்லித் தீர்வு காண்பது வழக்கம். பொய்ச் சத்தியம் செய்தால் வட்டப்பாறையிலிருந்து பாம்பு வெளிப்பட்டுப் பொய்ச் சத்தியம் சொன்னவனைக் கடித்துவிடுவதும் வழக்கம். மக்களிடையே இது நம்பிக்கையாகவும் உண்மையாகவும் இருந்து வந்தது—இருந்து வருகின்றது. இது சக்தி முத்தாம்பிகையின் திருவிளையாடல்.

அன்னையின் இத் திருவிளையாடல் முன்பு ஒருபோது நடைபெற்றுள்ளது. ஒரு குடும்பத் தலைவனாகிய தந்தை இறந்தபோது மூத்த மகன் மட்டும் அருகில் இருந்தான். இளையமகன் வெளியூர் சென்றிருந்தான். தந்தைக்கு ஈமக் கடன் முடிந்த பின்னர், இளையவன் மூத்தவனை அணுகித் தனக்குரிய பாகத்தைப் பிரித்துக் கொடு என்று கேட்க, மூத்தவன் 'தந்தை சொத்து எதுவும் வைக்கவில்லை. பாகம் பிரிப்பதற்கு ஒன்றுமில்லை' என்று கூறி எல்லாவற்றையும் மறைத்தான். அதனால், இளையவன் ஊர்ப் பெரியவர்களிடம் சென்று முறையிட்டான். பெரியவர்கள், மூத்தவனை அழைத்துக் கேட்க, அவன் தன்னிடம் யாதும் இல்லை

என்று சாதிக்க, அப் பெரியவர்கள், 'அங்ஙனமாயின் வட்டப்பாறைக்குச் சென்று, பாறையில் கை வைத்துச் சத்தியம் செய்துவிடு' என்று அழைத்தனர். மூத்தவன், இளையவன், பெரியவர்கள் எல்லோரும் வட்டப்பாறையைச் சென்றடைந்தனர்.

வட்டப்பாறையை அடைந்தவுடன், மூத்தவன் தன் கையில் வைத்திருந்த தடியை இளையவனிடம் கொடுத்து விட்டு, வட்டப்பாறையில் கை வைத்து, ''எங்கள் குடும்பத்தில் முன்னோர் தேடிவைத்த பொருள் எதுவும் இப்போது என்னிடம் இல்லை'' என்று கூறிச் சத்தியம் செய்தான். அதைக் கண்டு நின்ற இளையவனும் பெரியவர்களும் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை. எனவே, மூத்தவன் உண்மையைத்தான் கூறியுள்ளான் என்று எல்லோரும் நம்பினர்.

சத்தியம் செய்து முடித்த மூத்தவன், தம்பியிடம் கொடுத்திருந்த தடியை மீண்டும் வாங்கி எடுத்துக்கொண்டு முன்னே புறப்பட்டுச் சென்றான். மற்றவர்கள் எல்லோரும் அவனைப் பின் தொடர்ந்து சென்றனர். நான்கு மைல்கள் தூரம் சென்றவுடன் மூத்தவன் முன்னே காணப்பட்ட சிறிய பாறை ஒன்று திடீரென்று வெடித்தது. அதிலிருந்து ஒரு நாகம் தோன்றி அவனைத் தீண்டியது. அவன் கீழே விழுந்து இறந்தான். அவன் கையில் இருந்த தடியும் விழுந்து முறிந்தது. முறிந்தவுடன் அத் தடியிலிருந்து எண்ணற்ற பொற்காசுகள் வெளிப்பட்டன. அப்போதுதான் மூத்தவன் செய்த தந்திரம் எல்லோர்க்கும் தெரிந்தது. முன்னோரின் பொருள்களை யெல்லாம் பொற்காசுகளாக்கித் தடியுள் மறைத்து வைத்திருந்தான். தம்பியிடம் தடியைக் கொடுத்துவிட்டுச் சத்தியம் செய்தால் தான் தப்பிவிடலாம் என்று மூத்தவன் கருதினான். அவன் எண்ணம் நடைபெறவில்லை. 'அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்' என்பதை அவனது பொய்ச் சத்தியம் மெய்ப்பித்துக் காட்டியது. அன்னை சக்தியால் சத்தியம் நிலை

றின்றது. மூத்தவன் உயிர் நீத்த இடம் தும்பூர் என்று வழங்கப்படுகின்றது.

அந்த அன்னை சக்தியாகிய முத்தாம்பிகையை வழி பாடச் செல்வோர், மிகவும் எச்சரிக்கையுடன் அன்னையிடம் உண்மையன்பு கொண்டு வழிபடுதல் வேண்டும். செய்யத் தகாத செயலும், பொய் பேசுதலும் அறவே கூடாது. அறிந்தோ, அறியாமலோ பிழை செய்தால் அன்னை தண்டிப்பாள் என்ற நம்பிக்கை இன்றும் இருந்து வருகின்றது.

16. அம்பகரத்தூர் பத்திரகாளி

சிவபக்தியில் சிறந்த துருவாச முனிவர் சிவபெருமானைக் காண்பதற்காகக் ககன வழியில் விரைந்து சென்று கொண்டிருந்தார். அப்போது மதலோலை என்ற தேவகன்னிகை புத்திரப்பேற்றை விரும்பி அம் முனிவரை அணுகினுள். முனிவர் கோபம்கொண்டு, சிவதரிசனத்திற்குப் போகும்போது வெட்கத்தைவிட்டு மகப்பேறு வேண்டினதால் அசுர குணம் படைத்த பிள்ளைகளைப் பெறுவாளாக என்று சபித்துச் சென்ருர்.

தேவகன்னிகை மதலோலையும் அவ்வாறே அம்பரன், அம்பன் என்ற இரண்டு புத்திரர்களைப் பெற்ருள். அம்பரத்தில் பிறந்தவன் அம்பரன். அவன் நம்பி அம்பன். புத்திரர்கள் இருவரையும் தாயானவள் அசுர குருவாகிய சுக்கிரனிடம் அழைத்துச் சென்ருள் சுக்கிரன், அவர்களை பிரமபுரீசரை வழிபட்டு வரம் பெற்றுத் தேவர்களை அழிக்குமாறு கட்டளையிட்டார். அவர்களும் அவ்வாறே தவம்புரிந்து இறைவனிடம் வரம் பெற்று வந்தனர். அவர்கட்கு மணம் புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. ஆனல், குருவாகிய சுக்கிரன், அசுரர்களானதால் திருமணம் முதலிய சடங்குகள் கிடையாது என்றும், யாரை வேண்டுமானுலும் அடைந்து புணர்வதே வழக்கம் என்றும் கூறினுர். குருவின் வாக்குப்படி அவர்கள் பல திசைகளிலும் சென்று அழகான மகளிரை அடைந்து களித்தனர்.

அவர்கள் செயலைக் கண்டு தேவர்கள் வெகுண்டனர். இந்திரனிடம் சென்று முறையிட்டனர். இந்திரன் பிரமனிடம் சென்று கூறினுன். பிரமன் திருமாலிடம் அவர்களை அழைத்துச் சென்ருன். திருமால் அம்பர் என்ற இத் தலத்தில் உள்ள பிரமபுரீசரிடம் அழைத்துவந்து முறையிட்டான்.

அந்த ஈசனே அவ்வசுரர்கட்கு முன்பு வரம் அளித்தவர். எனவே, ஈசன், தம் பக்தர்களைத் தாமே அழிப்பது முறையன்று எனக் கருதி, தம் துணைவியாகிய உமாதேவியையும் மைத்துனராகிய திருமாலையும் அனுப்பிவைத்தார்.

உமாதேவியார், தம் அம்சமாகிய காளியை ஓர் இளங் கன்னியாகப் படைத்து உதவ, அக் கன்னியுடன் திருமால் ஒரு கிழ வேதியன் உருக்கொண்டு, அம்பரன், அம்பன் வசித்த இத் தலத்தில் வீற்றிருந்தனர்.

அவ்வசுரர்கள் இருவரும் அவ்விளங்கன்னியைக் கண்டு ஆசைகொண்டு, அக் கிழ வேதியனிடம் சென்று பெண்ணைக் கொடுக்குமாறு கூறினர். அக் கிழ வேதியர், ஒரே மகளை இருவருக்கும் கொடுக்க வியலாது; உங்கள் இருவரில் எவன் வீரனோ, அவனுக்குக் கொடுக்கிறேன் என்றார். அதனால், அம்பரன், தன் தம்பியைக் கொன்று தானே அவளை அடைய விரும்பி, தம்பியோடு சண்டையிட்டுக் கொன்று விட்டு, அந்த இளங் கன்னியைத் தழுவச் சென்றான். சென்று அவளைத் தழுவியதும், அவள் கன்னி உருவை ஒழித்து உண்மை உருவாகிய காளியுருவெடுத்து, அவனோடு பொருது அவனை அழித்தாள். தேவர்களின் துயர் நீங்கியது.

அம்பரன் இங்கு இருந்ததால் இத் தலத்திற்கு அம்பர் என்று பெயர். அம்பரனைக் கொன்ற காளி விளங்குகின்ற கோயிலுக்கு அம்பர் மாகாளம் என்று பெயர். மாகாளி எழுந்தருளித் திகழ்கின்ற தலமாதலால் மகாகாளிபுரி என்ற பெயரும் வழங்கப்படுகின்றது. அம்பரனைக் காளி கொன்ற இடம் அம்பரகரம் என்ற பெயர் பெற்று, அப் பெயர் நாளடைவில் அம்பகரத்தூர் என்று மருவியது என்றும் கூறுவர்.

அம்பர் மாகாளம் என்னும் இத் திருக்கோயில், மாயவரம்—அறந்தாங்கி புகைவண்டிப் பாதையில், பூந்தோட்டம் இரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளது. இதனைக் கோயில் மாகாளம் என்றும் கூறுவர். இக் கோயி

லினின்று கிழக்கே முக்கால் மைல் தூரத்தில் அம்பர் பெருந் திருக்கோயில் உள்ளது.

மாகாளிக் கோயில்

அன்னை மாகாளியின்-பத்திரகாளியின் திருக்கோயில், அம்பர் மாகாளம் என்று வழங்கப்படுகின்ற காளகண்டேசுவரர் திருக்கோயிலின் வெளிப் பிராகாரத்துத் தென்பாகத்தில் அமைந்து விளங்குகின்றது.

இத் திருக்கோயிலில் அன்னை பத்திரகாளி வடக்கு நோக்கித் திருக்காட்சியருள்கின்ருள். அன்னை காளி வர்ணம் தீட்டப்பட்ட சுதைத்திருமேனியளாகத் திகழ்கின்ருள். அன்னையின் உற்சவ மூர்த்தியும் உண்டு. இதற்கு மட்டும் ஆதிசைவ சிவாசாரியார் பூசை புரிகின்ருர். எவரும் அன்னை காளியின் வடிவைத் தீண்டுவதில்லை. பூசையின் போதும் அன்னையின் வடிவைத் தீண்டாமல், தூர இருந்து கோல் ஒன்றின் உதவியால் ஆடை முதலியன சாத்தி வழிபாடு நிகழ்கின்றது.

இத் தலத்திற்கு எழுந்தருளிய காழிப்பிள்ளையாராகிய திருஞானசம்பந்தர், இந்த அன்னை பத்திரகாளியை,

> ''கொந்தண் பொழில் சோலை கோல வரிவண்டு
> மந்தம் மலி அம்பர் மாகா ளம்மேயே''

எனப்போற்றுகின்ருர்.

வைகாசி விழா

ஆண்டு தோறும் வைகாசி மாதம் இரண்டாவது செவ்வாய்க்கிழமையன்று, அன்னை பத்திரகாளிக்கு மிகப் பெரிய திருவிழாவும் பூசையும் நடைபெறுகின்றன. அவ் விழாவில் பல்லாயிரக்கணக்கானேர் அன்னையைத் தரிசித்துத் தங்கள் துன்பங்களைத் தவிர்த்துக் கொள்கின்றனர். தரிசிக்கும் அன்பர்களின் துயர் துடைக்கும் தெய்வமாக, அன்று அன்னை விழாக்கொண்டு திருக்காட்சியருளுகின்ருள்.

17. கருகாவூர் கர்ப்பரட்சாம்பிகை

உலகங்களையும் உயிர்களையும் ஈன்று காத்தருளும் அன்னை சக்தியானவள், பல்வேறு திருவுருக்கொண்டு, பல்வேறு திருப்பெயர்களோடு ஆங்காங்கு திருக்கோயில் கொண்டு திருக்காட்சி தந்து, திருவருள் புரிந்து பேணுகின்ருள். அன்னை சக்தியானவள் உயிர்களைப் பல்வேறு நிலைகளிலும் அருள்புரிந்து காக்கின்ருள். அவற்றுள் ஒரு நிலை, கருவில் காத்தருளுதல். உயிர்களைக் கருவிலும் காக்கும் அன்னையாக கர்ப்பரட்சாம்பிகை திகழ்கின்ருள். கருவிலும் வாழ்விலும் கருணைகொண்டு காக்கும் இந்த அன்னை, கருகாவூர் என்ற திருப்பதியில் கோயில்கொண்டு விளங்குகின்ருள்.

கருகாவூர் என்னும் இத் தலம், தஞ்சை மாவட்டத்துப் பாபநாசத்திலிருந்து, சாலியமங்கலம் செல்லும் சாலையில் நான்கு மைல்கள் தொலைவில் உள்ளது. இத் தலத்தை இப்போது திருக்களாவூர் என்று வழங்கிவருகின்றனர்.

தலச் சிறப்பு

திருக்கருகாவூர் என்னும் இத் திருத்தலம் பாடல் பெற்ற சோழ நாட்டுச் சிவதலங்களுள் ஒன்று. ஆதியில் இத் தலம் முல்லைக்காடாக இருந்த காரணத்தால், இதற்கு முல்லைவனம் என்ற பெயரும் வழங்கியுள்ளது. முல்லைக் கொடிகள் அடர்ந்த அக் காட்டில் சுவயம்புவாக இறைவன் தோன்றியுள்ளார். இவரது திருப்பெயர் முல்லைவன நாதர். இத் திருப்பெயரை வடமொழியில் மாதவீவனேசுவரர் என்றும் வழங்குவர். இலிங்கத்தின் மீது முல்லைக் கொடி சுற்றியதால் உண்டான தழும்புகளை இன்றும் காணலாம்.

இத் தலத்துத் திருக்கோயிலில் திருக்காட்சியருளும் அன்னையே கர்ப்பரட்சாம்பிகை. இக் கோயிலில் உள்ள நவக்கிரக சந்நிதியில், சூரியனைச் சுற்றி மற்ற எட்டு மூர்த்திகளும் சூரியனையே பார்த்தவாறு, அபய வரத முத்திரைகளுடன் காட்சி தருகின்றனர்.

தேவாரம் அருளிய மூவரும் இத் தலத்திற்கு எழுந்தருளி, முல்லைவன நாதரைக் கண்டு திருப்பதிகம் பாடிப் போற்றி வழிபட்டுள்ளனர்.

அம்பிகை ஆலயம்

வானளாவிய இராஜகோபுரத்துடனும், பிராகாரத்துடனும் அமைந்து விளங்குகின்ற இத் தலத்துக் கோயிலுள் திருக்காட்சியருளும் இலிங்கத்திற்கு அபிடேகம் இல்லை; புனுகுச் சட்டந்தான் அபிடேகம்.

இந்த முல்லைவன நாதருக்குப் புனுகுச் சட்டம் சாத்தி அர்ச்சித்து வழிபடுவோரின் பல்வகைப் பிணிகளும் நீங்கி வருகின்றன. குட்டம், வெண்குட்டம் முதலிய முன்வினைப் பயனால் உண்டாகும் நோய்கள் உடையோர், புனுகுச் சட்டம் சாத்தி வழிபட்டால், அந் நோய்கள் நிவர்த்தியாகி விடுகின்றன.

முல்லைவன நாதரின் திருச்சந்நிதிக்கு முன்னே உள்ள கர்ப்பக விநாயகரும், நந்தியும் சுயவம்புவாகவே தோன்றினர் என்று கூறப்படுகின்றது. கருவறைக்குத் தென்பாகத்தில் சோமாஸ்கந்தர் சந்நிதி உள்ளது.

சுவாமி கோயிலுக்கு வடபாகத்தில் நந்தவனம் உள்ளது. அந்த நந்தவனத்தை அடுத்து அன்னை கர்ப்பரட்சாம்பிகையின் திருக்கோயில் அமைந்துள்ளது. அன்னையின் ஆலயம், சக்தியின் பண்பு நலத்திற்கேற்ப அமைதியின் உறைவிடமாகத் திகழ்கின்றது.

நந்தவனத்திற்குத் தென்கிழக்கில் கௌதமேசுவரர் இலிங்கம் அமைந்துள்ளது. இவர், கௌதம முனிவரால்

பிரதிட்டை செய்து பூசிக்கப்பட்டதால் இத் திருப்பெய ரோடு விளங்குகின்ருர். இவரது திருச் சந்நிதிக்கு எதிரில் தான் அன்னேயின் திருக்கோயில் அமைந்துள்ளது.

திருக்கோயிற் கருவறையுள் உயரிய பத்மபீடத்தின் மீது அன்னே கர்ப்பரட்சாம்பிகை எழுந்தருளித் திருவருளேத் திருநயன நோக்கிஞல் பொழிகின்ருள் அன்னேயின் திருவுருவம், வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் வழங்கும் கர்ப்பகத்தருவினும் மேலானதும், அழகே உருக்கொண்டாலன்ன பொலிவுடையதுமாகத் திகழ்கின்றது. அமைதியான திருமுக மண்டலம். அரும்பும் புன்னகை அமைந்த உதடுகள். காண்போரின் கல் மனத்தையும் கரைத்துக் காலடியில் வீழ வைக்கும் கருணேக் கண்கள் எல்லாச் செயல்களேயும் தனது பாதங்களிஞலேயே செய்தருளும் ஆற்றல் பெற்ற கமல மலர்ப் பாதங்கள். அன்னேயின் எழிலுருவத் திருமேனியின் அழகே அழகு!

அன்னேயின் திருக்கரங்கள் நான்கனுள் வலக்கரம் அபயமளிக்கின்றது. இடக்கரம் கருச்சிதைவைத் தடுப்பது போன்று வயிற்றின் கீழே அமைந்துள்ளது. மேல்நோக்கியுயர்த்திய மற்ருெரு வலக்கரம் அக்க மாலேயையும், மற்ருெரு இடக்கரம் தாமரை மலரையும் தரித்துள்ளன.

அன்னே கர்ப்பரட்சாம்பிகை, சித்தர்கட்கெல்லாம் தாயான சின்மயீ. தன்னே வழிபடுவார்க்குப் பெரும் பேற்றையருள, கற்றைக் குழல் அழிகியாகக் காட்சியளித்துத் திருவருள் பாலிக்கின்ருள்.

கருவைக் காத்த அன்னே

நைத்ருவர் என்பவரின் மனேவி வேதிகை என்பவள் கருவுற்று இருந்தபொழுது, அவர் ஒரு தாக நிமித்தம் வருணலோகம் சென்ருர். அப்போது அங்கு வந்து சேர்ந்த ஊர்த்துவபாத முனிவருக்கு, உடல்நல மில்லாத வேதிகையால் உபசரிக்க முடியவில்லே. இதனே அறியாத ஊர்த்துவபாதமுனிவர், வேதிகைக்கு இராஜ இட்சு நோய்

(காக்கைவலிப்புப் போன்றதொரு நோய்) உண்டாகுமாறு சபித்தார்.

அந் நோயின் கடுமையால் வேதிகையின் கருச்சிதைவு ஏற்படவே, அவள் அன்னை கர்ப்பரட்சாம்பிகையை வேண்டினுள். அன்னை அவள் முன் தோன்றி, அந்தக் கருவைக் கடத்தில் வைத்துக் காத்தாள். அக் கடத்தி லேயே அக் கரு வளர்ந்து குழந்தையாகி, அதை வேதிகை வளர்த்தாள்.

வேதிகை, குழந்தையை வளர்த்து வரும்பொழுது இறைவன் தேவலோகத்திலிருந்து காமதேனுவை வர வழைத்து, அக் குழந்தைக்குப் பாலூட்டிப் பேணுமாறு கட்டளையிட்டார். சில நாட்கள் கழித்துத் தேவலோகம் திரும்பவேண்டிய அந்தக் காமதேனு, தனது குளம்பால் ஒரு தடாகத்தை உண்டாக்கி, அதைத் தனது பாலால் நிரப்பியது. அந்தத் தடாகம் இத் தலத்துக் கோயிலுக்கு இராஜ கோபுரத்திற்கு எதிரில் உள்ளது. குழந்தைக்குத் தேவையான காலம்வரை இக் குளத்தில் பாலும், பிறகு நீருமாக இருக்க இறைவன் அருள்புரிந்தார். காமதேனு வின் வேண்டுகோளின்படி இறைவன் இதனைச் செய்தார். இக் குளத்தில் முறைப்படி நீராடுவோர் மகப்பேறு எய்துவர்.

வருண லோகத்திலிருந்து திரும்பி வந்த நைத்ருவர், நடந்ததை யெல்லாம் அறிந்து, அன்று முதல் கர்ப்ப வேதனையால் தீங்கு ஏற்படாமல் இத் தலத்தில் வழிபடும் பெண்டிரைக் காத்தருள வேண்டும் என்று, அன்னை கர்ப்ப ரட்சாம்பிகையை வணங்கி வேண்ட, அன்னையும் அவ் வாறே அருள்புரிந்தாள். அன்று முதல் அன்னை, தன்னை வழிபடும் பெண்டிர்க்குக் கர்ப்பத் தீங்கு உண்டாகாதவாறு காத்து வருகின்ருள் என்று தல புராணம் கூறுகின்றது.

அன்னையின் அருட்சின்னம்

அன்னை கர்ப்பரட்சாம்பிகை, தன்னை வழிபடும் பெண்டிரைக் கர்ப்பத்தால் உண்டாகும் தீமையும், பிற தீமைகளும் அணுகாவண்ணம் காத்தருள்கின்றாள். அவள் திருச் சந்நிதியில் இன்றும் ஆமணக்கெண்ணெய் மந்திரித்துக் கருவுற்ற மகளிர்க்கு வழங்குகின்றனர். அது அன்னையின் அருட்சின்னம். அதனால், இத் தலத்தில் பெண்டிர் கருவுற்றது முதல் பிறக்கும் வரையில் காலன் கையில் சிக்கியதில்லை. இத் தலத்தில் உள்ள பெரியவர்கள் கூறும் அநுபவ உண்மை இது.

இத் தலத்தில் கர்ப்பரட்சாம்பிகையை வேண்டி வழிபடும் மகளிர்க்குக் கருச்சிதைவோ, பிரசவத் தீங்கோ உண்டாவதில்லை. அன்னையின் திருச் சந்நிதியில் உள்ள படிகளை நெய்யால் மெழுகித் திருக்கோலமிடும் மகளிர்க்குத் திருமணம் தவறாது நடைபெற்று வருகின்றது. மணமாகாத மகளிர் இத் திருப்பணியைச் செய்தால் மணவினையை மேற்கொள்ள அன்னை அருள் புரிவாள்.

திருச்சந்நிதியில் மந்திரித்து வழங்கப்படும் அன்னையின் அருட்சின்னமாகிய ஆமணக்கு நெய்யை, கருவுற்ற மகளிர் தமது வயிற்றில் தடவினால் சுகப் பிரசவமாகும் என்பது பலருடைய அனுபவ உண்மை.

அன்னை கர்ப்பரட்சாம்பிகை, மற்றும் இவ்வுலக வாழ்வில் விதியை மாற்றும் வித்தகியாகவும் விளங்குகின்றாள். இவ் வுலக வாழ்வில் அவதியுறும் ஆணுக்கும் பெண்ணுக்கும் அன்னை அருள் புரிந்து நல் வாழ்வளிக்கின்றாள்.

தீர்த்தச் சிறப்பு

இத் தலத்தில் திருக்கோயிலுக்குத் தென்மேற்கு மூலையில் பிரம தீர்த்தம் என்ற தடாகம் உள்ளது. இது பிரமனால் உண்டாக்கப்பட்டது. இதில் நீராடினால் ஆணவ மலம் அகலும்,

இராஜ கோபுரத்துக்கு முன்னே க்ஷீரகுண்டம் என்ற தடாகம் உள்ளது. இது காமதேனுவால் உண்டாக்கப்பட்டது. இதில் நீராடினுல் மகப்பேறு உண்டாகும்.

அன்னை ஆலயத்தின் முன்னே சத்திய கூபம் என்ற கிணறு உள்ளது. இது தீராத நோய்களையெல்லாம் தீர்க்க வல்லது.

விருத்த காவேரி என்னும் வெட்டாறும் இத் தலத்தில் விழுமிய தீர்த்தமாகப் பாய்கின்றது.

18. குலசை அறம் வளர்த்த நாயகி

அகிலாண்ட கோடிகளையெல்லாம் படைத்தலும், காத்தலும் அன்னை சக்தியின் அருளின்பாற்பட்ட அறப் பணிகளே. படைத்தல் என்பது உண்டாக்குதல் என்ற பொருளையும், காத்தல் என்பது பிற உயிர்களைத் துன்பமின்றிக் காத்தல், பிற உயிர் துயர் துடைத்தல் என்ற பொருளையும் குறிக்கும். மனிதன் நன்மையின் பொருட்டு உண்டாக்குபவையும், மன்னுயிர் பேணி ஒழுகுவதுமாகிய அனைத்தும் விழுமிய அறப்பணிகளே. இவ் அறப் பணிகட்கெல்லாம் மூலம் அன்னை சக்தியே. அன்னையின் அருள் நோக்கால் மனிதன் இவற்றை ஆற்றுகின்றான். இங்ஙனம் படைத்தல், காத்தலாகிய அறப் பணிகளைச் செய்தருளுகின்ற அன்னை சக்தியானவள், சில திருத்தலங்களில் அறம் வளர்க்கும் நாயகியாக எழுந்தருளித் திருக்காட்சி தருகின்றாள்.

காஞ்சியம் பெருந் தலத்தில் திருக்கோயில்கொண்டு விளங்கும் அன்னை காமாட்சி, முப்பத்திரண்டு அறங்களையும் செய்து முடித்து அறம் வளர்த்த நாயகியாக ஒளிருகின்றாள். அந்த அறம் வளர்த்த நாயகியே தென்பாண்டி நாட்டுக் குலசையம்பதியில் கோயில் கொண்டு விளங்கி, அறம் வளர்க்கும் அன்னையாக, அறக் கடவுளாகக் காட்சியருள்கின்றாள்.

குலசை என்பது குலசேகரன் பட்டினம் என்று வழங்கும் திருத்தலமாகும். இத் தலம், திருச்செந்தூருக்குத் தெற்கே எட்டு மைல்கள் தொலைவில் உள்ளது.

தல வரலாறு

குலசைத் திருக்கோயில், கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மாறவர்ம குலசேகர பாண்டியனால் எழுப்பப்

பட்டது என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இவன் காலத்திற்கு முன்பு இத் தலம் 'வீரை வளநாடு' என்று வழங்கப்பட்டு வந்து, இவன் ஆட்சிக் காலத்தில் 'குலசேகரன் பட்டினம்' என்று வழங்கப்பட்டு வந்துள்ளது. இப் பெயராலேயே இன்றும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப் பாண்டிய மன்னன், காஞ்சியம்பதிக் கோயில் அமைப்பின்படியே திருக்கோயிலை எழுப்புக என்று அசரீரியாக அம்பாள் மொழிந்தருள, மன்னவனும் அவ்வாறே இத் தலத்துக் கோயிலை எழுப்பினான் என்பது வரலாறு.

இத் தலத்துக் கோயிலும் காஞ்சிக் கோயிலைப் போலவே அமைந்து விளங்குகின்றது. காஞ்சியில் அன்னை காமாட்சி அறம் வளர்த்த நாயகியாக விளங்குகின்றாள். இத் தலத்தில் அன்னை அறம் வளர்த்த நாயகி என்ற திருப் பெயரிலேயே விளங்குகின்றாள். இக் கோயிலை இடமாகக் கொண்டு எழுந்தருளித் திகழும் இறைவனின் திருப்பெயர் கச்சிகொண்ட பாண்டேசுவரர். எனவே, இத் தலத்தைத் தென்காஞ்சி என்றும் கூறலாகும்

தலச் சிறப்பு

குலசையம்பதிக் கோயில் இயற்கைச் சூழல்மிக்கக் கடற்கரைக் கோயிலாகத் திகழ்கின்றது. திருமறைக்காடு, நாகை போன்று இத் தலமும் கடற்கரைத் தலமாக அமைந்துள்ளது. கடல்மகள், மலைமகளாகிய அன்னை அறம் வளர்த்த நாயகியை இடையறாது போற்றி வழிபட்ட வண்ணம் விளங்குகின்றாள்.

காஞ்சியைப் போலவே இத் தலத்திற்கும் மாமரமே புனித மரமாக உள்ளது. அன்னை அறம் வளர்த்த நாயகி இத் தலத்தில் மாமரத்தோடு தோன்றி, மாமரத்தின் கீழ் இருந்து இறைவனை நோக்கித் தவம்புரிந்தாள் என்று இத் தலம்பற்றி எழுந்த நூல் கூறும். எனவே, மாமரம் இத் தலப் புனித மரமாக உள்ளது. இந்த மாமரம் அன்னையின் அருள்தன்மை உடையது. இம் மாமரம் பன்னெடுங்கால

மாகப் பசுமையோடு இருந்து வருவதோடன்றி, ஆண்டு முழுதும் காய்த்தும் கனிந்தும் வருகின்றது.

இத் தலத்திலிருந்து இரண்டு மைல்கள் தூரத்தில், திருச்சீரலைவாயில் நின்று அருளாட்சி புரிந்தருளும் ஆறு முகப்பெருமான், மாமரமாக நின்ற சூரனை வதைத்த இடமாகிய 'மாபடு' என்ற இடம் உள்ளது. இப்போது இந்த இடம் மணப்பாடு என்று வழங்கப்படுகின்றது. மாமரமாக நின்ற சூரனை வதம்செய்த இடமாகையால், அவ்விடத்தில் மாமரம் தோன்றலாகாது என்று ஆறுமுகர் இட்ட சாபத்தால், இன்றும் அங்கு மாமரம் அறவே இல்லை; மாங்கன்று முளைப்பதே இல்லை. ஆனால் இரண்டு மைல்கள் தொலைவில் உள்ள இத் தலத்தில் மாமரம் புனித மரமாக உள்ளது. இப் புனித மரத்திற்கு அன்னையின் அருள் தன்மை உண்டு என்பது பெரியவர்கள் துணிவு. இப் புனித மரத்தின் சிறப்பினை,

''ஒருகுலை யதனில் பூவொடு பிஞ்சும்
வடுவொடு காயும் பழமும் பற்பல
நெடுஞ்சுவை யோடு நீணிலத் தருளும்''

என்று ஒரு கவிஞர் போற்றுகின்றார்.

அன்னை அறம்வளர்த்த நாயகி

அழகிய திருக்கோபுரத்துடனும், அகன்ற பிராகாரத்துடனும் அமைந்து விளங்குகின்ற குலசையம்பதிக் கோயிற் கருவறையில், கருணைக் கடலாகக் காட்சி தருபவர் கச்சி கொண்ட பாண்டேசுவரர். இவரது திருமேனியாகிய சிவலிங்கம், சுவயம்பு இலிங்கமாகும்.

அன்னை அறம்வளர்த்த நாயகி தனித் திருக்கோயிலில், கண்ணாரமுத வடிவினளாக, கருணைப் பெருமாட்டியாக, எண்ணான்கு அறம் வளர்த்த நாயகியாக, நின்ற திருக்கோலத்தில் அபய வரதக் கரங்களுடன், அரும்பும் புன்ன

கையும் சுரக்கும் அருள் நோக்கும் கொண்டு திகழ்கின்ருள்.

காஞ்சியில் அன்னை காமாட்சி முதன்மையும் முக்கியத்துவமும் கொண்டு விளங்குவதைப்போன்றே இங்கு அறம் வளர்த்த நாயகியும் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கின்ருள்; இறைவனைவிட மேலான அருட்சிறப்பு வாய்ந்தவளாக இலங்குகின்ருள்.

அறம் என்பது இல்லறம், துறவறம் என்ற இருவகையது இருவகையறத்தாலும் இணையிலாப் பேரின்ப நிலையினை எய்தலாகும் என்பது அன்னையின் இங்குள்ள இரு வேறு உருவ நிலைகளை உணர்த்துகின்றன. கருவறையுள் நின்று கடைக்கண் நோக்கால் அருள் பெருக்கும் அன்னை, இல்லற வாழ்வினர்க்கு இன்னருள் சுரந்து பன்னலமும் ஊட்டுபவளாகத் திகழ்கின்ருள். இல்லற வாழ்வு சிறக்க விழைவோர், கருவறையுள் காட்சிதரும் அன்னையை அன்புடன் வழிபடுதல் வேண்டும். கருவறைத் திருக்கோல நாயகி, இல்வாழ்வில் அறம் வளர்க்கும் அன்னையாகத் திகழ்கின்ருள்.

திருக்கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் அன்னை மாமரத்தின் கீழ் தவக்கோலத்தினளாகத் திகழ்கின்ருள். இந்த மாமரத் தவக்கோலநாயகி, துறவற வாழ்வினர்க்கு அருள் புரிந்து விளங்குகின்ருள்; துறவு வாழ்வில் அறம் பெருக்குபவளாக ஒளிர்கின்ருள். இத் தவக்கோல நாயகிக்கு அன்ருடம் புனித மரமாகிய மாமரத்தில் கனியும் கனியே மாலை நைவேத்தியம்.

குலசையம்பதிக் கோயிலுள் வளரும் கோமளவல்லியாகிய அன்னை அறம் வளர்த்த நாயகி, உலகை உலக உயிர்களைப் படைத்துக் காத்து, இருவகை வாழ்வினர்க்கும் அறம் பெருக்கி, ஆன்ம அழுக்ககற்றும் ஞானச்செல்வியாகத் திகழ்கின்ருள். இந்த அன்னையைக் கண்டு வணங்கி அறவாழ்வில் இன்புறுதல் அனைவரின் கடமையாம்.

19. கன்னியாகுமரி

'கன்னியாகுமரி' என்று சொன்னவுடன், குமரித் தெய்வமாகிய கோமளம் தவக்கோலம் பூண்டு விளங்கியருளும் திருக்கோயில் எல்லோர் மனக்கண் முன்னர் வந்து நிற்கும். கன்னியாகுமரி என்னும் கவின்பதி, புண்ணிய பாரதத்தின் தென் எல்லையாகும். அன்னை பகவதி என்றும், அன்னை கன்னி என்றும், அன்னை குமரித் தெய்வம் என்றும் அன்பர்களால் போற்றி வழிபடப்பெறுகின்ற அன்னை பகவதி, இந்த இந்தியத் தென் எல்லையில் நின்று தவம் புரிந்தருள்கின்ருள். இதனை, அன்னை சக்தியின் அருள் பெற்ற அமரகவி பாரதி,

> ''நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
> நித்தம் தவஞ்செய் குமரி''

எனப் போற்றுகின்ருர்.

இந்தியப் பெருநிலம் குறுகிச்சென்று கூரிய முனையாக அமைந்து விளங்கும் தலமே குமரித்தலம். இத் தலத்தில் அரபிக் கடல், இந்துமா கடல், வங்காளக் கடல் ஆகிய மூன்று கடல்களும் ஒன்று சேர்ந்து, ஒருருவாக நின்று அன்னை பகவதியை அன்ருடம் வாழ்த்தி வணங்குகின்றன அவற்றின் திரைக்கரங்கள் அன்னையின் மலர்ப் பாதங்களை வருடிய வண்ணம் நீங்கா இன்பத்தில் திளைக்கின்றன. மூன்று கடல்களும் ஒருங்கு இணையும் முனைப்பகுதியிலேயே அன்னை பகவதி, தவக்கோலமும் திருக்கோயிலும்கொண்டு நின்று திருக்காட்சியருள்கின்ருள்.

தலச் சிறப்பு

இத் தலத்தில் விளங்குகின்ற அன்னை குமரியாக-கன்னியாக உள்ள காரணத்தினுல், இத் தலத்திற்குக்

கன்னியாகுமரி என்ற திருப்பெயர் அமைந்தது பெருஞ் சிறப்பாகும். அவ்வை குமரியால் பெருஞ் சிறப்புற்று விளங்கு கின்ற இத் தலம் மிகவும் பழமைச் சிறப்பும் உடையது என்ப தைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களால் உணரலாகும்.

''நெடியோன் குன்றமும் தொடியோள் பெளவமும்''

என்ற சிலப்பதிகார அடியும்,

''தென்றிசைக் குமரி யாடிய வருவோள்''

என்ற மணிமேகலை அடியும்,

''இமயப் பொருப்பகத் தீராண் டுறைந்தபின்
குமரித் தீர்த்த மரீஇய வேட்கையின்
தரும யாத்திரையெனத் திக்கிணம் போந்துழி''

என்ற பெருங்கதை அடிகளும்,

''கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
பொங்குநீர்க் குமரித்துறை யாடிலென்''

என்ற அப்பர் தேவார அடிகளும் இத் தலத்தின் பழமை யினை உணர்த்துகின்றன.

முன்னொரு காலத்தில் பகன், முகன் என்ற இரண்டு அசுரர்கள், தேவர்கட்குத் துன்பமிழைத்து வந்தனர். அத் துன்பத்தைத் தேவர்கள், காசி விசுவநாதரிடம் கூறி முறை யிட்டனர். விசுவநாதர் இரண்டு பெண்களைப் படைத்தரு ளினார். அவ்விரு பெண்களுள் ஒருத்தி வடக்கே காளிகட் டில் (கல்கத்தா) உள்ள காளி தேவி. மற்றொருத்தி தெற்கே உள்ள கன்னியாகுமரி. இவ்விரு தெய்வங்களும் அசுரர்களை வேரோடு அழித்ததோடு நில்லாது, புண்ணிய பாரதப் பூமிக்கு எவ்விதத் தீங்கும் நேராமல் காத்தருள் கின்றனர்.

தென் குமரித் தெய்வம் இந்தியத் தென் எல்லையின் தெய்வம். இந்த எல்லைதெய்வம் வாழ்கின்ற இத் தலத்

திற்கு, திருநெல்வேலியிலிருந்தும் நாகர்கோயிலிலிருந்தும் காரிலோ, அல்லது பஸ்ஸிலோ செல்லலாம்.

அன்னை குமரியின் வரலாறு

அன்னை குமரித் தெய்வம் தென் எல்லையில் எழுந்தருளிய வரலாறு ஒன்றும், தென் எல்லையில் தவம் புரிதற்கான வரலாறு ஒன்றும் உண்டு. புண்ணிய பாரதப் பூமியை ஆதியில் ஆண்ட மன்னன் பரதனுக்கு எட்டுப் புதல்வர்களும் ஒரு புதல்வியும் இருந்தனர். அந்தப் பரதன், தன் பிள்ளை ஒன்பதின்மருக்கும் நாட்டைப் பங்கிட்டுக் கொடுத்தான். அவனுடைய ஒரே புதல்விதான் அன்னை குமரி. அவன், தன் புதல்விக்குப் பாகமாகக் கொடுத்த பகுதியே இந்தியாவின் இறுதிப் பகுதியாகிய குமரியம்பதி. அவள் குமரியிலிருந்து ஆண்ட இடமே இன்றைய குமரிமுனை. எனவே, அவள் இத் தலத்தில் வாழ்கின்றாள் என்பது வரலாறு.

வாசுதேவரையும் தேவகியையும் சிறையில் அடைத்தான் கம்சன். அவர்கட்குப் பிறக்கும் குழந்தை ஒன்றினால் அவனுக்கு மரணம் உண்டாகும் என்று சோதிடன் கூறியதால், அவர்கட்குப் பிறந்த குழந்தைகளையெல்லாம் கொன்றொழித்த வண்ணம் இருந்தான். ஏழு குழந்தைகளைப் பறிகொடுத்த தேவகிக்குக் கண்ணன் சிறையில் பிறந்தான். வாசுதேவருக்கு இந்தப் பிள்ளையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதனால், இரவோடு இரவாக யமுனையைக் கடந்து சென்று, கோகுலத்தில் அசோதையிடம் கண்ணனைச் சேர்த்துவிட்டு, அங்கு பிறந்திருந்த பெண் குழந்தையை எடுத்துவந்து தேவகியின் அருகில் வைத்துவிட்டார். குழந்தை பிறந்ததை அறிந்த கம்சன், அந்தக் குழந்தையை எடுத்துச்சென்று கொல்ல விரைந்தான். ஆனால், அந்தத் தெய்வக் குழந்தை அவனைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு அந்தரத்தில் மறைந்தது. அவ்வாறு மறைந்த குழந்தையே திருமாலின்

தங்கையான எல்லாம் வல்ல அன்னை சக்தி. அந்த சக்தியே பகவதி என்ற திருப்பெயரோடு இக் கடற்கரைத் தலத்தில் உதைத்துத் தள்ளிய பாவம் நீங்க, இறைவனை நோக்கித் தவம் செய்யலானாள் என்பதும் வரலாறு.

அன்னை குமரியின் ஆலயம்

தவக்கோலம் பூண்டு விளங்கும் அன்னை குமரித் தெய்வத்தின் திருக்கோயில் கடலோரமாக அமைந்து விளங்குகின்றது. பெரிய சமவெளிப் பகுதியை நான்கு புறமும் மதிலால் வளைத்துக் கட்டப்பட்டுள்ளது. உள் மண்டபத்தில் அன்னையின் கருவறை உள்ளது. அன்னை கன்னியாகுமரி கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில், இலுப்பைப் பூமாலையை ஒரு திருக்கரத்தில் தரித்து, மற்றொரு திருக்கரத்தைத் துடைமீது வைத்துத் தவக்கோல நாயகியாகத் திருக்காட்சியருள்கின்றாள். அன்னை கிரீடத்தில் பிறைமதி ஒளிர்கின்றது. அவள் அணிந்திருக்கும் அணிகளுள் வைர மூக்குத்தி மிகவும் பேரொளி வீசுகின்றது. அழகின் அற்புத உருவாக அன்னை விளங்குகின்றாள்.

உள் பிராகாரத்தின் தென்மேற்குக் கோடியில் விநாயகர் திருச் சந்நிதி உள்ளது. அங்குள்ள மணி மண்டபத்தை ஆறு தூண்கள் தாங்குகின்றன. இம் மண்டபத்தின் முன்னே சபா மண்டபம் உள்ளது.

இரண்டாவது பிராகாரம் உள்பிராகாரத்தைவிட அகலமானது. அன்னை பகவதி இப் பிராகாரத்தில் நாள்தோறும் பவனி வருகின்றாள். இப் பிராகாரத்தில் ஊஞ்சல் மண்டபம் உள்ளது.

அன்னையின் திருக்கோயில் திகழ்கின்ற இக் குமரிமுனையில் நின்று கதிரவனின் உதயத்தையும், மறைவையும் கடலிடையே கண்டு களிக்கலாம்.

மணம் நின்ற வரலாறு

குமரியம்பதியில் கூடும் முக்கடலோரத்தில் கோயில் கொண்டு, தரணி புரக்கத் தவக்கோலம் பூண்டு விளங்கிய

அன்னை பகவதியின் சுந்தரப் பேரழகை, ஐந்து மைல்கள் தொலைவில் சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலயக் கடவுள் அறிந்து, அவள்மீது விருப்பம் கொண்டு, அவளை மணக்க விரும்பினார். அதன் பொருட்டுத் தேவர்களை அழைத்துத் தம் விருப்பத்தைக் கூறினார். தேவர்கள் எல்லோரும் வந்து கூடிய இடமே சுசீந்திரத்தில் கன்னியம்பலம் என்று வழங்கப்படுகின்றது.

தாணுமாலயரின் விருப்பத்தை அறிந்த தேவர்கள், கன்னிக்குமரி திருமணம் செய்துகொண்டால் அவளது தவம் தடைப்படுமே; அதனால், பின்னர் அசுரர்களை அழிக்க முடியாதே என்று கருதி மனம் வருந்தினர். அத் தருணத்தில் அங்கு வந்து சேர்ந்த நாரதர், அத் தேவர்களையெல்லாம் சமாதானம் செய்து, தாமே முன்னின்று திருமணத்தை முடித்து வைப்பதாகக் கூறி, தாணுமாலயரிடம் திருமணத்துக்கான இரண்டு நிபந்தனைகளை விதித்தார். அந் நிபந்தனைகள்: கண்ணில்லாத தேங்காய், காம்பில்லாத மாங்காய், நரம்பில்லாத வெற்றிலை, கணு இல்லாத கரும்பு, இதழ் இல்லாத மலர் ஆகியவற்றைச் சீதனப் பொருள்களாகக் கொண்டு வருதல் வேண்டும் என்பது ஒன்று. இரண்டாவது, திருமண முகூர்த்தம் சூரிய உதயத்தில் நிகழும்; அதற்கு ஒரு நாழிகைக்கு முன்னதாக மணமகன் மணவறைக்கு வந்துவிட வேண்டும் என்பது.

மணமகனாராகிய தாணுமாலயக் கடவுள் இவற்றிற்கெல்லாம் அஞ்சுவாரா? சீதனப் பொருள்களையெல்லாம் வண்டி வண்டியாக அனுப்பிவைத்தார். இடையில் உள்ள ஐந்து மைல்கள் தூரத்தைக் கடக்க நள்ளிரவிலேயே புறப்பட்டு விட்டார். அதனை அறிந்த நாரதர், உடனே சேவல் உருவெடுத்து சூரிய உதயத்தை அறிவிக்கும் உதயப் பண்ணைக் 'கொக்கரக்கோ' என்று கூவி அறிவித்தார்.

அந்தப் பண்ணைக் கேட்ட தாணுமாலயக் கடவுள், முகூர்த்த நேரம் தவறிவிட்டது; தாம் வழுக்கிவிட்டோம் என்ற அவமானத்தோடு, மேற்கொண்டு செல்ல விரும்பா

மல் சுசீந்திரத்துக்கே திரும்பிவிட்டார். அவ்வாறு அவர் திரும்பிய இடமே இன்றும் 'வழுக்குப் பாறை' என்று வழங்கப்படுகின்றது.

சுசீந்திரத்துக்குக் கிழக்கே ஒரு மைல் தொலைவில் உள்ள அந்த வழுக்குப் பாறையில் சேவற்கோழியின் கால் தடமும், தாணுமாலயரின் திருவடித் தடமும் பதிந்துள்ளன என்பர். இவ்வாறு அன்னை பகவதி–அண்ணல் தாணுமாலயர் திருமணம் தடைப்பட்டுவிட்டது. அன்னை பகவதியின் தவம் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது. அவளுக்கு வந்த சீதனப் பொருள்களாகிய பொன், மணி, நெல், கரும்பு முதலியவற்றையெல்லாம் அவள் கடலில் வீசி எறிந்தாள். அவையே குமரிக் கரையில் பலநிற மணல்களாகவும், பல குன்றுகளாகவும் பரவிக் கிடக்கின்றன என்று கூறுவர்.

தீர்த்தச் சிறப்பு

அன்னை பகவதியின் ஆலயத்திற்கு எத்துணைச் சிறப்பு உண்டோ, அத்துணைச் சிறப்பு இத் தலத்தில் உள்ள கன்னித் தீர்த்தத்திற்கு உண்டு. இத் தீர்த்தம், பஞ்சநாரித் தீர்த்தங்களுள் ஒன்று. இத் தீர்த்தமே ஆதி சேதுவாகக் கருதப்படுகின்றது. இதனை,

> ''குரங்கு செய்கடல் குமரியம் பெருந்துறை''

என்னும் மணிமேகலை அடியால் உணரலாம். இராமர் கட்டிய சேது இங்கிருந்தே தொடங்கியிருக்க வேண்டும் என்று தெரிகின்றது.

புண்ணிய பாரத வடபுலத்திலிருந்து பலர் தென்திசைக் குமரியாட வந்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

> ''வார ணுசி யோர்மறை யாளன்
> ஆரண வுவாத்தி அபஞ்சிகன் என்போன்
> பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
> கொண்டோற் பிழைத்த தண்டம் அஞ்சித்
> தென்றிசைக் குமரி யாடிய வருவோள்''-மணிமேகலை

வாரணாசியின் வேதவிற்பன்னன் அபஞ்சிகன் என்பவனின் மனைவி சாலி, கற்புநெறி வழுவி பின்னர் குற்றம் உணர்ந்து, தென் குமரிக்குக் கால் நடையாகச் சென்று நீர்த்துறையில் ஆடிப் பாவத்தைப் போக்கிக் கொண்டாள் என்று மணிமேகலை கூறுகின்றது.

''மாமுனிப் பொதியின் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை யாடி மீள்வோன்''-சிலப்பதிகாரம்.

இவை போன்று இலக்கியங்களில் பல இடங்களில் இத் தீர்த்தமாடிய நிகழ்ச்சியினைக் கூறப்பட்டுள்ளது. இன்றும் வடபுலத்திலிருந்து குமரியாட வருவோரைக் காண்கின்றோம்.

குமரித்துறையாடி, பகவதி மலர் பாதம் வணங்கி, பாவச் சுமையகற்றி, அன்னையின் அருள் பெற்று உய்வோமாக.

20. சமயபுரம் மகமாயி

தீராத வினை தீர்த்தும், மாருத பிணி தவிர்த்தும், மக்களைக் காத்தருளும் அன்னை மகமாயி சமயபுரம் மாரியம்மன், திருக்கோயில்கொண்டு திருக்காட்சியருளும் இடம் கண்ணனூர். கண்ணனூர் என்பது, சோழவள நாட்டின் தலைநகராகத் திகழ்ந்த, நாயன்மார்களால் 'சிராப்பள்ளி' எனக் குறித்துப் போற்றப்பெற்ற திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே ஏழு மைல்கள் தொலைவில் உள்ள சமயபுரத்தின் அருகில் உள்ளது. திருச்சியிலிருந்து அடிக்கடி டவுன் பஸ் வசதியுண்டு.

தல வரலாறு

அன்னை சமயபுரத்தாள் என்று அன்பர்களால் போற்றப்படுகின்ற மாரியம்மன் திருக்கோயில் உள்ள இடம் கண்ணனூர். கண்ணனூர் பெருவளை வாய்க்கால் கரையோரத்தில் மகாசக்தி பீடமாக அன்னையின் திருக்கோயில் அமைந்து விளங்குகின்றது.

சோழ மன்னன் ஒருவன், தன் தங்கையைக் கங்க நாட்டு மன்னன் ஒருவனுக்கு மணம் முடித்து, அவர்கட்குச் சீதனமாக ஒரு கோட்டையைக் கட்டி, நகரமும் அமைத்துக் கொடுத்த இடம் கண்ணனூர். பிற்காலத்தில் பாண்டியர் படையெடுப்பால் அக் கோட்டையும் நகரமும் அழிக்கப்பட்டன. அந்த இடம் உருமாறி வேப்பமரக் காடாயிற்று.

திருவரங்கப் பதியில் உள்ள அரங்கநாதர் ஆலயத்தில் இருந்த வைணவி என்ற மாரியம்மனின் உக்கிரம் (துன்பம்) மிகுதியாக இருந்ததால், அங்கு அப்போதிருந்த ஜீயர் சுவாமிகள், அந்த வைணவி அம்பாள் திருவுருவத்தை அங்

கிருந்து அகற்ற ஏற்பாடு செய்தார். அதன்படியே சிலர் அத் திருவுருவத்தை எடுத்துக்கொண்டு வடக்கு நோக்கி வந்து ஓர் இடத்தில் இளைப்பாறினர்கள். அவர்கள் இளைப் பாறிய அந்த இடம், இப்பொழுது இறும் சமயபுரம் என்ற பெயரில் உள்ளது. அதன் நினைவாக இப்பொழுதும் திருவிழாவில் எட்டாம் நாள் மாரியம்மன் அங்கு சென்று ஓர் இரவு தங்கி வருகின்றனள். இளைப்பாறிய அவர்கள், அங்கிருந்து தென்மேற்காக வந்து கண்ணனூர் அரண்மனை மேட்டில் அம்பாள் திருவுருவத்தை வைத்துவிட்டுச் சென்ற னர். அவர்கள் வைத்த இடத்திலேயே இன்று அன்னையின் திருக்கோயில் அருளாலயமாகத் திகழ்கின்றது.

கோயில் எழுந்த வரலாறு

மாரியம்மன் திருவுருவம் கண்ணனூர் அரண்மனை மேட் டில் வைக்கப்பட்டதால், 'கண்ணனூர் மாரியம்மன்' என்ற திருப்பெயர் பூண்டு விளங்கினுள்; தன்னை அன்புடன் பணிந்து வணங்குவார் கருதும் எண்ணமெல்லாம் ஈடேற்றி யருளினுள். அன்னையின் திருவருட் சிறப்பு நாளடைவில் எங்கும் பரவிப் பெருமை கொண்டது.

அத் தருணத்தில் வடக்கே இருந்த விசயநகரமன்னர், தென்னுட்டின் மீது படையெடுத்து வந்தனர். அவர்கள் அவ்வாறு வந்தபோது இக் கண்ணனூர் காட்டில் முகாமிட் டனர். காட்டினிடையே முகாமிட்டிருந்த அம் மன்னர், அரண்மனை மேட்டில் விளங்கிய அன்னை மாரியைத் தரி சித்து, தென்னுட்டில் தங்கள் படை வெற்றி கொண்டால், தாங்கள் அரசு நிறுவினுல் திருக்கோயில் கட்டி வழிபடுவ தாக வேண்டுதல் செய்தனர். அன்னையின் அருளால் அவர்கள் தென்னுட்டில் அரசு அமைத்தார்கள். தாங்கள் செய்து கொண்ட வேண்டுதல்படியே திருக்கோயில் எழுப்பி, அன்னை மாரியம்மனின் பரிவார தெய்வங்களாக விநாயகரையும், கருப்பண்ண சுவாமியையும் பிரதிட்டை

செய்து, அன்னை மாரிக்குக் குட முழுக்குப் பெரு விழா நிகழ்த்துவதோடு நில்லாது, நித்திய பூசைக்கான ஏற்பாடு களையும் செய்து வைத்தனர்.

கண்ணனூர் அன்னையிடம் பெரும் பக்தி பூண்ட மெய் யன்பராகிய சூரப்ப நாயக்கர் என்பவர், பிற்காலத்தில் அன்னையின் பழைய திருவுருவத்திற்குப் பதில் புதிய திரு வுருவம் வார்த்துப் பிரதிட்டை செய்தார். ஆனால், அன்னை மாரி அதற்கு அருள் புரியவில்லை. பின்னர், நாயக்கர் அன்னை மாரியிடம் மீண்டும் மனம் உருகி வேண்டவே, அதன் பயனாக அன்னையின் புதிய திருமேனி பிரமோற்சவத் தில் ஒன்பதாம் நாள் விழாவில் திருவீதி உலா வருகின்றது.

அன்னையின் திருமேனிப் பொலிவு

உலகெங்கும் அருளொளி பரப்பும் கிரீடம் தலையில் விளங்க, திருவருட் பெருக்கைத் திரு நயனங்கள் சொரிய, அன்பைப் பெருக்கும் புன்னகை உதட்டில் உறவாட, சுந் தரப் பேருருவாய் உயரிய பீடத்தில் அன்னை மாரியம்மன் வீற்றிருந்து காட்சி தந்து வையத்தைப் புரக்கின்றாள்.

அட்டபுய நாயகியாகத் திகழ்கின்ற அன்னையின் எட் டுத் திருக்கரங்களிலும் முறையே கத்தி, கபாலம், சூலம், மணிமாலை, வில், அம்பு, உடுக்கை, பாசம் ஆகியவை அமைந்து விளங்குகின்றன. ஒளி நிறைந்த முகத்தினளாகிய இந்த அன்னையின் திருவடிகளில் இடது திருவடி பீடத்தில் மடங்கியிருக்க, வலது திருவடி ஐந்து அசுரர்களின் தலைகளை மிதித்த வண்ணம் விளங்குகின்றது. அழகே உருவாகி அரு ளும் அன்னைக்கு ஐந்து தலை நாகம் படம் விரித்துக் குடை பிடித்துப் பெருமை கொள்ளுகின்றது. இது, சக்தியின் முழு உருவமே சமயபுரத்தாள் என்பதை உணர்த்துவ தாகும்.

சமயபுரத்தில் ஒளிரும் இந்த சக்தியின் திருவுருவைக் கண்டால்—கண்டு பணிந்தால்—மனம் குளிரும், உருகும்,

ஒருமைப்படும். மன மாசு அகலும். கண்ணொளி மங்கி யிருந்த சிவந்திலிங்க சுவாமிகள், இத் தெய்வத் திரு வுருவை மனக் கண்ணால் கண்டு மகிழ்ந்து அருட்பாக்கள் பாடிப் புறக்கண்ணில் ஒளி பெற்று விளங்கினார்.

அன்னையின் பெரு விழா

சமயபுரத்து மாரியின் அருட்சின்னம் வேப்பிலை. இது பிணியகற்றும், பெருமை சேர்க்கும், பெரு வாழ்வளிக்கும். இத் தலத்துப் புனித மரம் வேப்ப மரம்.

திருக்கோயிற்கு அருகில் உள்ள பெருவளை வாய்க் காலும், திருக்கோயிற்கு மேற்கே உள்ள திருக்குளமும் இத் தலத்துச் சிறப்புமிக்க தீர்த்தங்களாகும். திருக் குளத்தை மாரி தீர்த்தம் என்று அன்னையின் பெயராலேயே கூறுவர்.

இத் தலத்தில் அன்னைக்குப் பல விழாக்கள் நிகழ்ந் தாலும், அவற்றுள் மாசி கடை ஞாயிற்றில் நிகழும் பூச் சொரிதல் விழாவும், சித்திரை முதல் செவ்வாயில் நிகழும் தேர்த் திரு விழாவும், வைகாசி முதல் நாளில் நிகழும் பஞ்சப் பிராகார விழாவும் மிகவும் விசேடமானவையாகும். இவ் விழா நாட்களில் சென்று மாரி தீர்த்தத்தில் நீராடி, அன்னையைக் கண்டு தரிசிப்போர் கணக்கிலடங்கார்.

21. கொல்லூர் மூகாம்பிகை

பேரருள் சுரக்கும் அன்னை பராசக்தி கோயில் கொண்டு விளங்கும் திருத்தலங்களுள், கொல்லூர் என்னும் தலம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. இத் திருத்தலம் தென் கன்னடத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையின் சிகரங்களில் ஒன்றுன குடட்சாத்திரி என்ற குன்றின் அடிவாரத்தில், அம் மலையினின்று உற்பத்தியாகிவரும் பாபநாசினி என்ற நதியின் கரையில், சுற்றிலும் மலைகளாலும் காடுகளாலும் சூழப் பெற்ற இயற்கை வனப்பினிடையே அமைந்து விளங்கும் பழமையான பதியாகும்.

இத் தலத்திற்குக் கோலபுரம் என்ற திருப் பெயரும் உண்டு. இத் தலத்திற்கு ஆதியில் மகாரண்யபுரம் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. இப் புனிதப் பதியில் சித்தர்களும், முனிவர்களும் வாழ்ந்ததாகப் புலனுகின்றது. இத் தலத்தில் உள்ள அன்னை மூகாம்பிகை ஆலயம் எப்பொழுது எவரால் எழுப்பப்பட்டது என்று அறிய முடியாத அளவிற்குப் பழமை கொண்டுள்ளது.

பழமை மிக்க இப் பதிக் கோயிலுக்குப் பழங்காலத்தில் படகுகளின் மூலம் நதியைக் கடந்தும், காடுகளைக் கடந்தும் சென்று மூகாம்பிகையைக் கண்டு வழிபட்டுள்ளனர், இப்பொழுது மங்களூர் இரயில் நிலையத்திலிருந்து, உடுப்பி வழியாக பஸ் மூலம் சென்று குந்தாபூர் அடைந்து, அங்கிருந்து முப்பது மைல்கள் தொலைவில் உள்ள மூகாம்பிகைக் கோயிலைச் சென்றடையலாம்.

தல வரலாறு

இத் தலத்தில் கோல முனிவர் உலக நலத்தின் பொருட்டு இறைவனை நோக்கிப் பல காலம் தவமியற்றிப்

பல வரங்களைப் பெற்றார். அதன் காரணமாக இத் தலத்திற்குக் கோலபுரம், கொல்லூர் என்ற பெயர்கள் தோன்றின என்று கூறப்படுகின்றது.

மகிடாசுரனுடைய பேரன் கம்காசுரன். அவன் இத் தலத்தில் தவம் புரிந்த கோல முனிவர்க்கும், மனித சமுதாயத்திற்கும், தேவர்கட்கும் தீங்கிழைத்து வந்தான்; வெள்ளி வடிவமான இரிச்யமுக பர்வதத்தில் இருந்து தேவர்களை வெல்லக் கோர தவம் புரிந்தான். அந்த அசுரன் சிவபெருமானிடம் சாகாவரம் பெற்று விடுவானோ என்று அஞ்சி, தேவர்கள் பார்வதியிடம் சென்று முறையிட்டனர். அன்னை ஈசுவரியும் அவர்கட்கு இரங்கி, அந்த அசுரன் மேலும் தவம்புரிய முடியா வண்ணம் மூகனாகச் செய்தாள். அவன் மூகனான பின்னரும் பல தீங்குகளைச் செய்தான். அதன் காரணமாக அன்னை ஆதி மகாலட்சுமி, விக்கினேசுவரன், குகன், வீரபத்திரன் முதலியோரைக் கொண்ட படை ஒன்றைத் திரட்டி வந்து, அந்த அசுரனுடன் போர் புரிந்து, அவனைச் சங்காரம் செய்தருளினாள். தேவர்கள் துயர் நீங்கப் பெற்று மகிழ்ந்தனர். அதன் காரணமாக அந்த அசுரனை மூகாசுரன் என்றும், ஈசுவரியை மூகாம்பிகை என்றும் போற்றி வழிபட்டனர்.

மூகாசுரன் இறக்கும் தருணத்தில், தான் ஆணவத்தினால் செய்த செயல்களால் தனக்கு அழிவு ஏற்பட்டது என்பதை உணர்ந்து, அன்னை மூகாம்பிகையை வணங்கித் தன்னை மன்னிக்குமாறும், அன்பர்கட்கு வரம் அருளும் பொருட்டு இத் தலத்திலேயே எழுந்தருள வேண்டும் என்றும் வேண்ட, அன்னையும் அவ்வாறே செய்தருளினாள் என்பது வரலாறு. இத் தலத்தில் விளங்கும் ஜோதிர் லிங்கத்தில் அன்னை மூகாம்பிகை கலந்து உறைகின்றாள் என்று கூறுவர்.

மூகாம்பிகைக் கோயில்

அன்னை மூகாம்பிகையின் திருக்கோயில் நான்கு பிராகாரங்களுடனும், பிரதான வாயிலின் முன் மண்டபத்துடனும், கிழக்கு முகமாக அமைந்து விளங்குகின்றது. முன் மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றதும் கம்பீரமாக நின்று காட்சி தரும் வீரபத்திரரைக் காணலாம். அவர் எல்லை காவல் புரிவதாகக் கூறப்படுகின்றது.

திருக்கோயிலின் தெற்குப் பிராகாரத்தில பத்துத் திருக்கரங்களுடன் விநாயகப் பெருமான் மூஞ்சூறு வாகனத்தின் மீது விளங்குகின்றார். இப் பிராகாரத்தின் தென் கிழக்குப் பகுதியில் இரண்டு நாக உருவில் சுப்பிரமணியர் காட்சி தருகின்றார். இது நம் சிந்தனையைத் தூண்டுகின்றது. வடக்குப் பிராகாரத்தில் ஆஞ்சநேய மூர்த்தி உள்ளார்.

இக் கோயிலில் திருவருள் புரிந்து திகழும் அன்னை மூகாம்பிகை, சங்கு சக்கரதாரியாகக் காட்சி தருகின்றாள். இஃது இத் தலத்துப் புதுமையும் சிறப்புமாகும்.

கோயிற் கருவறை விமானம் முழுவதும் தங்கத் தகடுகளால் இழைக்கப்பட்டுப் பிரகாசமாக விளங்குகின்றது. கருவறையிலுள்ள சிவலிங்கமானது மற்ற தலங்களில் உள்ளதைப் போன்று அல்லாமல், சக்தியும் சிவமும் இணைந்தாற் போல், சுவர்ண ரேகையினால் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அம்மையின் பாகமாகிய இடப் பாகம், வலப்பாகத்தை விடப் பெரிதாகவும் சோதிமிக்கதாகவும் விளங்குகின்றது. இது போன்ற சுவயம்பு இலிங்கத்தை வேறெங்கும் காண்டல் அரிது.

இந்தச் சிவலிங்கத்தின் சிறப்பைப் பற்றிப் புராணம் கூறும்பொழுது, இந்த ஜோதிர்லிங்கத்தில் சூட்சுமமாக சக்கரேசுவரியாக சிவ கணங்களுடனும் சகல தேவதைகளுடனும் அன்னை எழுந்தருளியிருக்கின்றாள் என்று கூறுகின்றது. இந்த இலிங்கத்தில் சூட்சுமமாக சக்கரேசுவரியாகக் கலந்திருக்கும் அன்னை மூகாம்பிகையைத் தூல

வடிவில் அனைவரும் கண்டு வழிபடுவதற்காக, இலிங்கத்தின் பின்னே அன்னையின் பஞ்சலோகத் திருவுருவம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது.

இத் திருக்கோயிலில் அன்னை மூகாம்பிகைக்கென்று தனித் திருச்சந்நிதி இல்லை. ஆனால், இங்கு அன்னை மூகாம்பிகையே முக்கியத்துவம் கொண்டு விளங்குகின்றாள்.

அன்னை மூகாம்பிகை திருவுருவத்துக்கு அருகில் மகா காளி, மகா சரசுவதி உற்சவமூர்த்திகளும், மூன்று முகங்கள் பத்துக் கரங்கள் கொண்டு பாம்பின் மீது ஒரு கால் ஊன்றிய வண்ணம் சித்தியோடு கூடிய விநாயகர் திருவுருவமும், ஐந்து முகமுடைய சுவயம்பு மூர்த்தியான விநாயகரும் காட்சி தருகின்றனர்.

அன்னை பராசக்தியாகிய மூகாம்பிகையின் பெருமையைப் பற்றிப் பரமேசுவரன், முருகப்பெருமானுக்கு எடுத்துக் கூறியதாகவும், அதன் பின்னர் முருகப் பெருமான் இத் தலத்தை அடைந்து அன்னையைப் பூசித்ததாகவும், சூரிய சந்திராதியர்களும் இந்திரன் முதலிய தேவர்களும் இத் தலத்திற்கு வந்து அன்னையை வழிபட்டதாகவும் புராண நூல்கள் கூறும்.

தீர்த்தச் சிறப்பு

இத் தலத்தில் சிறப்பு மிக்க தீர்த்தமாக விளங்குவது பாவநாசினி நதியே. இந் நதியை வடமொழியில் சௌபர்ணிகா நதி என்று கூறுவர். இந் நதி மலைகளிலுள்ள பல மூலிகைகளை அடித்து வருவதால், இதில் நீராடுபவரின் பல்வகை நோய்களும் நீங்குகின்றன. இந் நதி புனிதத்தன்மை வாய்ந்ததாகப் போற்றப்படுகின்றது.

அன்னையின் விழாச் சிறப்பு

இத் தலத்தில் அன்னை மூகாம்பிகைக்கு நான்கு விழாக்கள் சிறப்பு மிக நடைபெறுகின்றன. அவை: ஆனியில்

அன்னையின் ஜயந்தி விழா, ஆடியில் மகாவரலட்சுமி ஆரா தனை விழா, புரட்டாசியில் 10 நாட்கள் நவராத்திரி விழா, மாசியில் மகா தேர்த் திருவிழா ஆகியவையாகும். இவ் விழாக் காலங்களில் பல மாநிலங்களிலிருந்தும் திரளான மக்கள் வந்து அன்னை மூகாம்பிகையின் விழாக் கோலத் தைக் கண்டு வணங்கி வாழ்வில் வளமுறுகின்றனர்.

அன்னை மூகாம்பிகையின் தேர்த்திருவிழா தொடங்குவ தற்கு ஒரு மாதத்திற்கு முன்பே, மூகாசுரனுக்கும் திருவிழா நடைபெறுகின்றது.

22. கோவை கோனியம்மன்

புண்ணிய பாரத பூமியில் கிராமங்களே அதிகம். பாரத மக்களில் பெரும்பான்மையோர் கிராமவாசிகளே. பழங் காலந்தொட்டு இன்று காறும் இந் நிலையே காணப்படு கின்றது. கிராம மக்கள் எளிய முறையில் வாழ்வினை நடத்து பவர். இதனைக் குறிப்பாகத் தென்னிந்தியாவில் நன்கு காணலாம். தென்னிந்திய கிராம மக்களின் வாழ்க்கை எளிய முறையில் இருத்தலோடன்றி, இடையருத பழக்க வழக்கங்களையும் கொண்டதாயுள்ளது. இதற்கு முக்கிய காரணம், அவர்களுடைய அன்றாடத் தொழில் முறைதான். உழவுத் தொழிலையே புரிந்து வாழும் அவர்கட்கு, இரவு நேரத்தில் மட்டுமே சிறிது ஓய்வு கிடைக்கும். எனவே அவர்களுடைய தெய்விக வாழ்க்கை உழவுத் தொழில் சம்பந்தப்பட்ட இயற்கையின் — சக்தியின் கூற்றைப் பொறுத்ததாகவே உள்ளது.

கிராம மக்களாகிய உழவர்கள், தம்மையும் தமது சொத்தாகிய கால்நடையையும் பாதிக்கும் நோய் நொடி களினின்று பாதுகாத்துக் கொள்ளவும், தமது பயிர் செழித்து விளைவுற வேண்டியும் தெய்வத்தை வழிபடுவாரா யினர். அவர்கள் வழிபடு தெய்வம் கிராம தேவதையாக அமைந்து, அக் கிராமத்தாரின் நல்வாழ்வினைப் பேணி யருள்வதாக விளங்குகின்றது. கிராம மக்களின் நல் வாழ்க்கை பல் வகையிலும் சிறந்து விளங்குவதற்கு அக் கிராம தேவதையே காரணம்.

அங்ஙனம் கிராம தேவதையாக அமைந்து விளங்கும் தெய்வங்களுள் மாரியம்மன், காளியம்மன் குறிப்பிடத்தக்க வையாகும். அக் கிராம தேவதைகளுள் அன்னை கோனி யம்மனும் ஓர் ஒப்பற்ற தெய்வமாகும். மாரியம்மனும் காளி

யம்மனும் மிகப் பல கிராமங்களில் திருக்கோயில் கொண்டு விளங்கக் காணலாம். ஆனுல், அன்னை கோனியம்மன் கோவையம்பதியில் மட்டுமே திருக்கோயில் கொண்டு எழுந்தருளித் திருக் காட்சியருள்கின்ருள்.

தல வரலாறு:

தமிழகத்தின் முக்கிய நகரங்களுள் ஒன்ருகவும், கொங்கு நாட்டின் பெருநகராகவும் விளங்குகின்ற கோவை மாநகரம், சில நூற்ருண்டுகட்கு முன்னர் மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதியாகவும், அக் காட்டினிடையே இருளர் வாழ்ந்த ஒரு சிறு கிராமமாகவும் இருந்தது. அக் குக் கிராமத்தில் வாழ்ந்த இருளர் தலைவனுகக் கோவன் என்பவன் இருந்தான். அவன் பெயராலேயே அந்தக் கிராமம் கோவன் புதூர் என்ற பெயரால் வழங்கி வந்தது. கோவன் புதூர் என்ற இப் பெயரே திரிந்து கோயம்புத்தூர் என்று வழங்கி வருகின்றது என்றும் கூறலாகும்.

இருளர் தலைவனுகிய கோவன், தன் கிராமத்தில் ஒரு சிறு கோயிலைக் கட்டி, அதில் ஒரு கல்லை நாட்டிக் கோனியம்மன் என்னும் திருப்பெயரால் வழிபட்டான். கிராமத்தவராகிய மற்றவர்களும் அத் தெய்வத்தை வழிபட்டு வாழலாயினர். ஒரு கல் வடிவில் விளங்கிய கோனியம்மனும் அவர்கள் வாழ்வினை வளமுறச் செய்ததோடு, அக் கிராம தேவதையாக, அக் கிராமத்தின் காவல் தெய்வமாகத் திகழ்ந்தாள்.

பல்லாண்டுகட்குப் பின்னர் கோசர் மரபினர் கொங்கு நாட்டை ஆண்டனர். அக் கொங்கிளங்கோசர், ஒரு மண் கோட்டையையும், ஓர் ஊரையும் அமைத்தனர். அக் கோட்டையின் காவல் தெய்வமாகக் கோனியம்மனைக் கோயில் கட்டி எழுந்தருளச் செய்தனர் கோசரால் அமைக்கப் பெற்ற ஊர் ஒரு நகரமாகும். குக்கிராமமாக இருந்த ஊர் நகரமாக மாறியதற்கு அன்னை கோனியம்மனின் திருவருளே காரணமாகும்.

கிராமமாக இருந்த கோவன்புதூர், இன்று முக்கிய பெரிய நகரமாக விளங்க அருள் செய்து விளங்குபவள் கோனியம்மன். கோவை நகர மக்களும் கோனியம்மனையே முக்கிய தெய்வமாகவும், தலைமைத் தெய்வமாகவும் கொண்டு போற்றி வழிபட்டு வருகின்றனர். எனவேதான், 'கோவையே கோனியம்மன், கோனியம்மனே கோவை' என்று அறிஞர்கள் போற்றுகின்றனர்.

அன்னையின் திருத் தோற்றம்

கோயில் என்பது தலைவன் உறைவிடம் என்று பொருள்படும். உலகங்கட்கெல்லாம், உயிர்கட்கெல்லாம் தலைவனாக உள்ள இறைவனின் உறைவிடம் கோயில். அந்த இறைவனுக்குக் கோன் என்ற பெயரும் உண்டு. தேவர் தலைவனாகிய இந்திரனுக்குத் தேவர் கோன் என்ற பெயர் அமைந்தமை போன்று தேவ தேவனாகிய, மகாதேவனாகிய இறைவனுக்கும் கோன் என்று அமைந்தது. கோன் என்ற சொல்லிற்கு அரசன் என்று பொருள். இறைவன், அரசன் என்றால் உலகின் காவலன், நாயகன், தலைவன் என்று பொருள். கோன் என்பது அரசனைக் குறிப்பது போன்றே கோனி என்பது அரசியைக் குறிக்கும். அன்னை பராசக்தி உலகிற்கு அரசி. இறைவன் உலகிற்கு அரசனாக விளங்கும்போது, இறைவி உலகிற்கு அரசியாக விளங்க வேண்டியதுதானே முறை. எனவே, கோவையில் காட்சி தரும் கோனியம்மன் உலக அரசியாக, உலக அரசர்களெல்லாம் வழிபடும் உத்தம அரசியாகத் திகழ்கின்றாள்.

அரசியானவள் நகரின் நடுநாயகமாக விளங்க வேண்டியதற்கேற்ப, கோனியம்மனின் திருக்கோயில் கோவை மாநகரின் நடுநாயகமாக அமைந்து விளங்குகின்றது. தனக்குமேல் ஓர் அரசியில்லாத தனிப் பேரரசியாகிய கோனியம்மன், அரசியிடம் விளங்கவேண்டிய அன்பு, அறிவு, கருணை ஆகியவற்றின் திருவுருவாகத் திருக்கோயி

ளுள் உயரிய பீடம் மீது எழுந்தருளி வீற்றிருக்கின்றாள். கருணை பெருக்கும் திருமுக மண்டலமும், அன்பு தவழும் புன்னகையும், அருள் சுரக்கும் நயனங்களும் கொண்ட அட்டபுய நாயகியாக வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றாள். வலது திருக்காலை மடக்கி உயர்த்தி பீடத்தின் மீது வைத்தும், இடது திருக்காலால் அசுரன் ஒருவனை மிதித்தும் மங்கல நாயகியாகப் பொலிவுறுகின்றாள்.

கோனியம்மன் கோயில் விழா

அரசர்க்கரசியாக, கோவைக்கு அரசியாக, காவல் தெய்வமாக, கண்கண்ட தெய்வமாக விளங்குகின்ற கோனியம்மன் திருக்கோயிலில், நவராத்திரி விழா போன்ற சிறப்பான விழாக்கள் பல நிகழ்கின்றன. அவற்றுள் தேர்த் திருவிழாவாகிய பிரமோத்சவம் மிகவும் விசேடமானதாகும். ஆண்டுதோறும் மாசி மாதம் வளர்பிறையில் அன்னையின் தேர்த் திருவிழா அருள் மணக்கும் வகையில் அழகாக நடைபெற்று வருகின்றது.

23. திருவேற்காடு கருமாரி

பெருஞ் சித்தர்கள் அன்னை கருமாரியின் பெருமை அறிந்தவர்கள். அன்னையின் திருப்பெயர் சிறப்பில் இரண்டறக் கலந்து ஆராய்ந்து மகிழ்ந்தவர்கள். அவர்களிடையே இருந்த கோடகச் சித்தர் என்பவர் ஒரு சமயம், 'அன்னை கருமாரியின் சக்தி வேதச் சிறப்புடையதா? அல்லது தனித்த நாதப் பொருட் சிறப்புடையதா?' என்ற ஐயத்தைக் கொண்டார்; தம்முடன் இருந்த சித்தர்களிடம் ஐயத்தை வினவினர்.

சித்தர் திருக்கூட்டத்தில் வீற்றிருந்த குணநாத சித்தர் என்பவர், 'அன்னை தேவி கருமாரியின் சக்தியைக் குறித்துச் சந்தேகமா? இந்த எண்ணமே தவறுனது. அன்னை கருமாரியின் திருப் பெயர் மகிமை மிக்கது. அத் திருப் பெயரைச் சொன்ன அளவில் அறிவு சிறக்கும்; செல்வம் பெருகும்; வாழ்வு வளமுறும். அன்னை மாரி போன்று வேறு தெய்வமின்று. அவளே புவனம் முழுமைக்கும் அன்னை. அவளது திருப் பெயரைப் போன்றே, அவளது அருட் சாம்பலுக்கும் அற்புத சக்தி உண்டு. அவளே அகில மெலாம் படைத்துக் காத்து வருகின்ருள். அன்னை அவள் அருளாட்சியே எங்கும் நடைபெற்று வருகின்றது. அவளே பரம் பொருள். அனைத்துத் தத்துவங்கட்கும் அவளே ஆதாரம். ஐந்தெழுத்து மந்திரமாகிய 'சிவமயம்' அவளுக்கு உரியது. அவளே வேதங்களில் நிறைந்து விளங்குபவள்' என்று அன்னை தேவி கருமாரியின் அருட்சக்தியை விவரித்துரைத்தார்.

குணநாத சித்தரால் ஐயம் தெளிந்தார் கோடக சித்தர். ஐயம் நீங்கி அகத்தெளிவு கொண்ட அந்த சித்தர், அன்னை கருமாரியைக் கண்டு தரிசிக்க ஆவலுற்று, திருவேற்காட்டுப் பதியை வந்து அடைந்து அன்னையைப்

பணிந்து வணங்கினர்; வேதமும் வேதத்தின் விழுப் பொருளும் அவளே என உணர்ந்து போற்றினர்; ஐயம் கொண்ட தம்மை அபயம் கொள்ள வேண்டும் என்று வேண்டினர்.

சித்தருள் சிறந்த கோடக சித்தர் மீது இரக்கம் கொண்ட அன்னை கருமாரி, அவர் முன் தோன்றித் திருக் காட்சி தந்து, அருட்சாம்பல் அளித்து, அதன் சிறப் புணர்த்தி, தானே வேதங்களின் ஆதாரம் என்ற உண் மையையும் உணர்த்தித் திருவருள் புரிந்து மறைந்தாள்.

வேதத்தின் உண்மைப் பரம்பொருளாக—வேதத்தின் உண்மைப் பொருளாக—வேதப்பொருளாக விளங்குகின்ற அந்த அன்னை தேவி கருமாரி, திருக்கோயில் கொண்டு எழுந்தருளித் திகழும் திருத்தலமே திருவேற்காடு. 'திரு வேற்காடு' என்று இத் தலத்தின் பெயரைச் சொல்லும் போதே அன்னையின் அருளால் நா இனிக்கும், நெஞ்சங் குளிரும், மெய் சிலிர்க்கும். இந்த அற்புதத் திருத்தலம், சென்னை மாநகரினின்று பன்னிரண்டு மைல்கள் தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து அடிக்கடி டவுன் பஸ் வசதி உண்டு.

தலச் சிறப்பு

திருவேற்காடு என்னும் இத் திருத்தலம், அன்னை சக்தி யின் அருள் மணக்கும் பெருந் தலங்களுள் குறிப்பிட்டுப் போற்றத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத் தலத் தில் பாடல் பெற்ற சிவாலயமும், பிற தெய்வக் கோயில் களும் இருந்தும், அன்னை கருமாரியின் திருக்கோயிலே பெரும் புகழ் கொண்டு விளங்குகின்றது. அன்னையின் திருக்கோயில் அண்மைக் காலத்ததேயாயினும், அருட் சிறப்பில் முதன்மை வாய்ந்ததாக விளங்குகின்றது.

ஆணவத்தின்பாற்பட்டு அடாதன செய்தொழுகிய அவுணன் சூரபன்மாவைச் சங்காரம் செய்தருள, முருகப்

பெருமானுக்கு வேல் வழங்கப் பெற்ற இடமாதல் பற்றி, இத் தலத்திற்கு 'வேற்காடு' என்ற பெயர் அமைந்து, 'திரு' என்ற சிறப்பு அடைமொழியுடன் திருவேற்காடு என்று வழங்கி வருகின்றது.

தொண்டை நாட்டில் தேவாரப் பாடல்பெற்ற சிவ தலங்கள் முப்பத்திரண்டனுள் திருவேற்காட்டுத் தலமும் ஒன்று. திருத்தொண்டர் தொகையருளிய சேக்கிழார் பெருமானும், தமிழ் முருகன் புகழ் பாடிய அருட்கவி அருண கிரிநாதரும், அன்னையின் ஞானப் பால் உண்ட காழிப் பிள்ளையாகிய திருஞானசம்பந்தரும் போற்றிப் பாடிய பெருந் திருத்தலம் திருவேற்காடு.

வேதபுரி நாதரும், வேற்கண்ணம்மையும் திருமணக் கோலங் கொண்டு, அகத்திய முனிவர்க்கு அருட்காட்சி யளித்த தலம் திருவேற்காடு.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றன் சிறப்புடைய இத் தலத்தில், அன்னை கருமாரி மூவரும் தேவரும் போற்ற அருளாட்சி புரிந்து வருகின்றாள். முதல் யுகத்தில் குண்டலி யாகவும், இரண்டாம் யுகத்தில் வாலையாகவும், மூன்றும் யுகத்தில் பார்வதியாகவும் விளங்கிய அன்னை பராசக்தி, தற்போது கலியுகத்தில் கருமாரி என்னும் திருநாமம் கொண்டு அருட்பெருந் திருவிளையாடல்களைப் புரிந்து வரு கின்றாள்.

திருவேற்காட்டுத் தலத்தைச் செவியால் கேட்க வினை மாளும்; வந்து காண பிறவி யொழியும்; வந்து வணங்கி நீர் அருந்தப் பிணி நீங்கிப் புனிதமோங்கும்; நீற அருந்தி நீறணிந்தால் பேரின்பநிலை வாய்க்கும் என்று தேவிகருமாரி அம்மன் புராணம் போற்றுகின்றது.

"வேற்காட்டுத் திருத்தலத்தைக் கேட்டாலும் பெருவினைகள்
விரைந்தோடும் விதியும் மாறும்
வேற்காட்டுத் திருத்தலத்தைக் கண்ணுற்றால் எழுபிறவித்
துன்பமெல்லாம் விரைந்து வீயும்

வேற்காட்டுத் திருத்தலத்தில் நீரருந்தப் பெரும் பிணிகள்
உடனீங்கிப் புனித மோங்கும்
வேற்காட்டுத் திருத்தலத்தில் திருநீற்றை மெய்யணிந்தால்
பேரின்ப மெய்த லாமே!''

கலியுகக் கருமாரி கோயில்

திருவேற்காட்டுக்குப் பெருமை சேர்க்கும் அன்னை கருமாரியின் திருக்கோயில் மிகவும் பெரியதும், சிறியதுமல்லாத அளவினதாய் அமைந்த அழகிய கோயில். வண்ணச் சுதைச் சிற்பங்கள் நிறைந்து விளங்கும் ஐந்து நிலைகளைக் கொண்ட இராஜ கோபுரத்துடனும், அகன்ற பிராகாரத்துடனும் அன்னையின் கோயில் அழகுற்று விளங்குகின்றது.

அன்னையின் அருளாலயமாகத் திகழும் இத் திருக்கோயிலில் பக்தர்களின் கூட்டத்திற்கு என்றுமே குறையிருக்காது. ஞாயிறு, வெள்ளிக்கிழமை நாட்களில் பக்தர்களின் கூட்டம் கோயில் நிறைந்து வழிவதைக் காணலாம். என்றும் திருவிழாவோ என்று எண்ணும் அளவிற்கு அன்றாடம் அன்பர்களின் கூட்டம் பெருகி வருகின்றது. அன்னையின் திருமுக தரிசனத்தைக் காண்பதற்காக வரிசையில் காத்து நிற்போரின் உள்ளமெல்லாம் அன்னையின் திருப்பெயரைத் தியானித்த வண்ணம் இருக்கும்.

நாளுக்கு நாள் அன்பர்களை நெஞ்சுருகிப் பெருகி வரச் செய்தருளும் அன்னை கருமாரியின் அருள் திறத்தை வியவாமல் இருக்க முடியாது. ஆதியில் புற்றிலிருந்து பூவுலகாண்ட அந்தப் பூரணி, இன்று பெருங் கோயிற் கருவறையில், ஆதிசக்தியின் சின்னமாகிய ஐந்துதலை நாகம் குடைபிடிக்க, கருணைத் திருமுகம் கொண்டு, கலியுகத்தில் கண் கண்ட தெய்வமாக அன்னை கருமாரி அருட்காட்சி தருகின்றாள்.

கருணையே திருமேனியாகக் கொண்ட அன்னை கருமாரி, தன்னை வழிபடும் அன்பர்களின் கலி தீர்த்து நல்வாழ்

வருள்கின்ருள்; வெண்ணீற்ருல் வினை தீர்த்து, வேப்பிலை யால் பிணிபோக்கிப் பெருவாழ்வளிக்கின்ருள்.

வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கி யருளும் வேற்காட்டரசி, அன்பர்களின் இதயக் குகையில் வாழும் ஈசுவரியாக, அருள்மாரி பொழியும் பெருமாரியாகத் திகழ்கின்ருள்.

ஞானம் வேண்டுவார்க்கு ஞானத்தையும், அமைதி நாடுவார்க்கு அமைதியையும், குடும்ப இடர் நீங்க வருவார்க்கு மகிழ்வையும், பட்ட கடன் நீங்கப் பணிவார்க்குச் செல்வத்தையும் பரிந்தளித்து விளையாடுகின்ருள் அன்னை கருமாரி.

அன்னையின் அருட்சாம்பல் அற்புதம்

அன்னை கருமாரியின் திருக்கோயிலில் வழங்கப்படும் திருநீறு, அன்னையின் திருவருட் சின்னமாகும். பொதுவாகத் திருநீற்றுக்கு விபூதி என்ற பெயரும் உண்டு. அதனைச் சாம்பல் என்று கூறுவர். உண்மைதான்! குப்பையிலே கிடக்கும்போது சாம்பல் என்ற பெயரை உடைய அதுவே, கடவுளிடத்தே வந்தவுடன் திருச்சாம்பலாகி–திருநீருகி–விபூதியாக விளங்குகின்றது.

இத் தலத்தில் அன்னைக்கு எத்துணைச் சிறப்புண்டோ அத்துணைச் சிறப்பு அன்னையின் அருட்சின்னமாகிய திருச்சாம்பலுக்கும் உண்டு. அன்னையின் பண்புநலச் சின்னமாக, அருட்சின்னமாகத் திகழ்கின்றது. அந்த அருட்சாம்பல் சோதியின் பிறப்பிடம், அன்னையின் அருட்செல்வம், அதனைக் கையில் வாங்கியவுடன் வினையில் பாதி விழ்ந்து விடும். அன்பர்கட்குத் தித்திக்கும் தேன். எத்தகைய வினையையும் தீர்க்கவல்ல அற்புத மருந்து. கிரக தோஷங்களை நீக்கிக் காப்பது. மகப்பேறில்லாத மகளிர்க்கு மகவினை வழங்கும் மா மருந்து. அந்த அருட்சாம்பலைக் காலையும் மாலையும் குளிர்நீரில் இட்டுப் பக்தியுடன் பருகி

வந்தால் நீங்காத பிணிகளும் நீங்கும், நினைக்கும் காரியமும் கைகூடிவரும். அந்த அருட்சாம்பலினிடத்து எந்த அளவிற்குப் பக்தியும் உறுதியும் பிறக்கின்றனவோ, அந்த அளவிற்கு அன்பரிடத்தே அது நின்று பயன் விளைக்கும். அன்னை கருமாரியின் அருட்சாம்பலுக்குள்ள இம் மகிமைகளைப் பிற தலத்துத் திருநீற்றில் காண்டல் அரிது. எனவே தான், அன்னையின் அருட்சாம்பல் அற்புதத்தை,

''சமயத்து சஞ்சீவியெனத் திகழ்ந்து சாதித்து
வியப்பளிக்கும் சைவநீறு
இமயத்தின் உச்சியெனப் புகழீந்து எவ்வெவரும்
போற்றிசைக்கும் இனியநீறு
இமையவரும் மண்ணவரும் உள்ளத்தில் அன்புற்று
மெய்யிலணி எழிலார் நீறு
உமையவளின் திருக்கரத்தால் வேலவனுர் நீறுற்ருர்
என்றநிலை உன்னுவீரே''

கருமாரி அம்மன் புராணம் விரித்துரைக்கின்றது.

அன்னை கருமாரியின் கருணைத் திருமுகத்தைக் கண்டு வணங்க ஒருமுறை சென்ருல், அன்னையின் திருவருள் அடுத்தடுத்து வந்து வணங்கி வினையறுத்து உய்யுமாறு செய்வது உண்மையாக உள்ளது. அன்னையின் கருணை முகத்தைக் கண்டு வணங்கி, அருட்சாம்பலை மெய்யிலணிந்து அகங் குளிர்வோமாக.

24. திருமயிலை கற்பகாம்பிகை

அன்னை சக்தியின் அருள் விளையாடும் அற்புதப் பெருந் தலங்களுள் திருமயிலைத் தலம் குறிப்பிடத்தக்க சிறப்புடைய தாகும். இத் திருமயிலைத் தலத்தை 'மயிலை' என்றும், 'மயிலாப்பூர்' என்றும் இப்பொழுது வழங்கி வருகின்றனர். தலம் ஓங்கு சென்னை நகரில் உள்ள அன்னையின் அருள் மணக்கும் ஆலயங்களுள், அன்னை கற்பகாம்பிகை ஆலய மும் ஒன்று.

மயிலை என்னும் இத் தலம் சென்னையில் எழும்பூர் புகை வண்டி நிலையத்திலிருந்து நான்கு மைல்கள் தொலைவில் உள்ளது. சென்னையின் பல பகுதிகளிலிருந்தும் டவுன் பஸ் வசதியுண்டு.

தலச் சிறப்பு

மயிலாப்பூர் என்று வழங்கப்படுகின்ற திருமயிலைத் தலம், பழங்காலத்திலிருந்து பெருமைபெற்று விளங்கிவரு கின்றது. அந்தப் பெருமையில் அன்னை கற்பகாம்பிகையின் அருளற்புதம் குறிப்பிட்டுப் போற்றத்தக்க சிறப்புடையது.

அன்னை கற்பகாம்பிகை, மயில் உருவில் நின்று சிவ பெருமானை வழிபட்டு, இத் தலத்தில் மயில் உருவம் நீங்கப் பெற்றதால், இத் தலத்திற்கு மயிலாப்பூர் என்றும், மயிலை என்றும் திருப்பெயர் அமைந்ததாக வரலாறு.

இத் திருத்தலத்திற்கு எழுந்தருளிய ஞானசம்பந்தர் 'மயிலை' என்றும், 'மயிலாப்பு' என்றும் போற்ற, அப்பரடி களார் 'மயிலப்பில்' என்றும், சுந்தரர் 'மயிலை' என்றும் போற்றுகின்றார். சேக்கிழார் 'திருமயிலாபுரி' என்றும். அருணகிரிநாதர் 'மயிலை' என்றும் போற்றுகின்றனர். இத் தலம் பழங்காலத்தில் ஒரு பெரிய துறைமுகமாக இருந்தது

என்பதை, ''துறைக்கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித் தொல்மயிலை'' என்ற சுந்தரர் வாக்கிலிருந்து அறிய முடிகின்றது.

சிவநெறி போற்றிய வாயிலார் நாயனுர், வான்மறை தந்த வள்ளுவநாயனுர், ஆழ்வார் பன்னிருவரில் மூன்றுமவராகிய பெரியாழ்வார் ஆகியோர் இத் தலத்தில் அவதரித்து, தலத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

அன்னையின் ஆலயம்

அன்னை கற்பகாம்பிகையின் ஆலயம், கண்ணுதற் கடவுளும் கருணைக் கடவுளுமாகிய கபாலீசுவரரின் திருக்கோயிலுள் அமைந்து விளங்குகின்றது. திருக்கோயிலும் திருக்குளமும் திருக்காட்சி தருகின்ற பொலிவு, மிகவும் அற்புதம் உடையதாகும். இறைவன் திருக்கோயில் மேற்கு நோக்கி அமைந்து விளங்குகின்றது. திருக்கோயிலின் தலைவாயிலில் நடுமண்டபத்தோடு கூடிய பெரிய திருக்குளம் பொலிவுடன் விளங்குகின்றது. இத் திருக்குளத்தைக் கபாலி தீர்த்தம் என்று வழங்கப்பெறும். பலரும் இதனைக் 'குளம்' என்றே வழங்கி வருகின்றனர்.

திருக்கோயிலின் உள்ளே கருவறையில் கபாலீசுவரப் பெருமான் சிவலிங்கத் திருமேனியராக எழுந்தருளித் திருக்காட்சி தருகின்ருர். இறைவன் சந்நிதிக்கு வலது புறத்தில், கருணையே வடிவான அன்னை கற்பகாம்பிகை தெற்கு நோக்கி தனித் திருக்கோயில்கொண்டு விளங்குகின்ருள்.

இறைவன் திருச்சந்நிதிக்கு இடதுபுறத்தில், ஆறுமுகப் பெருமானுகிய சிங்காரவேலர் தனித் திருக்கோயில் கொண்டு விளங்குகின்ருர்.

கற்பகத் தாயாகிய கற்பகாம்பிகைக்கு நேர் தெற்கில், மண்கோயில் கட்டி வழிபட்டு உய்ந்த வாயிலார் நாயனுர் திருக்கோயில் அமைந்துள்ளது.

இறைவன் திருச்சந்நிதிக்கு எதிரில் தலைவாயிலின் வடபுறம் திருஞானசம்பந்தர், பூம்பாவையுடன் காட்சி தருகின்ருர்.

திருக்கோயிலின் வடக்கு வெளிப்பிராகாரத்தில் சிவலிங்கப் பெருமானும், அவரை வழிபட்டு மயிலுருவுடன் நிற்கும் உமாதேவியரும் அழகிய சிற்ப உருவில் காட்சி தருகின்றனர்.

கருணைமிகு கற்பகாம்பிகை

உமாதேவியார் இத்தலத்தில் மயில் உருவில் நின்று சிவலிங்கத்தை வழிபட்டபோது, அம்மைக்குத் திருக்காட்சி தந்து நின்ற சிவபெருமானை நோக்கி, ''நான் மயிலாகிப் பூசை செய்தபடியால், இவ்வூர் 'மயிலை' என்ற பெயர் பெறுதல் வேண்டும்'' என்று வேண்ட, எம்பெருமானும் அதற்கு இசைந்து, அன்னை வேண்டியவாறு வரம் தந்தருளினுர். அது முதல் மயிலை என்று வழங்கிவருவதாயிற்று, இந்த அன்னை கற்பகாம்பிகையைக் கண்டு வழிபடுவோர் பெரும் பாக்கியசாலிகளாவர்.

இத் தலத்திற்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தர், எலும்பைப் பெண்ணுக்கிய அற்புதம் அன்னை கற்பகாம்பிகையின் கடைக்கண் அருளால் நிகழ்ந்ததேயாம். கருணையுருவாகிய கற்பகாம்பிகை இல்லையெனில், கருணைக் கடலாகிய கண்ணுதற் பெருமானுக்கு வேலை இல்லை. அன்னையே கருணை. கருணையுள்ள இடமே கடல். கருணைக்கடலே கபாலீசுவரர். எம்பெருமான், உமாதேவியராகிய மயிலின் முன்னே கபாலம் ஏந்திய கையனுய்க் காட்சி தந்தருளிய காரணத்தால் கபாலி என்னும் திருப்பெயர் பூண்டு விளங்குகின்ருர். இங்கு இறைவனைவிட அன்னை கற்பகாம்பிகையே வரப்பிரசித்தியாக விளங்குகின்ருள்.

விழாப் பொலிவு

மயிலை என்பது மயில் உருவான உமையம்மை. அம்மை யின் வேண்டுதலின்படி அப்பன் இங்கு எழுந்தருளியுள் ளான். எனவேதான் இங்கு அன்னை முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றாள். இங்கு எப்போதும் அடியார் கட்கு உணவு வழங்கும் விழா நடைபெறும். அன்னை உண வளிப்பதில் வியப்பில்லை யல்லவா?

இத் திருக்கோயிலில் நிகழும் விழாக்களுள் மிகவும் சிறப் புடையது அறுபத்து மூவர் விழா. பிற தலத்துக் கோயில் களிலெல்லாம் அறுபத்து மூவர் எழுந்தருளியிருந்தாலும், அவர்கள் அனைவருக்கும் விழா நிகழ்வது இத் தலத்தில் தான்.

25. திருவொற்றியூர் வடிவுடையம்மை

உலகிலுள்ள மிகப் பழமையான ஊர் திருவொற்றியூர் என்பர் பெரியோர். இதனை வற்புறுத்தும் வகையில் இவ் ஊருக்கு 'ஆதிபுரி' என்ற ஒரு பெயரும் அமைந்துள்ளது. பழமை மிக்க பெரும்பதியாகிய இத் திருவொற்றியூர், சென்னை-பூங்கா நகர் புகை வண்டி நிலையத்திலிருந்து, வடக்கே கல்கத்தா செல்லும் புகை வண்டிப் பாதையில் ஆறு மைல்கள் தொலைவில் உள்ள ஒரு கடற்கரை நகரமாகும். வண்ணாரப்பேட்டையிலிருந்து வடக்கே ஐந்து மைல்கள் தொலைவில் ஒற்றியூர் திருத்தலம் உள்ளது.

தலத்தின் தனிப் பெருமைகள்

புகழினால் ஓங்கிய பெருமையை உடையது தொண்டை நாடு. அந் நாட்டின் அழகிய கடற்கரை நகர் ஒற்றியூர். ஒற்றியூர் ஈசராகிய ஆதிபுரீசுவரரின் திருக்கோயில் மிகப் பெரியது. திருக்கோயில் திருமதில்களில் கருமேகங்கள் வந்து வந்து உலாவும். சோலை மலர்கள் மணம் பரப்ப, தேரோடும் பெருந் தெருக்கள் சூழ்ந்திருக்கும்.

பட்டினத்தடிகள் பேறுபெற்ற பெருந்தலம் திரு ஒற்றியூர் கண்மூன்றுடைய கண்டங்கரிய கரும்பு அவருக்கு இங்கே இனித்தது. சுந்தரருக்கும் சங்கிலிக்கும் இனிது மணம் முடித்த இறைவனுக்கு, இங்கு எழுத்தறியும் பெருமாள் என்னும் திருப் பெயர். மாந்தாதா என்ற மன்னன் திருக்கோயில்களின் கட்டளையைக் குறைத்து எழுதினான். அந்த ஏட்டில் இறைவன் 'ஒற்றியூர் நீங்கலாக' என்று எழுதினார். அதனால் எழுத்தறியும் பெருமாள் என்னும் திருப் பெயர் பூண்டார்.

கலிய நாயனார் என்பவர் இறைவனுக்குத் தட்டு வராது விளக்கு எரிக்கும் பணி புரிந்தார். இறைவன் சோதனை

யால் வறுமை ஏற்படவே, இறுதியில் நாயனர் தமது இரத்தத்தையே இட்டு விளக்கு எரிக்க முயன்ருர். அப்போது இறைவன் அவருக்கு அருள் புரிந்து முத்தியளித்தார்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனர், மூவுலகை ஆளும் பேறுவரினும், அதை விரும்பாது இத் தலத்தில் பிச்சை ஏற்று இருத்தலேயே விரும்புவேன் என்று பாடுவதன் வாயிலாக, இத் தலத்தின் மேன்மையினைப் புலப்படுத்தினுர்.

''தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்டு
எஞ்சாமை பெற்றினும் யான்வேண்டேன்-நஞ்சம்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின்.''

வடிவுடையாள் திருக்கோயில்

அன்னை வடிவுடையம்மையின் திருக்கோயில், ஆதிபுரீசுவரர் திருக்கோயிலுள் அமைந்து விளங்குகின்றது இத் திருக்கோயில் மிகப் பெரிய அழகிய கோயில். இக் கோயிலின் தலைவாயில் வடபுறம் ஒரு பெரிய திருக்குளமும், உள்ளே ஒரு சிறு திருக்குளமும் அமைந்து அழகு செய்கின்றன. குளத்தின் தென் மேற்கு மூலையில் இத் தலத்திற்கு மிகவும் சிறப்பைத் தருகின்ற மகிழமரம் உள்ளது. இம் மரத்தை ஒட்டி மூன்றுகாற் பெருமான் (திரிபாதமூர்த்தி) எழுந்தருளியுள்ளார். பிரமாவும் விஷ்ணுவும் சிவனிடத்தே அடக்கம் என்னும் சிவபர தத்துவத்தை விளக்குவது திரிபாதமூர்த்தி உருவம். இவரே ஆதிபுரீசுவரர். இத்தகைய திருவுருவம் திருவானைக்காவலிலும் உள்ளது.

திருக்கோயிலுள் சிவலிங்கம் புற்று வடிவமாக உள்ளது. இவரையே படம் பக்கநாதர் எனப் போற்றுவர். இக் கோயிலில் எழுந்தருள் திருமேனி தியாகராசப் பெருமானுடையது.

இத் திருக்கோயில் வட கிழக்கு மூலையில், ஆதிபுரீசுவரரின் அருமை நாயகியாம் அன்னை வடிவுடையம்மையின்

திருக்கோயில் விளங்குகின்றது. அன்னை தமது திருப் பெயருக்கேற்ப அழகே உருக்கொண்டு, அடியார்கட்கு அருள் சுரந்து பெருமை பெறுகின்ருள்.

வட்டப்பாறையம்மன் கோயில்

ஆதிபுரீசுவரர் திருக்கோயிலின் உட்பிராகாரத்தில் வடக்கு நோக்கிய வண்ணம் அன்னை காளிதேவி தனிக் கோயில் கொண்டு திருக்காட்சி தருகின்ருள். அந்த அன்னை யின் திருப்பெயரே வட்டப்பாறை அம்மன்.

மதுரையை எரித்த கண்ணகி திருவொற்றியூருக்கு வந் தாள். அப்போது தியாகராசப் பெருமானும் அம்பிகையும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தனர். கண்ணகியின் சிற்றத்தைக் கண்ட தியாகர், மெல்ல பாய்ச்சிகையைப் பக்கத்தில் இருந்த கிணற்றில் விழும்படி உருட்டினுர். கிணற்றில் விழுந்த பாய்ச்சிகையை எடுக்கக் கண்ணகி கிணற்றில் இறங்கினுள். அப்போது தியாகர், உடனே ஒரு வட்டப்பாறையைக் கொண்டு அக் கிணற்றை மூடிவிட் டார். அது முதல் அவள் அங்கேயே இருந்துகொண்டு நரபலி வாங்கி வருவதாகக் கூறுவர். இப்போது இச் சந்நிதியில் நரபலி நிறுத்தப்பட்டுள்ளது.

கம்பர், தமது இராமாயணத்தைப் பாடியபோது, இந்த ஒற்றியூர்க் காளிதேவி இரவில் வெளிச்சத்தின் பொருட்டுத் தீப்பந்தம் பிடித்ததாகவும் ஒரு வரலாறு கூறப்படுகின்றது.

இக் காளிதேவி கோயில் குங்குமப் பிரசாதம் மிகவும் விசேடமானது. அன்னை வடிவுடையம்மை, தன்னை அன் புடன் வழிபடும் அடியார்களின் வாழ்வில் உள்ள நன்மை, தீமை, நற்குணம், தீய குணம் ஆகியவற்றில் நல்லன வற்றை ஏற்று நல்லருள் புரிந்து காப்பதில் வல்லவளாய்த் திகழ்கின்ருள். வடிவுடையாளை வழிபட்டு வாழ்வினைப் பெருக்கி உய்வோமாக.

26. சென்னை காளிகாம்பாள்

சிறப்பு மிக்க திருத்தலங்கள் மலிந்த நகரம் சென்னைமா நகரம். சண்முகத் தெய்வமணி திகழும் கந்த கோட்டமும், திருமயிலைக் கபாலீசுவரர் திருக்கோயிலும், திருவல்லிக் கேணி பார்த்தசாரதி பெருமாள் திருக்கோயிலும், திரு வொற்றியூர் திருவான்மியூர் திருத்தலங்களும் சென்னைமா நகருக்குப் பெருமையூட்டுகின்றமை போன்றே, காளிகாம் பாள் கமடேசுவரர் திருக்கோயிலும் பெருமை சேர்த்து விளங்குகின்றது.

காளிகாம்பாள் கமடேசுவரர் திருக்கோயிலில், அன்னை காளிகாம்பாளுக்கே முக்கியத்துவம். எனவேதான், மீனுட்சி சுந்தரேசுவரர் கோயில் என்பதைப் போன்றே காளிகாம்பாள் கமடேசுவரர் கோயில் என்று வழங்கி வரு கின்றது. அன்னை காளிகாம்பாள் திருக்கோயில், சென்னை முத்தியால்பேட்டை தம்புச்செட்டித் தெருவில் அமைந்து விளங்குகின்றது.

தலச் சிறப்பு

அன்னை காளிகாம்பாளினுலேயே மாநகர்க்கு சென்னை என்ற பெயர் அமைந்தது. ஆதி நாளில் அன்னை காளிகாம் பாளைச் சென்னம்மன் என்ற திருப் பெயரால் போற்றி வந் துள்ளனர். அன்னைக்குச் சென்னம்மன் என்ற பெயர் அமைந்தமை போன்றே கமடேசுவரருக்கும் சென்னப்பன் என்ற திருப் பெயர் வழங்கியுள்ளது. சென்னம்மன் என்ற அன்னையின் பெயரே மாநகர்க்கும் சென்னை என்று அமைந்துள்ளது.

அன்னை காளிகாம்பாளுக்கு அட்சாசொரூபிணி என்ற திருப்பெயரும், கோட்டையம்மன் என்ற திருப்பெயரும்

உண்டு. ஒரு காலத்தில் அன்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கோயில் கொண்டு விளங்கிய காரணத்தால், கோட்டையம்மன் என்ற திருப்பெயர் பூண்டாள் என்று கூறுவர். கோட்டைக் கடைக்காரர்களின் உபயம் இன்றும் அன்னை கோயிலில் ஆண்டுக்கொரு முறை நடைபெற்று வருகின்றது.

ஆதிசங்கரரால் பிரதிட்டை செய்யப்பட்ட ஸ்ரீ சக்கரம் இன்றும் அன்பர்கள் தரிசிக்கக்கூடிய நிலையில் அன்னை கோயிலில் உள்ளது ஒரு தனிச் சிறப்பு.

இத் தலத்தில் அன்னை காளிகாம்பாளுக்கு வெண்கலத்தால் செய்யப்பட்ட கிண்ணத் தேர் உள்ளதும் ஒருவகைத் தனிச் சிறப்பாகும். இன்றும் இக் கிண்ணத்தேரைத் தரிசிக்கலாம்.

திருக்கோயிற் சிறப்பு

இத் தலத்தில் அன்னை காளிகாம்பாள் மேற்கு நோக்கித் திருக்கோயில் கொண்டு விளங்குகின்றாள். பொதுவாக மேற்கு முகமாக எழுந்தருளிக் காட்சி தரும் அன்னையர்க்கு அருளும், சிறப்பும் மிக அதிகம். அன்னை காளிகாம்பாளின் அருட்சிறப்பு சொல்லில் அடங்காதது.

இத் திருக்கோயிலில் கமடேசுவரர், அருணாசலேசுவரர், நடராசர் ஆகியோர் திருச்சந்நிதிகளும் உள்ளன. நடராசப் பெருமான் திருச்சந்நிதியில் பிருங்கி முனிவர் மூன்று கால்களுடன் எலும்பும் தோலுமான உடலுடன் காட்சி தருகின்றார். இம் முனிவர் இவ்வாறு மூன்று கால்களுடன் காட்சியளித்தல் இத்தலத்திலும், திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் திருக்கோயிலிலுமாகும். இம் முனிவர் இவ்வாறு நடராசர் சந்நிதியில் மெலிந்து நிற்றற்குக் காரணம், அன்னை சக்தியை அவமதித்தார். அதனால் தமது சக்தியை இழந்து மெலிவடைந்தார்.

பெருந்துறவியான பிருங்கி முனிவர், துறவிகட்கெல்லாம் திருவருள் புரியும் சிவனை மட்டும் வழிபட்டு வந்தார்.

சக்தியின் அருள் தமக்குத் தேவையில்லை என்று கருதி, எப்போதும் சக்தி சிவனுடன் இல்லாத தருணம் நோக்கி, சிவன் தனித்திருக்கும்போது வழிபட்டு வந்தார். எனினும் ஒரு சமயம், சிவனும் சக்தியும் சேர்ந்து இருந்தபோது வழி படச் சென்றுர். சிவனும் சக்தியும் நெருக்கமாக இருக்கக் கண்டு, முனிவர் வண்டு உருவெடுத்து இருவர்க்கும் இடையே துளைத்துக் கொண்டு சென்று வலம் வந்து சிவனை மட்டும் வழிபட்டார்.

அதைக் கண்ட அன்னை சக்தியானவள், இந்த வண்டு இவ்வாறு செய்கின்றதே என்று சிவத்திடம் வினவ, சிவன் அன்னையிடம் உண்மையைக் கூறினுர். உண்மை அறிந்த உமாதேவியார், இனி நான் உங்களில் ஒரு பாகமாகக் கலந்திட வேண்டும் என்று, தமது ஆவலைக் கூற, அதற்கு அண்ணல், அங்ஙனமாயின் நீ விரதம் பூணவேண்டும் என்று கூறியருளினுர். அவ்வாறே அன்னை சக்தியும் விரதம் இருந்து-தவம் இருந்து—இறைவனோடு இரண்டறக் கலந்து விளங்க, இறைவன் அப்போது அர்த்தநாரீசுவரராகக் காட்சி தந்தார். அர்த்தநாரீசுவரர் தலமே திருச்செங்கோடு. அன்று அன்னை சக்தி கேதாரநாத்தில் தவம் இருந்தாள். அதனையொட்டியே, இன்றும் பெண்கள் தங்கள் கணவன்மாரைப் பிரியாதிருக்க வேண்டி கேதார கௌரி விரதம் இருந்து வருவதுண்டு.

இவ்வாறு அன்னை சக்தியை முனிவர் அவமதித்ததன் காரணமாக, சக்தியிழந்து மெலிந்த மேனியோடு நடராசர் திருச்சந்நிதியில் விளங்குகின்றுர். எனவே, அன்னை சக்தியாகிய காளிகாம்பாளை அவமதிப்போர்க்கு, அவள் அருள் கிட்டாதது மட்டுமன்றி, அல்லல்களும் நேரலாகும் என்பது உண்மை.

சிவாஜியின் திருப்பணி

சத்ரபதி சிவாஜி இச் சென்னை மாநகரில் இருந்து ஆங்கிலேயர்களையும் மகமதியர்களையும் எதிர்த்துப் போராடிய

காலத்தில், அன்னை காளிகாம்பாள் கோயிலைச் சுற்றிக் குடியிருந்த விசுவகரும வகுப்பினரும், பேரிச்செட்டியார்கள் மரபினரும் தங்கள் இல்லங்களை மராட்டிய வீரர்கட்கு அளித்து உதவி புரிந்தனர். பின்னர், பழங்காலத்திலிருந்து அன்னையின் கோயிலை நிர்வகித்துவந்த விசுவகர்ம வகுப்பினரின் வேண்டுகோட்கு இணங்கி, மராட்டிய மன்னர் சிவாஜி அன்னை காளிகாம்பாளின் வழிபாட்டுக்கு வகை செய்தார்; அத்துடன் அன்னை கோயிலுக்குப் பல மானியங்களையும் வழங்கினார்.

சுமார் நானூறு ஆண்டுகட்கும் முற்பட்ட பழமையுடையதான கிண்ணித்தேர், சிவாஜியின் காலத்தில் புதுப்பிக்கப்பட்டு, திருவீதி உலாவிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இன்றைய திருப்பணி

அன்னை காளிகாம்பாளின் திருக்கருணைத் திறத்தால், அன்னையின் ஆலயத் திருப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. காஞ்சி காமகோடி பெரியவாள் சென்னைக்கு வரும் போதெல்லாம் இந்த அன்னையை வழிபடாமல் செல்வதில்லை. அண்மையில் இக் கோயிலுக்கு வந்த காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெயேந்திர சரசுவதி சுவாமிகளால், இராஜ கோபுரம், கருங்கல் பத்மபீடம் திருப்பணி தொடங்கி வைக்கப்பட்டுத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இங்ஙனம் அடுத்தடுத்து நிகழும் திருப்பணிகள், அன்னை காளிகாம்பாளின் திருவருட் சக்தியின் பெருக்கத்தை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. அன்னை காளிகாம்பாளின் மலர்ப்பாதம் பணிந்து நலம்பெற்று வாழ்வோமாக.

Selam

27. சேலம் கோட்டை மாரி

உலகெலாம் படைத்து உயிர்களைக் காக்கும் உமையவளே அன்னை மாரியம்மன். மாரி என்ற சொல்லுக்கு மழை என்று பொருள். கருமேகம் பெய்கின்ற மழை, கருணை மாரியின் அருள். கருமேகம் அன்னை மாரியின் சின்னமாகவும், மழை அன்னையின் அருட் சின்னமாகவும் விளங்குகின்றன. மழையினால் உண்டாகும் செழிப்பையும் வளத்தையும், வாழ்வையும் போற்றுகின்றோம். அந்த மழை வேறு எதுவுமன்று, அன்னை மாரியின் அருளே என்னும் தத்துவத்தை உணர்த்துவது சேலம் மாநகரில் உள்ள கோட்டை மாரியம்மன் தலம். அன்னை மாரியின் அருள் மழையால் வாழ்வில் செழிப்பையும் வளத்தையும் கண்டு வாழ்வோர் பல்லாயிரவர். சேலம் நகரவாசிகள் மட்டுமன்றி, சேலம் மாவட்ட வாசிகளும் கோட்டை மாரியம்மனால் தங்கள் கேட்டைத் தவிர்த்து இன்புற்று வாழ்கின்றனர்.

தலச் சிறப்பு

சேலம் மாநகரின் செல்வப் பேரரசியாகத் திகழ்கின்றாள் கோட்டை மாரியம்மன். கோட்டையிலே வாழ்பவள் சாதாரணமானவளாகவா இருப்பாள்? செல்வம் மிக்கவளாகவும், செல்வம்மிக்க பேரரசியாகவுமே இருப்பாள். அன்னை கோட்டை மாரியம்மனும் அவ்வாறே திகழ்கின்றாள்.

மாரி மலிந்த நகரம் சேலம் மாநகரம். சேலம் நகரில் பல மாரியம்மன் கோயில்கள் உள்ளன. செவ்வாய்ப் பேட்டை மாரியம்மன், குகை மாரியம்மன், மேட்டுத்தெரு மாரியம்மன், குமாரசுவாமிபட்டி மாரியம்மன், கிச்சிப் பாளையம் மாரியம்மன், அம்மாப்பேட்டை மாரியம்மன் என்று ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு மாரியம்மன்

கோயில்களாகச் சில ஆலயங்களும், சின்னக் கடை வீதி மாரியம்மன், பாவடித்தெரு மாரியம்மன், ஆற்ரோரத்தெரு மாரியம்மன், புதுத்தெரு மாரியம்மன் என்று தெருவுக்குத் தெரு விளங்கும் மாரியம்மன் கோயில்களுமாகப் பல மாரியம்மன் கோயில்களைக் கொண்டு விளங்குகின்ற சேலம், மாரியம்மன் மலிந்த நகரமாக மிளிர்கின்றது. இவ்வாறு பல கோயில்களிலும் விளங்குகின்ற மாரிகட்கெல்லாம் கோட்டை மாரியம்மன் தலைமை சான்று விளங்குகின்றாள். எனவே தான், மற்ற மாரியம்மன்களையெல்லாம் பொதுவாகச் சின்ன மாரியம்மன் என்றும், கோட்டை மாரியம்மனை மட்டும் பெரிய மாரியம்மன் என்றும் போற்றி வருகின்றனர்.

அன்னை பெரிய மாரியம்மன் கோயில்கொண்டு வாழ்கின்ற கோட்டை, கற்கோட்டை என்று கருதிவிட வேண்டாம். அஃது அருட்கோட்டை. அன்னை பெரியமாரி அருட்கோட்டையில் வாழ்வதினாலேயே, சுக முனிக்கு வீடளித்த சுகவனேசுவரர் திருச்சந்நிதியைவிட, அருட்கவி அருணகிரிநாதர் போற்றிய முருகப் பெருமான் சந்நிதியை விட, அழகினுக்கு அழகராகிய அழகிரிநாதப் பெருமாள் சந்நிதியைவிட, அன்னையின் திருச்சந்நிதி அருள் திறத்தில் மேலோங்கித் திகழ்கின்றது. அருட்கோட்டை அரசியாகிய பெரிய மாரியம்மன் சிறந்த வரப்பிரசாதியாக விளங்குகின்றாள்; தன்னை அன்புடன் வழிபடும் அன்பர்களின் மனக்கோட்டைக்கு வழி வகுத்து அருள் புரிகின்றாள்.

அருட்கோட்டையில் இருந்து, அன்பர்களின் மனக் கோட்டைக்கு வழிவகுத்து மங்கள வாழ்வை யருளும் அன்னை பெரிய மாரியம்மன் திருவருள் காரணமாக, இத் தலத்திற்கு 'மங்களமாபுரி' என்ற திருப் பெயரும் உண்டு.

அருட்கோட்டை அரசியின் ஆலயம், சேலம் மாகநரின் நடுநாயகமாய் அமைந்து விளங்க, பிற தெய்வக் கோயில்கள் அனைத்தும் அதனைச் சூழ்ந்து இத் தலத்தில் பரவலாக அமைந்து விளங்குகின்றன. அன்னையின் ஆலயம், திரு

மணிமுத்தாறு என்னும் திரு நதியின் கிழக்குக் கரையில் அழகு மிக அமைந்து விளங்குகின்றது. இந் நதியின் மேற்குக் கரையில், கோட்டை என்ற பகுதியின் நடுவே கோட்டை பெருமாள் கோயில் என்ற திருமால் கோயில் உண்டு. திரு மணிமுத்தாற்றில் ஆதிநாளில் எப்போதும் நீர்ப்பெருக்கு இருந்ததாகவும், அதிலிருந்து முத்து எடுத்து அன்னைக்குச் சூட்டியதாகவும் கூறப்படுகின்றது. அதனாலேயே மணிமுத்தாறு என்ற பெயர் நதிக்கு வழங்கியிருத்தல் வேண்டும். இப்போது மழைக்காலத்தில் மட்டுமே நதியில் நீர் ஓடுகின்றது.

கோட்டை மாரியின் கோயில்

கிழக்கு நோக்கி விளங்குகின்ற கோட்டை பெரியமாரியம்மன் திருக்கோயில், சந்தடி மிகுந்த சூழலில், பேருந்து நிலயத்தை ஒட்டி அமைந்து விளங்குகின்றது. சந்தடியினிடையே அமைதியே உருவான ஆலயமாகத் திகழ்கின்றது. இது, மக்களின் மனத்தே ஆணவத்தால் எழுகின்ற ஆர்ப்பாட்டங்கட்கெல்லாம் அன்னை மாரி, ஒரு முடிவு கண்டு அமைதியையும் தெளிவையும் வழங்கி யருள்பவள் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது.

இத் திருக்கோயில் முந்நூறு ஆண்டுகட்கும் முற்பட்ட பழமையுடையது. சோழ நாட்டிலிருந்து சேர நாட்டிற்கு வந்து, இத் தலத்தில் குடிகொண்ட வேளாளர் பெருமக்களால் இக் கோயில் எழுப்பப்பட்து என்றும், அவர்கள் வந்து குடியேறியபோது இத் தலம் சிறு கிராமமாக இருந்தது என்றும், தங்கட்குக் காப்புத் தெய்வமாக அன்னை மாரியை எழுந்தருளச் செய்து வழிபட்டனர் என்றும் செவி வழியாக ஒரு வரலாறு கூறப்பட்டு வருகின்றது.

வேளாளர் பெருமக்கள் ஆதியில் எழுப்பிய கோயில் மிகச் சிறியது. அதனை வைத்தே இப்பொழுது கோயிலை விரிவுபடுத்தியுள்ளனர். கூர்ந்து கவனிக்கும்போது பழைய கோயிலும், பின்னர் விரிவுபடுத்தப்பட்டுள்ளமையும் விளங்

கும். பழைய கோயிலை வேளாளர் மரபினர் எழுப்பினர் என்பதற்கேற்ப, இத் தலத்துப் பெருவிழாவாகிய ஆடிப் பெருவிழாவில், முதல் நாள் விழாவாகிய பூச்சொரிதல் விழாவினை இன்றும் வேளாளரே நிகழ்த்தி வருகின்றனர்.

ஒரே பிராகாரத்துடன் அமைந்து விளங்குகின்ற இத் திருக்கோயிலில் மகாமண்டபம், பிராகார மண்டபம் முதலியவை உள்ளன. இம் மண்டபங்களின் விதானத்தில் சிந்தைக்கும், கண்ணுக்கும் விருந்தளிக்கும் வண்ண ஓவியங்கள் நிறைந்து விளங்குகின்றன. தெற்குப் பிராகாரத்தில் மதுரைவிரன் தன் தேவியர் இருவரோடு எழுந்தருளி யுள்ளான். வடக்குப் பிராகாரத்தின் அருகில் யானை தங்கும் இடம் உள்ளது. இத் திருக்கோயிலில் யானை ஒன்று உண்டு.

கோயிற் கருவறையின் நடுநாயகியாக அன்னை பெரிய மாரியம்மன் அபயவரத கரங்களோடும், அருள் பொழியும் திருமுக மண்டலத்தோடும், பீடத்தின் மீது இடக்காலை மடக்கி வைத்து, வலக்காலைத் தொொங்கவிட்டு வீற்றிருக்கும் கோலத்தில் விளங்குகின்ருள்.

கருவறையை அடுத்து அன்னை மாரியின் உற்சவ மூர்த்தி, அபயவரத கரங்களோடு நின்ற திருக்கோலத்தில் சுந்தர வடிவமாகத் திகழ்கின்றது. சிறிய கருவறையில் அன்னை பெரிய மாரியம்மன் விளங்கும் அழகை—அற்புதத்தை இத் தலத்தில் காணலாம்.

அன்னையின் ஆடிப் பெருவிழா

சக்தி ஆலயங்கட்குச் சிறப்பாக உரிய நவராத்திரி விழா போன்ற பல திருவிழாக்களும் கோட்டை மாரி கோயிலில் நடைபெறுகின்றன. அவற்றுள் பிரமோற்சவம் எனப் படுகின்ற ஆடிப் பெருவிழா மிகவும் முக்கியத்துவமும், விசேடமும் உடையது. இவ் விழா பதினைந்து நாட்கள் சிறப்பாக நடைபெறுகின்றது. பதினைந்தாவது நாள் விழாவில் சிறு குழந்தை முதல் பெரியோர்வரை அனைவரும்

வேண்டுதலை நிறைவேற்ற உருளுதண்டம் இடும் காட்சி காண்போர் உள்ளத்தை உருக்கி, உடலைச் சிலிர்க்கச் செய் யும். அன்று இரவு முழுதும் இலட்சக்கணக்கான பக்தர் கள் அன்னையின் கருணை முகத்தைக் கண்டு தரிசித்துக் களிப்புறுவர்.

கோட்டை மாரியின் ஆடிப் பெரு விழாவின்போது, இத் தலத்தில் உள்ள எல்லா மாரியம்மன் கோயில்களிலும் சிறப்பாக அந்த ஆடிப் பெருவிழா நடைபெற்று வருகின் றது. கோட்டை மாரியின் ஆடிப் பெருவிழா, சேலம் மாநகரத்தையே விழாக் கோலத்தில் திளைக்கச் செய்து விளங்குகின்றது.

அன்னை பெரிய மாரியின் அடிபணிந்து வணங்கிப் போற்றி, வினையறுத்து நலம் பெற்று வாழ்வோமாக.

28. அருள் மணக்கும் ஆலயங்கள்

அன்னை சக்தியின் அருட் சிறப்பால் மேன்மை பெற்றுத் திகழ்கின்ற இருபத்தேழு சக்தி தலங்களை முறையே முன் உரைகளில் விளக்கமாகக் கண்டோம். அன்னையின் திருவருள் மணக்கின்ற திருத்தலங்கள் சிலவற்றை இந்த உரையில் சுருங்கக் காணலாம்.

சென்னை சக்தி கோயில்கள்

1. திருமயிலை சக்தி கோயில்கள்: சென்னையில் உள்ள திருமயிலைப் பகுதியில் துலுக்கநாதம்மன், எல்லையம்மன், பேயாண்டியம்மன், திருவீதியம்மன், பிடாரியம்மன், முண்டகக்கண்ணியம்மன் என்று பல சக்தி கோயில்கள் உள்ளன.

துலுக்கம் என்பது செவ்வந்திப்பூவில் ஒரு வகை. செவ்வந்தி மலர் போன்ற அன்னை துலுக்கநாதம்மன். எல்லை வழக்காளருக்கு எல்லை காட்டிய அன்னை எல்லையம்மன். பேயோடு ஆடுகின்ற சிவபெருமான் பேயாண்டி. அந்த அன்னை பேயாண்டியம்மன். திருவீதியில் வந்து வழிபடுவார் அனைவரையும் பாதுகாத்தருளும் அன்னை திருவீதியம்மன்.

பிடாரியம்மன் கோயில், வாலீசர் கோயிலுக்குத் தென்மேற்கில் உள்ளது. இந்த அன்னைக்குக் கோலவிழியம்மன் என்ற திருப்பெயரும் உண்டு. இந்த அன்னையே ஊர்க்காளி. இந்த அன்னை கோயிலுக்கு வந்து பூசனை புரிந்து விழாச் செய்துதான், கபாலீசுவரர் திருக்கோயிலில் விழா தொடங்கப் பெறும்.

முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில் மாதவப் பெருமாள் கோயிலுக்குப் பின்புறம் உள்ளது. தாமரை மலர்

போன்ற கண்களை உடைய அன்னை முண்டகக்கண்ணியம்மன். இந்த அன்னை மிகவும் அருட் சிறப்புடையவள்.

2. சிந்தாத்திரிப்பேட்டை அங்காளம்மன்: இந்த அன்னையின் திருக்கோயில் வேங்கடேச கிராமணி தெருவில் உள்ளது. திருவாயிலுக்கு நேராகக் கருவறையில் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் எழுந்தருளியுள்ளார். அவருக்கு வலப்பக்கத்தில் உள்ள திருக்கோயிலில் சிங்கவூர்தியின் மீது அங்காளம்மன் திருக்காட்சி யருள்கின்றாள்.

3. சிந்தாத்திரிப்பேட்டை பொன்னியம்மன் கோயில்: சிந்தாத்திரிப்பேட்டையின் மேற்கு எல்லையில் ஆதி பொன்னியம்மன் கோயில் அமைந்துள்ளது. இத் தலத்திற்கு இந்த அன்னை குலதெய்வமாக விளங்குகின்றாள். அன்னையின் கருவறையில் அழகிய விமானம் உண்டு.

4. இராயபுரம் அங்காள பரமேசுவரி: இந்த அன்னையின் திருக்கோயில் ஆதம்சாகிபு தெருவில் உள்ளது. அங்காள பரமேசுவரியின் திருமுன்னே சிங்கம், பலிபீடம், கொடிமரம் உள்ளன. இக் கோயில் மேற்குப் பிராகாரத்தில் ஆதிசக்தி விளங்குகின்றாள். வடக்குப் பிராகாரத்தின் கீழ்ப்புறத்தில் திருக்குளம் உள்ளது.

இத் தலத்தில் குமாரசுவாமி கோயிலில், பத்திரகாளியம்மன் தன் கணவராகிய வீரபத்திரருடன் எழுந்தருளித் திகழ்கின்றாள்.

5. கொத்தவாற் சந்தை கன்னிகா பரமேசுவரி: கொத்தவால்சாவடி என்ற பகுதியில் கன்னிகாபரமேசுவரி திருக்கோயில் உள்ளது. இந்த அன்னை ஒரு வைசிய குடும்பத்தில் பிறந்தவள். இவளை மணக்க விஷ்ணுவர்த்தனன் என்ற மன்னன் விரும்பினான். அதற்கு அவள் இணங்காமல் தீயிற் குதித்துத் தெய்வமானாள். அன்னையின் சினத்தால் மன்னன் அழிந்தான். அது முதல் அன்னை கன்னிகாபரமேசுவரி என்ற தெய்வமாக வழிபடப் பெறுகின்றாள். இந்த அன்னை வரலாற்றைக் குறிக்கும் ஓவியங்கள் கோயிலில்

அழகாக எழுதப்பட்டுள்ளன. இந்த அன்னைக்கு நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறுகின்றது. இக் கோயிலில் மரகத இலிங்கம் ஒன்று உள்ளது. அதற்கு உத்திராபிடேகம் நடைபெறுகின்றது.

1. புதுக்கோட்டை புவனேசுவரி: தமிழ் நாட்டில் அன்னை புவனேசுவரிக்குத் திருக்கோயில் அமைந்து விளங்குவது புதுக்கோட்டைத் தலத்தில்தான். இந்த அன்னையின் திருக்கோயில் அண்மைக் காலத்தில் தோன்றியது. அன்னை புவனேசுவரி அபயவரத கரங்களுடன் அழகின் வடிவமாகத் திகழ்கின்ருள்.

2. திருச்செந்தூர் வேல் உவந்தாள்: வேல் உவந்தாள் என்ற இந்த அன்னை இப்பொழுது வெயிலு கந்தம்மன் என்று மருவி வழங்கப்பெறுகின்ருள். இந்த அன்னை முருகப் பெருமானுக்கு சக்திவேல் அளித்தவள்; பாண்டிய அரச குமாரிக்குக் குதிரை முகம் நீக்கியவள்.

3 சிறுவாச்சூர் மதுரகாளி: இத் திருத்தலம் திருச்சி—சென்னை நெடுஞ்சாலையில், 34 மைல்கள் தொலைவில் உள்ளது. இந்த மதுர காளியம்மன் பலருக்கு குல தெய்வமாக விளங்குகின்ருள். பல குடும்பங்கள் இங்கு முடிப் பிரார்த்தனை செலுத்துகின்றனர்.

4. தஞ்சாவூர் மாரியம்மன்: தஞ்சைக்குப் பெருமை சேர்ப்பது பெரிய கோயில். தஞ்சையில் அருட் சிறப்புற்று விளங்குவது அன்னை மாரியம்மன் கோயில். இந்த அன்னை அம்மை நோயைத் தணித்துக் குணப்படுத்துபவள். கோயிலில் அம்மை வார்க்கப்பட்டவர் பலர் வழிபடக் காணலாம். கண் இழந்தவர்க்கும் கண் வழங்கும் கண்கண்ட தெய்வம் இந்த மாரி. அன்னையிடத்தே கண்ணிலாரின் அன்பின் பக்குவ நிலைக்கேற்ப இது வாய்க்கும்.

5. கருவாழைக்கரை காமாட்சி: மாயவரத்திலிருந்து நான்கு மைல்கள் தொலைவில் கருவாழைக்கரை என்ற தலம் உள்ளது. இங்கு உள்ள மாரிக்குக் காமாட்சி என்ற

திருப்பெயர் வழங்கப்படுகின்றது. இங்கு பலர் காவிரி நீர் கொணர்ந்து பிரார்த்தனை செலுத்துவர். அன்னை அழகே உருவாகி அன்பு பெருக்கெடுக்க அருள் சுரந்து விளங்கு கின்ருள்.

6. உப்பிலிப்பாளையம் தண்டுமாரியம்மன்: கோவை மாநகரில் உள்ள உப்பிலிப்பாளையம் என்ற பகுதியுள் புகழ் பெற்று விளங்கும் தண்டுமாரியம்மன் கோயிலைப் பலரும் அறிவர். கோனியம்மனை அடுத்துப் புகழ்பெற்று விளங்கு பவள் இந்த அன்னை. தண்டுமாரியம்மனும் காவல் தெய்வ மாகவே திகழ்கின்ருள். வேண்டுவோர்க்கு வேண்டுவதை வழங்கி யருளும் அன்னை இவள். மணமாகாத குமரிப் பெண் இந்த அன்னையை வழிபட்டால் கணவனை அடை வாள். மகப்பேறு இல்லாத மகளிர் மகவினைப் பெறுவர். பிணியாளர் குணம் பெறுவர். இந்த அன்னைக்குச் சித் திரை மாதம் பெரிய திருவிழா சிறப்பாக நடைபெறு கின்றது.

7. கோலியனூர் பிட்லாயம்மன்: விழுப்புரம்—பாண்டி நெடுஞ்சாலையில் உள்ள கோலியனூர் என்ற பதியில் பிட்லாயம்மன் கோயில் கொண்டு விளங்குகின்ருள். இந்த அன்னையும் சமயபுரத்து மகமாயியைப் போல் அனைவரை யும் தன்னிடத்தே ஈர்க்கும் அருளாற்றல் மிக்கவள். அன் பர்களின் பிரார்த்தனைத் தலம் இது. திருக்கோயிலுள் உயரமான பெரிய பாம்புப் புற்று ஒன்று உள்ளது. அதிலிருக் கும் நாகங்கள், அன்பர்கள் வைக்கும் பால் முதலியவற் றைப் பருகுகின்றன. ஆடி வெள்ளி, தை வெள்ளி முதலிய மங்கல வெள்ளிக்கிழமைகளில் இங்கு அன்பர்கள் கூட்டம் அதிகம்.

8. புதுவை செங்கழுநீர் அம்மன்: புதுச்சேரியில், வீராம்பட்டணத்துக் கடற்கரையோரமாக அமைந்து விளங் கும் அன்னை செங்கழுநீர் அம்மன். இந்த அன்னையின் கோயில் மிகவும் பழமையானது. அன்னை சக்தி மிக்கவள். அன்னைக்கு நிகழும் மாசி மகத் திருவிழா சிறப்புடையது.

9. கொளாநல்லி கோட்டைமாரி: ஈரோட்டிற்கு அருகில் உள்ள கொளாநல்லிப் பகுதியில் அன்னை கோட்டை மாரியம்மன் கோயில் கொண்டு விளங்குகின்றாள். இந்த அன்னை மிகவும் வரப்பிரசாதி. இங்கு மாசி மகத் திருவிழா பத்து நாட்கள் சிறப்பாக நடைபெறுகின்றது.

10. தொட்டியம் மதுரை காளியம்மன்: திருச்சி—சேலம் நெடுஞ்சாலையில் உள்ளது தொட்டியம் என்னும் பதி. இப்பதியில் அன்னை மதுரை காளியம்மன் கோயில் கொண்டு விளங்குகின்றாள். இந்த அன்னை ஆதியில் மதுரையிலிருந்து புறப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. இந்த அன்னைக்கு நிகழும் பங்குனி மாதத் திருவிழா சிறப்புடையது.

11. கந்தகிரி புவனேசுவரி: கந்தகிரி என்பது ஒரு மலைத் தலம். இது சேலம் நகரினின்று கிழக்கே மூன்று மைல்கள் தொலைவில் உள்ளது. குன்றின்மீது உள்ள முருகன் திருக்கோயிலுள், முருகன் திருச்சந்நிதிக்கு எதிரில் மேற்கு நோக்கியவாறு அன்னை புவனேசுவரியின் திருச்சந்நிதி உள்ளது. தாயும் மகனும் எதிர் எதிரே எழுந்தருளித் திகழ்கின்றனர். அன்னை பதினெட்டுத் திருக்கரங்களோடு அன்பர்கட்கு அருள் சுரந்து விளங்குகின்றாள். இந்த மலைத்தலம் நான்கு ஆண்டுகட்கு முன் தோன்றியது. இது முருகன் தலமாயினும் அன்னையும் சிறப்பு மிக்கவளாகவே விளங்குகின்றாள்.

12. பெரியபாளையத்துப் பவானியம்மன்: சென்னையிலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தூரத்தில் சென்னை, கூடூர் சாலையிலிருந்து வட மேற்கே இவ்வூர் உள்ளது. 'பவ' என்பது நீரைக் குறிக்கும். பரமசிவனின் அட்டமூர்த்திகளில் ஜலமூர்த்தியான 'பவர்' என்ற அம்சத்தின் தேவியே பவானி.

வாழ்வின் வடிவமாய்—வாழ்வின் மூலமாய்—வாழ்வினை அளிப்பதாய் உள்ளது நீர். அந் நீருக்கு அத் தன்மையை

அளித்து, அந் நீர்மையினளாக உள்ள பவானி தன்னை வழிபடும் அன்பர்கட்கு வாழ்வினை அளிப்பவள். எது பொய்த்தாலும், அன்னை பவானியின் அருள் பொய்ப்பதின்று.

வைசூரி, காலரா போன்ற கொள்ளை நோய்களிலிருந்து மக்களைக் காத்தருளும் தேவி இவள். பக்தர்கள் முன்னர் ஆடு, கோழி முதலியவைகளை வெட்டி காணிக்கை செலுத்தி வந்தனர் தற்சமயம் உயிர்ப் பலி இடுவது தடை செய்யப்பட்டுள்ளதால் பக்தர்கள் ஆடு, கோழி முதலியவைகளை உயிருடன் அன்னை பவானிக்குக் காணிக்கையாகத் தருகின்றனர்.

இவ்வாலயத்தில் ஆடி ஞாயிறு மிகவும் விசேடமான நாள். இச் சமயத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இங்குக் குழுமுவர். நூற்றுக்கணக்கான பக்தர்கள் வேப்பம் சீலை கட்டிக்கொண்டு திருச்சன்னிதியை வலம் வருவதைக் காணும்போது உடலெல்லாம் புல்லரிக்கும்.

13. திருமுல்லைவாயில் கொடியிடை நாயகி: முல்லைக் கொடி கொம்பைத் தழுவிப் படருவது போல், அன்னை சக்தியானவள் இத் தலத்தில் மாசிலாமணீசுவரர் என்ற நாயகரோடு கொடியிடைநாயகி என்ற திருப் பெயர் பூண்டு திருக்காட்சி யருள்கின்றாள்; தானே அகில உலக ஜீவநாடி என்பதையும் எடுத்துணர்த்துகின்றாள்.

இத் தலத்துக் கோயிலுக்குத் தெற்கே பச்சை அம்மன் ஆலயம் உண்டு. பச்சை அம்மன் மிகவும் சக்தி வாய்ந்து விளங்குகின்றாள். இந்த அம்மன் ஆலயத்தில் ஏழு ஐயனார் திருவுருவங்கள் உள்ளன. அம்பத்தூர் புகை வண்டி நிலையத்திலிருந்து மூன்று மைல்கள் தொலைவில் உள்ள முல்லைவாயில் தலத்துக்கு வந்து அன்னையை அன்புடன் வழிபடுவோர் கருதும் காரியம் கைகூடிவரும்.

14. பண்ணாரி மாரியம்மன்: பண்ணாரியம்மன் என்று புகழ்பெற்று விளங்கும் பண்ணாரி மாரியம்மன் ஆலயம்,

கோவை மாவட்டத்து சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் செல்லும் சாலையில் எட்டு மைல்கள் தொலைவில் உள்ளது. இத் தலத்து அன்னை மாரி மிகவும் அருட்சக்தி வாய்ந்தவள். சாலையில் செல்லும், பஸ், லாரி முதலிய அனைத்தும் இந்த அம்மன் திருச்சந்நிதி முன் நில்லாமல் செல்வதில்லை. பய ணத்தில் எவ்வகை இன்னலும் நேராமல் இன்னருள் சுரந்து காக்கும் அன்னையாகத் திகழ்கின்ருள்.

திருக்கோயிலுள் அன்னை மாரி, சுயம்புலிங்க வடிவமாக எழுந்தருளியுள்ளாள். இவ்வாறு எழுந்தருளியிருத்தல், அன்பர்கள் தங்கள் புலன்களை ஒருவழிப்படுத்தி வழிபடுவ தற்கேற்றதாயுள்ளது. சுயம்புலிங்க வடிவின் அருகில் அன்னையின் அழகே உருவான அருள்சுரக்கும் திருமேனி உயரிய பத்மபீடத்தில் திருக்காட்சி தருகின்றது. இந்தப் பண்ணாரி மாரியம்மனை அன்புடன் வழிபடுவோர் பல நலன் களையும் பெற்று மகிழ்கின்றனர்.

15. ஓரிகுண்டா ஜ்வாலாமுகி: இவ்வூர் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த நெல்லூரிலிருந்து மேற்குத் திசை யில் 12 மைல் தொலைவில் தாடேபள்ளிகூடம் செல்லும் பாதையில் உள்ளது.

இங்குக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அன்னையின் திருப்பெயர் ஜ்வாலாமுகி என்பதாகும். பஞ்ச பூதங்களை அடக்கியாள்பவள் இவ் அன்னை. பேய் பிசாசு பிடித்தவர்கள் இங்குத் தங்கியிருந்து இந்த அன்னையின் அருளால் நலம்பெற்றுத் திரும்புகின்றனர்.

1974ம் ஆண்டில் காஞ்சிப் புதுப் பெரியவாள் அவர் களின் அனுக்கிரகத்திஞல் இவ்வாலயத்திற்குக் கும்பாபி ஷேகம் நடைபெற்றது.

16. சூலூர்பேட்டை செங்காளம்மன்:—சென்னை கூடூர் செல்லும் பாதையில் தமிழ்நாட்டு எல்லைக்கருகில் இவ்வூர் உள்ளது. இவ்வூருக்கு இரயில் அல்லது பஸ் மூலம் செல்லலாம்.

இவ்வூரின் எல்லையில் குடிகொண்டிருக்கும் செங்காளம்மன் மிகவும் சக்தி வாய்ந்தவள். இவ்வாலயத்திற்கு வெளிக் கதவுகளே கிடையாது. பல பக்தர்கள் தங்கள் குறைகள் தீர்வதற்காக இவ்வாலயத்தின் பிராகாரத்தில் இரவு தங்குவர். சக்தி மிக்க இந்த அம்மனுக்கு வெள்ளி, ஞாயிறு ஆகிய நாட்கள் மிகவும் விசேடமான நாட்களாகும்.

29. சக்தி வழிபாடு

உலகெலாம் இயங்க அடிப்படை சக்தியாக விளங்கும் பரம்பொருளைத் தாயாக எண்ணி வழிபடும் மரபு, நமக்குப் பெருஞ் சிறப்பை அளிக்கின்றது. புண்ணிய பாரதப் பூமியில் சக்திதேவி பன்னெடுங் காலமாக, படைத்துக் காக்கும் அன்னையாகப் போற்றி வழிபடப் பெறுகின்றாள். அன்னை, அகில உலகையும் அருள் செறிந்த அன்பு நோக்கினால் இயக்குகின்றாள். எனவேதான், ''எல்லாம் சக்தி மயம்'' என்றனர் சான்றோர். அகிலாண்ட நாயகியாக விளங்கும் அன்னை சக்தி இன்றேல் இவ்வுலகில் எதுவுமே நடவாது. அன்னையின் சக்தி, அன்னையாகும் சக்தி இன்றேல் நாம் சக்தி பெற்று வாழ்வது எவ்வாறு? எனவேதான், 'அன்னையே—சக்தியே—முழு முதல் தெய்வம்' என்ற உண்மை உணர்ந்து ஆதிநாள் தொட்டு அன்னையை வணங்கி வழி பட்டு வருகின்றனர்.

அன்னை வழிபாட்டுக்கென்றே, சக்தி வழிபாட்டுக் கென்றே ஆதிநாளில் வாழ்ந்த நம் முன்னோர்கள், கட்புல னுக்கும்கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில், அவ் விருந் தின் வாயிலாக மனத்தை அமைதிகொள்ளச் செய்வதற் கும், ஒருமுகப்படுத்தி இன்புறுதற்கும் ஏற்ற வகையில், அன்னையின் ஆலயங்களை எழுப்பினர். அந்த ஆலயங்கள் தோன்றிய நாள்தொட்டு இன்றுகாறும் அன்னையின் அருள் சுரக்கும் ஆலயங்களாக—அருளாலயங்களாகத் திகழ்கின் றன. ஆலயந்தோறும் அருள்வடிவாக எழுந்தருளித் திக ழும் அன்னையும், தன்னை அன்புடன் வழிபடுவார்க்கு, வேண்டுவதையெல்லாம் வழங்கித் திருவருள் புரிந்துத் திகழ்கின்றாள் அன்னையை வழிபட்டு அருள்பெற்ற சான் றோர்கள் நம் நாட்டில் பலர். அப் பெரியவர்களுள் கவிகாளி

தாசர், கம்பர், அமரகவி பாரதியார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

தல வழிபாடு

அன்னை வழிபாட்டினை முதன்மையாகக் கொண்டவர்களும், மற்றவர்களும் சக்தி தலங்தட்குச் சென்று, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, முறைவழுவாது அன்னையை வணங்கி வழிபட்டு வினைப் பிணிப்பையும், வேறுபல பிணிகளையும், வாழ்க்கைத் துன்பங்களையும் தொலைத்து, அன்னையின் அருளால் ஒருவகைப் புதிய இன்ப உணர்வுடன் வருவாரைக் காண்கின்றோம்.

தனியே சக்தி தலப்பயணம் புரிவோரும் உண்டு. இறைவனை வழிபடும் நோக்கத்துடன் தலப் பயணம் மேற்கொள்ளுவோரும் அன்னை வழிபாடு நிகழ்த்தலுண்டு. தலப் பயணம் எத்தகையதாயினும், சக்தியை வழிபட வில்லையெனில், நம் வாழ்வில் சக்தி பிறக்காது; நம்மிடத்தே சத்தியம் நிலை கொள்ளாது. தலப் பயணத்தின் பலனும் இல்லையாம். இறைவன் அருளை அன்பர்கள் பெறுவதற்கும், இறைவனிடத்தே உள்ள சக்திதானே காரணம்! எனவேதான், இறைவனை வழிபடுகின்ற அடியார்கள், அன்னையின் ஆலயத்திற்கும் சென்று வழிபடுகின்றனர். எத்தகைய தலப் பயணத்திலும் சக்தி வழிபாடே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

விழா வழிபாடு

சக்தி ஆலயங்களில் சிறப்பான விழாக்கள் நடைபெறுகின்றன. அழகே உருவான அன்னையை மேலும் அலங்கரித்துத் திருவீதி பவனிவரச் செய்கின்றனர். இங்ஙனம் விழாக்களும், அன்னை பவனியும் அன்பர்கள் கண் குளிரக் கண்டு வழிபடுதற்கென்றே நிகழ்கின்றன.

பண்டிகை வழிபாடு

பண்டிகை இல்லாத மாதமே நமக்குக் கிடையாது. மாதந்தோறும் வருகின்ற, கொண்டாடப் படுகின்ற பண்டிகைகளெல்லாம் இறைவழிபாட்டிற்கென்றே எழுந்தவை. ஆலயம் சென்று அன்னையைக் கண்டு வழிபட்டாலும், தமது வழிபாட்டினைச் சிறப்பு வழிபாடாகவும் ஆக்கிக் கொள்ள விரும்பிய ஆன்றோர், வீட்டிலும் ஆலயத்தில் நிகழ்த்தப்பெறும் சிறப்புப் பூசனை போன்றே பூசித்து வழி படும் வழிபாட்டினை வகுத்துக் கொண்டனர். வீட்டில் நிகழும் அந்தச் சிறப்பு வழிபாடே 'பண்டிகை' என்ற பெயரில் வழங்கப்படுகின்றது.

பண்டிகை என்றால், மலத்தினின்று நீக்கி ஆன்மாவைப் பண்படுத்துதல் என்று பொருள். இதன் பொருட்டே பலவகையான பண்டிகைகளைக் கொண்டாடுகின்றோம். அவற்றைக் கொண்டாடும்போது விரதம் இருக்கின்றோம். சிறப்பாக மகளிர் மேற்கொள்ளும் வரலட்சுமி விரதம், மாங்கல்ய விரதம், தைத் தங்காள் விரதம் போன்றவையெல்லாம் அன்னை வழிபாட்டின் காரணமாக அமைவனவேயாகும். இங்ஙனம் விரதம் மேற்கொண்டு, வீட்டிலும் விழா முறையில் கொண்டாடப்பெறும் பண்டிகைகளுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது நவராத்திரி பண்டிகை. இதனை நவராத்திரி விழா என்றும் கூறலாகும்.

நவராத்திரி வழிபாடு

நவராத்திரி என்பதற்கு ஒன்பது நாட்கள் செய்யப்பெறும் நோன்பு அல்லது விழா என்று பொருள். ஒன்பது நாள் நிகழ்த்தப்பெறும் இந்த நோன்பு, பத்தாம்நாள் தசமியில் முடிவுறும். எனவே, இதனைப் பத்துநாள் விழா என்றும் சிலர் கூறுவர். புரட்டாசியில், அல்லது அதற்கு முன் வரும் சுக்கிலபட்ச பிரதமையில் தொடங்கி, தசமியில் முடிவு பெறும். இதில் வரும் அஷ்டமிக்கு மகாஷ்டமி என்றும், நவமிக்கு மகா நவமி என்றும் பெயர். ஆகையால்,

இதை மகா நோன்பு அல்லது மகர் நோன்பு என்று கூறுவர்.

நவராத்திரியில் ஒன்பது நாட்கள் அன்னைக்குப் பூசை செய்தல் வேண்டும். அதற்கு வசதியற்றவர்கள் சப்தமி, அஷ்டமி, நவமி ஆகிய மூன்று நாட்களாகிலும் பூசிக்க வேண்டும். இந்த நவராத்திரி துர்க்கா பூசையை மூன்று நாட்களிலும் செய்ய இயலாதவர்கள், நவமி நாளிலாகிலும் செய்ய வேண்டும்.

பொதுவாக நவராத்திரி பூசையைக் கன்னி பூசை என்றும் கூறுவர். இப் பூசையின் பலனாக இம்மையில் எல்லா நலன்களும், மறுமையில் வீடுபேறும் வாய்க்கும் என்பர். இப் பூசையை மேற்கொள்வோர், பிரதமையில் எண்ணெய் முழுக்காடிப் பூசையைத் தொடங்குதல் வேண்டும். கலசம் வைத்து நவதானியங்களைக் கொண்டு சுற்றிலும் பாலிகை தெளித்துக் கலசத்தில் அன்னை துர்க்கையை எழுந்தருளச் செய்தல் வேண்டும்.

சங்கு, சக்கரம், கதை, பதுமம் ஆகியவற்றைக் கரத்தில் ஏந்தி, சிங்க ஊர்தியில் அமர்ந்த சண்டியின் திருவுருவையோ, அல்லது பதினெட்டுக் கரங்களுடைய காளியின் உருவையோ வைத்து, ஒன்பதெழுத்து மந்திரத்தை ஓதிப் பூசித்தலும் உண்டு.

இந்தப் பூசையை நிகழ்த்தும்போது அன்னையிடம் உதவியை வேண்டி, தூப, தீபம் காட்டி, சாதி மல்லிகை, சண்பகம், அசோகம் முதலிய மணமலர்களைக்கொண்டு அர்ச்சித்து வழிபடுதல் வேண்டும். தேங்காய், மாதுளை, திராட்சை, வாழை, பலா முதலிய பல்வகைக் கனிகளைப் பூசையில் படைத்தல் வேண்டும். அன்னதானம் செய்தலோ, படைத்த பொருளை வழங்குதலோ முக்கியம்.

இந்தப் பூசையில் உயிர்ப்பலி கொடுத்தலும் வேண்டும். ஆனால், உயிர்ப்பலி தடை செய்யப்பட்டிருப்பதால் மாவி

ளுல் செய்த உருவை வைத்துப் பலி கொடுத்தோ, அல்லது பூசணிக்காயைப் பலி கொடுத்தோ பூசிக்கலாம்.

இப் பூசை காலை, நண்பகல், இரவு ஆகிய மூவேளை களிலும் வழுவாது நிகழ்தல் வேண்டும். இரவு வேளைப் பூசை மிக முக்கியம். இப் பூசையைப் புரிவோர் நோன் பிருந்து ஒரு வேளை உண்டு, தரையில் படுத்தல் வேண்டும். இவ்வாறு ஒன்பது நாட்களும் நிகழ்தல் வேண்டும்.

குமாரி வழிபாடு

நவராத்திரி வழிபாட்டில் ஒருவகை குமாரி வழிபாடு. இரண்டு வயது முதல் பத்து வயது வரையுள்ள கன்னிகை களை அழைத்து, அவர்கட்கு நல்ல உணவு, உடை, அணி முதலியவற்றைக் கொடுத்து, குமாரி, திரிமூர்த்தி, கல் யாணி, உரோகிணி, காளி, சண்டிகா, சாம்பவி, துர்க்கை, சுபத்திரை என்ற நவ துர்க்கைகளுள் ஒரு குமாரி விகிதம் வழிபடுதலாகும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குமாரியை ஒவ்வோர் அன்னையாகப் பாவித்து வழிபடுதலே குமாரி வழிபாடு. இதில் நாள்தோறும் ஒன்பது குமாரிகளை வைத்தும் இந்தப் பூசையை நடத்தலாம்.

இங்ஙனம் நவராத்திரி பூசை நிகழ்த்தும் போது, அன்னையின் அருள் திறத்தைப் போற்றும் வகையில் இசை, நடன நிகழ்ச்சிகளையும் நிகழ்த்துதல் வேண்டும்.

இந் நவராத்திரி வழிபாட்டுமுறை பண்டுதொட்டு இன்றுவரையிலும் தென்னுட்டில் சிறப்பாக நடைபெற்று வரக் காண்கின்ரேம்.

கொலு வழிபாடு

நவராத்திரி நாட்களில் அன்னை சக்தி ஆலயங்களில் சிறப்பாக அன்னைக்குப் பத்து நாட்கள் விழா நடைபெறுகின்றது; சிவாலயங்களில் அம்பிகைக்குச் சிறப்பாகப் பூசைகள் நடைபெறுகின்றன. நவராத்திரி நாட்களில் அன்னையைப் புதுப் புது வகையில் அலங்கரித்துக் கொலு மண்டபத்தில் கொலு அமர்த்துகின்றனர். அகிலாண்ட கோடியின் அரசியாகிய இராஜராஜேசுவரி கொலுவிற்றிருக்கையை இது குறிக்கும்.

பண்டைக் காலத்து மன்னர்கள் காத்தல் தொழில் ஒப்புமைக் காரணமாகக் கடவுட்குச் சமமாகக் கருதப்பட்டமையால், அம் மன்னர்களும் நவராத்திரி நாட்களில் நாள்தோறும் கொலுவிருந்து விளங்கியுள்ளனர்.

ஆலயத்தில் உள்ள கொலுமண்டபத்தில் அன்னை கொலுவிருந்து காட்சி யளிப்பதை ஒட்டியே வீட்டிலும் அன்னையைக் கொலுவைத்து வழிபட முற்பட்டு, அன்னையின் உருவிலுள்ள பொம்மைகளைக் கொலுவில் வைத்துப் பூசிக்கின்றனர்.

சரசுவதி வழிபாடு

நவராத்திரி வழிபாட்டில் இறுதிநாள் மிகவும் முக்கிய நாளாகும். ஏனெனில், அந்த நாள் அன்னை சரசுவதி அவதரித்த நாள். மகா துர்க்கையையும், அவள் அம்சங்களையும் முதல் மூன்று நாட்களிலும், மகா இலக்குமியையும் அவள் அம்சங்களையும் இரண்டாவது மூன்று நாட்களிலும் செய்து முடிந்த பின்னர், ஏழாவது நாள் மகா சரசுவதியின்

முறை தொடங்குகின்றது. அதனல், அந்த நாளில் மூல நட்சத்திரம் உச்சமாக இருக்கும். அப்போது அவள் அவதரித்ததாகக் கருதப்படுவதால், அன்று அவளது பூசை மிகவும் சிறப்பாக நிகழ்த்தப்பெறும். அந்தப் பூசை திருவோணம் (சிவரணம்) என்ற நட்சத்திரம் வரும் நாளில் முடிவுறும். அன்றே விஜயதசமி.

மூலம் என்ருல், கல்வி தொடங்குதற்குரிய நாள் என்பது கருத்து. அன்னை சரசுவதி வாக்கிற்கு அதிதேவதை. அவள் இல்லையெனில் உலகில் கல்வியிற் சிறந்த அறிஞர்கள் இலராவர். எனவே, அந்த அன்னையின் பூசையே நம் அறிவை வளர்க்கும் பூசையாகும். அன்னை சரசுவதி தன்னைப் பூசித்து வழிபடுவார்க்கு அறிவை வளர்த்துப் பேணும் பண்பு நலம் உடையவள்.

திருவோணம் (சிவரணம்) என்ருல், கேட்டல் என்று பொருள். விஜயதசமியன்று பெரியவர்களிடம் சாத்திரம், தத்துவம் முதலியவற்றைக் கேட்டுணர்தல் வேண்டும். கேட்டு உணர்ந்து அறிவைப் பெருக்கிக் கொள்ள அருள் புரிபவள் அந்த அன்னை சரசுவதி.

மலர் வழிபாடு

பொதுவாகத் தெய்வ வழிபாட்டில் தூப, தீபமும், மலரும் மிக முக்கியம். இவை தெய்வத்தின் அருளை மேலும் மேலும் பெருகச் செய்வதோடு, மலர் கொண்டு அர்ச்சித்து வழிபடுவார்க்கும் அருட்பயனைக் கூட்டிவைக்கும் தன்மையனவாம். எனவே, அன்னை வழிபாட்டினை மலர்கொண்டு அர்ச்சித்துச் செய்தல் வேண்டும்.

அன்னை வழிபாட்டிற்குக் கொள்ளப்படுகின்ற மலர், பழையதாகவோ, துணியில் வைக்கப்பட்டதாகவோ, நிலத்தில் உதிர்ந்து கிடந்ததாகவோ, கசங்கியதாகவோ, வாடியதாகவோ, மணமில்லாததாகவோ, நன்கு மலராததாகவோ இருத்தல் கூடாது.

இவ் வகைகளில் அமையாத மலர்களைக் கொண்டு ஆலயத்திலும், வீட்டிலும் அன்னையை அர்ச்சித்து வழிபடுதல் வேண்டும். இங்ஙனம் வழிபட்டால், வழிபடுவார் இன்னல் தொலையும், ஏழ்மை அகலும், பகை மாயும், செல்வம் நிறையும், ஆயுள் வளரும், வலிமை பெருகும், மறுமையில் வீடும் வாய்க்கும்.

''கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே!

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி!